


புரட்சிப்
# பெரியார் முழக்கம்
திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு

www.dvkperiyar.com

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் திருவள்ளுவர் ஆண்டு 2043 சனவரி 3, 2013 புரட்சி 11 முழக்கம் 51 விலை: ரூ.3.00

# மனுதர்ம எரிப்புக் கிளர்ச்சியில் நாங்களும் பங்கேற்கத் தயார்!





***மனுதர்ம எரிப்புக் கிளர்ச்சியில் திராவிடர் விடுதலைக் கழகம் அனுமதித்தால், நானும் விடுதலை சிறுத்தைகளும் பங்கேற்கத் தயார் என்று பலத்த கரவொலிக்கிடையே ஈரோட்டில் கழக மாநாட்டில் தொல் திருமாவளவன் அறிவித்தார்.***

***டிசம்பர் 24 ஆம் தேதி மாநாட்டில் தொல். திருமாவளவன் ஆற்றிய நிறைவுரை:***

இம்மாநாட்டில் பங்கேற்று நிறைவாக உரையாற்றக் கூடிய வாய்ப்பை எனக்கு வழங்கியமைக்காக திராவிடர் விடுதலைக் கழகத்தின் தலைவர் உள்ளிட்ட அனைவருக்கும் என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியை முதலில் தெரிவித்துக் கொள்கிறேன். ஒரு நெருக்கடியான காலக் கட்டத்தில் ஒரு தேவையான மாநாட்டினை ஒருங்கிணைத்து வெற்றிகரமாக நடத்திக் கொண்டிருப்பது பெரும் ஆறுதலைத் தருகிறது. தனிமைப்படுத்துகிற முயற்சிகளில் சிலர் ஈடுபட்டு கொண்டிருக்கிற நேரத்தில், ஒடுக்கப்பட்டவர்களை யாரும் தனிமைப்படுத்த முடியாது; இதோ நாங்கள் இருக்கிறோம்; பெரியாரின் பிள்ளைகள் இருக்கிறோம்; கருஞ்சிறுத்தைகள் இருக்கிறோம் என்று இன்றைக்கு களமாடிக்கொண்டிருக்கிற, திராவிடர் விடுதலைக் கழகத்தின் அத்துணைத் தோழர்களுக்கும் நான் இந்த நேரத்தில் நன்றி செலுத்த கடமைப் பட்டிருக்கிறேன்.

வருகிற ஏப்ரல் திங்கள் பதினான்காம் நாள் புரட்சியாளர் அம்பேத்கர் அவர்களின் பிறந்த நாளன்று, மனுதர்ம சாஸ்திரத்தை எரிக்கும் போராட்டம் இந்த மாநாட்டில் அறிவிக்கப்பட்டிருக்கிறது. அந்த எரிப்பு போராட்டம் ஏன் என்பதை விளக்குவதற்கான மாநாடாக, இந்த இரண்டு நாள் மாநாடு ஒருங்கிணைக்கப்பட்டு, முற்போக்கு சிந்தனையாளர்கள், ஜனநாயக சக்திகள் பலரும் இங்கே வருகை தந்து, இந்த புரட்சி நெருப்பை பற்ற வைத்திருக்கிறார்கள். இன்னும் பெரியாரின் கருத்துக்கள் குறைந்தது ஐம்பது ஆண்டுகளுக்காவது பிரச்சாரம் செய்ய வேண்டிய தேவை இருக்கிறது என்பதை, இன்றைய புதிய மனுவாதிகள் நமக்கு உணர்த்தியிருக்கிறார்கள். தந்தை பெரியார் பிறந்த மண்ணில், அவருடைய நினைவு நாளில் இந்த மாநாடு நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. ஒரு வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த மாநாடாக இது தன்னில் பதிவு செய்திருக்கிறது.

1920 களில் தந்தை பெரியார் அவர்களும், எம்.சி.இராஜா போன்றவர்களும், சுயமரியாதை இயக்கத்தைச் சார்ந்த தோழர் கண்ணப்பர் போன்றவர்களும், மனுதர்ம சாஸ்திரத்தை எரிக்க வேண்டிய தேவையை அன்றைக்கு எந்த அடிப்படையில் சொன்னார்களோ, அந்த அடிப்படை இன்னும் அப்படியே இருக்கிற காரணத்தால் மீண்டும் மனுதர்மத்தை எரிக்க வேண்டிய தேவை எழுந்துள்ளது. மனுதர்மத்தை எரிப்பதனால் ஜாதி ஒழிந்துவிடுமா? அப்படி எரிப்பதனால் ஒழிந்து விடாது. ஆனால் இங்கே நிலவுகிற இந்த ஜாதிய கட்டமைப்புக்கு, ஜாதிய வன்கொடுமைகளுக்கு, எது அடிப்படை என்பதை அடுத்தடுத்த புதிய தலைமுறைகளுக்கு அடையாளம் காட்டுகிற ஒரு போராட்டமாக இந்த போராட்டம் அமையும். மனுதர்மம் என்பது அன்றைய அரசியல் அமைப்பு சட்டம். இந்த நாட்டை மன்னர்கள் ஆண்டு கொண்டிருந்த காலத்தில் அன்றைக்கு அரசர்களுக்குத் தேவையாக இருந்த சட்ட விதிகளாகத் தான் மனுதர்மம் விளங்கியிருக்கிறது. இன்றைய அரசியல் அமைப்புச் சட்டம் இந்தியாவை ஆண்டு கொண்டிருக்கிறது. இன்றைய அரசியல் அமைப்புச் சட்டத்தை எழுதியவர் புரட்சியாளர் அம்பேத்கர் அவர்கள். ஆனால் அன்றைய இந்துக்களின் அரசியல் அமைப்புச் சட்டமாக இந்த மனுதர்மம் விளங்கியது. ஆனால் இதை எழுதியவன் யார்? அப்படி ஒரு ஆள் யாருமே இல்லை என்பது தான், ஆய்வாளர்களின் கண்டுபிடிப்பு.

மனுதர்மம் என்பது மனித தர்மம் என்கிற பொருளில்தான் தொகுத்திருக்கிறார்கள்; இந்துக்களின் தர்மம் என்கிற பொருளில் தான் தொகுத்திருக்கிறார்கள்; ஆனால், பார்ப்பனர்களின் தர்மம் என்பதைத் தான் அதிலே உறுதிப்படுத்தியிருக்கிறார்கள். மனுதர்மத்தின் அடிப்படை என்பது, பார்ப்பனர்கள் உயர்ந்தவர்கள் அவர்கள் உழைக்க மாட்டார்கள் மற்ற அனைவரும் தாழ்ந்தவர்கள் அவர்கள் பார்ப்பனர்களுக்காக உழைக்க வேண்டும் என்பதை அடிப்படையாக கொண்ட ஒரு தர்மம். அதை தர்மம் என்றே சொல்லக் கூடாது, அதர்மம் என்றுதான் சொல்ல வேண்டும். அப்படிப்பட்ட ஒரு அரசியல் அமைப்புச் சட்டமாகத்தான், அன்றைய காலத்தில் அன்றைய மன்னர்களால் கையாளப்பட்டு வந்தது. அதனால் தான் இந்த மண்ணில், தனித்தனி ஜாதிகளாய் மக்கள் பிரிந்து கிடக்கும் நிலை, அதை வலுப்படுத்தும் சூழல் அதனை தொடர்ந்து கட்டிக் காப்பாற்றுகிற ஒரு நிலைமை வளர்ந்துவிட்டது. அதை அவ்வளவு எளிதாக அசைக்க முடியவில்லை. அதை வேரறுக்க முடியவில்லை. அதை அசைப்பதற்கு வேரறுப்பதற்கு இந்த மண்ணிலே தோன்றிய மகான்களுள் மாமனிதர்களுள் முன்னணியில் இருக்கிற தலைவர்கள் புரட்சியாளர் அம்பேத்கர் அவர்களும் தந்தை பெரியார் அவர்களும் என்பதை, நாம் நன்றிப்பெருக்கோடு நினைவு கூறுகிற ஒரு மாநாடாகத்தான், இந்த மாநாடு அமைந்திருக்கிறது.

தந்தை பெரியார் என்ற ஒரு மாமனிதர் இந்த மண்ணிலே பிறந்திருக்காவிட்டால், நமக்கு கொளத்தூர் மணி என்கிற இந்த போராளி கிடைத்திருப்பாரா? விடுதலை இராசேந்திரன் என்கிற இந்த மனிதநேயப் போராளி நமக்கு கிடைத்திருப்பாரா? பெரியார் பெயரால் பல இயக்கங்கள் செயல்படலாம், திராவிடர் கழகமாகவோ, பெரியார் திராவிடர் கழகமாகவோ, திராவிடர் விடுதலைக் கழகமாகவோ இந்த

*2 ஆம் பக்கம்*

## ஈரோடு மாநாட்டில் தொல். திருமாவளவன் அறிவிப்பு

# தலித் மக்களை தனிமைப்படுத்த முடியாது; இதோ நாங்கள் இருக்கிறோம் என்று பெரியாரின் பிள்ளைகள் திரண்டிருக்கிறார்கள்!

*தொல். திருமாவளவன் உரை–1 ஆம் பக்கத் தொடர்ச்சி*

மண்ணில் இயங்கினாலும், அத்தனைப் படை வரிசையிலும் இருக்கிற, பெரியாரின் தளபதிகளாக இருந்து, ஜாதியவாதிகளுக்கு எதிராக இன்றைக்கு குரல் கொடுக்கிறார்கள் - எதிர்ப்புக் குரல் கொடுக்கிறார்கள் - மூட நம்பிக்கைகளுக்கு எதிரான பிரச்சாரங்களை முன்னெடுக்கிறார்கள் என்று எண்ணிப் பார்க்கிற போது, நமக்கு பிரமிப்பும், அதே நேரத்தில் ஒரு சிலிர்ப்பும் ஏற்படுகிறது. நினைத்துப் பாருங்கள் ! ஜாதி வெறியர்களெல்லாம் ஜாதி தர்மத்தை - மனுதர்மத்தை தூக்கிப் பிடிக்கிறபோது - ஜாதி வெறியர்களெல்லாம் ஜாதிக் கட்டுப் பாடுகளை நியாப்படுத்துகிறபோது - ஜாதி வெறியர்களெல்லாம் காதல் திருமணங்களே கூடாது என்று கூச்சல் போடுகிறபோது - பெண்களுக்கு சொத்துக்கள் கூடாது என்று இயக்கம் எடுக்கிறபோது - அதற்குப் பதிலடி கொடுக்கிற வகையிலே இன்றைக்கு துணிந்து வீரியமாய் களத்தில் வந்து நிற்பவர்கள், பெரியாரின் பிள்ளைகள்-பெரியாரின் சீடர்கள். இந்த களம் இல்லையென்று சொன்னால் திருமாவளவனுக்கு பாதுகாப்பு உண்டா? ஒடுக்கப்பட்ட மக்களுக்கு பாதுகாப்பு உண்டா ? ஏழை எளிய மக்களுக்கு பாதுகாப்பு உண்டா? ஜாதியின் பெயரால் வஞ்சிக்கப்படுகிற - சுரண்டப்படுகிற - நசுக்கப்படுகிற இந்த மக்களுக்கு பாதுகாப்பு உண்டா?

நிறைவேற்றப்பட்டிருக்கிற எட்டுத் தீர்மானங்களும், விடுதலைச் சிறுத்தைகள் கட்சி தீட்டியிருக்கிற - நிறைவேற்றியிருக்கிற தீர்மானங்களைப் போல் இருக்கிறது. இந்த தீர்மானங்களுக்கு இன்றைய புதிய மனுவாதிகள் பதில் சொல்ல முடியுமா? திருமாவளவனும் திருமாவளவனின் இயக்கத்தைச் சார்ந்தவர்களும் ஜீன்ஸ் பேண்ட் போட்டால் அவர்களுக்கு வயிற்றெரிச்சல் வருகிறது; அண்ணன் கொளத்தூர் மணி இப்போது ஜீன்ஸ் பேண்ட் போட்டிருக்கிறார், அண்ணன் விடுதலை இராசேந்திரன் இப்போது ஜீன்ஸ் பேண்ட் போட்டிருக்கிறார், புதிய மனுவாதிகளே! ஜாதி வெறியர்களே! இப்போது என்ன செய்யப் போகிறீர்கள்? மணி அண்ணனும் இராசேந்திரன் அண்ணனும் காதலிக்கப் போகிறார்கள் திருமாவளவன் தூண்டிவிட்டான் என்று சொல்லப் போகிறீர்களா? திருமாவளவன் வகுப்பெடுத்தான் இவர்கள் இப்படி செய்கிறார்கள் என்று உங்களால் சொல்ல முடியுமா? தோழர்களே பெரியார் இயக்கம் எந்த அளவிற்கு இங்கே ஒரு கலகத்தை ஏற்படுத்துகிறது பார்த்தீர்களா! பெரியார் இயக்கம் எந்த அளவிற்கு இங்கே ஒரு எதிர்க்குரலை எழுப்பியிருக்கிறது பார்த்தீர்களா! பெரியார் இயக்கம் ஜாதி வெறியர்களை எந்த அளவிற்கு அம்பலப்படுத்துகிறது பார்த்தீர்களா! பெரியார் இயக்கம் எந்த அளவிற்கு ஜாதி வெறியர்களின் முகத்திரையை கிழிக்கிறது பார்த்தீர்களா! நன்றி உணர்வோடு இன்று நான் இந்த மேடையிலே உரையாற்றிக் கொண்டிருக்கிறேன். பெரியாரின் காலடிகளில் நான் இந்த நன்றி மலர்களை காணிக்கையாக்குகிறேன். அந்த அளவிற்கு இந்த சமுதாயத்திலே ஒரு மிகப் பெரிய நெகிழ்வு உண்டாக்கப்பட்டிருக்கிறது. ஜாதி வெறியர்களின் இறுக்கத்தை இது தளர வைத்திருக்கிறது. ஜாதி வெறியர்களின் இந்த கொடூரமான கூச்சலை இது அம்பலப்படுத்திக் கொண்டிருக்கிறது.

தமிழ்நாட்டில் தொண்ணூற்று நான்கு வயது வரையில் தந்தை பெரியார், உடல் நலிவுற்ற நிலையிலும் சிறுநீரை தாங்குகிற சட்டியை சுமந்தவாறு ஊர் ஊராய் சுற்றி இந்த பிரச்சாரத்தை அவர் ஏன் எடுக்க வேண்டும்? வசதியான குடும்பத்தில் பிறந்தவர்; வணிகராக இந்த மண்ணில் வாழ்ந்தவர்; விரும்பியதையெல்லாம் கொண்டுவந்து கொடுப்பதற்கு ஆட்கள் இருந்தார்கள்; உயர் ஜாதிக்காரர்களின் தோளிலே கைகளைப் போட்டுக் கொண்டு சுகபோகமாக வாழலாம்; அப்படி எல்லா வசதிகள் இருந்தும், இன்னும் சொல்லப் போனால் அவருக்கும் இந்த சமூகத்திலே ஒரு ‘ஜாதி இந்து’ என்ற பாதுகாப்பு இருந்தது; அவர் ‘பள்ளரோ’ ‘பறையரோ’ ‘சக்கிலியரோ’ என்கிற அந்த இழிவுப் பட்டத்தை சுமந்து கொண்டு இந்த மண்ணிலே வாழவில்லை; ’நாயக்கர்’ என்று சொல்லிக் கொள்ளக்கூடிய அளவுக்கான ஒரு பாதுகாப்புப் பட்டமும் அவருக்கு இருந்தது; அப்படிப்பட்ட சூழலில் அவர் நமக்கென்ன என்று வாழ்ந்திருக்க முடியும். உயர் ஜாதி இந்துக்களோடு அவர் கூடி குலாவியிருக்க முடியும்; உயர் ஜாதி இந்துக்களோடு அவர் நட்புறவு கொண்டாடி அவர் வாழ்க்கையை சுகபோகமாக அனுபவித்திருக்க முடியும். ஆனால் அதையெல்லாம் உதறி எரிந்து விட்டு, இந்த மனுசாஸ்திர குப்பைகள் என்ன சொல்லுகின்றது என்பதை தோண்டி துருவி ஆராய்ந்து, இது தான் இந்த சமூகத்தின் கேடுகளுக்கு - அனைத்து கேடுகளுக்கும் அடிப்படை என்பதை அறிந்து, இந்த மண்ணில் அனைத்து தரப்பினரும் புரிந்து கொள்ளக் கூடிய அளவிலே, தொன்னூற்று ஐந்து வயது வரையில் பிரச்சாரத்தை மேற்கொண்டார். அந்தப் பிரச்சாரம் வீண் போகவில்லை

> - **பெரியார் இயக்கம் எந்த அளவிற்கு இங்கே ஒரு கலகத்தை ஏற்படுத்துகிறது பார்த்தீர்களா!**
> - **பெரியார் இயக்கம் எந்த அளவிற்கு இங்கே ஒரு எதிர்க்குரலை எழுப்பியிருக்கிறது பார்த்தீர்களா!**
> - **பெரியார் இயக்கம் ஜாதி வெறியர்களை எந்த அளவிற்கு அம்பலப்படுத்துகிறது பார்த்தீர்களா!**
> - **பெரியார் இயக்கம் எந்த அளவிற்கு ஜாதி வெறியர்களின் முகத்திரையை கிழிக்கிறது பார்த்தீர்களா!**
> - **நன்றி உணர்வோடு இன்று நான் இந்த மேடையிலே உரையாற்றிக் கொண்டிருக்கிறேன். பெரியாரின் காலடிகளில் நான் இந்த நன்றி மலர்களை காணிக்கையாக்குகிறேன்.**
>
> **– திருமாவளவன் உரையிலிருந்து**

தோழர்களே! ஏசு பெருமானுக்கு எப்படி நல்ல சீடர்கள் கிடைத்ததனால் உலகம் முழுவதும் எப்படி கிருத்துவம் பரவியிருக்கிறதோ, அதைப் போல் தந்தை பெரியாருக்கு நல்ல சீடர்கள் கிடைத்திருக்கிறார்கள், அந்த கருத்துக்கள் இன்றைக்கு வலுவாக பரவிக் கொண்டிருக்கிறது; அந்த பிரச்சாரம் இன்று மக்களிடத்திலே சென்று கொண்டிருக்கிறது. அதனால் தான், திரைப்படங்களிலே காட்டுவார்கள் . தாலி என்பது வேலி என்று. ஒருவன் எவ்வளவு நோஞ்சானாக இருந்தாலும் எவ்வளவு அழுக்கானவனாக இருந்தாலும் எவ்வளவு கேவலமானவனாக இருந்தாலும், தாலியை ஒரு பெண்ணின் கழுத்தில் கட்டிவிட்டால், அவன் தான் அவளுக்குக் கணவன் என்று சொல்லத் தக்க வகையிலே இந்துத்துவம், தாலியின் மீது ஒரு புனிதத்தை ஏற்படுத்தி வைத்திருக்கிறது. கல்லானாலும் கணவன் புல்லானாலும் புருசன் என்கிற அடைமொழிகளின் மூலம் பெண்களை அடிமைப்படுத்தி வைத்திருக்கிறது. அப்படிப்பட்ட தாலிக் கயிற்றினை பல்லாயிரக்கணக்கான மக்கள் கூடியிருக்கிற இந்த மேடையிலே வந்து அறுத்தெறிந்தார்கள் தோழர்கள் என்றால், அந்தத் துணிச்சலைத் தந்தது எது ? பெரியாரியம் தந்திருக்கிறது. இது தான் தோழர்களே பெரியாரியத்துக்கு கிடைத்திருக்கிற மகத்தான வெற்றி. ஆண்களுக்கு அந்த துணிச்சல் வரலாம்; பெண்களுக்கும் அந்த துணிச்சல் வந்திருக்கிறது இதுதான் பெரியாருக்கு கிடைத்த வெற்றி. ஆண்கள் ஜீன்ஸ் பேண்ட் போட்டுக்கொள்ளலாம் அது அழகு என்று கூட அவர்கள் கருதக் கூடும்; ஆனால் பெண்களும் ஜீன்ஸ் பேண்ட் போடுவோம் என்று துணிச்சலாக மேடை ஏறி வந்திருக்கிறார்கள் என்பது தான் பெரியாரியத்துக்கு கிடைத்திருக்கிற வெற்றி.

மனுதர்மம் என்பது பெண்களையும் கொச்சைப் படுத்துகிற ஒரு தர்மம் தலித்துகளையும் கொச்சைப் படுத்துகிற ஒரு தர்மம் விளிம்பு நிலை மக்களுக்கு எதிரான அநீதியைத் தருகிற ஒரு சாஸ்திரம். அப்படி ஒடுக்கப்பட்டவர்களுக்கு எதிராக பெண்களுக்கு எதிராக பேசப்பட்ட கருத்துக்கள் அனைத்தையும், ஆண்கள் விரும்பிய ஆணாதிக்க சிந்தனைகள் அனைத்தையும் தொகுத்து, மனுதர்மம் என்று இந்த மண்ணில், இந்துக்களின் சட்டமாக பார்ப்பனர்களின் சட்டமாக வரையறுத்துக் கொடுத்தார்கள். அது தான் தோழர்களே இன்றைக்கும் இந்தியாவை ஆண்டு கொண்டிருக்கிறது. மனுதர்மம் பால்ய விவாகத்தை நியாயப்படுத்தியது; விதவை மறுமணத்தைத் தடை செய்தது; ஜாதியை நியாயப்படுத்தியது; தீண்டாமையை நியாயப்படுத்துகிறது; பெண்களை அடிமைப்படுத்துவது சரி என்று வலியுறுத்துகிறது. இவை அனைத்தையும் அடித்து நொறுக்கி, இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தை எழுதிய புரட்சியாளர் அம்பேத்கர் அவர்கள், குழந்தைத் திருமணம் சட்டப்படி குற்றம்; விதவைத் திருமணம் சட்டப்படி ஏற்கப்படும்; ஜாதி என்பது சட்டப்படி ஏற்கமுடியாத ஒரு அமைப்பு; தீண்டாமை என்பது சட்டப்படி குற்றம், இப்படி எல்லாவற்றையும் சொல்லமுடிந்த இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தால் ஒன்றை சொல்ல முடியவில்லை தோழர்களே ! மனுதர்மம் சொன்ன அனைத்தையும் மறுத்துச் சொன்ன இந்திய அரசியல் அமைப்புச் சட்டம், மனுதர்மம் சொன்ன ஒன்றை மட்டும் மறுத்துச் சொல்ல முடியவில்லை. அதற்கு என்ன காரணம் என்பதை நாம் உணர்ந்து பார்க்கவேண்டிய தேவை இருக்கிறது தோழர்களே. இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தை எழுதியவர் புரட்சியாளர் அம்பேத்கர்; சமஸ்கிருதத்தை அவரே விரும்பி படித்து, மனுதர்மத்தையும் படித்து, இவைகள் என்ன சொல்லுகின்றது என்பதை பெரியாரைப் போலவே ஆய்ந்து தேர்ந்து, அதன் மூலம் அவற்றையெல்லாம் மக்கள் புறக்கணிக்க வேண்டும் என்று, போராடிய புரட்சியாளர் அம்பேத்கர் அவர்கள், இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தில் மனுதர்மத்தில் நியாயப்படுத்திய ஜாதியை மறுதளிக்க முடியாமல் போனது. மனுதர்மம் இன்னொன்றை நியாயப்படுத்துகிறது; ஜாதிக்குள் ஜாதி குலத்திற்குள் குலம் திருமணம் செய்வதை மனுதர்மம் நியாயப் படுத்துகிறது; அப்படி ஜாதிப் பார்த்து - குலம் பார்த்து - கோத்திரம் பார்த்து திருமணம் செய்வது சட்டப்படி குற்றம் என்று அரசியல் அமைப்புச் சட்டத்திலே இணைக்க முடியவில்லை. இந்த இடத்திலே ஆழமாக நாம் ஒன்றை எண்ணிப்பார்க்க வேண்டிய ஒப்பிட்டு பார்க்கவேண்டிய தேவை இருக்கிறது.

தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சார்ந்த பழங்குடியின வகுப்பைச் சார்ந்த அரசு பணிகளில் இருப்பவர்களுக்கு, பதவி உயர்வு வழங்குவதிலே இட ஒதுக்கீடு தேவை என்பதை உணர்ந்து, ஒரு அரசியல் அமைப்புச் சட்டத் திருத்தத்தைக் கொண்டு வந்தார்கள்; மாநிலங்களவையிலே அது நிறைவேற்றப்பட்டுவிட்டது; மக்களவையிலே அறிமுகப் படுத்துகிற நிலையிலேயே அந்தத் தாள் பறிக்கப்பட்டுவிட்டது. அதை விவாதிக்க விடாமலேயே நிறைவேற்ற விடாமலேயே தடுத்துவிட்டார்கள். தோழர்களே! ஆட்சி அதிகாரம் என்பதுதான் அரசியல் அதிகாரம் என்பது தான் எல்லாவற்றையும் தீர்மானிக்கக் கூடிய ஆற்றலை கொண்டது. அப்படி ஆட்சி அதிகாரத்தை அரசியல் அதிகாரத்தை யார் கைகளில் வைத்திருக்கிறார்களோ, அடிப்படைச் சட்டங்களை இயற்றுகிற வலிமையை யார் பெற்றிருக்கிறார்களோ, அவர்கள் தான் வெற்றி பெறுகிறவர்களாக எப்போதும் இருக்கிறார்கள். அந்த ஆட்சி அதிகாரத்தை அல்லது அரசியல் அதிகாரத்தை தொடமுடியாத விளிம்பு நிலையில் நாம் கிடக்கிறோம். அதை தீர்மானிக்க முடியாத இடத்தில் எங்கோ தொலைதூரத்தில் நாம் ஓரங்கட்டப்பட்டு கிடக்கிறோம். அப்படிப்பட்ட நிலையிலே அன்றைக்கு அரசியல் அமைப்புச் சட்டத்தை எழுதுகிற வாய்ப்பினை புரட்சியாளர் அம்பேத்கர் பெற்றிருந்தாலும் கூட, அவர் எழுதிய ஒவ்வொரு சொல்லும் விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. ஒவ்வொரு அதிகாரமும் உறுப்பும் விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. புரட்சியாளர் அம்பேத்கர் விரும்பியவாறு அரசியல் அமைப்புச் சட்டத்தை அவரால் எழுத முடியாமல் போனது. கட்டுப்படுத்துகிற ஆற்றலை உயர்ஜாதி இந்துக்கள் அல்லது பார்ப்பனர்கள் பெற்றிருந்தார்கள். ஆகவே புரட்சியாளர் அம்பேத்கர் விரும்பியபடி மனுதர்மத்திற்கு எதிரான கருத்துக்கள் அனைத்தையும் அரசியல் அமைப்புச் சட்டத்திற்குள்ளே அவரால் கொண்டுவர முடியவில்லை.

*3 ஆம் பக்கம்*

# வன்கொடுமை தடுப்புச் சட்டத்தை தவறாக பயன்படுத்துவது யார்? காவல்துறையா? தலித்துகளா?

*தொல். திருமாவளவன் உரை-2 ஆம் பக்கத் தொடர்ச்சி*

அதிலே அம்பேத்கரால் அகமண முறைக்கு எதிரான ஒரு சட்டத்தைக் கொண்டுவர முடியவில்லை. அன்றைக்கு அது எப்படி தோற்றுப்போனதோ, அப்படித்தான் தோழர்களே இன்றைக்கு பதவி உயர்வில் இட ஒதுக்கீட்டை மக்களவையில் அறிமுகப்படுத்துகிற நிலையிலேயே அதைக் கிழித்தெறிந்தார்கள்; நிறைவேற்றவிடாமல் தடுத்தார்கள்.

தலித்துகளுக்கான பதவி உயர்வில் இட ஒதுக்கீடு மட்டுமல்ல, பெண்களுக்கு அரசியல் இட ஒதுக்கீடு கூடாது என்றும், தோற்கடித்துக்கொண்டே இருக்கிறார்கள். இந்தச் சமூகத்தில் பெண்களும், தலித்துகளும் விளிம்புநிலை மக்கள் என்பதை மறந்து விடக் கூடாது. பெண்களுக்கும், தலித்துகளுக்கும் எதிரான சட்டம் தான் மனுதர்மம் என்பதை நீங்கள் எண்ணிப் பார்த்தால், இன்றைக்கும் இந்தியாவை ஆண்டு கொண்டிருப்பது மனுதர்மம் தான்; புரட்சியாளர் அம்பேத்கர் எழுதிய அரசியல் அமைப்புச் சட்டமல்ல என்பதை நாம் பார்க்கலாம். இன்றைக்கும் பால்ய விவாகம் நடைபெற்றுக்கொண்டுதான் இருக்கிறது; இன்றைக்கும் விதவைகள் மறுமணம் செய்யக் கூடாது என்பது அப்படியே நடைமுறையில் இருக்கிறது; இன்றைக்கும் ஜாதிக்குள் ஜாதி செய்யும் அகமண முறை காப்பாற்றப்படுகிறது அதைத்தான் இன்றைய புதிய மனுவாதிகள் வாதிடுகிறார்கள். அவரவர் ஜாதிக்குள் தான் அவரவர் காதலித்துக்கொள்ள வேண்டும் - திருமணம் செய்து கொள்ள வேண்டும்; இது தான் மனுதர்மம். ஜாதி கலப்பு ஏற்பட்டு விடக்கூடாது வர்ணக் கலப்பு ஏற்பட்டுவிடக் கூடாது அதனால் சம உரிமை, சம அதிகாரம், சம தகுதி என்பது அனைவருக்கும் உருவாகிவிடக் கூடாது என்று ஜனநாயகத்தை மறுக்கிற நிலை நீடிக்கிறது. ஆக ஆட்சி அதிகாரத்தோடு தொடர்புடைய ஒரு சமூகமாக - அதிகார வலிமை கொண்ட ஒரு சமூகமாக அடிநிலையில் கிடக்கிற ஒடுக்கப்பட்டவர்களும், பெண்களும் என்றைக்கு மாற்றம் பெறுகிறார்களோ அந்த வலிமையைப் பெறுகிறார்களோ அன்றைக்கு தான் தோழர்களே பெரியாரியம் வெல்லும் - அன்றைக்கு தான் தோழர்களே அம்பேத்கரியம் வெல்லும்.

ஆட்சி அதிகாரம் - அரசியல் அதிகாரம் என்பது நமக்கு தொடர்பில்லாத ஒன்றாக நாம் இன்னும் கருதிக் கொண்டிருக்கிறோம். ஆடு, மாடுகளை சொத்து என்று கருதுகிறோம்; நில புலங்களை சொத்து என்று கருதுகிறோம்; நகை நட்டுகளை சொத்து என்று கருதுகிறோம்; பணம், பைசா போன்றவற்றை நாம் சொத்து என்று கருதுகிறோம்; வீடு மனைகளை சொத்து என்று கருதுகிறோம் ஆனால் அதிகாரத்தை நாம் ஒருபோதும் சொத்து என்று கருதுவது இல்லை. அதிகாரமும் ஒரு சொத்து; அதிலும் அரசியல் அதிகாரம் என்பது தான் சொத்து. நாம் எல்லோரும் சேர்ந்து உருவானதுதான் அரசு; நாம் எல்லோரும் சேர்ந்து உருவானதால் வந்ததுதான் அரசியல் அதிகாரம்; நாம் வாக்களித்துதான் அரசு உருவாகிறது - ஆட்சி உருவாகிறது - அதிகாரம் பிறக்கிறது. ஆகவே நம்முடைய உழைப்பில் உருவான எந்த ஒன்றுக்கும் நமக்கு பங்கு பெறுவதற்கான உரிமை உண்டு. அப்படி பார்க்கிற போது இந்த அரசியல் அதிகாரத்தில் ஆட்சி அதிகாரத்தில் நமக்கு என்ன பங்கு என்று என்றைக்காவது நாம் எண்ணிப் பார்த்திருக்கிறோமா? நமக்குரிய பங்கை நாம் கேட்டு பெற்றிருக்கிறோமா ? பெறுகிற வலிமையை நாம் பெற்றிருக்கிறோமா ? அப்படி ஆட்சி அதிகாரத்தை, அரசியல் அதிகாரத்தை பங்கு போட்டுக் கொள்வதற்கு அரசியல் சக்தியாக இவர்கள் வலுப் பெற்றுவிடக் கூடாது என்பதால் தான் இன்றைக்கு விடுதலைச் சிறுத்தைகள் நாடகத் திருமணங்களை திட்டமிட்டு நடத்துகிறார்கள் என்ற அவதூறு பரப்பப்படுகிறது. தோழர்களே ! இது ஏனோ தானோ என்று தனிப்பட்ட விருப்பு வெறுப்பின் அடிப்படையில் பரப்பப்படுகிற ஒரு கருத்து அல்ல; ஒடுக்கப்பட்டவர்கள் சிறுபான்மை இனத்தைச் சார்ந்தவர்கள் பெண்கள், அதிகார வலிமை பெற்றுவிடக் கூடாது என்று எண்ணுகிற ஆணாதிக்க - ஜாதி ஆதிக்க வெறியர்களின் நிலைப்பாடு இது.

தருமபுரியிலே நடந்த சம்பவம் கொடூரமானது என்பதை திருமாவளவன் சொன்ன பிறகா, திராவிடர் விடுதலைக் கழகம் புரிந்து கொண்டது ? திருமாவளவன் சொன்ன பிறகா இடதுசாரிகள் புரிந்துக் கொண்டார்கள் ? திருமாவளவன் சொன்ன பிறகா மனித உரிமை அமைப்புகள் சொல்லின ? நவம்பர் ஏழாம் தேதி நான் லண்டன் மாநகரத்திலே இருந்தேன், நவம்பர் பன்னிரண்டாம் தேதிதான், நான் தருமபுரிக்கு போகிறேன். நவம்பர் பதினாறாம் நாள்தான் செய்தியாளர்களை சந்திக்கிறேன்; அந்த சந்திப்பிலே செய்தியாளர் ஒருவர் என்னைக் கேட்கிறார் “பா.ம.கவிற்கு இதில் தொடர்பு இருக்கிறது என்று நீங்கள் நினைக்கிறீர்களா” என்று கேட்டார். இதில் என்ன சந்தேகம் எல்லோரும் இதை உறுதிப் படுத்தியிருக்கிறார்களே, பா.ம.க தான் அதனை ஒருங்கிணைத்திருக்கிறது என்று தான் நான் சொன்னேன். எனக்கு முன்னால் இடதுசாரிகள் போய்வந்து சொல்லிவிட்டார்கள்; பெரியார் இயக்கத் தலைவர்கள் போய் பார்த்து விட்டு சொல்லிவிட்டார்கள்; மனித உரிமை அமைப்பைச் சார்ந்தவர்கள் சென்று பார்த்துவந்து சொல்லி விட்டார்கள்; தொண்டு நிறுவனங்கள் எல்லாம் ஆய்வு செய்து, பா.ம.க வன்னியர் சங்கம் தான் இதை ஒருங்கிணைத்திருக்கிறது என்று உறுதிப்படுத்திவிட்டார்கள். எல்லோரும் சொன்னதை நான் சொன்னேன். ஆனால் மற்ற எந்த இயக்கத்தின் மீதும் கோபப்படாமல் - ஆத்திரப் படாமல், அவர்களை விமர்சிக்காமல், அவர்களெல்லாம் சொன்னதை வழிமொழிந்து சொன்ன திருமாவளவன் மீது ஏன் கோபம் ? ஏன் ஆத்திரம் ? ஏன் இந்த விமர்சனம் ? ஒரே ஒரு காரணம் தான் தோழர்களே, ஒடுக்கப்பட்டவர்களை ஒரு அரசியல் சக்தியாக விடுதலைச் சிறுத்தைகள் அணி திரட்டுகிறது, அதை அவர்களால் பொறுத்துக்கொள்ள முடியவில்லை.

> - **நிறைவேற்றப்பட்டிருக்கிற எட்டுத் தீர்மானங்களும், விடுதலைச் சிறுத்தைகள் கட்சி தீட்டியிருக்கிற - நிறைவேற்றியிருக்கிற தீர்மானங்களைப் போல் இருக்கிறது.**
> - **இந்த தீர்மானங்களுக்கு இன்றைய புதிய மனுவாதிகள் பதில் சொல்ல முடியுமா?**
>
> **- திருமாவளவன் உரையிலிருந்து**

இவ்வளவு காலம் ஆளும் கும்பலோடு அதிகார வர்க்கத்தோடு அவர்கள் சேர்ந்து நடத்திய கட்டப் பஞ்சாயத்து நடவடிக்கைகளில் முதன் முறையாக விடுதலைச் சிறுத்தைகள் குறுக்கிடுகிறார்கள் - தடுக்கிறார்கள். ஓடிப்போன காதலர்களை பிரிப்பதற்காக காவல் நிலையங்களிலே காலங்காலமாக பஞ்சாயத்து நடக்கிறது. ஓடிப்போன காதலர்களை பிரிப்பதற்காக, பணம் உள்ள ஜாதி இந்துக்கள் பணத்தை கட்டுக்கட்டாக கொண்டுபோய் காவல் துறையிடம் கொடுத்து, அரசாங்க வண்டியிலே அரசாங்க டீசல் போட்டு, அரசாங்க நேரத்தை பயன்படுத்தி, காதலர்களை தேடிப்போய் கொண்டு வந்து பிரிப்பது தான் காவல் துறையினரின் வேலை. அது காவல் நிலையம் என்று சொல்வதை விட கட்ட பஞ்சாயத்து நிலையம் என்று சொன்னால் பொருத்தமாக இருக்கும். அதுவும் காதல் பஞ்சாயத்துகள் நடத்துகிற நிலையங்களாகத்தான் அவை இருக்கின்றன. அப்படி காதலர்களைப் பிரிக்கிற போது முதல்முறையாக, ஏன் பிரிக்கிறாய் என்று அங்கே போய் நின்று கேள்வி எழுப்புகிறவன், விடுதலைச் சிறுத்தையாக இருக்கிறான்; அதைத் தடுக்கிறான்; பிரிக்கக் கூடாது என்கிறான். இது தான் ஜாதி வெறியர்களின் எரிச்சலுக்குக் காரணம். ஆகவே இவர்கள் கட்டப்பஞ்சாயத்து பண்ணுகிறார்கள் என்று சொல்லுகிறார்கள், உலகத்துக்கு தெரியும் தோழர்களே கட்டப்பஞ்சாயத்து யார் செய்வது, அதை தடுப்பது யார் என்பது மனசாட்சி உள்ள நம்முடைய தலைவர்களுக்கு உங்களுக்கு தெரியும்.

இவையெல்லாம் ஏன் நிகழ்கிறது? இவ்வளவு காலமாக பெரியார் முகமூடி அம்பேத்கர் முகமூடி - மார்க்ஸ் முகமூடி - எவ்வளவு இளிச்சவாயர்களாக நாம் இருக்கிறோம் பார்த்தீர்களா! பெரியாரிய வாதிகளும் ஏமாந்துபோய் இருக்கிறார்களே என்பது தான் பெரிய வேடிக்கையாக இருக்கிறது. பெரியாரியல்வாதிகள் எப்போதும் விவரமானவர்கள் - ஆட்களை எடை போடுவதிலே கெட்டிக்காரர்கள் என்று தான் நம்பி இருந்தோம். ஆனால் அண்ணன் கொளத்தூர் மணி போன்ற பெரியாரியவாதிகளும், பெரியார் முகமூடி போட்டவர்களிடம் ஏமாந்திருக்கிறார்கள் என்பது தான் தோழர்களே நமக்கு பெரும் அதிர்ச்சியாக இருக்கிறது.

பார்ப்பனர்கள் எல்லாத் தளங்களிலும் ஆதிக்கம் செலுத்துகிறார்கள்; அதனால் பார்ப்பன ஆதிக்கத்தை எதிர்க்க வேண்டிய தேவை இருந்தது. எனவே டி.எம்.நாயர், சர்.பிட்டி. தியாகராயர், டாக்டர் நடேசன் இவர்களெல்லாம் தந்தை பெரியார் காங்கிரஸ் கட்சியில் இருந்த காலத்திலேயே பார்ப்பனரல்லாதோர் இயக்கத்தை உருவாக்க அடித்தளமிட்டார்கள். ஏன் பார்ப்பனரல்லாதோர் இயக்கத்தை உருவாக்க வேண்டிய தேவை வந்தது ? பார்ப்பனர்கள் என்ற ஜாதியின் மீது இருக்கிற வெறுப்பு அல்ல; பார்ப்பனர்கள் அனைத்து தளங்களிலும் செலுத்திய ஆதிக்கத்தின் மீது இருந்த வெறுப்பு. நிர்வாகத் துறையிலே அவர்கள்தான்; நீதித் துறையிலே அவர்கள்தான்; சட்டத்துறைகளிலே அவர்கள்தான்; ஊடகத் துறைகளிலே அவர்கள்தான்; அத்துனை தளங்களிலும் அவர்கள் மக்கள் தொகையிலே குறைவாக இருந்தாலும், தீர்மானிக்கக் கூடிய சக்திகளாக இருக்கிறார்கள்; கலாச்சார துறைகளிலும் அவர்கள் தான், கோவிலில் மணி ஆட்டுவதிலிருந்து, வசூலிப்பதிலிருந்து, அத்துனை நிர்வாகத் துறைகளிலும் அவர்களின் ஆதிக்கம் இருந்தது. ஆகவே ஆதிக்கத்தை எதிர்ப்பதற்காக பார்ப்பனரல்லாதோர் இயக்கம் தேவைப்பட்டது. தலித்துகள் அப்படி எந்த இடத்திலே ஆதிக்கம் செலுத்துகிறார்கள்? தலித்துகள் கோவில் பூசாரிகளாக இருக்கிறார்களா? தலித்துகள் உச்ச நீதி மன்றத்திலும், உயர்நீதி மன்றத்திலும் நீதிபதிகளாக மிகப் பெரும் இடங்களில் அமர்ந்திருக்கிறார்களா? தலித்துகள் கோவில் தர்மகர்த்தாவாக இருக்கிறார்களா? தலித்துகள் எந்த இடத்திலே ஆதிக்கம் செலுத்துகிறார்கள்? ஆக தலித்துகளை எதிர்ப்பதற்கான சூழல் எங்கிருந்து வந்தது? தலித் அல்லாதோர் இயக்கம் உருவாக்க வேண்டிய தேவை எங்கிருந்து வந்தது? தொண்ணூற்று ஐந்து வயதுகள் வரை தந்தை பெரியார் அவர்கள் உழைத்த உழைப்பு வீணாகிறதோ - விரையமாகிறதோ என்கிற கவலை இருந்த நேரத்தில் தான் தோழர்களே, பெரியாரியத்தை எந்த சக்தியாலும் வீழ்த்தமுடியாது, இதோ நாங்கள் திரளுகிறோம் என்று, இன்று ஈரோட்டு மண்ணில் பெரியார் பிள்ளைகள் திரண்டிருக்கிறோம். இதை யாராலும் வீழ்த்தமுடியாது யாராலும் அதை சாய்த்துவிட முடியாது. அவ்வளவு வலுவாக அது வேர்கொண்டிருக்கிறது என்பதை நாம் பார்க்கிறோம். எவ்வளவு ஆபத்தான போக்கு இது, தலித் அல்லாதோர் இயக்கம் உருவாக்க வேண்டிய அளவுக்கு இந்த மண்ணிலே என்ன நேர்ந்துவிட்டது? தயவு கூர்ந்து நாம் இதை யெல்லாம் எண்ணிப்பார்க்க வேண்டியவர்களாக கடமைப்பட்டவர்களாக இருக்கிறோம் தோழர்களே.

புரட்சியாளர் அம்பேத்கர், தந்தை பெரியார் என்கிற இந்த மாமனிதர்கள் இந்துத்துவத்திற்கு எதிராக - மனுதர்மத்திற்கு எதிராக, தொடக்கி வைத்த இந்த போராட்டம் நம்முடைய தலைமுறையோடு முடிந்துவிடுகிற போராட்டமாக

4 ஆம் பக்கம்

# திராவிடர் விடுதலைக் கழகத்தின் இந்த மாநாடு புரட்சிக்கு வித்திடும் முயற்சியாகும்

*தொல். திருமாவளவன் உரை-3 ஆம் பக்கத் தொடர்ச்சி*

இல்லை. அடுத்தடுத்த தலைமுறைகளுக்கும் இது தேவைப்படுகிறது. ஆகவே திராவிடர் விடுதலைக் கழகத்தின் இது போன்ற மாநாடுகள் தவிர்க்க முடியாத ஒரு தேவையாக மாறியிருக்கிறது. இந்த மாநாடோடு இது முடிந்து விடாமல் அடுத்தடுத்து மண்டல வாரியான மாநாடுகளும், நிறைவாக இந்த மனுசாஸ்திர எரிப்புப் போராட்டமும் நடைபெறும் என்று இந்த மாநாட்டிலே நிறைவேற்றப் பட்டிருக்கிற இந்த தீர்மானத்தை, விடுதலைச் சிறுத்தைகள் கட்சி முழுமனதோடு வரவேற்று ஆதரிக்கிறது. நீங்கள் உடன்பட்டால் அந்த எரிப்புப் போராட்டத்தில் திருமாவளவனும் பங்கு கொள்வான் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்ள நான் கடமைப்பட்டிருக்கிறேன். (கைதட்டல்) விடுதலைச் சிறுத்தைகளும் பங்கு கொள்ளலாம் என்பதை நீங்கள் கட்சி ரீதியாக உங்கள் இயக்க அடிப்படையிலே உடன்பாடு இருந்தால், அந்த மனுசாஸ்திர எரிப்பு போராட்டத்தில் விடுதலை சிறுத்தைகள் கட்சி பங்கேற்கும் என்பதை நான் உறுதியாக சொல்ல கடமைப்பட்டிருக்கிறேன். (கைதட்டல்) இது உங்களுக்கு ஆதரவாக அல்ல; ஒடுக்கப்பட்ட மக்களுக்கு பாதுகாப்பு தேவை என்பதற்காக. பெரியாரியத்தை வளர்தெடுக்க வேண்டும் என்ற தேவையை உணர்ந்திருப்பதால் சொல்லுகிறோம்.

பெரியாரியம் என்பது இந்த மண்ணில் தவிர்க்க முடியாத தேவையாக இருக்கிறது தோழர்களே; நாமெல்லாம் பிறக்காத காலத்திலேயே இந்த ஒடுக்கப்பட்ட மக்களுக்காக குரல் கொடுத்தவர் தந்தை பெரியார் அவர்கள். இன்றைக்கு பெரியாரைக் கூட, அவர் தமிழர் அல்ல என்று சில கும்பல் பேசுகிறது. எவ்வளவு வெட்கக்கேடாக இருக்கிறது பாருங்கள் ! எவ்வளவு குறுகிய மனம் படைத்த, குண்டுச்சட்டிக்குள்ளே குதிரை ஓட்டக் கூடிய மூடர்களாக இருக்கிறார்கள் என்பதை எண்ணி நான் வேதனைப் படுகிறேன். அப்படிப் பார்த்தால் மார்க்ஸ் இந்த மண்ணில் அடக்கப்பட்ட - ஒடுக்கப்பட்ட மக்களின் மீட்சிக்காக தத்துவம் வழங்கிய தலைவர்; அவரை எந்தப் பட்டியலிலே சேர்ப்பது? தந்தை பெரியாரையே தமிழர் அல்ல என்று சொல்லுகிறபோது, புரட்சியாளர் அம்பேத் கரை இவர்கள் எப்படி ஏற்றுக்கொள்வார்கள் ? எவ்வளவு கீழ்த்தரமான ஒரு சிந்தனை? இந்த இரண்டு மாமனிதர்களும் இந்த மண்ணில் இந்துத்துவத்தை வேரறுக்கப் பிறந்தவர்கள். இந்த தத்துவங்களை வேரறுக்க வேண்டும் என்று இன்றைக்கும் மனுதர்ம வாதிகள் வரிந்து கட்டிக்கொண்டு, வேலை செய்கிறார்கள், ஆனால் அவர்கள் தோற்றுப் போவார்கள் என்பதற்கு சாட்சியம் தான் இந்த மாநாடு.

1920களிலே எழுதப்பட்ட குடிஅரசு கட்டுரை களையெல்லாம் தொகுத்து, இன்றைக்கு புதிய தலைமுறைகளுக்கு வழங்குகிறார்கள். அவர்கள் படித்துப் பார்க்கிறபோது, அவர்களும் போராளி களாக இந்த மண்ணில் முளைத்தெழுவார்கள். ஆகவே மனுதர்மவாதிகளால் வெற்றி பெற்றுவிட முடியாது, பெரியாரியத்தை வீழ்த்தி விட முடியாது என்பதை நாம் உறுதிப்படுத்தத் தான் போகிறோம். தந்தை பெரியார் பிறந்த மண்ணில் இன்றைக்கு தூய தமிழ் வாதம் பேசுகிறவர்கள் தமிழ்த் தேசியம் பேசுகிறவர்கள், தமிழ்நாட்டில் தெலுங்கு பேசுபவர் களையும், கன்னடம் பேசுபவர்களையும் கூட தமிழர்கள் அல்ல என்று, குதர்க்கவாதம் பேசி ஒற்றுமையை சீர்குலைக் கிறார்கள். ஈழத் தமிழர்களின் விடுதலைக்காக போராடிக் கொண்டிருக்கிற இந்த களத்தில், தமிழீழம் தான் ஒரே தீர்வு என்று, எல்லோரும் கைகோர்த்து நிற்கிற இந்த சூழலில், தமிழர்களின் ஒற்றுமையை சிதைக்கிற வகையிலே இன்றைக்கு புதிய மனுவாதிகள் புறப்பட்டிருக்கிறார்கள். ஒருவேளை இவர்கள் சிங்களவர்களின் செயல் திட்டத்தை நடைமுறைப்படுத்துகிறார்களோ என்று சந்தேகிக்க வேண்டியிருக்கிறது தோழர்களே. இராசபக்சேவின் கைக்கூலிகளாக இருந்து செயல்பட தொடங்கி யிருக்கிறார்களோ என்று அய்யப்பட வேண்டியிருக் கிறது தோழர்களே. முள்ளிவாய்க்கால் இனப்படு கொலைகளுக்கு பிறகு - இன அழித்தொழிப்புக்கு பிறகு, பல்வேறு முரண்பாடுகளுக்கிடையிலே சிதைந்து கிடக்கிற தமிழர்களெல்லாம் இன்று ஒன்றுசேர்கிற சூழல் கனிந்து வந்தது; பல்வேறு மாறுபாடுகளுக் கிடையிலே தமிழர்கள் ஒன்று சேர்ந்து களமாடுகிற ஒரு சூழல் வந்தது. இன்றைக்கு ஈழத்தைப் பற்றிப் பேசவோ, விடுதலைப் புலிகள் பற்றி பேசவோ, சர்வதேச விசாரணை தேவை என்பதைப் பற்றி பேசவோ வாய்ப்பில்லாத ஒரு நிலையை ஏற்படுத்தி, ஜாதி, ஜாதி, ஜாதி என்று பேசுகிற ஒரு சூழலை இவர்கள் ஏற்படுத்தி யிருக்கிறார்கள் என்றால், உண்மையிலேயே இவர்கள் சிங்களவர்களோடு கைகோர்த்து, தமிழக சூழலை சீரழித்துக் கொண்டிருக்கிறார்கள் தமிழர்களின் ஒற்றுமையை சிதைத்துக் கொண்டிருக்கிறார்கள் என்று தான் தோழர்களே நாம் எண்ண வேண்டியிருக்கிறது.

வன்கொடுமை தடுப்புச் சட்டத்தை தவறாக பயன்படுத்துகிறார்களாம்; தவறாக பயன்படுத்து வது காவல் துறையா - தலித்துகளா? சட்டத்தை யார் பயன்படுத்துவார்கள் என்பது கூடவா தெரியாது? இந்த அடிப்படை அறிவுக் கூடவா இல்லை? சட்டத்தை மக்களால் பயன்படுத்த முடியுமா? அதிகாரிகளால் தானே பயன்படுத்த முடியும்!


**சமூகத்திலே சட்டங்கள் பலவகை இருக்கின்றன. அதிலே கருப்புச் சட்டங்கள் என்பது ஒரு வகை, சமூக பாதுகாப்புச் சட்டங்கள் என்பது ஒரு வகை. சமூக பாதுகாப்புச் சட்டங்களை பாதுகாக்க வேண்டியது நமது கடமை;**


ஒருவேளை ஒரு சட்டம் தவறாக பயன்படுத்தப் பட்டால், தவறாக பயன்படுத்திய காவல் துறையை அல்லவா எதிர்த்து போராடவேண்டும்; காவல் துறைக்கு எதிராகவல்லவா பிரச்சாரம் செய்ய வேண்டும். தமிழ் நாட்டிலே, இந்தியாவிலே, உலகத்திலே எந்த சட்டம் சரியாக பயன்படுத்தப் பட்டிருக்கிறது? பிராப்பர் யூஸ் ஆப் லா ( Proper use of Law ) எங்கே இருக்கிறது? ஐ.பி.சி சரியாக பயன்படுத்தப்படுகிறதா? இந்திய தண்டனைச் சட்டம் சரியாக பயன்படுத்தப் படுகிறதா? பொருளியல் குற்றங்களுக்கான சட்டங்கள் சரியாகப் பயன்படுத்தப்படுகிறதா? ஆயுதப் பரவலை தடுக்கிற சட்டம் சரியாகப் பயன்படுத்தப்படுகிறதா? தடா சட்டம் சரியாக பயன்படுத்தப்பட்டதா? பொடா சட்டம் சரியாக பயன்படுத்தப்பட்டதா? இன்றைக்கு நில அபகரிப்பு என்று எல்லோர் மீதும் வழக்கு போடுகிறார்களே, அது மிகச் சரியாகப் போடுகிற வழக்கா? நேற்றுக்கூட பல்லாவரம் பகுதியில் நான்கு ஈழத்தமிழ் இளைஞர்களை பிடித்து, சிறைப் படுத்தியிருக்கிறார்கள்; ஏனென்று கேட்டால் கொழும்பிலே இரண்டு இளைஞர்கள் பிடிபட்டார்கள், அந்த இரண்டு பேரும் புலிகள் என்று உறுதியாகியிருக்கிறது, அவர்களின் நண்பர்கள் பல்லாவரம் பகுதியில் இருக்கிறார் களாம், அவர்களையும் பிடியுங்கள் என்று சிங்கள அரசு சொல்லுகிறது இந்திய அரசு கேட்கிறது; இந்திய அரசு சொல்கிறது தமிழக அரசு கைது செய்கிறது. இவர்கள் யாருடைய ஏவலை செய்ய வேண்டியவர்களாக இருக்கிறார்கள்? சிங்களவன் சொல்வதை கேட்கிற தமிழ்நாடு அரசு இருக்கிறது இந்திய அரசு இருக்கிறது; தமிழ் இளைஞர்களை கைது செய்கிறார்கள். இது சரியான வழக்கா சரியான சட்டமா ? எந்த சட்டம் சரியாகப் பயன்படுத்தப்படுகிறது? காவல் துறையினரால் என்றைக்காவது சரியான குற்றவாளிகளை அடையாளம் கண்டுபிடிக்க முடிந்திருக்கிறதா? காவல் துறை என்றைக்காவது சட்டத்தை சரியாகப் பயன்படுத்தியதாக சான்றுகள் உண்டா?

சமூகத்திலே சட்டங்கள் பலவகை இருக்கின்றன. அதிலே கருப்புச் சட்டங்கள் என்பது ஒரு வகை, சமூக பாதுகாப்புச் சட்டங்கள் என்பது ஒரு வகை. சமூக பாதுகாப்புச் சட்டங்களை பாதுகாக்க வேண்டியது நமது கடமை; பெண்களுக்கெதிரான வன்கொடுமைகளை தடுக்கிற சட்டங்கள் அனைத்தையும் நாம் பாதுகாத்தாக வேண்டும். குடும்ப வன்முறை தடுப்புச் சட்டம் இருக்கிறது; பெண்களை கேலி செய்வதை தொல்லை தருவதை தடுக்கிற சட்டம் இருக்கிறது; வரதட்சணையைத் தடுக்கிற சட்டம் இருக்கிறது; இப்படிப் பெண் களைப் பாதுகாப்பதற்கு பல்வேறு சட்டங்கள் இருக்கின்றன. இந்த சட்டங்களையெல்லாம் தவறாக பயன்படுத்துகிறார்கள் என்று பெண்கள் பொய் புகார்கள் தருகிறார்கள் என்று இந்த சட்டங்களை நடைமுறைப்படுத்தக்கூடாது என்று சொல்லுவது அறிவுடைமை ஆகுமா ? அது ஜனநாயக வாதியின் கடமையாக இருக்க முடியுமா ? அது சமூக பாதுகாப்புச் சட்டம்.

1955 லே வந்தது பி.சி.ஆர் சட்டம் Protection of Civil Rights - அது தலித்துகளுக்கான சட்டம் அல்ல - குடியுரிமை பாதுகாப்பு சட்டம். குடியுரிமை பாதுகாப்பு என்பது, ஒவ்வொரு தனி மனிதனுக்கும் குடியுரிமை உண்டு; அந்த குடியுரிமையை பாதுகாப்பதற்காக வந்த சட்டம் 1955. அந்த சட்டத்தின்படி இந்திய அளவிலே ஒரு விழுக்காட்டு அளவிற்காவது எவனாவது தண்டிக்கப்பட் டிருக்கிறானா யாராவது சான்று காட்ட முடியுமா? அந்த சட்டம் பல் இல்லாத பாம்பிற்கு சமம் என்று அரசாங்கமே முடிவு செய்து, அதனால் எந்த பயனும் இல்லை என்று முடிவு செய்து, இந்த ஒடுக்கப்பட்ட மக்களுக்கு எதிரான வன்கொடுமைகள் நாளுக்குநாள் அதிகரித்துக் கொண்டே போகிறது; இன்றைக்கும் செருப்பு அணிந்து போகமுடிய வில்லை; சைக்கிளிலே போக முடியவில்லை; நல்ல சட்டை அணிய முடியவில்லை. இன்றைக்கும் காது கழுத்துகளிலே தங்க நகைகள் அணிந்து கொள்ள முடியவில்லை. இன்றைக்கும் ஷூ போட்டு போக முடியவில்லை பேண்ட் அணிந்து போக முடியவில்லை. இன்றைக்கும் பெண்கள் தலித் பெண்கள் கொடூரமான பாலியல் வல்லுறவுகளுக்கு ஆளாக்கப்படுகிற நிலை தொடர்கிறது.

புரட்சியாளர் அம்பேத்கர் பிறந்த மராட்டிய மண்ணில் நாக்பூர் அருகே கயர்லாஞ்சி என்ற இடத்தில், கடந்த இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் தோழர்களே, நூறு பேர் சுற்றி நின்று வேடிக்கைப் பார்க்கிறபோது, தாயையும், பிள்ளையையும் காமவெறி பிடித்த ஜாதி வெறியர்கள், பாலியல் வல்லுறவு கொண்டு அங்குலம் அங்குலமாக சூடு வைத்து அவர்களைத் துடிக்கத் துடிக்க வதை செய்து, கொலை செய்தார்கள். ஜாதியின் பெயரால் நடைபெறும் இது போன்ற வன்கொடுமைகள் உலகில் வேறு எங்கேனும் உண்டா ? இன்றைக்கும் வாயிலே மலத்தைத் திணிக்கிறார்கள் - வாயிலே சிறு நீரை கழிக்கிறார்கள். இன்றைக்கும் எத்தனையோ பெண்களை கடத்தி சென்று வல்லுறவு செய்து கொடுமை செய்து கொலை செய்கிறார்கள்.

தர்மபுரி சம்பவத்திற்கு பிறகு பண்ருட்டி பக்கத்திலே காந்தல்வாடி என்ற கிராமத்தைச் சார்ந்த பிரியா என்ற ஒரு கல்லூரி மாணவி, கல்லூரிக்கு சென்று திரும்புகிற வேலையிலே கடத்திக் கொண்டுபோய், பாலியல் வல்லுறவு கொண்டு, கொடூரமாக கொலை செய்திருக்கிறார்கள்; கொலை செய்து குளத்திலே தூக்கி எறிந்து விட்டார்கள். இதற்காக இந்த புதிய மனுவாதிகள் கவலைப் பட்டிருக்கிறார்களா? பெண்களுக்காக நீலிக் கண்ணீர் வடிக்கிறார்களே - பெண்களை கேலி செய்கிறார்கள் என்று நீலிக் கண்ணீர் வடிக் கிறார்களே - பெண்களை சீண்டுகிறார்கள் என்று நீலிக்கண்ணீர் வடிக்கிறார்களே - பிரியா ஒரு பெண் இல்லையா ? ஏன் பிரியாவை கடத்தினார்கள் ? ஏன் கொலை செய்தார்கள் ? பண்ருட்டி அருகே உள்ள ஒரு கிராமத்தைச் சார்ந்த, ஒரு தலித் இளைஞனும், ஒரு வன்னிய பெண்ணும் அவர்கள் விரும்பி காதலித்து, பல வருடம் கழித்து, ஓடிப் போகிறார்கள்; வீட்டை விட்டு வெளியேறு

5 ஆம் பக்கம்

# தமிழ்நாட்டில் வீழ்த்த முடியாதது பெரியாரியம்; அதுவே நம் அனைவருக்கும் பாதுகாப்பு

*தொல். திருமாவளவன் உரை-4 ஆம் பக்கத் தொடர்ச்சி*

கிறார்கள். கல்லூரி மாணவியாக இருப்பவள் வன்னியர் சமூகத்தைச் சார்ந்த பெண்; வெறும் பிளஸ் டூ வரையிலே படித்து விட்டு சென்னையிலே வேலை செய்து கொண்டிருப்பவன் தலித் இளைஞன். அவன் பள்ளித் தோழன்; கல்லூரித் தோழன் அல்ல. ஆனாலும் இவர்களுக்கு இடையிலே மறுபடியும் உறவு மலர்கிறது; அது நட்பாக மாறுகிறது; மறுபடியும் அது காதலாக விரிவடைகிறது. இதற்கு இடையிலே அவர்களுக்கு துணைச் செய்தது, அவர்களின் கையிலே இருக்கிற கைப்பேசி (செல் போன்) தான். காதல் மலர்ந்ததற்கு திருமாவளவன் காரணமா - கைப்பேசி காரணமா ? இதை எதிர்க்க வேண்டியவர்கள் திருமாவளவனை எதிர்க்க வேண்டுமா - செல்போனை எதிர்க்க வேண்டுமா? இன்றைக்கு ஒவ்வொருவரின் கைகளிலும் செல்போன் இருக்கிறது - ஃபேஸ் புக் இருக்கிறது -ஈ மெயில் இருக்கிறது, இவர்கள் தலைகீழாக நின்றாலும் கூட காதல் திருமணங்களை தடை செய்ய முடியாது தோழர்களே. உலக மயமாதல் நமக்கு முரண்பாடான ஒன்று என்றாலும் கூட, அது ஜாதியைத் தகர்த்துக் கொண்டிருக்கிறது. ஆக ஓடிப்போனவர்களுக்கு உதவி செய்தாள் என்ற காரணம் காட்டி பிரியா கடத்தி கொண்டு போய் கொலை செய்யப்பட்டாள். ஓடிப்போனவர்கள் எங்கே இருக்கிறார்கள் என்று சொல்லவில்லையாம் அதனால் கடத்தி கொண்டு போய் கொலை செய்கிறார்கள். இது கொடுமை இல்லையா ?

சிதம்பரம் தொகுதியிலே சேத்தியாதோப்பு பக்கத்திலே சென்னிநத்தம் கிராமத்தைச் சார்ந்த கோபாலகிருஷ்ணன் என்ற ஒரு தலித் இளைஞன் - கல்லூரி மாணவன், வரகூர் என்கிற கிராமத்தைச் சார்ந்த ஒரு பெண்ணை விரும்பி, இருவரும் படிக்கிற தோழர்கள், கல்லூரித் தோழர்கள்; ஒருவரை ஒருவர் மனமார நேசித்து, மூன்று ஆண்டுகளாகக் காதலித்து வருகிறார்கள். இப்போது ஒவ்வொரு ஒன்றியத்திலும் ஒரு குழு அமைத்து, யார் யாரை காதலிக்கிறார்கள் என்று கணக்கெடுப்பு நடத்தி வருகிறார்களாம். இவர்களின் வேலைத் திட்டம் எப்படி மாறிவிட்டது பார்த்தீர்களா? ஈழத்துக்காக குரல் கொடுத்தவர்கள் தமிழுக்காக போராடி யவர்கள் பெரியாரியத்தை உரத்து முழங்கியவர்கள் இன்றைக்கு என்ன கணக்கெடுப்பு நடத்துகிறார்கள்? எந்த ஊரிலே, எந்த தலித் இளைஞன், எந்த ஜாதிப் பெண்ணை காதலிக்கிறான்; பட்டியல் தயாரித்து பின்னால் தொடர்ந்து போய் அவர்களை கொலை செய்யக்கூடிய ஒரு கூலிப் படை கும்பலை வைத்துக்கொண்டு அரசியல் செய்கிறார்கள். அப்படி கோபாலகிருஷ்ணன் பின்னால் தொடர்ந்து போய், அந்த பெண்ணைக் கொண்டு போய் வரகூரிலே விட போயிருக்கிறான்; வீட்டுக்கு வந்து விட்டுவிட்டுப் போ என்று அந்த பெண்ணே அவனை வரச் சொல்லியிருக்கிறாள், இது அந்த குடும்பத்தினருக்கு தெரிந்திருக்கிறது. வந்து விட்டுவிட்டு திரும்புகிற போது அவனை தேடிப் பிடித்து, கொண்டு போய், கழுத்தை அறுத்து படுகொலை செய்து, சாக்கு மூட்டையிலே கட்டி வீசி எறிந்திருக்கிறார்கள். என்ன கொடுமை இது ?

தூத்துக்குடி புனிதா பாலியல் வல்லுறவுக்கு ஆளாகி கொலை செய்யப்பட்டிருக்கிறாள்; பத்து பன்னிரண்டு வயது சிறுமி. பெண்களுக்காக பெண்களுக்கெதிரான கொடுமைகளுக்காக நீலிக் கண்ணீர் வடிப்பவர்கள் தூத்துக்குடி புனிதாவுக்காக குரல் கொடுத்திருக்கிறார்களா ? டில்லியிலே ஒரு மாணவி எவ்வளவு கொடூரமாக பாலியல் வல்லுறவுக்கு ஆளாக்கப் பட்டிருக்கிறாள்! ஆறு பேர் அங்கே இருந்து ஓடும் பேருந்திலே வதை செய்திருக்கிறார்கள், இரும்பு பைப்பால் வயிற்றில் ஓங்கி அடித்ததால் குடல் சிதைந்திருக்கிறது; இன்றைக்கும் அவள் உயிருக்கு போராடி கொண்டிருக்கிறாள்; அவளும் பெண் தானே; அது கொடுமை இல்லையா? ஆறு பேரில் ஒரே ஒருவனுக் காவது மனிதத் தன்மை இருந்ததா ? அந்த ஆறு பேரில் எவனாவது ஒருவனாவது பெரியாரியத்தை படித்திருந்தால் இப்படி செய்திருப்பானா? பெரி யாரியம் அவர்களுக்கு அறிமுகம் ஆகியிருந்தால் இந்த கொடுமை நடந்திருக்குமா? ஆறு பேரும் மிருகங்களாக இருந்திருக்கிறார்கள்; ஒருவன் கூட தப்பு என்று தடுக்கவில்லை தோழர்களே, மாறி மாறி ஆறு பேரும், ஓடும் பேருந்தில், ஒரு இளம் பெண்ணை கசக்கி எறிந்திருக்கிறார்கள்; வெளியிலே தூக்கி வீசியிருக்கிறார்கள்; பெண்களுக்காக நீலிக் கண்ணீர் வடிக்கிறவர்களே புதிய மனுவாதிகளே, அந்தப் பெண்ணிற்காக நீங்கள் குரல் கொடுத்திருக் கிறீர்களா? யோசித்துப் பாருங்கள்; ஆக வெறும் அரசியல் ஆதாயத்திற்காக ஜாதி வெறியை தூண்டிவிட்டு, தமிழர் ஒற்றுமையை சிதைக்கிற முயற்சி நடக்கிறது; ஈழத் தமிழர்களுக்காக, தமிழர்கள் ஒன்றுபட்டு விடக் கூடாது என்கிற சதித் திட்டத்தோடு இந்த முயற்சி நடப்பதாகத் தான் நாம் கருத வேண்டியிருக்கிறது தோழர்களே.

எத்தனையோ முரண்பாடுகள் இருந்தாலும் நாமெல்லாம் செங்கொடியை அடக்கம் செய்யும் போது கைகோர்த்து நின்றோம்; முத்துக்குமாரை அடக்கம் செய்யும் போது கைகோர்த்து நின்றோம்; இன்றைக்கு மூன்று பேர் தூக்கு கூடாது மரண தண்டனையை ஒழிக்க வேண்டும் என்ற களத்திலே கைகோர்த்து நின்றோம். இந்த ஒற்றுமை ஈழத் தமிழர்களின் விடுதலைக்காக உருவானது. ஆனால் இன்றைக்கு என்ன நிலைமை ? இவர்கள் ஏன் ஒன்று பட வேண்டும் - இதை தடுத்தே ஆக வேண்டும் தருமபுரியிலே ஜாதி ஒழிப்பு மாநாடு, ஈரோட்டிலே மனுதர்ம எரிப்பு விளக்க மாநாடு என்று இப்படி மாநாடு போட்டு நம் நேரத்தை இப்படி திசை திருப்ப வேண்டிய தேவை ஏற்பட்டிருக்கிறது தோழர்களே. எவ்வளவு பெரிய மோசமான ஆபத்து இந்த மண்ணிலே உருவாகிக் கொண்டிருக்கிறது என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும்.

> **தலித்துகளுக்கான பதவி உயர்வில்**
> **இட ஒதுக்கீடு மட்டுமல்ல, பெண்களுக்கு**
> **அரசியல் இட ஒதுக்கீடு கூடாது என்றும்,**
> **தோற்கடித்துக்கொண்டே இருக்கிறார்கள்.**
> **இந்தச் சமூகத்தில் பெண்களும்,**
> **தலித்துகளும் விளிம்புநிலை மக்கள்**
> **என்பதை மறந்து விடக் கூடாது.**

ஆக சட்டத்தை தவறாக பயன்படுத்துகிறார்கள் என்று சொல்லுவது அப்பட்டமான பொய். தாழ்த்தப்பட்டவர்கள் புகார் கொடுத்தால், அதை யாரும் சொல்லாமலேயே காவல் துறையினர் புறந்தள்ளி விடுவார்கள்; ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். மூன்றே மூன்று சூழல்களில் தான் வழக்குப் பதிவு செய்வார்கள். தலித் இயக்கங்கள் வற்புறுத்தி, போராடி, வழக்குப் பதிவு செய்கிறாயா இல்லையா என்று காவல் நிலையத்திலே போய் வாதாடுகிற போது வழக்குப் பதிவு செய்வார்கள். இரண்டாவது, ஒரே சமூகத்தைச் சார்ந்த இரண்டு குழு (கவுண்டர் சமூகம் என்று எடுத்துக் கொள்வோம்) கவுண்டர்களிலேயே அரசியல் ரீதியாக முரண்பாடுள்ள இரண்டு குழு; உள்ளாட்சி தேர்தலிலோ, சட்டமன்ற தேர்தலிலோ முரண்பாடு வந்திருக்கும்; நிலம் வாங்குவதிலோ விற்பதிலோ முரண்பாடு மோதல் வந்திருக்கும். அதில் ஒரு குழு இன்னொரு குழுவைப் பழிவாங்க வேண்டும் என்று விரும்புகிற போது, ஒரு தாழ்த்தப்பட்டவனை (அவன் தானே இழிச்சவாயன் அவன் தானே விவரமில்லாதவன்) பிடித்துக் கொண்டு போய், நீ போய் அவன் மேல பி.சி.ஆர் கேஸ் போடு, மற்றதையெல்லாம் நான் பார்த்துக்கொள்கிறேன் அப்படீன்னு, அவனிடம் வெறுமனே ஒரு தாளில் கையெழுத்து போட வைத்து, அதைக் காவல் துறையிடம் கொடுத்து, அதிகாரிகளைக் கவனிக்க வேண்டிய முறையிலே கவனித்து கொடுக்க வேண்டியதைக் கொடுத்து தள்ள வேண்டியதை தள்ளி, அவன் மீது எப்.ஐ.ஆர் போட வைப்பதே, அதே ஜாதியைச் சார்ந்த இன்னொரு குழு தான்; அப்போதுதான் வழக்குப் போடுகிறார்கள். இதை யாரும் மறுக்க முடியுமா ? பல சான்றுகளை சொல்ல முடியும். அடுத்து மூன்றாவதாக எந்த சூழலிலே வழக்குப் பதிவு செய்கிறார்கள் என்று சொன்னால், ஜாதி இந்துக்களிலே சில பேரை காவல் துறை யினருக்குப் பிடிக்காது; ஏதாவது ஒரு காரணத்தால். அவனை பழிவாங்க வேண்டும் என்று விரும்புகிற போது நினைக்கிற போது, காவல்துறை அவன் மீது இந்த வழக்கைப் போடும். இந்த மூன்று சூழல்களில் தான் வழக்குப் பதிவு செய்யப்படுகிறது. ஆனால் பெரும்பாலான வழக்குகளை, தோழர்களே ! பதினைந்தே நாட்களில் அல்லது முப்பதே நாட்களில், Mistake of Fact என்ற பெயரால் தவறான தகவல் என்ற பெயரால் சமரசம் செய்து, காசு வாங்கிக் கொண்டு, காவல் துறையினர் பஞ்சாயத்து செய்து, இரு தரப்பினரும் ஒரே ஜாதியைச் சார்ந்தவர்கள் ஏன் மோதிக் கொள்கிறீர்கள் ஒற்றுமையாக இருங்கள் என்று சொல்லி, ஜாதி இந்துக்களுக்கு இடையிலே சமாதானம் செய்கிற போது, இவனைப் பயன்படுத்திக் கொள்கிறார்கள். அப்படி பயன்படுத்துகிற போது வழக்குகள் தள்ளுபடி ஆகி விடுகின்றன; மிஸ்டேக் ஆப் பேக்ட் என்கிற பெயரால். இப்படிப்பட்ட நிலைமை இருக்கிற போது, இந்த சட்டம் தவறாக பயன்படுத்தப் படுகிறது என்று சொல்லுவது, எவ்வளவு அப்பட்டமான பொய் இது பொய் பிரச்சாரம் இது. இந்த சட்டமே ஒரு பல் இல்லாத பாம்பு என்று தான் சொல்ல முடியும்; இதனால் யாரும் இதுவரை தண்டிக்கப்படவில்லை.

பெயிலபுல் அஃபன்ஸ், நான் பெயிலபுல் அஃபன்ஸ் என்பது எல்லா சட்டங்களிலும் இருக்கிறது. பெயிலபுல் அபன்ஸ் என்பது உடனடியாக காவல் நிலையத்திலேயே ஜாமினில் விட்டு விடலாம். நான் பெயிலபுல் அபன்ஸ் என்பது, காக்னைஸபுல் அபன்ஸ்; அதாவது சமூகத்தை சீரழிக்கக் கூடிய கொடூரமான குற்றங்கள் என்று அரசு கருதுகிற சில குற்றங்கள் இருக்கின்றன; அப்படிப் பட்ட குற்றங்கள் நான் பெயிலபுல் அபன்ஸ் காக்னைஸபுல் அபன்ஸ். அந்த வழக்குகளில் பதிவு செய்யப்படும் போது பதினைந்து நாட்கள் ரிமாண்ட் செய்யப்பட்டு பிறகு ஜாமின் போட்டு வெளியிலே வருவது; அதற்காக ஜாமினே இல்லை என்று பொருள் அல்ல. அப்படித்தான் இந்த சட்டங்களிலும் சில வழக்குகள் நான் பெயிலபுல் என்று போடப்பட்டிருக்கிறது. இந்த வழக்கில் - இந்த சட்டத்தில் கைது செய்யப்படு கிறவர்கள் ஒரே வாரத்தில் திரும்பி வந்து விடுகிறார்கள்; மூன்றே நாட்களிலும் வெளியில் வந்து விடுகிறார்கள் நீதிபதிகளே விட்டு விடுகிறார்கள் தோழர்களே. இந்த சட்டத்தைத் தவறாக பயன்படுத்துகிறார்களாம், அதனால் இவர்கள் ஒன்று சேர்கிறார்களாம். இது ஒரு சமூக பாதுகாப்புச் சட்டம் தி சோசியல் லா; இவை கருப்புச் சட்டங்கள் கிடையாது.

குண்டர் சட்டத்தை எதிர்த்துப் போராடுவோம் வாருங்கள் - தேசிய பாதுகாப்புச் சட்டத்தை எதிர்த்து போராடுவோம் வாருங்கள் - பொடா சட்டம் இருந்த போது அதை எதிர்த்து நாம் போராடினோம்; தடா சட்டம் இருந்த போது அதை எதிர்த்து நாம் போராடினோம்; இன்றைக்கும் அப்படி எத்தனையோ கருப்பு சட்டங்கள் நடைமுறையிலே இருக்கின்றன. காஷ்மீரிலே நடக்கிற சட்டம் அது தான்; ஸ்பெஷல்ஆம்ஸ் ஆக்ட் என்று சொல்லப்படக் கூடிய ஆயுத தடுப்பு சட்டம் தான்; அந்த சட்டத்தை எதிர்த்து தான் தொடர்ந்து மக்கள் அங்கே போராடிக் கொண்டிருக்கிறார்கள். யாரை வேண்டுமானாலும் ஆயுதம் வைத்திருந்ததாகப் பிடித்து உள்ளே தள்ளி விட முடியும்; வெளியே வர முடியாது. அப்படி கருப்புச் சட்டங்களை எதிர்த்துப் போராடுவதற்கு பதிலாக, சமூக பாதுகாப்புச் சட்டங்களை எதிர்த் துப் போராட வேண்டும் என்பது, மிக மோசமான ஒரு அதர்மம் - அநீதி தோழர்களே; இப்படிப்பட்ட சூழலில் தான் இந்த கருத்துப் பிரச்சாரங்களை செய்ய வேண்டிய தேவை இருக்கிறது.

புரட்சியாளர் அம்பேத்கர் மிகப்பெரிய சிந்தனைகளை இந்த மண்ணுலகிற்கு தந்து விட்டு போனாலும், தந்தை பெரியாருக்கு பிறகு, அவருடைய கருத்துக்களைப் பரப்புவதற்கு

6 ஆம் பக்கம்

# ‘மனு சாஸ்திர எரிப்பு’ இன்றைய வரலாற்றுத் தேவை!

தொல். திருமாவளவன் உரை-5 ஆம் பக்கத் தொடர்ச்சி

இருக்கின்ற இயக்கங்களைப் போல, புரட்சியாளர் அம்பேத்கரின் கருத்துக்களை பரப்புகிற இயக்கங்கள் இந்திய அளவிலே உருவாகவில்லை. ஒரு மிஷினரி இராமகிருஷ்ணா மிஷினரி இருப்பதைப் போல, இந்துத்துவத்தைப் பரப்புகிற மிஷன்கள் இருப்பதைப் போல, கிருத்துவத்தை பரப்ப கிருத்துவ மிஷனரிகள் இருப்பதைப் போல, புரட்சியாளர் அம்பேத்கரின் கருத்துகளை பரப்புகிற மிஷனரி இயக்க நடவடிக்கை என்பது இந்திய அளவில் இல்லை தோழர்களே. ஒன்றிரண்டு இயக்கங்கள் இப்போது தான் தலை தூக்கி வந்திருக்கிறோம். கருத்துக்களை பரப்பக்கூடிய ஒரு வலிமையை பெறுகிற சூழலை பெற்றிருக்கிறோம்; ஆனால் பெரியார் இயக்கம் அப்படி அல்ல. திருமாவளவனை வேண்டுமானால் உங்களால் ஓரங்கட்ட முடியும்; திராவிடர் விடுதலைக் கழகத்தை உங்களால் ஓரங்கட்ட முடியாது. திருமாவளவனின் குரலை உங்களால் நசுக்க முடியும்; அண்ணன் கொளத்தூர் மணியின் குரலை உங்களால் நசுக்கி விட முடியாது. திருமாவளவனை, ஜாதி வெறியர்களிடம் காட்டிக் கொடுத்து, ஒருவேளை ஆளையே காலி செய்து விட முடியும்; அண்ணன் விடுதலை இராசேந்திரனை உங்களால் நெருங்க முடியாது. பெரியாரியம் அவர்களுக்கு மிகப்பெரிய பாதுகாப்பு அரணாக இருக்கிறது. ஆகவே மனுவாதிகள் நினைத்துக்கொண்டிருக்கிறார்கள், வெற்றி பெற்றுவிடலாம் என்று. அவர்களே தங்கள் முகத்திரையை கிழித்துக் கொண்டு இப்போது தெருவிலே நடமாடிக் கொண்டிருக்கிறார்கள். நாம் யாரும் அந்த முகத்திரையை கிழிக்க வேண்டிய தேவை இல்லை என்கிற அளவுக்கு, அவர்களே தங்களுக்கு தாங்களே முகத்திரையை கிழித்துக்கொண்டிருக்கிற நிலை உருவாகியிருக்கிறது.

இப்படிப்பட்ட இந்த கொடுமைகளெல்லாம், எந்த அடித்தளத்தில் இருந்து உருவாகி யிருக்கின்றன ? மனிதனை வழிநடத்துவது கருத்து தான் சிந்தனை தான் தத்துவம் தான் கோட்பாடு தான் கொள்கை தான். சீனிவாச ராவ் அவர்களைப் பற்றி, தோழர் சம்பத் சொன்னார். சீனிவாச ராவ் பிறப்பால் பார்ப்பனர்தான் ஆனாலும், சாணிப்பால் சவுக்கடிக்கு எதிராக போராடினார் என்று அவர் சொன்னார்; சாணிப்பால் சவுக்கடியை எதிர்த்து அவர் போராடியதற்கு காரணம், அவர் உள்வாங்கிய மார்க்சியம் என்ற கொள்கை தான். ஒரு எஞ்சினியராக படித்தாலும் கூட, இந்த தமிழ்நாடு விடுதலைப் பெற வேண்டும் என்பதற்காக தன் படிப்பை பாதியிலேயே முடித்து விட்டு, தமிழ்நாடு விடுதலைப் படை கட்டி, அழித்தொழிப்பு நடவடிக்கையில் ஈடுபட வேண்டும் என்று, படையைக் கட்டிக் கொண்டிருந்தான் பொன்பரப்பி தமிழரசன். பொன்பரப்பி தமிழரசனை வழிநடத்தியது எது ? அவன் உள்வாங்கிக் கொண்ட நக்சல்பாரி கருத்துக்கள் தான் தமிழ்நாடு விடுதலை என்கிற தமிழ்த் தேசிய கருத்துக்கள் தான் அவனை வழி நடத்துகிறது. ஜாதியால் பிறப்பால் வன்னியராய் இருந்தாலும், ஜாதி ஒழிப்புதான் இந்த மண்ணுலகிற்குத் தேவை - தமிழ்த் தேசியத்தின் விடுதலைக்குத் தேவை என்பதை மாநாடு கூட்டி அவனால் அறிவிக்க முடிந்தது. ஏன், அவன் உள்வாங்கிக் கொண்ட கருத்துதான். அண்ணன் கொளத்தூர் மணி உட்பட மேடையில் அமர்ந்திருக்கிற தலைவர்கள் - இங்கே வந்து அமர்ந்திருக்கிற தோழர்கள், எண்பது விழுக்காடு தொண்ணூறு விழுக்காடு தலித் அல்லாதவர்களாகத் தான் இருக்க முடியும் என்று நான் நம்புகிறேன். இப்படி இத்தனை ஆயிரம் பேர் திரண்டு வந்து, பெரியாரியத்தை உயர்த்திப் பிடிக்கிறோம் என்று, இந்த மாநாட்டிலே பங்கேற்கிறார்கள் என்று சொன்னால் புதிய மனுவாதிகளை எதிர்த்துக் குரல் எழுப்புகிறார்கள் என்று சொன்னால் அதற்கு உங்களை வழி நடத்துவது பெரியாரியம் என்கிற மனித நேயக் கருத்துகள்தான் தோழர்களே. ஆகவே கருத்துப் பிரச்சாரம் என்பது சாதாரணமான ஒன்று அல்ல; இன்னும் ஐம்பது ஆண்டுகளுக்காவது தேவைப்படுகிறது, இந்த மனுவாதிகளை விரட்டியடிப்பதற்கு இந்த ஜாதி வெறியர்களை விரட்டியடிப்பதற்கு. ஆகவே திராவிடர் விடுதலைக் கழகம் மேற்கொண்டிருக்கிற இந்த முயற்சி என்பது, ஒரு அளப்பரிய முயற்சி; புரட்சிக்கு வித்திடுகிற முயற்சி; ஜாதியத்தைத் தோலுரிக்கிற முயற்சி; பார்ப்பனியத்தை இந்துத்துவத்தை வேரறுக்கிற முயற்சி; ஒடுக்கப்பட்டவர்களை, சிறுபான்மை மக்களை, விளிம்பு நிலை மக்களை பாதுகாக்கிற - பாதுகாப்பு அரணை அமைக்கிற ஒரு முயற்சி. அந்த துணிச்சலோடு தான் தோழர்களே இந்த மேடையிலே இன்று திருமாவளவன் முழங்கிக் கொண்டிருக்கிறான். பெரியாரியம் என்பது ஒரு பாதுகாப்பு அரண்; அம்பேத்கரியம் என்பது ஒரு அகழியாக இருந்து, ஒடுக்கப்பட்டவர்களை பாதுகாத்துக் கொண்டிருக்கிறது; அரணும், அகழியாகவுமிருந்து இந்த ஏழை எளிய விளிம்பு நிலை மக்களை, பாதுகாக்கிற தத்துவங்களாக அவை விளங்குகின்றன.

எனவே இன்று நடந்து கொண்டு கொண்டிருக்கிற இந்த யுத்தம் என்பது, பிற்போக்குவாத சக்திகளுக்கும், முற்போக்கு சிந்தனையாளர்களுக்கும் இடையே நடக்கிற யுத்தம்; ஜனநாயகத்தைப் பாதுகாப்பதற்கான யுத்தம்; பெரியாரியத்தை - அம்பேத்கரியத்தை - மார்க்சியத்தைப் பாதுகாப்பதற்கான ஒரு போர்; அறப்போர். இந்த போராட்டத்தில் நாம் ஒருபோதும் பின்வாங்கிவிடக் கூடாது. அவதூறுகளை முறியடிக்க வேண்டும்; ஒடுக்கப்பட்ட மக்களின் உழைக்கும் மக்களின் ஒற்றுமையை சிதைக்கிற முயற்சிகளை முறியடித்தாக வேண்டும். மிகத் தீவிரமாக நாம் இறங்கிக் களமாட வேண்டிய தேவை இருக்கிறது. பலபேர் என்னைப் பார்த்துக் கேட்டார்கள், ‘அவர் ஜாதி வெறியர்களை எல்லாம் ஒருங்கிணைக்கிறார் நீங்கள் ஏன் தலித்துகளை எல்லாம் ஒருங்கிணைக்கக் கூடாது’ என்று. நான் ஜாதியவாதி அல்ல; கொள்கை சார்ந்து வளர்ந்திருப்பவன்; கொள்கை சார்ந்து இயங்கி

> **எங்கெல்லாம் அம்பேத்கரின் சிலைகளை எழுப்புகிறோமோ, அங்கெல்லாம் தந்தை பெரியாரின் சிலைகளை எழுப்புவோம். எங்கெல்லாம் அம்பேத்கரின் கருத்துகளைப் பரப்புகிறோமோ, அங்கெல்லாம் தந்தை பெரியாரின் கருத்துகளைப் பரப்புவோம்.**
>
> **இதுவே நமக்கு பாதுகாப்பு!**

கொண்டிருப்பவன்; நான் பெரியாரியவாதி அம்பேத்கரியவாதி மார்க்சியவாதி; நான் யாரையும் வலிந்து சேர்க்க வேண்டிய தேவை இல்லை. நான் கூப்பிட்டா திராவிடர் விடுதலைக் கழகம் அந்த களத்திற்கு வந்தது ? நான் சொல்லியா திராவிடர் விடுதலைக் கழகம் இந்த மாநாட்டை நடத்துகிறது ? நான் கேட்டுக்கொண்டா இடதுசாரிகள் அந்த களத்திலே நின்று முழங்குகிறார்கள் ? என் வேண்டுகோளை ஏற்றா மனித உரிமை ஆர்வலர்கள் தருமபுரிக்கு சென்றார்கள்? கொள்கை சார்ந்த மனித நேய சிந்தனையாளர்கள் இன்றைக்கு ஒன்று சேரவேண்டிய தேவை ஏற்பட்டிருக்கிறது. அதற்காக நாம் ஒரு வகையிலே அவர்களுக்கு நன்றி சொல்ல கடமைப்பட்டிருக்கிறோம். மார்க்சியவாதிகளையும், பெரியாரிய வாதிகளையும், அம்பேத்கரியவாதிகளையும், தமிழ்த்தேசிய சிந்தனையாளர்களையும், அனைத்து ஜனநாயக சக்திகளையும் ஓரணியில் திரட்டுவதற்கான ஒரு வாய்ப்பை அவர்கள் ஏற்படுத்தி தந்திருக்கிறார்கள். அதற்கு நாம் அவர்களுக்கு நன்றி சொல்ல கடமைப்பட்டிருக்கிறோம்; ஆகவே நான் அடிப்படைக்கு வருகிறேன் தோழர்களே.

இந்த மண்ணில் ஜாதிய கொடுமைகள் எங்கெல்லாம் தலைவிரித்தாடுகிறது என்பதை இந்த எட்டு தீர்மானங்களில் வடித்துக் கொண்டுவந்து விட்டார்கள். எதையெல்லாம் செய்தால் ஜாதியத்தை ஒழிக்க முடியும் என்பதற்கு, இங்கே விடை சொல்லியிருக்கிறார்கள். திருமண ஒப்பந்தம் ஏற்படுத்தி தருகிற வணிக நிறுவனங்கள் கூட எப்படி ஜாதியத்தை கட்டி காப்பாற்றுகிறது; திருமண மண்டபங்களை ஒதுக்கிற போது கூட வீடுகளை வாடகைக்கு தருகிற போது கூட, சைவம் பேசுகிறவர்கள் எப்படி இந்த ஜாதியத்தை கட்டி காப்பாற்றுகிறார்கள் என்பது உட்பட, எட்டே தீர்மானங்களில் மகத்தான செய்திகளை பதிவு செய்திருக்கிறது இந்த மாநாடு. இந்த எட்டு தீர்மானங்களையும் நடைமுறைப் படுத்துவதில் தான், பெரியாரியத்தின் வெற்றி அடங்கியிருக்கிறது. இந்த எட்டு தீர்மானங்களும் எதன் அடிப்படையில் வந்திருக்கிறது என்று சொன்னால், ஜாதியத்தை இங்கே கட்டிக் காப்பாற்றிக் கொண்டிருக்கிற, இந்துத்துவத்தை இங்கே கட்டிக் காப்பாற்றிக் கொண்டிருக்கிற, அல்லது பார்ப்பனியத்தை கட்டிக் காப்பாற்றிக் கொண்டிருக்கிற, அடிப்படை தத்துவம் மனுதர்மம். தத்துவம்தான் மக்களை வழிநடத்துகிறது என்று நான் சொன்னேன், பெரியாரியம் நம்மை வழிநடத்துகிறது; மனுதர்மம் அவர்களை வழிநடத்துகிறது. பெரியாரியம் ஜாதியைக் கூடாது என்கிறது; மனுதர்மம் ஜாதியம் வேண்டும் என்கிறது. நம் பார்வையில் அது அநீதியாக தெரிகிறது; அவர்களின் பார்வையில் நீதியாக தெரிகிறது. ஆகவே அவர்களின் அணுகுமுறைகளை, நடவடிக்கைகளை தடுக்க வேண்டுமானால் முறியடிக்க வேண்டுமானால், அவர்களை வழிநடத்துகிற தத்துவமாக இருக்கிற, மனுதர்மம் என்கிற அந்த அநீதிக் கொள்கையை - அநீதித் தத்துவத்தை நாம் ஒழித்தாக வேண்டும் - எரித்தாக வேண்டும் - அதை அப்புறப்படுத்தியாக வேண்டும் என்பது தான் அடிப்படைத் தோழர்களே. ஆகவே தான் இந்த மாநாடு.


மனுதர்மம் என்று எழுதப்பட்டிருக்கிற அச்சு காகிதங்களை எரித்து விடுவதனால், இங்கே என்ன நிகழ்ந்து விடப்போகிறது என்று நாம் அதை எளிதாகவோ, இலகுவாகவோ பார்த்துவிடக் கூடாது. மனுதர்மம் என்கிற தத்துவம் தான், மனுதர்மம் என்கிற கோட்பாடு தான், ஜாதி வெறியர்களின் நடவடிக்கைகளை நியாயப் படுத்துகிறது அவர்களை வழி நடத்துகிறது. ஜாதிக்கொரு நீதியை சொல்லுகிறது; குலத்துக்கொரு நீதியை சொல்லுகிறது; பார்ப்பனர்களுக்கு பாதுகாப்பைத் தருகிறது; ஆகவே அந்த தத்துவம் வேரறுக்கப்படுகிற போதுதான், இந்த கொடுமைகள் - புதிய மனுவாதிகள் புறந்தள்ளப்படுகிற நிலை ஏற்படும். எனவே தான் புதிய தலைமுறைக்கு அடையாளப்படுத்தக் கூடிய வகையில், அவர்களுக்கு புரட்சிகர சிந்தனையை உருவாக்கக் கூடிய வகையில், இந்த மாபெரும் போராட்டத் திட்டம் வழிவகுக்கிறது; இந்த போராட்டம் தவிர்க்கமுடியாத ஒரு வரலாற்றுத் தேவையாக மாறியிருக்கிறது; 1920 களிலே தந்தை பெரியார் நடத்திய போராட்டத்தை, பெரியாரின் பிள்ளைகள் இன்றைக்கு இருபத்தியோராம் நூற்றாண்டின் இறுதி பகுதியிலே, இன்றைக்கு நாம் தொடங்க வேண்டியிருக்கிறது - தொடக்க நிலையிலே தொடங்க வேண்டியிருக்கிறது. இன்னும் நான் சொன்னதை போல ஐம்பது ஆண்டுகளுக்காவது இந்த பெரியாரியத்தை பரப்ப வேண்டிய பொறுப்பும் கடமையும் நமக்கு இருக்கிறது தோழர்களே.

வந்திருக்கிற விடுதலை சிறுத்தைகளுக்கும், தலித் அல்லாத தோழர்களுக்கும் நான் விடுக்க விரும்புகிற வேண்டுகோள், எங்கெல்லாம் அம்பேத்கரின் சிலைகளை எழுப்புகிறோமோ, அங்கெல்லாம் தந்தை பெரியாரின் சிலைகளை எழுப்புவோம். எங்கெல்லாம் அம்பேத்கரின் கருத்துகளைப் பரப்புகிறோமோ, அங்கெல்லாம் தந்தை பெரியாரின் கருத்துகளைப் பரப்புவோம். எங்கெல்லாம் புரட்சியாளர் அம்பேத்கர் வாழ்க என்று முழங்குகிறோமோ, அங்கெல்லாம் தந்தை பெரியார் வாழ்க என்று முழங்குவோம். எங்கெல்லாம் அம்பேத்கரியம் தான் இந்த மண்ணுக்குத் தேவை என்று களப்பணி ஆற்றுகிறோமோ, அங்கெல்லாம் பெரியாரியத்தைச் சேர்த்து பரப்புவோம். இது தான் நமக்கு இருக்கிற ஒரே பாதுகாப்பு ஒரே பாதுகாப்பு என்று இந்த நேரத்திலே சொல்லி, திராவிடர் விடுதலைக் கழகம் உடன்பட்டால், இந்த மனுசாஸ்திர எரிப்புப் போராட்டத்தில், திருமாவளவனும், விடுதலை சிறுத்தைகளும் பல்லாயிரக்கணக்கிலே பங்கேற்போம் பங்கேற்போம் என்று சொல்லி இந்த வாய்ப்புக்கு நன்றி கூறி, நிறைவு செய்து விடைபெறுகிறேன்.

**உரை தொகுப்பு: கோகுல கண்ணன்**

“புரட்சிப் பெரியார் முழக்கம்”
**ஆண்டுக்கட்டணம் ரூ.150/-**
தொடர்புக்கு:
ஆசிரியர், 29, பத்திரிகையாளர் குடியிருப்பு,
திருவள்ளுவர் நகர், திருவான்மியூர், சென்னை-41.
✆ 99416 13535


# ஜாதி வெறி சக்திகளுக்கு எதிராய் சிலிர்த்தெழுந்த பேரணி











படங்கள்: காவை பிரபு

# ஜாதிய சக்திகளை வீழ்த்துவதில் இடதுசாரி கட்சிகள் பெரியார் இயக்கங்களோடு இணைந்து நிற்கும்

## ஈரோடு மாநாட்டில் தீண்டாமை ஒழிப்பு முன்னணித் தலைவர் பி. சம்பத் சூளுரை

***தி**ராவிடர் விடுதலைக் கழகத்தின் மாநாட்டுத் தீர்மானம் வலியுறுத்துவதுபோல் இடதுசாரி சக்திகள் பெரியார் இயக்கங்களோடு ஜாதிய சக்திகளை எதிர்ப்பதில் இணைந்து போராடும் என்று தீண்டாமை ஒழிப்பு முன்னணி தலைவர் பி. சம்பத் சூளுரைத்தார். இந்த மாநாட்டில் திரண்டிருக்கும் ஏராளமான இளைஞர்கள்தான் சமூக மாற்றத்துக்கான உந்து சக்திகள் என்றும் அவர் பெருமையுடன் குறிப்பிட்டார். டிசம்பர் 24 மாலை ஈரோட்டில் திராவிடர் விடுதலைக் கழகத்தின் பொது மாநாட்டில் பி. சம்பத் ஆற்றிய உரை:*



இரண்டு நாட்களாக கம்பீரமாக நடந்து வரக் கூடிய இந்த மாநாட்டு நிகழ்ச்சியின் இறுதிக் கட்டமாக இந்த பொது மாநாடு நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. காலம் கருதி, என்னுடைய கருத்துக்களை சுருக்கமாக இங்கு பதிவு செய்ய விரும்புகிறேன். திராவிடர் விடுதலைக் கழகம் நடத்தக் கூடிய இந்த எழுச்சி மிக்க மாநாட்டிலே, இடதுசாரி இயக்கங்களின் பிரதிநிதியாக கலந்து கொள்வதிலே நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன். இடதுசாரி இயக்கம், திராவிடர் விடுதலைக் கழகம் உள்ளிட்ட பெரியார் இயக்கங்களோடும், தலித் அமைப்புகள் உள்ளிட்ட ஜனநாய இயக்கங்களோடும், தோளோடு தோள் சேர்ந்து, ஜாதி ஒழிப்புக்காக தீண்டாமை ஒழிப்புக்காக உறுதியாக களத்தில் இறங்கி போராடும் என்று நான் இங்கே உறுதிபட சொல்ல விரும்புகிறேன்.

இங்கே எனக்கு முன்பு பேசிய மதிப்பிற்குரிய நண்பர் விடுதலை இராசேந்திரன் அவர்கள் கூட குறிப்பிட்டார்கள். 'வர்க்கத்துக்கு எதிராக போராடியவர்கள் இன்று சற்று மாற்றி வர்ணத்துக்கு எதிராகவும் போராடுகிறார்கள்' என்று குறிப்பிட்டார்; ஆம் வர்ணத்திற்கு எதிராகவும் நாங்கள் போராடுகிறோம். உண்மை என்னவென்றால் வர்க்கத்திற்காக மட்டும் போராடுபவர்கள் அல்ல; உழைக்கும் வர்க்கத்தின் உரிமைகளுக்காக போராடக்கூடிய அதே நேரத்தில், வர்ணத்திற்கு எதிராகவும், வர்ணம் உருவாக்கிய கொடுமைகளுக்கு எதிராகவும் போராடிய இயக்கம் தான் இடதுசாரி இயக்கம் என்பதை இங்கே பணிவோடு பதிவு செய்ய விரும்புகிறேன். உங்களுக்கு அறியாதது அல்ல; பார்ப்பனியம் என்பது அது வெறும் ஜாதி சார்ந்த பிரச்சனை அல்ல. எவனொருவன் தன் சுயஜாதி சார்ந்து, தனக்குக் கீழான ஜாதிகளை ஒடுக்குகின்றானோ, அவன் பார்ப்பனிய கருத்தின் அடிமை என்பதிலே யாருக்கும் மறுப்பு இருக்க முடியாது. அப்படிப்பட்ட இந்த ஜாதி சமூகத்திலே, பார்ப்பன சமூகத்தில் பிறந்த எல்லோரையும் அல்ல. அதிலுள்ள ஒரு சிலரை கூட, வர்ணாசிரமத்திற்கு எதிராகவும், வர்க்கத்திற்காகவும் போராடக் கூடிய தளபதிகளை உருவாக்கிய இயக்கம் செங்கொடி இயக்கம் என்பதையும் நான் இங்கே பதிவு செய்ய விரும்புகிறேன்.

**போராளி சீனிவாசராவ்**

சீனிவாசராவை யார் மறக்க முடியும்? கீழத் தஞ்சை மண்ணிலே, உழைப்பாளிகளாக இருக்கக் கூடிய விவசாயத் தொழிலாளிகளாக இருக்கக் கூடிய, தாழ்த்தப்பட்ட சமூகத்தைச் சார்ந்த அந்த உழைப்பாளி மக்களுடைய கூலிப் போராட்டம் - பொருளாதாரப் போராட்டம் மட்டுமின்றி, அவர்களுடைய சமூக உரிமைகளுக்காக சமத்துவத்திற்காக தீண்டாமை ஒழிப்புக்காகவும் போராடிய இயக்கம் அல்லவா செங்கொடி இயக்கம்! இது யாருடைய முழக்கம்? அடித்தால் திருப்பி அடி; உதைத்தால் திருப்பி உதை; திட்டினால் திருப்பி திட்டு. இது கீழத்தஞ்சை பகுதியிலே தாழ்த்தப்பட்ட மக்களுக்கு, உயர்ஜாதி ஆதிக்க நிலச்சுவான்தாரர்களுக்கு எதிராக சீனிவாச ராவ் கொடுத்த முழக்கம் என்பதை இந்த மாநாட்டிலே நான் பதிவு செய்ய விரும்புகிறேன். எனவே நாங்கள் வர்க்கத்திற்காக மட்டுமல்ல, வர்ணத்திற்கு எதிராகவும் போராடியவர்கள் தான். அந்த பாரம்பரியத்தின் அடிப்படையில் தான் இங்கே தீண்டாமை ஒழிப்பு முன்னணி என்ற அமைப்புக் கூட உருவாக்கப்பட்டிருக்கிறது என்பதை நான் இங்கே பதிவு செய்ய விரும்புகிறேன். அதில்கூட ஒரு கேள்வி இருக்கிறது; ஏன் தீண்டாமை ஒழிப்பு முன்னணி ? ஏன் ஜாதி ஒழிப்பு இல்லை ? என்ற கேள்வி. நியாயமான கேள்வி தான்; நான் உறுதிபடச் சொல்ல விரும்புகிறேன். இந்த ஜாதிய பெருநெருப்பில், மிகப்பெரிய அளவிற்கு பாதிக்கப்பட்டவர்கள் தலித் மக்கள் அல்லவா! தீண்டாமை கொடுமைகளுக்கும் அவலங்களுக்கும் ஆட்படுபவர்கள் அவர்கள் அல்லவா? அந்த இழிநிலையில் இருந்து, அவர்களை விடுவிப்பதற்கும், அவர்களின் உரிமைகளை நிலைநாட்டுவதற்கும், முன்னுரிமை கொடுத்து உருவாக்கப்பட்டதே தமிழ்நாடு தீண்டாமை ஒழிப்பு முன்னணி, இதற்கான தீண்டாமை ஒழிப்பு என்பதும் அந்த ஜாதி ஒழிப்பின் ஒரு பகுதி என்ற முறையிலே அமைத்திருக்கிறோம்; அந்த பணி நிறைவடைந்ததும் இந்த தீண்டாமை ஒழிப்பு முன்னணியே, ஜாதி ஒழிப்பு முன்னணியாக செயல்படும் என்பதையும் இங்கே நான் குறிப்பிட்டு சொல்ல விரும்புகிறேன்; எந்த தடையும் இல்லை.

ஜாதி ஒழிப்பு என்பது நம்முடைய பொது லட்சியமாயிற்றே! அதை எப்படி விட்டு வைக்க முடியும்? எனவே இந்த ஜாதிச் சமூகத்தின் அனைத்து அநீதிகளையும் எதிர்த்து நிச்சயமாக தோள்கொடுப்போம் - போராடுவோம் என்று நிச்சயமாக சொல்ல விரும்புகிறேன். பெரியார் பிறந்த மண் இது; இந்திய நாட்டிற்கு தமிழகம் தந்த பெருங்கொடையல்லவா தந்தை பெரியார்! அவர் பிறந்த மண் அல்லவா இந்த ஈரோட்டு மண்! இன்றைக்கும் கம்பீரமாக சொல்ல விரும்புகிறேன்; நாடெங்கிலும் பல மாநிலங்களிலே வகுப்புவாத சக்திகள், இன்றைக்கு ஆதிக்க சக்திகளாக திகழ்கிறார்கள். அத்தகைய வகுப்புவாத சக்திகள், தமிழகத்திலே தலைதூக்க முடியவில்லை என்றால், அதற்கான மகத்தான பெருமை தந்தை பெரியாருக்கும், அவர் உருவாக்கிய கருத்துகளுக்கும் உண்டு என்பதை நான் இங்கே நிச்சயமாக சொல்ல விரும்புகிறேன்.

இன்றைக்கு எங்கே இருக்கிறது, இட ஒதுக்கீடு இந்த அளவிற்கு? 69 சதவீத இட ஒதுக்கீடு, இந்தியாவின் வேறு எந்த மாநிலத்திலும் காண முடியாது. ஆனால் தமிழகத்தில் 69 சதவீத இட ஒதுக்கீடு இருக்கிறது என்றால், நிச்சயமாக சொல்ல விரும்புகிறோம், இதற்கான மகத்தான பெருமை தந்தை பெரியாருக்கும், அவர் உருவாக்கிய கருத்துகளுக்கும் உண்டு என்பதை யாரும் மறுக்க முடியாது. இங்கே கூட சொல்கிறார்கள் பலபேர், 'நீங்கள் ஜாதி ஒழிய வேண்டும் என்று கூப்பாடு போடுகிறீர்களே, பிறகு ஏன் நீங்கள் பள்ளிச் சான்றிதழ்களிலே ஜாதியைப் போடச் சொல்கிறீர்கள்? இட ஒதுக்கீட்டிலே ஏன் ஜாதியை கேட்கிறீர்கள்?' என்று சொல்லுகிறார்கள். ஏதோ புத்திசாலித்தனமாக வாதம் செய்வது போல அவர்களுக்கு கருத்து போலும்; நான் நிச்சயமாக சொல்ல விரும்புகிறேன், இந்த இட ஒதுக்கீடு என்பதும், பள்ளிச் சான்றிதழ்களிலே ஜாதிப் பெயரை சொல்லுவதும் கூட ஜாதி ஒழிப்புக்காகத் தான் என்பதை நான் சொல்ல விரும்புகிறேன். காரணம் மேடு பள்ளமாக இருக்கக் கூடிய ஜாதி சமூகத்தை, சமத்துவப்படுத்துவதற்கு, அந்த அடையாளத்தை தற்காலிகமாக பயன்படுத்தக் கூடிய தேவை இருக்கிறது என்று நான் சொல்ல விரும்புகிறேன். நீங்க டாக்டர்கிட்ட போனா, நமக்கு வந்திருக்கும் வியாதிக்கு மருந்து கொடுக்கிற போது, அந்த மருந்துல கூட கொஞ்சம் விசம் சேர்த்திருப்பாங்க, மருந்திலே எப்படி கொஞ்சம் விசம் சேர்ப்பது தேவையோ, அதே போல இந்த ஜாதி சமூகத்தை ஒழிப்பதற்கு, இந்த இட ஒதுக்கீடு கட்டாயமானது என்பதை நான் இங்கே சொல்ல விரும்புகிறேன். எனவே இந்த வார்த்தை சொல்லாடல்களெல்லாம் எங்களைப் போன்ற முற்போக்கு இயக்கங்களிடம் செய்ய வேண்டாம் என்று நான் அவர்களிடம் சொல்ல விரும்புகிறேன்.

**இறக்குமதி செய்யப்பட்டது பார்ப்பன மதம் தான்**

பெரியோர்களே நண்பர்களே! இன்றைக்கு இந்து மதம் என்பது இத்தியாவை பிடித்த ஒரு பீடை தான். நிச்சயமாக இந்து மதத்தையும் அது உருவாக்கியிருக்கக் கூடிய வர்ணாசிரமத்தையும் ஒழிக்காமல், இந்திய சமூகம் முன்னேறாது என்பதிலே யாருக்கும் எந்த மாற்றுக் கருத்தும் இருக்க முடியாது. ஏதோ இந்து மதம் தான் இந்தியாவின் பூர்வீக மதம் போன்றும், இதர மதங்களெல்லாம் இறக்குமதி செய்யப்பட்ட மதங்கள் போலவும் வாதாடிக் கொண்டிருக்கிறார்கள், வரலாறு தெரியாதவர்கள். இந்த நாட்டினுடைய வரலாற்றை - சமூகத்தை விஞ்ஞான பூர்வமாக ஆய்வு செய்தவர்கள், தெள்ளத் தெளிவாக சொல்லுகிற முடிவு எதுவென்றால், இந்த பார்ப்பன மதம் என்று முன்பு அழைக்கப்பட்ட - இன்றைய இந்து மதம் என்பது தான் இறக்குமதி செய்யப்பட்ட மதம். ஆரியர்கள் இந்த தேசத்திற்குள்ளே நுழைந்த பிறகு, உருவான மதம் தானே இந்து மதம் யாருக்கு மறுப்பு இருக்க முடியும் ? ஆனால் இந்தியாவிலே ஒரு பூர்வீக மதம் உண்டு என்று சொன்னால் - இந்தியாவிற்கு பெருமை சேர்த்தது ஒரு மதம் என்றால், அந்த மகத்தான மதம் பௌத்த மதம் என்பதை இங்கே நான் பெருமையோடு சொல்ல விரும்புகிறேன். பௌத்த மதம் - சமண மதம், அவை இந்தியாவுக்கு பெருமை சேர்த்த மதங்கள். இந்தியாவிலே அது இன்றைக்கு வலிமையாக கால்பதிக்காமல் இருந்திருக்கலாம். ஆனால் கால் பதித்திருந்த மதம் தான். அந்த அடையாளங்களை அநியாயமாக - அட்டூழியமாக வெட்டிச் சாய்த்தார்கள். பௌத்த மதக் கருத்துக்களை, சமண மதக் கருத்துக்களை அறிவார்ந்த முறையில் சந்திக்க திராணியற்றவர்கள், அரிவாளால் சந்தித்தார்கள். பௌத்த மத பிக்குகளை - முற்போக்கு கருத்துக்களை பரப்பியவர்களை, ஆயிரம் ஆயிரமாக வெட்டிச் சாய்த்தார்கள். தமிழகத்திலே சமணர்கள் கூட, அப்படித்தான் கொல்லப்பட்டார்கள். மறுக்க முடியுமா? பனத்தி ஆவது ஏதடா? பறத்தி ஆவது ஏதடா? எலும்பு தோல் சதையினுள்ளும், இலக்கமிட்டிருக்குதோ என்று கம்பீரமாக, முழங்கியவர்கள் சமண மத சித்தர்கள். அவர்களைப் படுகொலை செய்தவர்கள் தானே இந்த மாபாதக, சைவப் பெரியார்களும், இந்த வைணவப் பெரியார்களும்! யார் மறுக்க முடியும்? ஆகவே அப்படிப்பட்ட முறையிலே அந்த முற்போக்கு கருத்துக்களை அழித்து, அதன் சாம்பலிலே உருவாக்கப்பட்டதாக தம்பட்டம் அடித்துக்கொள்கிறார்கள்; இல்லை. பௌத்த மதமும், சமண மதமும் உருவாக்கியிருக்கக்

(9 ஆம் பக்கம்)

# 69 சதவீத இடஒதுக்கீட்டைப் பெற்றுள்ளோம்

*பி. சம்பத் உரை–8 ஆம் பக்கத் தொடர்ச்சி*

கூடிய அந்த கருத்துக்கள் பெரிதான முறையிலே ஒடுக்கப்பட்டிருக்கலாம், ஆனால் இன்றைக்கு சொல்ல விரும்புகிறேன், இந்த ஜாதி சமூகத்தின் அடித்தளத்திலே, அது புகைந்து கொண்டிருக்கிறது. அது கனன்று கொண்டிருக்கிறது. நிச்சயமாக அந்த எரிமலை ஒரு நாள் வெடிக்கும் அந்த வெடிப்பிலே இந்த ஜாதி சமூகம் கட்டாயமாக தகரும் என்பதை நான் இங்கே பதிவு செய்ய விரும்புகிறேன். அதற்கான பாதையிலே நாம் இணைந்து செயல்பட வேண்டிய தேவை இருக்கிறது என்பதையும் நான் இங்கே குறிப்பிட்டு சொல்ல விரும்புகிறேன்.

இந்த கொடுஞ்செயலை, இத்தகைய அக்கிரமங்களை - அட்டூழியங்களை, அறிவார்ந்த கருத்துக்களை ஒழித்துக்கட்டியதிலே மகத்தான பங்கு இந்த மனுசாஸ்திரத்திற்கு உண்டு. அயோக்கியன் மனு உருவாக்கிய சாஸ்திரம் அல்லவா இந்த மனுசாஸ்திரம். வர்ணாஸ்ரமம் நியாயமாம்; அதற்கு முன்னதாக, அதை வாய் வழியாக சொன்னவர்கள், அதற்கு தத்துவ வடிவம் கொடுத்தவனல்லவா இந்த அயோக்கியன் மனு. அவன் கடவுளின் பெயரால், ஜாதியை - வர்ணத்தை பிரித்தான். ஆண்டவன் தலையில் இருந்து பிறந்தவனாம் பார்ப்பனன்; தோளிலிருந்து பிறந்தவனாம் சத்திரியன்; தொடையில் இருந்து பிறந்தவனாம் வைசியன்; பாதத்திலிருந்து பிறந்தவனாம் சூத்திரன். அப்படியானால் எங்கள் பஞ்சமர்கள் எங்கிருந்து பிறந்தார்கள்? என்று கேட்டபோது, அவர்கள் ஆண்டவனுக்கு பிறக்கவில்லை, சபிக்கப்பட்டு பிறந்தவர்கள் - சண்டாளர்கள் என்று கொஞ்சம் கூட ‘நா’ கூசாமல் விளக்கம் தரக்கூடிய மனுநீதி வாதிகளை நான் கேட்கின்றேன், பெரியார் ஆணித்தரமாக சொன்னார், உங்களைப் பார்த்து தான் சொன்னார்; “விஞ்ஞான உலகத்திலே யாராவது ஏற்றுக்கொள்ளமுடியுமா? எவனாவது தலையில் இருந்து பிறப்பானா? எவனாவது தோளில் இருந்து பிறப்பானா? எவனாவது தொடையில் இருந்து பிறப்பானா? எவனாவது பாதத்தில் இருந்து பிறப்பானா? வெட்கம் கெட்டவர்களே! உங்கள் வாதத்தைப் பார்த்தால், பிறக்க வேண்டிய அம்மா-அப்பாவுக்கு, பிறக்க வேண்டிய இடத்தில் பிறந்தவர்களே பஞ்சம சகோதரர்கள் - தலித்துகள் தான்” என்று அப்பட்டமாக ஆணித்தரமாக வாதிட்டாரே பெரியார், எவ்வளவு பெருமையாக இருக்கிறது! நெஞ்சம் நிமிர்கிறது, பெரியாரை நினைக்கும் போது.

ஆக அப்படிப்பட்ட அந்த தமிழக மண்ணில் இன்றைக்கு ஜாதிய சக்திகள் தலையெடுக்கத் துடிக்கிறார்கள் என்று சொன்னால், நிச்சயமாக அனுமதிக்க மாட்டோம்; தமிழக மக்கள் அனுமதிக்க மாட்டார்கள் என்பதை நான் இங்கே குறிப்பிட்டு சொல்ல விரும்புகிறேன். இந்த ஜாதி சமூகத்தை, இந்தியாவிலே - தமிழ் மண்ணிலே நிலை நாட்டுவதற்கு, மிகக் கொடூரமான அடக்கு முறைகளை ஏவுவதற்கு வழிவகுத்ததல்லவா மனு சாஸ்திரம். மன்னர்களுடைய அரசியல் சாசனமாக, பல நூற்றாண்டு காலம் மனுசாஸ்திரம் தானே கோலோச்சியது! பார்ப்பனர்கள் உயர்ந்தவர்களாம்; அவர்கள் இரு பிறப்பாளர்களாம்; உலகத்தின் அனைத்து உடமைகளும் அவர்களுக்குத் தான் சொந்தமாம். அவர்கள் தான் அதன் முதல் பிரயோகத்தை அனுபவிக்க வேண்டியவர்களாம். அப்படியெல்லாம் சொல்லியிருக்கின்றார்கள். யாரேனும் அந்த பார்ப்பன ஆதிக்கத்திற்கு எதிர்ப்பு தெரிவித்தால், பார்ப்பனனை இழிவாக பேசினால் - ஜாதி எதிர்ப்பு தன்மையோடு - அவன் நாக்கை வெட்டணுமாம். அது எப்படி தெரியுமா? மனு சொல்லியிருக்கிறான் . ‘இரண்டு தடவை (இன்ஸ்டால்மென்ட்ல) வெட்டணுமாம் நாக்கை’. எவ்வளவு ஜாதிக் கொழுப்போடு எழுதி வைத்திருக்கிறார்கள்!

இந்த ஜாதி எதிர்ப்புக் கருத்தோடு, பார்ப்பனரை எவராவது இழிவோடு பேசினால் மட்டுமல்ல, கையால் அடித்தால் அவன் கையை வெட்ட வேண்டும்; காலால் உதைத்தால் காலை வெட்ட வேண்டும். வேதம் ஓதுவது பார்ப்பனன் கடமை; இதை சூத்திரன் செய்தால் - பஞ்சமன் செய்தால், மனு அயோக்கியன் எழுதி யிருக்கின்றான் ‘அப்படி வேதத்தை ஓதக் கூடிய தலித்துகள் வேதத்தை ஓதக்கூடிய சூத்திரர்களுடைய வாயிலே பழுக்க காய்ச்சிய இரும்பு கம்பியை உள்ளே விட வேண்டுமாம். அதே போல வேதம் உச்சரிப்பதை கேட்டால் கூட, அவர் களுடைய காதுகளிலே ஈயத்தை காய்ச்சி ஊற்ற வேண்டுமாம்’. இதுவெல்லாம் உண்மையா என்று கேட்பீர்கள், உண்மை தான், இவையெல்லாம் மனுசாஸ்திரத்திலே இடம்பெற்றிருக்கிறது. அந்த மனு சாஸ்திரம் பல நூறு ஆண்டுகள் இந்திய மண்ணிலே - தமிழ் மண்ணிலே அமுல்படுத்தி யிருக்கின்ற காரணத்தினால் தான், ஒரு பாரம்பரிய பழக்க வழக்கம் என்ற முறையிலே இன்றைக்கும் இந்திய சமூகத்திலே தமிழ்ச் சமூகத்திலே அது மண்டி கிடக்கிறது; அதற்கு எதிராகத்தான் நாம் மகத்தான முறையிலே போராடுகின்றோம்.

**தாலியை உதறியவர்கள்**

இந்த ஜாதி சமூகத்தை, உடைத்து நொறுக்குவதிலே, ஜாதி மறுப்பு திருமணங்களுக்கு மிக முக்கியமான பங்கு இருக்கின்றது. பாராட்டக் கூடிய மிக முக்கியமான பணி என்பதை நான் இங்கே சொல்ல விரும்புகிறேன், இங்கே கூட பல தம்பதிகளை நமக்கு அறிமுகப்படுத்தினார்கள்; தாலியை அறுத்தாலும் நாங்கள் தம்பதிகளே, தாலி அறுக்கப்பட்டாலும் எங்களுடைய தாம்பத்தியத்தை எந்த சக்தியும் தடுத்து நிறுத்த முடியாது என்று கம்பீரமாக நின்றார்களே! எவ்வளவு பெருமையாக இருக்கின்றது! ஜாதியா குடும்ப உறவுகளை தீர்மானிக்கிறது? இல்லை என்கிறோம் நாம்; ஆம் என்கிறார்கள் மனுசாஸ்திரவாதிகள். அது தானே இன்றைக்கும் ஜாதியை முன்னிலைப் படுத்தி இயக்கங்களை நடத்தி வருகிறார்கள். ஜாதி மறுப்பு திருமணம் கூடாதாம்; காதல் திருமணங்கள் கூடாதாம். அது சமூகத்தை சீரழிக்கிறதாம்; நவீன மனுசாஸ்திரவாதியாக இன்றைக்கு அவதாரம் எடுத்திருக்கிறார் இராமதாஸ். இராமதாசுக்கு சொல்லிக்கொள்வோம், எத்துனை இராமதாசுகள் வந்தாலும் தமிழக மண்ணிலே ஜாதி மறுப்பு திருமணங்களை உங்களால் தடுத்து நிறுத்த முடியாது. நாங்க 81 சதவீத பிரதிநிதின்னு மார்தட்றாரு; 19 சதம் தலித்துகளை தனிமைப்படுத்துறாராம். இராமதாசுக்கு சொல்லிக் கொள்வோம், நீங்கள் 81 சதவீத பிரதநிதியா?

**இராமதாஸ் அவர்களே!**
**நீங்கள்**
**81 சதவீத பிரதிநிதியா**
**அல்ல !**
**27 சதவீதத்தாலும்**
**புறக்கணிக்கப்பட்டு**
**கிடக்கிறீர்கள்!**

அடப் பாவமே நீங்கள் 81 சதம் அல்ல; 27 சதத்தாலும் புறக்கணிக்கப்பட்டு தனிமை படுத்தப்பட்டு தனியாக கிடக்கிறீர்கள்; தவித்து கொதிக்கிறீர்கள், அந்த கொதிப்பு எங்களுக்கு புரிகிறது. நாங்கள் சொல்கிறோம் இந்த மேடையில் இருந்து, நூறு சதமான மக்கள் சார்பாக சொல்கிறோம், இராமதாசுகளே உங்களுடைய கருத்துக்கள் தலையெடுப்பதை அனுமதிக்க மாட்டோம். ஜாதி மறுப்பு திருமணங்களை ஊக்குவிப்போம்; ஏராளமாக நடத்திக் காட்டுவோம். இங்கே கூட ஏராளமான இளைஞர்களை நான் பார்க்கின்றேன். தோற்றத்தில் மட்டுமல்ல, வயதிலும் ஏராளமான இளைஞர்கள் இங்கே வந்திருக்கிறார்கள்; இவர்களெல்லாம் இந்த சமூகத்திலே மிகப்பெரிய மாற்றத்தை மிகப்பெரிய அளவிற்கு ஒரு உத்வேகத்தை ஏற்படுத்தக் கூடிய உந்து சக்திகள் என்பதை நான் இங்கே குறிப்பிட்டு சொல்ல விரும்புகிறேன். எனவே எத்தகைய சக்தியும் ஜாதி மறுப்புத் திருமணங்களை தடுத்து நிறுத்து முடியாது என்று இங்கு நான் சொல்ல விரும்புகிறேன். ஆகவே அத்தகைய சவடால்கள் மூலம் இந்தியாவிலே எப்படியாவது மீண்டும் பழைய ஆதிக்கத்தைப் பெறமுடியும் என்று சொன்னால், நிச்சயமாக சொல்ல விரும்புகிறேன், அது பகற் கனவாக தான் இருக்க முடியுமே தவிர, நிறைவேறப் போகிற கனவாக இருக்க போவதில்லை என்பதை யும் நான் இங்கே பதிவு செய்ய விரும்புகிறேன்.

இடதுசாரி இயக்கத்தைப் பொறுத்தவரை இன்றைக்கு தாழ்த்தப்பட்ட மக்களுடைய உரிமைக்காக தனிக் கவனம் செலுத்தி போராடி வருகின்றோம். தாழ்த்தப்பட்டவர்கள் சமூகத்தால் தாழ்த்தப்பட்டவர்களாக மட்டுமல்ல; உழைப்பால் உத்தமர்களாக இருக்கிறார்கள். யாரும் மறுக்க முடியாது. இன்றைக்கு பிற்படுத்தப்பட்ட மக்களுக்கும், தாழ்த்தப்பட்ட மக்களுக்கும் மோதலை உருவாக்குவதற்கு சில தீய சக்திகள் முயற்சித்துக் கொண்டிருக்கிறார்கள், இராமதாஸ் உள்பட. இதோ பிற்படுத்தப்பட்டவர்களின் ஏக பிரதிநிதிகளைப் போல. எங்களுக்கு தெரியும் மேடையில் அமர்ந்திருக்கிற எல்லோருக்கும் தெரியும்; பிற்படுத்தப்பட்ட சமூகங்களைச் சார்ந்தவர்களும், தலித் சமூகங்களைச் சார்ந்தவர்களும் கணிசமான பேர் உழைப்பாளிகள்; யாராலும் மறுக்க முடியாது.

இன்றைக்கு நாட்டிலே ஏற்படக்கூடிய பலவிதமான பிரச்சனைகள், ஏறிவரக்கூடிய விலைவாசி, பெருகி வரக்கூடிய வேலை இல்லாத் திண்டாட்டம், அரசாங்கத்தினுடைய தாராளமய கொள்கை, இட ஒதுக்கீட்டிற்கே ஆபத்து ஏற்படுத்தக் கூடிய இத்தகைய உலகமய - தாராளமய கொள்கைகள். இன்றைக்கு பார்த்தாலும் கூட இவ்வளவு பெரிய கொடூரமான கொள்கைகளை கடைபிடித்துக் கொண்டு, ஜாதிகளாக மக்களை பிளவு படுத்தி, ஒன்றுபட விடாமல் தடுக்கலாம் என்று நினைக்கிறார்கள். இவர்கள் வெவ்வேறு ஜாதியைச் சார்ந்தவர்கள் தானே ஒன்றுபட மாட்டார்கள் என்று நினைக்கிறார்கள். எனவே தான் இந்த மாநாட்டிலே நாம் சொல்ல விரும்புகிறோம், எங்களுடைய ஒற்றுமைக்கு ஜாதி ஒரு தடையாக இல்லை; இருக்க முடியாது. இன்றைக்கு இருக்கலாம் ஆனால் அந்த நிலைமையை நாங்கள் மாற்றுவதற்காக, முனைப்பான முறையிலே செயல்பட்டு கொண்டிருக்கிறோம்.

எங்கள் பணி - எங்களுடைய முயற்சி பல மடங்கு பெருகும். நிச்சயமாக இந்த முயற்சி பலமடங்கு பெருகி, அந்த முயற்சிகள் சிறு துளியில் இருந்து பெரும் வெள்ளமாக மாறி, இந்த மகத்தான கூட்டமைப்பு, இந்த பெரியார் இயக்கங்கள், முற்போக்கு திராவிடர் இயக்கங்கள், அதே போல மார்க்சிய இயக்கங்கள் ஜனநாயக இயக்கங்கள் அனைத்தும் இணைந்து, ஒரு மகத்தான சக்தியாக, இந்தியாவிலே - தமிழகத்திலே உருவெடுக்கப் போகிறது; அந்த மகத்தான சக்திக்கு முன்னால் சுனாமி அலையைப் போல, அந்த மகத்தான சக்திக்கு முன்னால் ஜாதிய சக்திகள், வீழப் போவது உறுதியிலும் உறுதி என்பதை நான் இங்கே சொல்ல விரும்புகிறேன்.

அத்தகைய மகத்தான ஜாதி ஒழிப்பு போராட்டத்திற்கு, ஜாதிய ஒடுக்குமுறைக்கு எதிரான போராட்டங்களுக்கு, அதிலும் குறிப்பாக இன்றைக்கு தலித்துகளை தனிமைப்படுத்தி, ஆதாயம் தேடி குளிர்காய முனையும் தீய சக்திகளுக்கு எதிராக ஒரு மகத்தான களப்பணி ஆற்றுவதற்கு, நிச்சயமாக இடதுசாரி இயக்கம் தோள் கொடுக்கும்; இந்த மாநாட்டு தீர்மானங்கள் வலியுறுத்துவது போல பெரியார் இயக்கங்களோடு இணைந்து - ஜனநாயக இயக்கங்களோடு இணைந்து - முற்போக்கு இயக்கங்களோடு இணைந்து, இடதுசாரி இயக்கங்கள் - மார்க்சிய இயக்கங்கள் நிச்சயமாக சமூக மாற்றத்திற்கான போராட்டத்திலே, முன் வரிசையிலே நின்று தன்னுடைய கடமையைக் கட்டாயமாக நிறைவேற்றும்; அதை எந்த சக்தியும் தடுத்து நிறுத்த முடியாது என்பதை கம்பீரமாக சொல்லி, அத்துகைய ஒன்றுபட்ட இயக்கங்களை எதிர்காலத்தில் வலுவாக முன்னெடுத்துச் செல்வோம் என்ற முறையில் உங்களோடு சேர்ந்து, நானும் சேர்ந்து, அறைகூவல் விடுத்து விடைபெறுகிறேன்.

**உரை தொகுப்பு: கோகுல கண்ணன்**

# சாதியம்-பெண்ணடிமை-இந்துத்துவம் அனைத்துக்குமே ஆணிவேர் மனுசாஸ்திரம் தான்

## மாநாட்டைத் தொடங்கி வைத்து இரா. அதியமான் எழுச்சியுரை!






*திராவிடர் விடுதலை கழகம் சார்பில் ஈரோட்டில் 2012, டிசம்பர் 23, 24 நாட்களில் நடைபெற்ற 'மனு சாஸ்திர எரிப்புப் போராட்ட விளக்க மாநாட்டை' தொடக்கி வைத்து ஆதித் தமிழர் பேரவை நிறுவனர், தலைவர் அதியமான் ஆற்றிய உரை:*

மாநாட்டில் கலந்து கொண்டு, தொடங்கி வைத்து உரையாற்ற வேண்டும் என்று கூறியபோது, உண்மையில் என்னுடைய உள்ளத்தில் ஒரு மகிழ்ச்சி வந்தது. ஏனென்றால், நான் எங்கே பேச வேண்டும் என்று எண்ணினேனோ, அந்த இடத்திலேயே ஒரு மரியாதை கிடைத்திருக்கின்றது என்றே முதலில் நினைத்தேன். அதை எப்படி மரியாதை என்று சொல்கிறேன் என்றால், எனக்குக்கூட ஆறு மாதங்களுக்கு முன் டாக்டர் பட்டம் தருகிறேன் என்று சிலர் என்னை அணுகினர். அப்போது நான் அவர்களிடத்தில், 'நாங்கள் பட்டங்கள் வாங்குவதில்லை, இருக்கின்ற இழிவுப் பட்டங்களைப் போக்குவதற்குத்தான் நாங்கள் இயக்கம் தொடங்கியிருக்கிறோம், பட்டங்களை போடுவதுகூட எங்களுக்குப் பழக்கம் இல்லை' (கைதட்டல்) என்று சொன்னேன். அப்படிப்பட்ட நிலையில், இப்போது இங்கே தொடக்க உரையாற்றுகின்ற இந்தப் பட்டத்தைத் தான் வரலாற்றில் மகிழ்வோடு நான் ஏற்றுக் கொள்ள தயாராக இருக்கிறேன்.

சில நாட்கள் முன்பு நான் இந்தியத் தலைநகர் டெல்லியிலே இருந்தேன். அப்போது தலைவர் கொளத்தூர் மணி என்னுடன் இந்த மாநாட்டுக்காகத் தொடர்பு கொண்டார். அப்போதுகூட அவர் நினைத்திருக்கலாம். நான் இந்த மாநாட்டுக்கு வந்து சேருவேனா என்று, வர முடியும். நான் டெல்லியிலே கலந்து கொள்ளச் சென்றது ஒரு மாநாட்டிற்கு. அய்.நா. சபையின் ஒரு பிரிவு இந்தியாவின் எல்லா மாநிலங்களிலிருந்தும் 45 பேரை மட்டும் அழைத்து, கையால் மலம் அள்ளும் தொழிலை ஒழிப்பதற்கான ஒரு கலந்துரையாடல் என்பதுதான் அந்த மாநாடு. மாநாட்டில் கலந்து கொண்டு பேசினேன். எனக்கு மிகப் பெரிய அதிர்ச்சி காத்திருந்தது. என்ன அதிர்ச்சி என்றால், தூய்மைப் பணியை செய்கிறவர்களை, அந்தப் பணியிலிருந்து விடுதலை செய்வது என்பது அந்த மாநாட்டின் நோக்கம். தூய்மைப் பணியிலிருந்து விடுதலைப் பெற்று வேறு பணிக்குச் சென்றவர்கள், அங்கு வந்து தங்களின் நடைமுறைகளைச் சொன்னார்கள். எப்படி அந்தப் பணியிலிருந்து விடுபட்டு, இப்போது எப்படி இருக்கிறோம். இந்த நாட்டிலே அதற்கு என்ன மாதிரியான மரியாதை இருக்கிறது என்பதை அவர்கள் பகிர்ந்து கொண்டார்கள். அந்த மாநாட்டை ஒருங்கிணைத்தவரிலிருந்து கடைசியாகப் பேசிய நபர் வரைக்கும் ஏறத்தாழ ஒரே ஒரு செய்தியைக் குறிப்பிட மறந்து விட்டார்கள்.

அதை நான் அங்கே குறிப்பிட்டு வந்தேன். அது என்னவென்றால், கையால் மலம் அள்ளும் தொழில் என்பது மனு சாஸ்திரத்தோடு தொடர்புடையது. இந்த நாட்டை அரசியல் சட்டம் ஆளவில்லை; அதற்கு பதில் மனு சாஸ்திரம் தான் ஆள்கிறது. அதற்கு என்ன செய்ய வேண்டும்? இங்கே சாதியை ஒழிக்க வேண்டும் என்கிறோம். சாதி, மதத்திற்குக் கட்டுப்பட்டு இருக்கிறது. ஆக, அந்த மதத்திற்கு எதிராக இங்கே ஏதேனும் தீர்மானம் போட முடியுமா? அதை விவாதிக்க முடியுமா? என்ற கருத்தை நான் அங்கே வைத்தேன். அந்த மதத்தைப் பற்றிப் பேச யாரும் தயாராக இல்லை. மனிதனின் உடலிலிருந்து வெளியே வருகிற புண்களைப் பற்றிப் பேசிக் கொண்டு இருக்கிறார்கள். ஆனால், இந்த நோய் வருவதற்கான அடிப்படைக் காரணத்தைப் பற்றி யாரும் யோசிக்கவில்லை. அதன் அடிப்படைக் காரணம் என்னவென்று பார்த்தால் அது இந்த வர்ண, ஜாதி முறையிலிருந்துதான் தொடங்குகிறது என்பதை நாம் மறந்துவிடக் கூடாது. நம்மைப் பொறுத்தவரை, திராவிடர் விடுதலைக் கழகம் நடத்துகிற இந்த மாநாடு உண்மையில் மிக நீண்ட நெடிய தந்தை பெரியாரின் வரலாற்றில் நடைபெறுகிறது. பெரியார் தன் வாழ்நாளில் நடத்தியப் போராட்டங்களை நாம் திரும்பிப் பார்த்தாலே, அவர் எதை நோக்கி பயணத்தைத் தொடங்கியிருக்கிறார் என்பதை நாம் கவனிக்க முடியும்.

தமிழ்த் தேசியம் பேசிக் கொண்டிருக்கிறவர்கள் 'தமிழர் என்றே சொல்ல வேண்டும்; திராவிடர் என்று சொல்லக் கூடாது' என்று கூறுகிறார்கள். அவர்கள் ஒன்றைத் தெளிவாக மறந்துவிட்டார்கள். புரட்சியாளர் அம்பேத்கர் மிகத் தெளிவாகப் பதிவு செய்கிறார், 'திராவிட என்ற சொல்லே தமிழ் என்ற சொல்லிலிருந்து வந்ததுதான்' என்று. ஆக, திராவிடர்கள் என்று சொல்லும்போது, அது தமிழர்களை மட்டுமேதான் குறிக்குமே தவிர, ஆந்திரர்களையோ, கன்னடியர்களையோ, கேரளத்தவர்களையோ குறிப்பதானது அல்ல. இன்னும் சொல்லப் போனால், பெரியார் தன் வாழ்நாளில் ஒரு முழக்கத்தை வைத்தார். 'தமிழ்நாடு தமிழர்களுக்கே' என்று. நான் கேட்கிறேன், இன்றைக்குத் தமிழ்நாட்டில் தமிழ்த் தேசியம் பேசுகிறவர்கள் குறைந்தபட்சம் இந்த முழக்கத்தை யாவது போடத் தயாரா? (கைத் தட்டல்) பெரியார் அன்றைக்கே 'தமிழ்நாடு தமிழர்களுக்கே' என்று ஓங்கி ஒலித்துச் சொன்னார். அதை இன்றைக்குப் பேசினால் உள்ளே தள்ளிவிடுவார்கள் என்று அவர்கள் பேசாமல், மேம்போக்காக, பொத்தாம் பொதுவாக தமிழ்த் தேசியம் பேசுகிறார்கள். பத்து பேர் தமிழ்த் தேசியத்தைப் பேசுகிறார்கள் என்றால் பத்து பேரும், பத்து விதமான தமிழ்த் தேசியத்தைப் பேசுகிறார்கள். நமக்கு தமிழ்த் தேசியம் உடன்பாடானதா என்றால் உடன்பாடானதுதான். எப்படிப்பட்ட தமிழ்த் தேசியம் என்றால் இங்கே இருக்கிற சாதி, சம்பிரதாயங்கள் மட்டுமல்ல இன்றைக்கு நடக்கிற இந்த அடக்குமுறைகளையும் நீக்க வேண்டும்.

அதற்கு எங்கே இருந்து தொடங்க வேண்டும் என்பதுதான் அடிப்படை. அந்த அடிப்படையிலே தான் இந்த மாநாடு இன்றைக்கு நடைபெற்றுக் கொண்டிருக்கிறது என்று நான் கருதுகிறேன். பெரியார் பல போராட்டங்கள் நடத்தினார். வைக்கம் போராட்டம், சேரன்மாதேவி குருகுலப் போராட்டம், இந்தி எதிர்ப்புப் போராட்டம், கோயில் நுழைவுப் போராட்டம், வகுப்புவாரி பிரதிநிதித்துவ உரிமைப் போராட்டம், வடவர் ஆதிக்க எதிர்ப்புப் போராட்டம், குலக்கல்வி எதிர்ப்புப் போராட்டம், பிராமணாள் பெயர் அழிப்புப் போராட்டம், அரசியல் சட்ட எரிப்புப் போராட்டம், பிள்ளையார் சிலை உடைப்புப் போராட்டம், தேசியக் கொடி எரிப்புப் போராட்டம் ராமன் பட எரிப்புப் போராட்டம், காந்தி பட எரிப்புப் போராட்டம், காந்தி பொம்மை உடைப்புப் போராட்டம், தமிழ்நாடு நீங்கிய தேசப் பட எரிப்புப் போராட்டம், கம்பராமாயண எரிப்புப் போராட்டம் - இப்படி பல போராட் டங்கள்.

அவரின் போராட்டங்களின் வரலாற்றைப் பார்த்தால் இதிலே மிக முக்கியமானப் போராட்டம் - இந்திய அரசியல் சட்ட எரிப்புப் போராட்டம். எதற்காக அரசியல் சட்டத்தை எரிக்க வேண்டும்? அரசியல் சட்டத்திற்குள் ஜாதி இன்றைக்கும் இருக்கிறது, இல்லை என்று வாதிட முடியாது. இன்றைக்கும் உச்சநீதிமன்றத்திலுள்ள குடுமிகள் எல்லாம் அதை நிலைநிறுத்த என்ன பாடுபடுகிறார்கள் என்பதை நாம் அறிவோம். அந்த வகையில், ஜாதியை ஒழிப்பதற்காக அரசியல் சட்டத்தை எரிக்கும் போராட்டத்தை பெரியார் நடத்தினார். அந்தப் போராட்டம் என்பது இன்றைக்கு நாம் நடத்துகிற காலையில் கைது செய்யப்பட்டு மாலையில் விடுவிக்கப்படுகிற போராட்டம் அல்ல. அந்தப்போராட்டத்தில் தமிழ்நாடு முழுவதும் ஏறத்தாழ மூவாயிரம் பேர் கைது செய்யப்பட்டார்கள். மிகப் பெரிய போராட்டம் அது. அதிலே மிக மிகச் சிறப்பு என்னவென்றால், அந்தப் போராட்டத்தில் கலந்து கொண்டு சிறைச் சென்றவர்கள் யாரும் எனக்கு அந்தப் பிரச்சினை இருக்கிறது. இந்தப் பிரச்சினை இருக்கிறது. ஆகவே பிணையில் விடுதலை ஆகிறேன் என்று கேட்காதப் போராட்டம். கோவையில்கூட சிலர் போராட்டம் நடத்துகிறார்கள். அது ஏற்பாடு செய்யப்பட்ட போராட்டம். நாங்கள் போராட்டம் நடத்துகிறோம், காவல்துறையாகிய நீங்கள் காலையிலே கைது செய்யுங்கள்; மாலையிலே விட்டுவிடுங்கள் என்று இப்படி ஒப்பந்தம் போட்டுச் செய்கிற போராட்டங்கள்கூட இன்றைக்கு நடந்து கொண்டிருக்கிறது.

இந்த நிலையில், பெரியார் நடத்திய சட்ட எரிப்புப் போராட்டத்தில் ஏறத்தாழ 3000 பேர் கைதாகி ஆறு மாதம் முதல் இரண்டு வருடம் வரை தோழர்கள் சிறை தண்டனை பெற்றார்கள் என்றால், வரலாற்றின் உள்ளே நுழைந்து பார்த்தால் தான் அந்தப் போராட்டத்தின் வீரியம் நமக்குத் தெரியும். அது மட்டுமல்ல, போராட்டத்தில் கலந்து கொண்டவர்களில் ஏறத்தாழ பனிரெண்டு பேர் சிறையிலேயே இறந்திருக்கிறார்கள். வரலாற்றில் மிகப் பெரிய போராட்டம். அப்படிப்பட்ட போராட்டத்தை இந்தியாவில் யாரும் நடத்தவே முடியாது. பெரியாரை இன்று நினைவு கூர்கிறோம். அவர் வழியிலே செல்கிறோம் என்று சொன்னால், அவர் நடத்திய அத்தனைப் போராட்டங்களையும் நாம் எண்ணிப் பார்க்க வேண்டும்.

*11 ஆம் பக்கம்*

# சடங்குப் போராட்டங்களை அல்ல; சமரசமற்ற போராட்டங்களை நடத்தியவர் பெரியார்

*இரா. அதியமான் உரை-10 ஆம் பக்கத் தொடர்ச்சி*

காதலைப் பற்றி பெரியார் என்ன சொன்னார் பாருங்கள் என்று, பெரியார் ஏதோ ஒரு கூட்டத்தில், ஏதோ ஒரு சூழலில் பேசிய பேச்சை இன்றைக்கு ஒருவர் வாசிக்கிறார். காதலைப் பற்றி பெரியார் என்ன சொன்னார் என்று கழகத் தோழர்களுக்குத் தெரியாதா? காதலைப் பற்றி பெரியார் கொண்டிருக்கின்ற கொள்கையை உலகத்திலே வேறு யாரும் கொண்டிருக்க முடியாது. பெண்கள் தங்கள் கர்ப்பப் பையையே எடுத்துவிட வேண்டும் என்றார் பெரியார். காதல் பொதுவானது; உலகத்தில் அதை யாருமே தடுத்துவிட முடியாது. பெரியாருக்கு இணையாக இன்னும் யாருமே காதலைப் பற்றிச் சொல்லவில்லை. அப்படிப்பட்ட கொள்கை படைத்தவர் தந்தை பெரியார். அப்படிப்பட்ட உயர்ந்த நோக்கம் உடைய பெரியார், காதலைப் பற்றி எங்கேயோ சொன்னதை வைத்துக் கொண்டு பெரியாரும் காதலை எதிர்ப்பது போன்று ஒரு தோற்றத்தை ஏற்படுத்த முனைகிறார் ஒருவர். இன்று தமிழ்நாட்டில் இரண்டு அணிகள் உருவாகியிருக்கின்றன. ஒன்று காதலை ஆதரிக்கிற, சாதியை ஒழிக்கிற அணி அதுதான் இந்த மாநாட்டுக்கு வந்திருக்கிற இந்த அணி. இன்னொன்று காதலை எதிர்க்கிற, சாதியை நிலைநிறுத்துகிற ஒரு அணி. மிகத் தெளிவாக இரு அணிகள் பிரிந்திருக்கின்றன. அது மிக நல்லது. ஏனென்றால், மருத்துவர் அய்யா ராமதாஸ், இன்றைக்கு 21 வயது பூர்த்தியான பெண்கூட தன்னுடைய பெற்றோர் அனுமதியின்றி திருமணம் செய்யக்கூடாது என்று சொல்கிறார். பெண்களை இன்னும் போகப் பொருளாக நினைத்துத் தானே பெண்களைப் பற்றி இப்படி பேசிக் கொண்டு இருக்கிறீர்கள்? முடிந்து போன பலவற்றை மீண்டும் நடைமுறைப்படுத்தத் தானே நீங்கள் அதைப் பற்றிச் சொல்கிறீர்கள்? மக்கள் தொகை கணக்கெடுப்பு நடக்கும்போது, 'வன்னிய குல சத்திரியர்' என்று பதிவு செய்யும்படி உங்கள் சாதியினருக்கு நீங்கள் கூறுகிறீர்கள். அப்படியானால், வர்ண முறையில் சத்திரியர் என்ற இடம் நோக்கி நீங்கள் போய்க் கொண்டு இருக்கிறீர்கள், அந்த இடத்தைத் தேடிக் கொண்டிருக்கிறீர்கள். வர்ணத்தை ஒழிப்பதற்கு நாம் மாநாடு நடத்திக் கொண்டு இருக்கிறோம். வர்ணத்திலே இடம் பிடிப்பதற்கு அவர்கள் சாதியை சொல்லிக் கொண்டு இருக்கிறார்கள். தேவேந்திர குல வேளாளரும் அதேபோல்தான். என்ன இது? நான் குற்றம் சொல்லவில்லை. நீண்டகாலமாக அது இருக்கிறது. ஆனால், அதை தூக்கிப் பிடிக்கின்ற அந்த நிலையை நாம் கடுமையான கண்டனத்துக்கு உள்ளாக்குகிறோம். ஏனென்றால், ஜாதி ஒழிப்பு எங்கிருந்து தொடங்க வேண்டும் என்பதை இந்த மாநாடு நிரூபித்துக் கொண்டிருக்கிறது.

கையாலே மலம் அள்ளும் அந்த மக்களைப் பற்றிச் சொல்லும்போது எனக்கு ஒன்று நினைவுக்கு வருகிறது. திருப்பூரிலே பெரியார் தி.க. மாநாடு ஒன்று முன்பு நடந்து கொண்டிருந்தது. பெரும் மழை. அந்த மேடையில் பேசும்போது, நான் ஒரு கோரிக்கையை வைத்தேன். கையால் மலம் அள்ளும் தொழிலை தூக்கிப் பிடித்துக் கொண்டு இருப்பது இந்த அரசாங்கம் தான். அரசின் இரயில்வே துறையில்தான் இந்தத் தொழில் மிகப் பெரும் அளவில் இடம் பெறுகிறது. எனவே இரயில் மறியல் போராட்டத்தை ஆதித் தமிழர் பேரவை சார்பாக நாங்கள் நடத்தப் போகிறோம். பெரியார் தி.க.வாகிய நீங்களும் கலந்து கொள்ளுங்கள் என்று நான் வேண்டுகோள் வைத்தேன். அந்த மாநாடு முடிவதற்குள் அதே மேடையில் தலைவர் கொளத்தூர் மணி, 'உங்கள் போராட்டத்தில் நாங்களும் கலந்து கொண்டு சிறை செல்வோம்' என்று அறிவித்தார். அறிவித்தது மட்டுமல்ல, அந்தப் போராட்டத்தில் இரண்டாயிரம் பேர் கலந்து கொண்டு சிறைச் சென்றார்கள் என்பது இன்றைக்கு வரலாறாக இருக்கின்றது.

'கையால் மலம் அள்ளும் தொழிலை யார் செய்யச் சொல்கிறார்கள்' என்றும், 'அவர்கள் படிக்கவில்லை' என்றும் சிலர் சொல்கிறார்கள். படிப்பை அந்த மக்களுக்கு இவர்கள் தர மறுக்கிறார்கள் என்பதை மறந்துவிட்டுக் கூறுகிறார்கள். 'அவர்கள் குளிப்பதில்லை' என்கிறார்கள். தண்ணீர் என்ன இருபத்து நான்கு மணி நேரமும் அவர்களுக்குக் கிடைக்கிறதா? அக்கிரகாரத்தில் இருக்கும் அபார்ட்மெண்ட்டிலா அவர்கள் வசிக்கிறார்கள், 24 மணி நேரமும் தண்ணீர் கிடைப்பதற்கு? அவர்களுக்கு வேலையே உறுதி செய்யப்படவில்லை.

மருத்துவர் ராமதாசு அய்யா சொல்கிறார், "தாழ்த்தப்பட்டவன் காலையில் கட்டிட வேலையை முடித்துவிட்டு வந்து ஜீன்ஸ் பேண்ட்டும், கூலிங் கிளாசும் போட்டுவந்து நிற்கிறான். எங்கள் பெண்களை மயக்கிக் கொண்டு போய்விடுகிறான்' என்கிறார். நான் சொல்கிறேன், 'அப்படியா உங்கள் பெண்களை வளர்த்து வைத்திருக்கிறீர்கள்? அவர்களுக்குக் கல்வி கொடுக்கவில்லையா? அவர்களுக்குத் தானே சிந்திக்கிற அந்த சிந்தனை இல்லாமல் போய்விட்டதா? *(கைத் தட்டல்)* ஏன் உங்கள் பெண்களை நீங்களே இழிவுபடுத்துகிறீர்கள்? பெண்களை இழிவுபடுத்துவதை மருத்துவர் அய்யா ராமதாசு, தயவுசெய்து நிறுத்திக் கொள்ள வேண்டும். ஏன் இப்படிச் செய்கிறீர்கள்?

இராமதாசு என்றைக்கு ஜீன்ஸ் பேண்ட், கூலிங் கிளாஸ் என்று சொன்னாரோ இல்லையோ, நமது திராவிடர் விடுதலைக் கழகம் உடனே அறிவித்து விட்டது, எங்களுடைய சீரணி உடையே ஜீன்ஸ் பேண்ட்தான் என்று. *(பலத்த கைதட்டல்)* எங்கு தாக்கம் வருகிறது? நாளை அந்தப் பேரணியை நீங்கள் பார்க்கப் போகிறீர்கள். பெண்களுக்கும், ஆண்களுக்கும் ஒரே சீருடை. இதுவரையில் தமிழ் நாட்டில் இப்படி யாராவது அறிவித்து இருக்கிறார்களா? *(பலத்த கைதட்டல்)* ஆகவே தீர்வு எங்கே கிடைக்கும் என்று தேடுவதல்ல. இருக்கிறது தீர்வு.

**ஜீன்ஸ் சீருடை சரியான பதிலடி!**

**இராமதாசு என்றைக்கு ஜீன்ஸ் பேண்ட், கூலிங் கிளாஸ் என்று சொன்னாரோ இல்லையோ, நமது திராவிடர் விடுதலைக் கழகம் உடனே அறிவித்து விட்டது, எங்களுடைய சீரணி உடையே ஜீன்ஸ் பேண்ட்தான் என்று. *(பலத்த கைதட்டல்)* நாளை அந்தப் பேரணியை நீங்கள் பார்க்கப் போகிறீர்கள். பெண்களுக்கும், ஆண்களுக்கும் ஒரே சீருடை. இது வரையில் தமிழ் நாட்டில் இப்படி யாராவது அறிவித்து இருக்கிறார்களா? *(பலத்த கைதட்டல்)***

***- அதியமான் உரையிலிருந்து***

நான் பல கூட்டங்களில் பேசியதை இங்கே நினைவுபடுத்துகிறேன். அம்பேத்கரை எனக்குத் தெரியாது. எப்படி நான் தெரிந்து கொண்டேன்? முதன்முதலில் சுயமரியாதை பிரச்சாரக் கழக வெளியீடாக 'சாதி ஒழிப்பு' என்கின்ற சுருக்கமான நூல் வெளியே வந்தது. அந்த நூலைப் படித்துத்தான் இப்படிப்பட்ட ஒரு தலைவர் இருக்கிறார் என்று நான் தெரிந்து கொள்வதற்கு அந்த நூல்தான் வழி வகுத்தது. அதன் பிறகு 1990களில் அம்பேத்கர் பிறந்த நாள் நூற்றாண்டு விழா வந்தபோது வெளிவந்த அம்பேத்கர் பற்றிய நூல்கள் மூலம் இன்னும் அதிகமாகத் தெரிந்து கொள்ள முடிந்தது. முதலில் ஆங்கிலத்தில் வந்தது. பிறகு எல்லா மொழிகளிலும் வந்தது. தமிழில் முப்பத்து ஏழு தொகுதிகளாக வந்தது. கம்யூனிஸ்ட்கள் இத்தனை நாள் அம்பேத்கரைப் பற்றி மறந்துவிட்டு இப்போது படிக்கத் தொடங்கியிருக்கிறார்கள். தொகுதிவாரியாக நான்கு, நான்கு பேர்களாகப் படித்து, ஒவ்வொரு பாராவையும் விளக்கிச் சொல்லிக் கொண்டு இருக்கிறார்கள். தீண்டாமை ஒழிப்பு முன்னணியும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியும் இன்று அம்பேத்கரை படிக்கத் தொடங்கியிருக்கிறார்கள் என்றால், யாருக்கு வெற்றி கிடைத்தது?

ஒரு காலத்தில் எந்தச் சிக்கலுக்கும் நாங்கள் சாதி, மதம் பார்க்க மாட்டோம், கேட்க மாட்டோம் என்று சொன்ன கம்யூனிஸ்ட்டுகள் இன்று சாதி பார்த்துத்தானே அருந்ததியர்கள் பிரச்சினையை கையில் எடுத்திருக்கிறார்கள். இதுதானே சமூகநீதி. சாதி பார்த்துத்தான் ஆக வேண்டும் இந்த காலக் கட்டத்தில். அப்போதுதான் இந்த சாதி, சமூகத்தின் அடிமட்டத்தில் இருக்கிறதா? இல்லையா? என்பது தெரியும். ஆக, சாதி பார்த்து அருந்ததியர்களின் உள்ஒதுக்கீடுக்கு ஆதரவு என்ற நிலை எடுப்பதற்கே 45 ஆண்டுகள் கம்யூனிஸ்ட்டுகளுக்குப் பிடித்திருக்கிறது. 45 ஆண்டுகளுக்கு முன்பு இதை எடுத்திருந்தால் பலருக்கு (உயர் ஜாதி) வேலை இல்லாமல் போயிருக்கும். எங்கே சிந்திக்க வேண்டுமோ அங்கே அவர்கள் நிச்சயமாக சிந்திக்கவில்லை. 'இந்தியாவில் இருக்கின்ற எந்த ஒரு ஜாதியும் சமமானதல்ல' என்று புரட்சியாளர் அம்பேத்கர் சொல்கிறார். எந்த ஒரு ஜாதியை எடுத்தாலும், சாதி அடுக்கில் ஒரு ஜாதி மற்றதைவிட ஒன்று கீழிருக்கும் அல்லது மேலிருக்கும். இன்னும் சொன்னால், ஒரே சாதியின் உட்பிரிவுகளுக்குள் போனால் அதிலும் ஒரு அடுக்கு கீழே அல்லது மேலே என்ற நிலைதான். இன்னும் சிலர் சொல்கிறார்கள், 'தருமபுரியில் தாழ்த்தப்பட்டவர்களின் குடியிருப்பில் தீ வைத்தார்கள்; கொள்ளையடித்தார்கள். ஆனால், தாழ்த்தப்பட்டவர்களின் ஒரு உயிரைக்கூட அவர்கள் எடுக்கவில்லை' என்று. இப்படி ஒரு பாராட்டு வேறு தாக்கியவர்களுக்கு. வெட்கமாக இல்லை? தாழ்த்தப்பட்டவர்களின் 40 ஆண்டுகால சேமிப்பை, 6 மாதமாகத் திட்டமிட்டு, வெறும் 7 மணி நேரத்தில் சூறையாடியிருக்கிறார்கள் என்றால், அந்த 7 மணி நேரமும் தமிழ்நாட்டில் அரசு என்று ஒன்று இருந்ததா? இல்லையா? காவல்துறை என்று ஒன்று இருந்ததா? இல்லையா? 108 ஆம்புலன்ஸ என்னவாயிற்று? தீயணைப்பு வாகனங்கள் என்னவாயிற்று? *(கைதட்டல்)* தாக்கப்பட்ட இடங்களை நேரில் பார்த்தவர்களுக்குத் தெரியுமே அது எவ்வளவு பெரிய கொடுமை என்று.

இதற்குக் காரணம் வேறொன்றுமில்லை. தாழ்த்தப்பட்ட இனத்துப் பறையன் படித்து விட்டானே! அவன் வேலைக்குப் போகிறானே! என்பதுதானே? காவல்துறையில் வேலை கிடைத்துப் பணிக்குச் சேரும் ஆணையையும் போட்டு எரிக்கிறார்கள். குறிப்பாக, குழந்தைகள், மாணவர் படிக்கும் புத்தகங்களையும் எரிக்கிறார்கள். தாழ்த்தப்பட்டவர்களுக்கு கல்வி கற்பதைத் தடுக்க வேண்டும் என்ற நோக்கில் புத்தகங்ளை எரித்திருக்கிறார்கள். இதற்குப் பெயர் என்ன? இதுதானே மனு சாஸ்திரத்தை பின்பற்றுவது என்பது? தாழ்த்தப்பட்டவர்கள் படிக்கக் கூடாது என்று நினைப்பது மனு சாஸ்திரத்திலிருந்து தானே வருகிறது? சரி, தருமபுரியில் இப்படி நடந்தது. விழுப்புரத்தில் என்ன நடந்தது? அருந்ததியரான கார்த்திகேயன், கோகிலா என்ற ஆதி திராவிடப் பெண்ணை காதலித்துத் திருமணம் செய்து கொள்கிறார். என்ன நடந்தது அங்கே? ஒரு அருந்ததியன், ஒரு பறையரைத் திருமணம் செய்யக் கூடாதா? காதலிக்கக் கூடாதா? காதலுக்கு மதம் எங்கே குறுக்கே நிற்கிறது? ஜாதி எங்கே இருக்கிறது? வயது எங்கே இருக்கிறது? இல்லை - நாடு, இனம், தேசம் ஏதாவது காதலுக்கு எதிராக இருக்கின்றதா? கரூரைச் சேர்ந்த ஒரு அருந்ததியத் தோழர் ஆஸ்திரேலியாவைச் சேர்ந்த ஒரு பெண்ணை திருமணம் முடித்து, 25 ஆண்டுகளுக்கும் மேலாக வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். காதலுக்கு எல்லை என்று எதுவுமே கிடையாது. அப்படியிருக்கும் போது தலித் என்று சொல்லிக் கொண்டு, அதன் உட்சாதிகளுக்குள் ஒற்றுமை இல்லாமல் இருக்கிறது. ஆனால், இந்த சாதிக்கு வெளியே உள்ள மற்றவர்களைப் பற்றி பேசுவார்கள் இவர்கள். இதைச் சொல்வதற்கு வசதியாக இருக்கிறது. ஆனால், இதன் தொடக்கம் எங்கே? சாதியை ஒழிக்க எங்கே கை வைக்க வேண்டும்? மெயின் ஸ்விட்ச் எங்கே இருக்கிறது? அதுதான் மனு சாஸ்திரம். அதைத் தொடாமல் இந்த நாட்டில் எந்தப் புரட்சியும் வந்துவிடாது. ஆக, கார்த்திகேயன் என்ற சக்கிலியர், கோகிலா என்ற பறையர் பெண்ணை திருமணம் செய்து கொண்டார் என்ற ஒரே காரணத்திற்காக அந்தப் பெண்ணை கவுரவக் கொலை செய்தார்கள். இது கவுரவக் கொலை அல்ல; இதன் பெயர் வக்கிரக் கொலை. ஒரு

12 ஆம் பக்கம்

DATE OF PUBLICATION 03.01.2013 TAMIL WEEKLY REG.NO.TN/CCN/488/12-14 LICENCED TO POST WPP NO.TN/CCN/9/12-14
PURATCHI PERIYAR MUZHAKKAM REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TN/TAM/2002/7776

# “இந்துத்துவ” சக்திகளுக்கு எதிராக களமிறங்க வேண்டும்

*இரா. அதியமான் உரை-11 ஆம் பக்கத் தொடர்ச்சி*

சக்கிலிப் பையனை திருமணம் செய்யலாமா எனறு அப்பெண்ணின் பெற்றோரும் மற்றவர்களும் அப் பெண்ணை தூக்கிலிட்டு கொலை செய்துவிட்டு அதைத் தற்கொலை என்று அவர்கள் அறிவிக் கிறார்கள். ஆக, வர்ணதர்மம் எந்த அளவுக்குப் பாய்ந்து நிற்கிறது என்பதை நாம் பார்க்க வேண்டிய அவசியம் இன்று நிச்சயமாக இருக்கிறது.

இந்த மாநாட்டில் சிறந்த கருத்துரைகளை மட்டுமே கேட்க இங்கே வந்திருக்கிறார்கள். எந்த ஆரவாரமும் இல்லை என்பதை நான் கவனித்தேன். கொள்கைக் கூர்மை வெளிப்பட வேண்டும். அப்படி ஒரு நிலைதான் இந்த மாநாட்டில் இருக்கிறது. அம்பேத்கர் 1956 இல் மதம் மாறினார். அப்போது எல்லோரும் எதிர்த்தார்கள். அவர் இஸ்லாமையோ கிறித்துவத்தையோ வேறு மதங்களையோ தேர்ந்தெடுக்கவில்லை. ஏனெனில், இவைகள் வெளிநாட்டு மதங்கள். புத்தமதம் என்பது இந்த நாட்டிலேயே தோன்றிய கொள்கை மார்க்கம் என்று முடிவெடுத்தார்.

புத்தமதத்தில் சேரவேண்டும் எனில், கொல்கத்தாவிலுள்ள மகாபோதி சங்கத்தில்தான் போய் சேரவேண்டும் என அங்கே போய் கடிதம் கொடுத்தார். அங்கே இருந்த புத்தமதக்காரர்கள், ‘தயவுசெய்து இந்த மதத்திற்கு வந்துவிடாதீர்கள்’ என்று அம்பேத்கருக்குக் கடிதம் எழுதினர். ஏனெனில், புத்தமதத்தை பார்ப்பனர்கள் முழுவதும் ஆக்கிரமித்திருக்கிறார்கள் என்பதால் அப்படிச் சொன்னார்கள். அதனால்தான் நியோ புத்திசம் (Neo buddhism) என்ற புதிய புத்திசத்தையே அம்பேத்கர் படைத்தார். ஏற்கனவே பார்ப்பனர்களால் உள் வாங்கப்பட்ட அந்த புத்தமதத்தை அவர் ஏற்க வில்லை. இவர் 21 கொள்கைகளை அறிவிக்கிறார். கொல்கத்தாவில் இருக்கிற மகாபோதி சங்கம் மறுத்துவிட்ட நிலையில், புத்தமதத்தைச் சார்ந்த அய்ரோப்பியர் (ஆங்கிலேயர்) ஒருவர் அங்கே இருக்கிறார். அந்த ஆங்கிலேயர் மூலம்தான் அம்பேத்கர் புத்தமதத்திற்கே வர முடிந்தது. இந்தியாவில் இருந்த எந்த புத்தமதக்காரனும் இவரை அனுமதிக்கவில்லை. புத்தமதத்தில் இவரை அனுமதிக்கவே ஒரு அய்ரோப்பியக்காரர்தான் உதவி புரிந்துள்ளார். புத்தமதத்தில் சேர வேண்டிய முறை அம்பேத்கருக்கு இப்படித்தான் நிகழ்ந்தது.

இன்று தமிழ்நாட்டில் மேற்கு மாவட்டங் களிலும் தெற்கு மாவட்டங்களிலும் பிறக்கும் குழந்தைகளை சிசுவிலேயே கொல்லும் நிலை இருக்கிறது. பிறந்த குழந்தைகளை நெல் கொடுத்தோ அல்லது கழுத்தைத் திருகியோ கொன்று விடுவார்கள். அங்கே இருக்கிற பண்ணை யார் வீடுகளிலும், ஆதிக்க சாதியினர் வீடுகளிலும் ஒரே ஒரு பையன் மட்டுமே இருப்பான். ஏன் வேறு குழந்தைகளே அவர்களுக்குப் பிறக்கவில்லையா? பக்கத்துத் தெருவில் இருக்கிற அருந்ததியர்கள் வீடுகளில் 5 பேர், 10 பேர் இருப்பார்கள். ஆனால், அவர்கள் வீடுகளில் மட்டும் ஒரே ஒரு பையன் மட்டுமே இருப்பான். பெண் கூட இல்லை. என்ன காரணம்? சொத்து பிரிந்துவிடக் கூடாது என்பது தான். டாக்டர் ராமதாசுக்கும் அவரோடு தற்போது இருக்கின்ற சாதி சங்கங்களுக்கும் இருக்கிற பிரச்சினையே காதல் இல்லை. பெண்களுக்கு சொத்து போய்விடக்கூடாது என்பதில் குறியாக இருக்கிறார்கள்.

பெரியார் உணர்த்திய சொத்திலே பெண் களுக்கும் பங்கு உண்டு என்பதை கலைஞர், 1989-91 இல் தன் ஆட்சியிலே பெண்களுக்கும் சொத்திலே சம உரிமை என்று கொண்டு வந்தார். அதனால், ஜாதி மறுப்புத் திருமணம் செய்யும் பெண்களுக்கும் சொத்தில் பங்கு கொடுக்க வேண்டும். செய்தியே தற்போது அதில்தான் உள்ளது. காதல் நாடகம் என்றும், வன்கொடுமைத் தடுப்புச் சட்டத்தில் திருத்தம் கொண்டு வரவேண்டும் என்றும் இவர்கள் சொலவதெல்லாம் இவர்களின் உள்நோக்கம் தாழ்த்தப்பட்டவர்களுக்கு சொத்து போய்விடக் கூடாது என்பதுதான். அதனால்தான் இவர்கள் சாதி மறுப்புத் திருமணங்களுக்கு எதிராக இப்படி ஒரு நிலை எடுத்திருக்கிறார்கள்.

பெண்களுக்கான சொத்துரிமைச் சட்டம் இந்தியாவின் பல மாநிலங்களிலும் இல்லை. தமிழ் நாட்டில் மட்டும் இருக்கிறது. இந்தியாவில் பல மாநிலங்களில் இல்லாத புதுமை தமிழ்நாட்டில் தந்தை பெரியாரால் கிடைத்தது. அண்ணா 1967 இல் ஆட்சியைப் பிடிக்கும் முன்பு, சுயமரியாதைத் திருமணங்கள் பெரியாரால் நிறைய நடத்தப் பட்டன. அந்தத் திருமணங்கள் எல்லாம் சட்டப்படி செல்லாத நிலை இருந்தது.அப்படி செல்லாத திருமணங்களால் பல தோழர்கள் தங்கள் சொத்துகளை இழந்திருக்கிறார்கள். அப்படிப்பட்ட நிலையில் ஆட்சிப் பொறுப்பேற்ற அண்ணா, பெரியார் அறிமுகப்படுத்திய சுயமரியாதைத் திருமணங்கள் சட்டப்படி செல்லும் என்ற சட்டத்தை இயற்றினார். இதன் மூலம் தமிழ் நாட்டில் மாபெரும் புரட்சி ஏற்பட மூலவித்தகராக இருந்தார் தந்தை பெரியார் என்பதை நாம் மறந்துவிடக் கூடாது.

அதுமட்டுமல்ல, நம்மைப் பொறுத்த அளவு இன்றைக்கு பல்வேறு பிரச்சினைகளை நாம் சந்தித்துக் கொண்டு இருக்கிறோம். என்ன பிரச்சினைகள்? நாம் ஏதோ அமைதியாக இருந்துகொண்டு இருக்கிறோம். நம்மை எதிர்க்கிற அந்தக் கொள்கைகளை வைத்துக் கொண்டு இருக்கிறவர்கள் எல்லாம் நம்மைவிட மிக வேகமாக வளர்ந்து கொண்டு இருக்கிறார்கள். இன்றைக்கு ஒரு நீதிமன்ற வளாகத்திலே ஒரு விநாயகர் கோயில் கட்டப்படுகிறது. இங்கே இருக்கிற அத்தனை அலுவலகங்களிலும் வெள்ளிக்கிழமையன்று பூஜை நடக்கிறது. அதற்கு ஒரு பூணூல் திருமேனி வருகிறார். ஆயுத பூஜை நடக்கிறது. இதை நம்மால் தடுக்க முடிந்ததா என்றால் இல்லை. இன்றைக்கு நம்மை எதிர்க்கிற ஆர்.எஸ்.எஸ். கருத்தை உள் வாங்கிய இந்துத்துவவாதிகள் மிகப் பெரிய அளவிலே ஆனால் அமைதியாக மேற்கு மண்டலத் திலே தங்கள் தலைமையை வைத்துக் கொண்டு, இன்னும் குறிப்பாகச் சொன்னால் திருப்பூர் போன்ற மாவட்டங்களில் தங்களின் தலைமையை அமைத்துக் கொண்டு, நம்முடைய கருத்துகளுக்கு எதிராக வீரியமாக அவர்கள் செயல்பட்டுக் கொண் டிருக்கிறார்கள் என்பதைத் தோழர்கள் மறந்து விடக் கூடாது. எது வேண்டுமானாலும் நடக்கட் டும் என்று பார்த்துக் கொண்டிருக்கின்ற நேரமல்ல இது. நாமும் களத்திலே இறங்க வேண்டிய தருணம் இங்கு வந்துவிட்டது. ஒரு குற்றச் செயலை செய்வதைவிட அந்தக் குற்றச் செயலை பார்த்துக் கொண்டு இருப்பதுதான் முதல் குற்றம். நாம் பல குற்றங்களை மெதுவாக பார்த்துக் கொண்டு இருக்கிறோம். தடை செய்ய முடியவில்லை.

ஆக, இதற்கெல்லாம் ஒரு தீர்வு வேண்டுமென்று சொன்னால், நிச்சயமாக நான் சொல்கிறேன் இன்றைக்கு மனு சாஸ்திரம் என்ற இடத்திலே கை வைக்காமல் அதை சாதிக்க முடியாது என்று சொல்லி இந்த மாநாடு உண்மையிலேயே அவர்கள் சொன்னதைப்போல காலையிலே தொடக்கி வைப் பதற்கு ஒரு சக்கிலியன் அதியமானைத் தேர்ந்தெடுத் திருக்கின்றார்கள். மாநாட்டை முடித்து வைப்ப தற்கு ஒரு பறையன் திருமாவை தேர்ந்தெடுத் திருக்கிறார்கள் என்று சொன்னால் அதுதான் தந்தை பெரியாருக்குக் கிடைத்த வெற்றி! வெற்றி! (பலத்த கைதட்டல்) என்று கூறி இந்த மாநாட்டைத் தொடக்கி வைப்பதிலே பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

**உரை தொகுப்பு: ஜஸ்டின் ராஜ்**

## மாநாட்டுக்கு உழைத்த தோழர்கள்

*மா*நாட்டுக்கு உழைத்த செயல்வீரர்களுக்கு கழகத் தலைவர் கொளத்தூர் மணி, கழக சார்பில் பாராட்டுகளைத் தெரிவித்து நூல்களை பரிசாக வழங்கினார். மாநாட்டுக்கு இரவு பகல் பாராது உழைத்த தோழர்கள்:

மண்டலச் செயலாளர் இராம. இளங்கோவன்; மாவட்ட தலைவர் நாத்திக ஜோதி, அறிவியல் மன்றம் சிவக்குமார், மாவட்டத் தலைவர் செல்லப்பன், மாவட்ட செயலாளர் நிவாசு, மாவட்ட அமைப்பாளர் அர்ச்சுணன், அ.தி.மு.க. தோழர் தங்கராசு, மாநகர கழகத் தலைவர் திருமுருகன், சுப்பிரமணி, மாநகரச் செயலாளர் சிவா, குமாரபாளையம் வெங்கட், மோகன்ராஜ், ரமேஷ், மாவட்ட அமைப்பாளர் குமார், மாவட்ட செயலாளர் சண்முக பிரியன், வேலு, செல்வராசு, இசைக் கதிர், இனிவன், அருளானந்தம், வேல் முருகன், சேலம் மாவட்ட செயலாளர் சூரியக்குமார், வேலுச்சாமி, தட்சணாமூர்த்தி.

## மாநாட்டில் எழுச்சி இசை வழங்கிய மேட்டூர் டி.கே.ஆர். குழுவினர்




**அடுத்த இதழ்...**
**பெண்ணுரிமை மற்றும் ஆணாதிக்க எதிர்ப்பு இதழாக வெளி வருகிறது.**

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted on: 4th January 2013

பெறுநர்

OWNER & PUBLISHER & EDITOR : K. RAJENDRAN, PUBLISHED AT 29, JOURNALISTS COLONY, THIRUVALLUVAR NAGAR, THIRUVANMIYUR, CHENNAI - 600 041.
PRINTED BY : S. THEESMAS, AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014.



புரட்சிப் பெரியார் முழக்கம்

திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு

www.dvkperiyar.com

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2043 | சனவரி 10, 2013 | புரட்சி 11 | முழக்கம் 52 | விலை: ரூ.3.00


# கடும் சட்டங்கள் மட்டும் போதாது; பெண்கள் பற்றிய குடும்ப-சமூகப் பார்வை மாற வேண்டும்!

புதுடில்லியில் ஓடும் பேருந்தில் ஒரு பெண் பாலியல் வன்முறைக்கு உள்ளாக்கப்பட்டு கொடூரமாக கொல்லப்பட்டுள்ளது குறித்து நாடெங்கும் அதிர்வலைகள் எழுந்துள்ளன. கடுமையான சட்டங்கள் வேண்டும். பாலியல் குற்றங்களுக்கு தூக்குத்தண்டனை விதிக்கப்பட வேண்டும் என்ற கருத்துகள் முன்மொழியப்படுகின்றன. அதேபோழ்தில் தூத்துக்குடி அருகே ஸ்ரீவைகுண்டம் கிளாக்குளம் கிராமத்தைச் சார்ந்த 12 வயது சிறுமி புனிதா கொடியவனால் பாலுறவு வன்முறைக்கு உள்ளாகி கொல்லப்பட்டார். சிதம்பரம் முட்லூர் அருகே சந்தியா என்ற பெண் தான் வேலை பார்த்த இடத்திலேயே மூன்று கொடியவர்களால் பாலுறவு வன்முறைக்கு உள்ளாக்கப்பட்டு கொல்லப்பட்டார். பிரியா என்ற மாணவி விழுப்புரம் அருகே இதேபோல் கொல்லப்பட்டார். ஆனால், டெல்லியில் கொலை செய்யப்பட்ட பெண்ணின் பெயரை வெளியிடக் கூடாது என்ற ஊடக நெறிமுறைகள், இந்த தலித் பெண்களின் கொடூர கொலையில் பின்பற்றப்படவில்லை. இவர்கள் பற்றிய படம் பெயர்களுடன் தமிழக ஏடுகள் வெளியிட்டன. குற்றங்கள் - கொலைகளின் நகரமாகிவிட்ட டெல்லியில் கடந்த ஆண்டில் 300க்கும் மேற்பட்ட பாலுறவு வன்முறை வழக்குகள் பதிவாகியுள்ளன. இவை அனைத்துக்கும் ‘மவுனம்’ காத்த ஊடகங்களும் போராட்டக்காரர்கள் ஓடும் பேருந்தில் நடந்த கொடூர வன்முறைக்கு மட்டும் வெடித்துக் கிளம்பியதோடு அய்.நா.பொதுச் செயலாளரையே கண்டனம் தெரிவிக்கச் செய்துள்ளன. பெண்களின் மீதான இந்த கொடூரங்களையும் வன்முறைகளையும் கடுமையான சட்டங்கள் வந்தால் மட்டும் ஒழித்து விட முடியாது. சட்டங்கள் வெற்றிகரமாக அமுலாக பெண்கள் பற்றிய சமூகத்தின் பார்வையும் குடும்பத்தின் பார்வையும் மாற்றப்படவேண்டும். பெண் என்றால் அவள் ஒரு அனுபவிக்கக்கூடிய போகப் பொருள்; ஆணுக்கு அடிமைப்பட்டவள் என்ற பார்வையை மாற்றியமைக்கக் கூடிய ஒரு புரட்சி வந்தாகவேண்டும்.

தூக்குத் தண்டனை குற்றங்களை தடுப்பதில்லை என்பது உறுதியாகிவிட்ட முடிவு. தூக்குத் தண்டனை அமுலிலுள்ள நாட்டில்தான் டெல்லிக் கொடூரங்களும் நடந்திருக்கிறன்றன என்பதை மறந்துவிடக் கூடாது. முதலில் பெண்களுக்கான உரிமைகளை அங்கீகரிக்க முன்வரவேண்டும். சட்டமன்றம், நாடாளுமன்றங்களில் பெண்களுக்கான 33 சதவீத இடங்களை வழங்குவதைத் தடுக்கும் சாதி ஆணாதிக்க அரசியல்வாதிகளும்கூட பெண்களுக்கு எதிரான குற்றவாளிகள்தான்!

புதுவை மாநில ஆட்சி, பெண்கள் பாதுகாப்புக்கு அவர்கள் ‘கோட்’ அணிய வேண்டும்; செல்பேசி பயன்படுத்தக்கூடாது; பெண்களுக்கு தனிப் பேருந்துவிடவேண்டும் என்று திட்டம் தீட்டி பெண்களை ஒதுக்கி வைப்பது - பெண்கள் மீது சுமத்தப்படும் மற்றொரு உரிமை பறிப்பேயாகும். பெண்களை இழிவாகக் கருதக்கூடிய எந்த கருத்தும் அது மத நூலாக இருந்தாலும் மனு தர்மமாக இருந்தாலும் சட்ட விரோதமாக்கப்பட வேண்டும். வழிபாடுகளில் பெண்களைத் தனிமைப் படுத்தும் தீட்டுகள், சடங்குகள் சட்டவிரோத மானவையாக அறிவிக்கப்பட வேண்டும்.

இருபாலரும் இணைந்து படிக்கும் கல்விச் சாலைகள் வரவேண்டும். பாலியல் கல்வி பாடமாக்கப்பட வேண்டும். பெண்கள் உரிமையை வலியுறுத்தும் பாடத் திட்டங்கள் வரவேண்டும். பெண்-ஆண் சமத்துவம் அனைத்துத் துறைகளிலும் வரவேண்டும்.

பெரியார் கூறுகிறார்:

“பெண்களைக் கூண்டுக் கிளிகளைப்போல் வீட்டில் அடைத்து வைக்கத் தாய் தந்தையர் முயற்சிக்காதீர்கள்! தாராளமாகப் பழக விடுங்கள். பெண்களுக்கு 20 வயது வரை, கண்டிப்பாகத் திருமணம் செய்யாதீர்கள்.

குழந்தைகளின் உற்பத்திப் பீடமாயுள்ள பெண்கள் திருந்தினாலொழிய அவர்களிடமிருந்து உற்பத்தியாகும் குழந்தைகளும் திருந்திய குழந்தைகளாயிருக்க முடியாது என்பதை மனத்தில் கொள்ளுங்கள். வளம் செய்யப்பட்ட மண்ணில் எப்படி நல்ல நெல்மணிகள் தோன்றுமோ, அது போலவே சீர்திருத்த மனம் படைத்த அறிவுள்ள பெண்களிடமிருந்துதான் சீர்திருத்த அறிவுள்ள செம்மல்கள் தோன்றக்கூடும் என்பதைத் தாய்மார்கள் உணர்ந்து, முதலில் தம்மைச் செம்மைப் படுத்திக் கொள்ளட்டும், கோயிலுக்குப் போய் அனாவசியமாய்க் குழவிக் கல்லுக்குத் தெண்டனிடுவதால் பயனில்லை என்பதை உணர்ந்து கொள்ளட்டும். வெறும் சமையல்காரிகளாகவும், கட்டிலறைப் போகப் பொருளாகவும், காட்சிப் பொருள்களாகவும் மட்டுமே இருப்பதில் பயனில்லை என்பதைப் பெண்கள் உணர்ந்து கொள்ளட்டும்!

நாம் விடுதலை அடைய வேண்டுமானால் பெண்கள் முதலில் மூடநம்பிக்கைகளிலிருந்து விடுதலை பெற வேண்டும். நாம் விதவைகளாயிருக்கத் தமது விதிப் பயன்தான் காரணம் என்பதை விதவைகள் விட்டொழிக்க வேண்டும். விதவைகளாயிருப்பவர்கள் சமூகத் தொண்டாற்ற முன்வரவேண்டும். நம் நாட்டுச் சரித்திரத்தில் பெண்களுக்கென்று தனி அத்தியாயம் எழுதப்படும் அளவுக்கு நீங்கள் விதவை(எதிர்ப்பு)ப் போராட்டத்தில் பெரும் பங்கு கொள்ள வேண்டும்.

அறிவுள்ள பெண்கள் சிலர் பதவி மோகங் கொண்டு அல்லலுறுகிறார்கள். சிலர் தம் புருஷர்களிடம் மாட்டிக் கொண்டு அல்லல்படுகிறார்கள்; விரைவில் இவற்றினின்று அறிவுள்ள பெண்கள் விடுதலை பெற்று, சமூகத் தொண்டாற்ற முன்வரவேண்டும். (‘விடுதலை’ .2.11.1948)

நம் வீட்டு நாய்களையே எடுத்துக் கொள்வோம். சில நாட்கள் விடாப்பிடியாகக் கட்டிப் போட்டு வைத்திருந்து பிறகு அவிழ்த்து விட்டால், காரணமின்றியே சந்தோஷத்தால் இங்கே ஓடும், அங்கே ஓடும்; குதிக்கும்; ஒரு நிமிஷங்கூடச் சும்மா இருக்காது. கட்டு ஒழிந்ததில் அதற்குள்ள ஆனந்தம் அவ்வளவு! இதுதான் இயற்கை. எனவே, நம் பெண்களை உலகத்தினின்றும் மறைத்து வைப்பதும், அவர்களை உலக ஞானத்தை அடைய வெட்டாமல் தடுத்து வைப்பதும் மிக மிகக் கேடானதாகும். (‘விடுதலை’ 11.10.1948)

“ஓர் ஆணுக்கு ஒரு சமையல்காரி; ஓர் ஆணின் வீட்டுக்கு ஒரு காவல்காரி; ஓர் ஆணின் குடும்பப் பெருக்கிற்கு ஒரு பிள்ளை விளைவிக்கும் பண்ணை; ஓர் ஆணின் கண் அழகிற்கும், மனப் புளகாங்கிதத்திற்கும் ஓர் அழகிய அலங்கரிக்கப்பட்ட பொம்மை என்பதல்லாமல் பெண்கள் பெரிதும் எதற்குப் பயன்படுகிறார்கள், பயன்படுத்தப்படுகிறார்கள் என்பதைச் சிந்தித்துப் பாருங்கள்!” (‘வாழ்க்கைத் துணை நலம்’ நூலிலிருந்து. 1958)

“ஆணுக்குப் பெண் சரிநிகர் ஆகும்; அடிமையில்லை. சோறு சமைத்துப் போட்டுச் சாப்பிடும் சோற்று ஆள் அல்ல பெண்; சமமானவள்; நண்பனைப் போன்றவள் - வாழ்க்கைக்குத் துணைவி அவள். இருவருக்கும் உரிமை ஒன்றே.

6 ஆம் பக்கம்

## தமிழ்நாட்டில் தலைதூக்கி வரும் ஜாதி வெறியைக் கண்டித்து பிப்.6 இல் ஆர்ப்பாட்டம்!

- **தமிழ்நாட்டில் ஜாதி வெறியைத் தூண்டிவிட்டு சமூக அமைதியைக் குலைக்க முயலும் ஜாதித் தலைவர்களைக் கண்டித்தும் -**
- **தீண்டாமைக் குற்றங்களை இழைப்போர் மீது வன்கொடுமைத் தடுப்புச் சட்டத்தின் கீழ் வழக்குகளைப் பதிவு செய்ய வலியுறுத்தியும் -**
- **ஜாதி மறுப்பு காதல் திருமணங்களுக்கு அரசு உரிய பாதுகாப்பு வழங்கக் கோரியும் -**
- **சட்டப்படி வயது வந்தோர் தங்கள் விருப்பப்படி செய்து கொள்ளும் திருமண வாழ்வுரிமையில் குறுக்கிட்டு அச்சுறுத்துவோர் மீது உரிய நடவடிக்கை கோரியும் -**
- **பிப்ரவரி 6 ஆம் தேதி மாவட்ட தலைநகரங்களில் கண்டன ஆர்ப்பாட்டம்;**

**திராவிடர் விடுதலைக் கழகத்துடன் சாதி எதிர்ப்பு இயக்கங்களை இணைத்து ஆர்ப்பாட்டங்களை நடத்தக் கோருகிறோம்!**

**குறிப்பு:** கழகத் தோழர்கள் ஆர்ப்பாட்டங்களுக்கு முறையான அனுமதி கோரி உடனடியாக காவல் துறையிடம் விண்ணப்பிப்பதோடு உடன்பாடுள்ள அமைப்புகளோடு தொடர்பு கொண்டு செயலாற்றுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

- சமூகத்தில் இருவேறு பிரிவினருக்கிடையே பகைமை மோதலை உருவாக்க திட்டமிட்டு செயல்படுவோர் நடத்தும் ஆர்ப்பாட்டங்களை அனுமதிக்க வேண்டாம் என்று மாவட்ட ஆட்சித் தலைவர்கள் காவல்துறை அதிகாரிகளிடம் கழக சார்பில் கோரிக்கை மனுக்களாக அளிக்குமாறு தோழர்களைக் கேட்டுக் கொள்கிறோம்.

**- கொளத்தூர் மணி**

தலைவர், திராவிடர் விடுதலைக் கழகம்

## தோழர்களுக்கு இனிய புத்தாண்டு பொங்கல் வாழ்த்துகள்!

# ஜாதித் தலைவர்களுக்கு தோழர் ஓவியா கேள்வி

# காதல் - ஜாதி மறுப்புத் திருமணங்களை உங்கள் ஜாதிப் பெண்கள் எதிர்க்கிறார்களா?

*ஈரோடு மாநாட்டில் 'புதிய குரல்' ஓவியா தனது உரையில் வன்னியப் பெண்களோ, கொங்கு வேளாளர் பெண்களோ, தங்களுக்கு ஜாதி மறுப்புக் காதல் திருமணங்களில் உடன்பாடில்லை என்று ஏன் கூறவில்லை? உங்களின் ஜாதி வெறியை ஏன் பெண்கள் மீது திணிக்கிறீர்கள் என்று கேட்டார்.*

மனுசாஸ்திர எரிப்பு விளக்க மாநாடு என்கின்ற தலைப்பிலே இந்த மாநாடு நடைபெற்று கொண்டிருக்கிறது. இந்த இரண்டு தினங்களாக, இந்த எரிப்பு ஏன் என்பதை விளக்குகின்ற விதமாக இங்கு பல்வேறு நிகழ்ச்சிகள், கருத்தரங்குகள், பட்டி மன்றங்கள் நடைபெற்றிருக்கின்றன. எனவே இந்த கூட்டத்தில் கலந்துகொண்டிருக்கின்ற நம்முடைய நண்பர்களுக்கு, எதற்காக இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பாக எழுதப்பட்ட மனுசாஸ்திரத்தை எரிக்க வேண்டும் என்கின்ற வினாவுக்கு பதில் கிடைத்திருக்கும், ஆனால் அவ்வாறு இந்த கூட்டத்தில் கலந்துகொள்ளாத ஏராளமான பொது மக்களுக்கு அது ஒரு பெரிய வினாவாக இருக்கும் இப்போது யார் மனுசாஸ்திரத்தை படித்துக் கொண்டிருக்கிறார்கள்? இப்பொழுது யார் மனுசாஸ்திரத்தை எங்கே வைத்திருக்கின்றார்கள் ? மக்கள் மறந்து விட்ட ஒரு விசயத்தை, இவர்கள் ஏன் வலிய நினைவுப்படுத்தி, அதற்கு பிறகு அதை எதிர்த்து ஒரு பிரச்சாரத்தை செய்து, அதன் பிறகு அதனை எரிப்போம் என்று சொல்கிறார்கள் என்று பல்லாயிரக்கணக்கான கேள்விகளை அவர்கள் கேட்கக் கூடும். இன்னும் சிலர், இவர்கள் நன்கு விபரம் தெரிந்தவர்கள் அவர்கள் கேட்கக் கூடும் இப்பொழுது எந்த பார்ப்பனர், தாழ்த்தப்பட்டவரை வந்து தாக்கி கொண்டிருக்கிறார் ? தருமபுரியிலே தாழ்த்தப்பட்ட மக்களை தாக்கியவர்கள் பார்ப்பனர்களா? இவர்கள் ஏன் இன்னும் அவர்களை திட்டிக் கொண்டிருக்கிறார்கள்? அவர்களின் பெரும்பகுதியினர் இங்கு இல்லவே இல்லை; பாதிப் பேர் டெல்லிக்கு போய் விட்டார்கள்; மீதிப் பேர் அமெரிக்காவுக்கே போய் விட்டார்கள்; இருப்பவர்கள் கொஞ்சம் பேர்தான் காலத்தை கழித்துக் கொண்டிருக்கிறார்கள்; என்று பல்வேறு விதமான கேள்விகள் கேட்கக் கூடும்.

நண்பர்களே ! இராமன் என்ற கதாபாத்திரம் இன்று இல்லை; ஆனால் அந்த இராமன் சீதைக்கு வரைந்த கோடு இருக்கின்றதே அந்த கோடு எல்லாப் பெண்கள் வாழ்விலும் இன்னும் இருந்து கொண்டு தான் இருக்கின்றது. எனவே தான் இன்னும் பெண்கள் இங்கு தாலி போன்ற அணிகலன்களை அணிந்து கொண்டிருக்கிறார்கள். மனுசாஸ்திரத்தை இன்று எல்லோரும் படிக்காமல் இருக்கலாம்; மனுசாஸ்திரம் என்ன சொல்கிறது ? 'ஒரு பெண் இளமையிலே தந்தைக்கு கட்டுப்பட்டு இருக்க வேண்டும்; பருவத்திலே கணவனுக்கு கட்டுபட்டு இருக்க வேண்டும்; வயதான பின் தன்னுடைய மகனின் காவலில் இருக்க வேண்டும்' என்று சொல்கிறது. இன்று உங்கள் வீட்டு பெண்ணோ அல்லது எங்கள் வீடுகளில் உள்ள பெண்களோ இந்த மனுசாஸ்திரத்தை படித்திருக்கக் கூடிய வாய்ப்பு கிடையாது. ஆனால் இந்த மனுசாஸ்திரம் சொல்லுகின்ற விசயம் வாழ்க்கையில் இருக்கிறதா - இல்லையா ? கடைபிடிக்கப்படுகிறதா - இல்லையா ?

உங்களுக்கு தெரியும் சென்ற வாரம் டெல்லியிலே, ஒரு பேருந்திலே ஒரு பெண் பாலியல் வன்முறைக்கு - கூட்டு பாலியல் வன்முறைக்கு ஆளாக்கப்பட்டு, ரோட்டிலே தூக்கியெறியப்பட்டிருக்கின்றார்; அந்த குற்றவாளிகளை பிடித்து விட்டார்கள்; பிடித்து விசாரிக்கிறார்கள், விசாரிக்கின்ற போது அதிலே ஒரு குற்றவாளி பதில் சொல்கின்றான் .'இரவு ஒன்பது மணிக்கு மேல் ஒரு பெண், ஒரு வாலிபனோடு வெளியில் வருகிறாள் என்று சொன்னால் அந்த பெண்ணுக்கு நாங்கள் தண்டனை கொடுக்க நினைத்தோம் எனவே அவ்வாறு செயல்பட்டோம்' என்பதாக ஒரு குற்றவாளி தன்னுடைய வாக்குமூலத்தில் சொல்கின்றான். தோழர்களே, நான் கேட்கிறேன் . ஒரு பெண் இரவு ஒன்பது மணிக்கு மேல் வெளியில் வந்தால், அவள் குற்றவாளியா என்று ஒரு பெண் ஒரு வாலிபனோடு தனியாக வெளியே வந்தால் அவள் யாருடைய பாலியல் இச்சைக்கு வேண்டுமானாலும் பயன்படுத்தக் கூடியவளாக இருக்கலாம் என்று அந்த இளைஞனுக்கு சொல்லிக் கொடுத்தது யார் ? அந்த இளைஞன் எப்படி அந்த விதமான மனநிலையை பெற்றான் ?

ஒரு சில நாட்களுக்கு முன்னால் பெங்களூரிலே ஒரு சம்பவம் நடைபெற்றது; சில பெண்கள், சில இளைஞர்கள் சேர்ந்து ஒரு வீட்டிலே தங்களுடைய பிறந்த நாள் விழாவை கொண்டாடிக் கொண்டிருந்திருக்கிறார்கள்; அந்த வீட்டிற்குள் ஒரு இந்து அமைப்பைச் சார்ந்தவர்கள், உள்ளே சென்று, அந்த இளைஞர்களை அடித்து வெளியே இழுத்துச் சென்றிருக்கிறார்கள். அந்த செய்தி வெளியே வந்த பொழுது, அந்த அமைப்பைச் சார்ந்தவர்கள் மிகத் தெளிவாக ஒரு அறிவிப்பை வெளியிடுகிறார்கள், அது என்னவென்று சொன்னால் .'அவர்கள் இந்து கலாச்சாரத்தை மீறுகிறார்கள் - இந்து கட்டுப்பாடுகளை மீறுகிறார்கள், அவர்களை நாங்கள் நிச்சயமாக தண்டிப்போம்; இந்த தண்டனைக்காக சட்டம் எங்களை தண்டிக்குமேயானால், அந்த தண்டனையை நிச்சயமாக நாங்கள் அனுபவிக்கிற தியாகமாக எடுத்துக்கொள்வோம்' என்று அவர்கள் அறிவிப்பு விடுகிறார்கள். அந்த கலாச்சாரம் ஒரு தனிப்பட்ட வீட்டிற்குள்ளே சென்று, அவர்கள் நடவடிக்கையிலே தலையிட்டு, இது கலாச்சாரத்தை சீரழிக்கிறது, உன்னுடைய வீட்டிற்குள் நீ இருக்கும் பொழுது கூட, இந்த மாதிரி விதமான உடைகளை தான் அணிந்திருக்க வேண்டும் இந்த மாதிரி தான் இருக்க வேண்டும்



என்கின்ற இந்த கலாச்சார வரையறைகளை, சொல்லிச் சென்றது யார் ? இந்த வரையறைகளை மக்கள் மனதில் ஏற்றியது யார் ? இதைத் தான் நாங்கள் மனுசாஸ்திரமாக பார்க்கின்றோம்.

மனுசாஸ்திரம் என்பது இப்பொழுது ஒரு நூல் வடிவில் நம்மிடையே இல்லாமல் இருக்கலாம்; ஆனால் மனுசாஸ்திரம் என்பது இங்கு அனைவருடைய மனங்களிலும் எழுதப்பட்டுவிட்டது என்பது தான் இங்கு இருக்கக் கூடிய மிகப்பெரிய அபாயமாக இப்பொழுது நம்முன் இருக்கிறது. சில மாதங்களுக்கு முன்பாக, பழ.கருப்பையா அவர்கள், இந்த நாட்டின் சட்டமன்ற தேர்தலுக்கு நின்று, வெற்றி பெற்ற வேட்பாளர்களில் ஒருவர்; அவர் தன்னுடைய ஜாதி சமுதாய மாநாட்டிலே போய் உரையாற்றுகிறார்; என்ன உரையாற்றுகிறார் ? 'நம்முடைய சமுதாயத்தவருடைய இரத்தம் மிகவும் புனிதமானது, நம்முடைய சமுதாயத்தவருடைய குணங்கள் மிகவும் மேன்மையானவை, இந்த உன்னதங்களை நாம் காப்பாற்ற வேண்டும் என்று சொன்னால், நம்முடைய சமுதாயத்தைச் சார்ந்தவர்கள் வேறு யாரையும் கலப்பு திருமணம் செய்து கொள்ளக் கூடாது, அப்படி கலப்புத் திருமணங்கள் செய்துகொள்வார்கள் என்று சொன்னால் அவர்களை, நாம் நம்முடைய சமுதாயத்தில் இருந்து தள்ளி வைத்துவிட வேண்டும்' என்று அவர் பேசினார். அதன் பிறகு, உங்களுக்கு நன்கு தெரியும், சென்னை மகாபலிபுரத்திலே நடந்த கூட்டத்தில், பாட்டாளி மக்கள் கட்சியினுடைய காடுவெட்டி குரு பேசுகிறார், அவர் என்ன பேசுகிறார் 'எங்க ஜாதிப் பெண்ணை வேறு எவன் கட்டினாலும், அவனை நாங்கள் வெட்டுவோம்' என்று பேசுகிறார். இந்தப் பேச்சுகளை நான் பழ.கருப்பையாவின் பேச்சாக - காடுவெட்டி குருவின் பேச்சாக - அதன் பிறகு இதனை நியாயப்படுத்துகிற மருத்துவர் இராமதாஸ் அவர்களுடைய பேச்சாக தனித் தனியாக பார்ப்பது அல்லாமல், இவற்றை ஒட்டு மொத்தமாக சேர்த்து பார்த்தால், அதற்கு கிடைக்கின்ற விடை தான் மனுசாஸ்திரம் என்பதை நாம் புரிந்துகொள்ள வேண்டும். இவர்களை இப்படி சிந்திக்க வைப்பதும், இவர்களை இப்படி பேச வைத்திருப்பதும், இவர்களை இப்படி எண்ண வைத்திருப்பதும் மனுசாஸ்திரமாக இருக்கின்றது.

இந்த மனுசாஸ்திரம் தான் மனிதர்களை மேலிருந்து கீழாக அடுக்கி, பிரிக்கிறது. அப்படி பிரிப்பதோடு மட்டுமல்லாமல், இன்னாருக்கு இது தான் தொழில் என்று வரையறுப்பதாக இருக்கின்றது. இங்கு ஜாதி என்பது, இரண்டு விசயம், ஒன்று அது பிறப்பின் வழியாக வருகிறது எனவே மாற்றப்பட முடியாதது; இன்னொன்று ஒவ்வொரு ஜாதியும் ஒரு தொழிலோடு பிணைக்கப்பட்டிருக்கிறது. இன்றைக்கு கூட இந்த தொழில் பிணைப்பு என்பது, எந்த அளவிற்கு அடுக்கப்பட்டிருக்கிறது என்பது ஒரு கேள்வியாகத் தான் இருக்கின்றது. அது மிகப் பெரிய அளவிலே நாம் அடிப்படைகளை மாற்றிவிட்டோம் என்று சொல்ல முடியாது, இருந்தாலும் அந்த முடிச்சு கொஞ்சம் அவிழ்க்கப்பட்டிருக்கிறது. 'ஜாதி என்பது பள்ளிக்கூடத்தில் கேட்பதனால தான் நிலை நிறுத்தப்பட்டிருக்கிறது - பள்ளிக்கூடத்துல ஜாதி கேட்பதினால தான் ஜாதி காப்பாற்றப்படுகிறது' என்று நிறையப் பேர் சொல்றாங்க. ஆனால் இன்று வெளிப்படையாக அறிவிக்கின்றார்கள் ஜாதியை மறுத்த திருமணங்களை தடை செய்ய வேண்டும் என்று. இங்கே பொங்கலூர் மணிகண்டன் என்ற நபர் சொல்கிறார், அவருடைய பேச்சை மிக நன்றாக கவனிக்க வேண்டும்; இங்கே நிறைய தாய்மார்கள் வந்திருக்கிறார்கள், தயவுசெய்து பெண்களாகிய நீங்கள் அருள்கூர்ந்து இதனைக் கவனியுங்கள், 'இந்த மண்ணிலே இருந்து பெரியாரியத்தையும், மார்க்சியத்தையும், அம்பேட்கரியத்தையும் வெளியேற்ற வேண்டும்' என்று சொல்லுகின்றார். அதோடு மட்டுமல்ல அவர் தொடர்ந்து சொல்லுகின்றார் . 'இந்த மண்ணில் பெண்களுக்கு சொத்துரிமையைத் தடை செய்ய வேண்டும்' என்று. ஆக அவர்களுடைய சிந்தனை எப்படி பெண்ணடிமைத்தனத்தோடு ஆழமாக தொடர்பு கொண்டிருக்கிறது என்பதனை நாம் புரிந்து கொள்ள வேண்டும். அவர்கள் சொல்லுகிறார்கள் 'எங்கள் வீட்டுப் பெண்களை அவர்கள் கூட்டிக் கொண்டு போய் விடுகிறார்கள்' இவங்களுக்கு பிரச்சனை பெண்களை கூட்டிக் கொண்டு போவதால் வருவது அல்ல. அப்படி வருவதாக இருந்தால் அந்த பிரச்சனை பெண்களிடம் இருந்து வந்திருக்குமே !

இது வரை பெண்களை ஏமாற்றுகிறார்கள் என்று அந்தந்த ஜாதி தலைவர்கள் தான் அறிக்கை கொடுக்கிறார்களேயொழிய, எந்த ஜாதி பெண்ணும் அப்படி ஒரு அறிக்கையை தரவில்லை. ஆக இவ்வளவு கல்வி வேலைவாய்ப்பு வளர்ந்திருக்கிற ஒரு சூழலில், இதனை சொல்லுவதற்கு கூட உங்கள் சமூகத்தில் படித்த பெண்கள் யாருமே இல்லையா ? அல்லது அவர்களை பேசவிட நீங்கள் இன்னும் தயாராக இல்லையா ? அவர்களை பேச விட்டால், உங்கள் பெண்களை சொல்லச் சொல்லுங்கள் எங்களுக்கு கல்வி வேண்டாம், சொத்துரிமை வேண்டாம், எங்களுக்கு விரும்பிய மாப்பிள்ளையைத் திருமணம் செய்துகொள்கிற உரிமை வேண்டாம் உங்கள் ஜாதி தான் வேண்டும் என்றும் வன்னிய ஜாதிப் பெண்களை சொல்லச் சொல்லுங்கள் - கொங்கு வேளாளக் கவுண்ட பெண்களைச் சொல்லச் சொல்லுங்கள், அந்த பெண்கள் சொல்கிறார்களா என்று பார்ப்போம். (கைதட்டல்)

என்னிடம் இந்த தருமபுரி நிகழ்வுகள் குறித்து - ஜாதி மறுப்பு திருமணங்களை எதிர்த்த அறிக்கைகளை தலைவர்கள் பகிரங்கமாக வெளியிடுவது குறித்து பலர் கருத்து கேட்ட போது நான் சொன்னேன், ஜாதி மீண்டும் உயிர்ப்பித்து விட்டதா என்று கேட்டபோது நான் சொன்னேன், "நிச்சயமாக இல்லை, பெண்கள் படித்துக் கொண்டிருக்கிறார்கள் ஒருபோதும் இதை அவர்கள் அனுமதிக்க மாட்டார்கள்; இவர்களுடைய கனவு

3 ஆம் பக்கம்

# ஜாதி அமைப்பைத் தகர்க்க பெண்களால் மட்டுமே முடியும்!

*2 ஆம் பக்கத் தொடர்ச்சி*

ஒருபோதும் நனவாகாது. இது சாகப் போகிற நாகம்; கடைசியாக படம் எடுத்து ஒரு ஆட்டம் ஆடிவிட்டு, சாவதற்கான ஒரு ஆட்டமாக இருக்க முடியுமேயொழிய, இவர்கள் எவ்வளவு தான் சொன்னாலும் இனிமேல் பெண்களைக் கட்டுப் படுத்த இந்த ஜாதிகளால் முடியவே முடியாது" என்று சொன்னேன். அதுமட்டுமல்ல; ஜாதி அமைப்பினுடைய அஸ்திவாரத்தில் - அந்த அஸ்தி வாரமாக கட்டப்பட்டிருப்பது வேறு எதுவும் அல்ல, பெண்களுடைய கல்லறை தான். அந்த ஜாதி அமைப்பை உடைக்க வேண்டும் என்று சொன்னால், அது பெண்களால் மட்டும் தான் முடியும். பெண்கள் தலைமையெடுத்து ஜாதி ஒழிப்புப் போரை நடத்துகின்ற போதுதான் அது சாத்தியம் ஆகும். அதனால் தான் பெரியார் சொன்னார், திருமணங்களை கிரிமினல் குற்றமாக அறிவிக்கப்பட வேண்டிய காலம் வரவேண்டும் என்று சொன்னார். திருமணம் என்பதே ஒரு பெண், ஒரு ஆணுக்கு வாரிசை பெற்றுத் தருவதற்கான ஒரு ஏற்பாடுதான். இன்றைக்கு மாதிரி 'ஜனடிக் தியரி'யெல்லாம் அன்றைக்குக் கிடையாது. ஒரு குழந்தை இன்னாருடைய குழந்தை என்று கண்டுபிடிப்பதற்கான அறிவியல் சாதனங்கள் எதுவும் அந்த காலத்தில் கிடையாது. அப்படி ஒரு காலத்தில் ஒரு பெண்ணை, முழுமையாக ஒரு ஆணுக்கு, சிறைபடுத்தினாலே அல்லாமல் ஒருவன் ஒரு பிள்ளையை, இது தான் எனக்கு பிறந்த பிள்ளை என்று சொல்லுவதற்கான எந்த முகாந்தரமும் இல்லாத ஒரு காட்டுமிராண்டி காலத்து கண்டு பிடிப்பு தான், இந்த பெண்ணை ஒரு ஆணுக்கு தாரைவார்த்துக் கொடுக்கும் திருமண அமைப்பு. விரும்பியோ, விரும்பாமலோ நாம் இன்னும் அந்த அமைப்பில்தான் வாழ்ந்துகொண்டிருக்கிறோம், நான் மறுக்கவில்லை. உலகம் முழுவதும் கல்யாணம் என்ற இந்த முறை இருக்கின்றது.

ஆனால் நம்முடைய நாட்டில் மட்டும்தான் ஒரு பெண் அவள் ஜாதியில் பிறந்த ஆணோடு மட்டும்தான் வாழ வேண்டும் என்ற ஒரு கூடுதல் நிபந்தனை இருக்கின்றது. இந்த கூடுதல் நிபந்தனை என்பதே எதற்காக விதிக்கப்பட்டது என்று சொன்னால், அந்த நிபந்தனை விதிக்கப்படா விட்டால் இந்த ஜாதியை ஆண்களால் ஒரு போதும் காப்பாற்ற முடியாது. ஆக ஜாதியை காப்பாற்றுவது என்பது இந்த ஆண்களின் கைகளில் இல்லை; ஜாதியை காப்பாற்றுவது என்பது பெண்ணடிமை தனத்தில் இருக்கின்றது என்பதற்காகவே இப்படி ஒரு அமைப்பை நிலைநிறுத்திவிட்டான். இவர்கள் இன்று எவ்வளவுதான் பாடுபட்டாலும் சரி, நிச்சயமாக படித்து வேலைக்கு போய் சுதந்திரக் காற்றை அனுபவித்துவிட்ட பெண், இனி ஒரு போதும் அந்த ஜாதிய இருளுக்குள் போவதற்கு சம்மதிக்க மாட்டாள்.

> *நான் இங்கு கூடியிருக்கின்ற இளைஞர் களைப் பார்த்து சொல்கின்றேன், எனக்கு மிகவும் மகிழ்ச்சி, இன்று நாங்கள் ஏராளமான இளைஞர்களை இந்த மாநாட்டிலே பார்க்கின்றோம்; எங்களுக்கு இருந்த வருத்தமெல்லாம் இன்று போனது போல் இருக்கிறது; இவ்வளவு இளைஞர்கள் இருக் கின்றார்கள் என்று சொன்னால், ஒரு தலை முறையை நாம் கைப்பற்றிவிட்டோம் என்கின்ற பெருமிதம் நமக்குள் வருகின்றது. இவர்கள் இருக்கின்றார்கள், இனி இந்த தமிழ்ச் சமுதாயத்தை, காடுவெட்டி குருக் களால் அல்லது மருத்துவர் இராமதாஸ் போன்றோரால் இந்த மாதிரியான பிற் போக்கு கருத்துக்களுக்குள் வழிநடத்திவிட முடியாது – இவர்கள் காப்பாற்றுவார்கள்.மி இந்த படை காப்பாற்றும் என்ற நம்பிக்கையை, இன்றைய பேரணியும், இந்த நிகழ்ச்சியும் எங்களுக்கு தந்தன. (கைதட்டல்)*

மனுசாஸ்திரம் என்பது, ஒரு நூலை எரிக்கின் றோம் என்று சொன்னால், பெரியாருடைய இயக்கம் - இது வன்முறையை தேடாத இயக்கம் - இந்த இயக்கம் வன்முறையை நாடாத இயக்கம் அதனால் தான் இந்த திராவிடர் விடுதலைக் கழகம் இன்று கூட எதை தேர்ந்தெடுக்கிறது என்று சொன் னால், மனுசாஸ்திரம் என்ற நூலை எரிப்பதை தேர்ந்தெடுக்கின்றது. அதனுடைய பொருள் என்னவென்று சொன்னால், ஜாதிய மோதலுக்கு தீர்வு, மீண்டும் திருப்பி தாக்கிக் கொண்டிருப்பது அல்ல என்று பொருள்; அதற்கு மாறாக அந்த தத்துவதை நீ மாற்றி எழுது; இந்த மோதலுக்கு எது காரணமாக இருக்கின்றதோ, இந்த மோதலை நடத்துகின்ற கருத்தியல் எதுவாக இருக்கின்றதோ அந்த கருத்தியலை தாக்கி அழிக்க வேண்டும். அப்படி அழிப்பதற்கு முடிவு செய்தால், பிற்போக்குத்தனங்கள் தானாக அந்த நிலையிலே மாறிவிடும், அதுமட்டுமல்ல நண்பர்களே, இந்த அமைப்புக்கான மூலமுடிச்சு என்பது, இன்னும் கூட இந்த வர்ணாசிரம அமைப்பிலே முடிச்சுண்டு கிடக்கின்றது.

இப்போது சமீபத்திலே கூட, இங்கே இதே இயக்கத்தினால் இன்னொரு போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. (குறிப்பு : தந்தை பெரியார் திராவிடர் கழகம் நடத்திய போராட்டம்- ஆர்) ஒருவர் மீண்டும் சீரங்கத்திலே பிராமணாள் கபே என்று பெயர் வைத்தார்; அப்பொழுது நடைபெற்ற விசயம் என்னவென்று சொன்னால், பிராமணாள் கபே என்பதை எதிர்த்து மாற்ற வேண்டும் என்று சொன்னபோது, நம்முடைய நண்பர்கள் சிலருக்குக் கூட ஏன் பிராமணாள் கபே என்று வைக்கக் கூடாது? தேவர் ஹோட்டல் என்று வைக்கிறார்கள்; நாடார் ஹோட்டல் என்று வைக்கிறார்கள்; செட்டியார் ஹோட்டல் என்று வைக்கிறார்கள்; செட்டிநாடு ரெஸ்டாரண்ட் என்று வைக்கிறார்கள், இப்படி வைக்கும் போது ஏன் அவருடைய ஜாதி பெயரில் பிராமணாள் கபே என்று மட்டும் வைக்கக் கூடாது ? என்று நிறைய நண்பர்கள் நம்மிடமே கேட்டார்கள், எனக்கு மிகவும் வருத்தமாக இருந்தது; எவ்வளவு தூரம் திராவிடர் இயக்கப் பிரச்சாரம் பின்னடைந்துவிட்டது என்று எண்ணி நான் வருத்தப்பட்டேன். பிராமணாள் என்பது ஜாதி பெயர் அல்ல; அவர்கள் ஐயர் ஹோட்டல் ஐயங்கார் ஹோட்டல் என்று வைத்தால், அது அவர்களுடைய ஜாதி பெயர்; ஆனால் பிராமணாள் என்பது வர்ணத்தை குறிக்கிறது. அப்படி வர்ணத்தை குறிப்பதனால் நமக்கு என்ன தடை என்று சொன்னால், அந்த சொல் பிராமணாள் என்று ஒரு பிரிவினரை சொல்லுகின்ற பொழுதே, சூத்திரர்கள் என்று அடுத்தப் பிரிவினரை சொல்லுகின்றது. இதைத்தான் பெரியார் அவர்கள் கேட்டார்கள் . ' ஒரு வீதியிலே ஒரு வீட்டிலே மட்டும் இது பத்தினிகள் வாழுகின்ற வீடு என்று எழுதிப் போட்டால், மற்ற வீட்டில் இருப்பவர் களுக்கு என்ன பொருள் ? அப்படி எழுதி போட் டால் அடுத்த வீட்டுக்காரன் விளக்கமாறை எடுத்துப் போய் அடிப்பானா அடிக்க மாட் டானா?' என்று பெரியார் அவர்கள் கேட்டார்கள். அது போல்தான், நான் பிராமணன் என்று ஒருவர் சொல்லிக் கொள்வாரேயானால், நீ சூத்திரன் என்கின்ற மறை பொருள் அதற்குள் ஒளிந்து கொண்டிருக்கின்றது.

தாழ்த்தப்பட்ட மக்களின் மீது இதற்கு முன்னால், எத்தனையோ முறை ஜாதிய கலவரங்கள் - தாக்குதல்கள் - மோதல்கள் நடைபெற்றிருக் கின்றன. ஆனால் அப்போதெல்லாம் எந்த ஒரு தலைவரும், வெளிப்படையாக முன்வந்து, இது சரிதான் - இந்த ஜாதிக்காரர்கள் மாற வேண்டும் என்பதான ஒரு அறிவிப்பை வெளியிடவில்லை. ஆனால் இந்த முறை ஜாதி வேண்டும் ஜாதி கட்டுமானம் வேண்டும் என்ற அறிவிப்புகளை தருகிறார்கள். இது குறித்து ஒரு பார்ப்பன சங்கத் தலைவரிடம் கேட்டபோது 'தருமபுரி கலவரத்தை நான் ஆதரிக்கவில்லை, ஆனால் ஜாதி என்கின்ற அமைப்பு ஒரு நல்ல அமைப்பு, அது நீடித்திருக்க வேண்டும் என்றுதான் நான் கருதுகிறேன்' என்று அவர் வெளிப்படையாக பேட்டி கொடுக்கிறார். இந்த தேக்கம் ஏன் ஏற்பட்டது என்று சொன்னால், திராவிட இயக்கத்தினுடைய பிரச்சாரத்தில் - அதனுடைய வேகத்தில் நாம் ஒரு தேக்க நிலையை அனுமதித்திருக்கிறோம்; இன்னொரு புறம் தேவையில்லாமல், எந்த திராவிட இயக்கம் இந்த மக்களை தலை தூக்கி விடவும் - கைதூக்கி விடவும் அயராது பாடுபட்டதோ, அந்த திராவிட இயக்கம் தேவையில்லாத விமர்சனங்களுக்கும் - தாக்குதல் களுக்கும் தொடர்ந்து ஆளாக்கப்பட்டு வந்தது. அதனுடைய விளைவை நாம் இன்று சந்திக்கின் றோம்.

பார்ப்பனிய கருத்துக்கள் இங்கு செத்துவிட வில்லை; அது இன்னும் உயிரோடு இருக்கின்றது. ஜாதி என்ற அமைப்பை நாம் சீர்குலைக்காமல் - ஜாதி என்ற அமைப்புக்கு முடிவு கட்டாமல், நாம் ஜாதிய மோதல்களுக்கு முடிவுகட்டிவிட முடியாது. எனவே நம்முடைய இறுதி இலக்கு என்பது ஜாதி ஒழிப்பு என்பதாக இருக்க வேண்டும். இங்கு திரண்டிருக்கின்ற, இளைஞர் சமுதாயத்திற்கு நான் சொல்கின்றேன் செய்தால் ஜாதி மறுப்பு திருமணம் மட்டுமே செய்வோம் என்கின்ற உறுதி மொழி யோடு நீங்கள் செல்லுங்கள்; சொந்த ஜாதிக்குள் செய்கின்ற திருமணங்களை வேறு வழியில்லாமல் - அதி தீவிர காதல் வயப்பட்டிருந்தால் மட்டும் அனுமதியுங்கள் மற்றபடி அது காதலுக்கு மரியாதை செய்ய வேண்டும் என்பதற்காக, முடிந்தால் அதையும் கூட விட்டுவிடுங்கள் தப்பில்லை. ஆனால் வேறு ஜாதியில் மட்டுமே திருமணம் செய்யுங்கள். ஒரே ஜாதி திருமணத்தை தடை செய்யவேண்டும்; நியாயமாக சொல்லப் போனால், இந்த நாட்டிலே தீண்டாமை ஒழிய வேண்டும் ஜாதி ஒழிய வேண்டும் என்று சொன் னால், ஒரே ஜாதி திருமணங்கள் தடை செய்யப்பட வேண்டும் என்கின்ற குரல் இளைஞர்களிடையே இருந்து வரவேண்டும், அப்படிப்பட்ட ஒரு உணர் வோடு இங்கு கூடியிருக்கக் கூடிய இளைஞர்கள் ஒன்று திரளவேண்டும்; ஜாதி ஒழிப்பிற்காக நீங்கள் செய்கின்ற மாபெரும் பணி என்பது, ஜாதி மறுப்பு திருமணமாகத் தான் இருக்க முடியும்; அந்த ஜாதி மறுப்புத் திருமணத்தை, பெண்ணடிமை ஒழிப்புத் திருமணமாகவும், இங்கு நடைபெற்றது போல தாலி போன்ற அடிமை சின்னங்கள் இல்லாமல் நடத்துங்கள்; மீண்டும் சுயமரியாதை திருமணங்கள் இந்த மண்ணிலே பெருகட்டும்; அந்த உணர்வோடு நாம் இந்த மாநாட்டிலே இருந்து விடைபெற்று செல்வோம்.

**தொகுப்பு: கோகுலகண்ணன்**

## ஆர்.எஸ்.எஸ்.சின் 'மனுசாஸ்திர'க் குரல்

*கணவன் மனைவியிடையே ஒரு சமூக ஒப்பந்தம் ஏற்படுகிறது. இதில் கணவரானவர் மனைவியிடம், "நீ நம் வீட்டைப் பார்த்துக் கொள்; நான் உன் தேவைகளை எல்லாம் பார்த்துக் கொள்கிறேன். உன்னை பத்திரமாகப் பார்த்துக் கொள்கிறேன்" என்கிறார். அந்த ஒப்பந்தத்தின்படி கணவர் நடந்து கொள்ளும் வரை கணவர் அவருடன் இருக்கிறார். மனைவி அந்த ஒப்பந்தத்தை மீறிவிட்டார் என்றால், அவரும் மனைவியை கைவிட்டு விடுகிறார்.*

**– இந்தூரில் நடைபெற்ற கூட்டத்தில் ஆர்.எஸ்.எஸ். தலைவர் மோகன் பகவத் பேசியது.**

*மனுநீதி அடிப்படையில் அரசியல் சட்டம் வேண்டும் என்று கோருவது ஆர்.எஸ்.எஸ். எனவே மோகன் பகவத், "மனுதர்மத்தை"யே பேசுவதில் வியப்பில்லை.*

**– மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி மூத்த தலைவர் பிருந்தா காரத்**

(நன்றி: 'தினத்தந்தி' 7.1.2013)

## பெண் என்றால் இப்படித்தான்....

*மனைவி எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என்று சமஸ்கிருத சுலோகம் ஒன்று சொல்வதைப் பாருங்கள்:*

*கார்யேஷீ தாசி*
*கரனேஷீ மந்திரி*
*ரூபேஷீ லட்சுமி*
*க்ஷமவாதரித்ரீ*
*போத்யேஷீ மாதா*
*சயனேஸுவேஸ்யா*
*சமதர்ம யுக்தா*
*குலதர்ம பத்தினி*

சேவை செய்வதில் தாசியைப் போலவும், ஆலோசனை சொல்வதில் மந்திரியைப் போலவும், அழகில் லட்சுமியைப் போலவும், பொறுத்துக் கொள்வதில் பூமியைப் போலவும், அன்போடு உணவளிப்பதில் அன்னையைப் போலவும், கட்டில் சுகம் தருவதில் தாசியைப் போலவும் நடந்து கொள்ள வேண்டும். அவளே பத்தினிப் பெண்ணாவாள் என்பதே இதன் பொருள்.

## ஈரோடு மாநாட்டில் பேராசிரியர் சரசுவதி உரை

# பெண்களையும் சூத்திரர்களையும் அடிமைப்படுத்திய மனுதர்ம நச்சை முறியடிக்கக்கூடிய மாமருந்து பெரியாரியம்

*ஈரோட்டில் நடந்த மனுசாஸ்திர எரிப்புப் போராட்ட விளக்க மாநாட்டில் டிசம்பர் 23 அன்று நடைபெற்ற தடை போடும் சாஸ்திரங்களும் தடம் காட்டும் பெரியாரியமும் என்ற கருத்தரங்கிற்கு தலைமையேற்று பேராசிரியர் சரசுவதி நிகழ்த்திய உரை.*

இந்த மனுதர்ம சாஸ்திரம் என்று சொல்லப்படுகிற இந்த அதர்ம சாஸ்திரம், ஒருநபரால் ஒரு குறிப்பிட்ட காலகட்டத்தில் எழுதப்பட்டதல்ல என்ற வரலாறு உங்களுக்கு தெரிந்திருக்கலாம். எப்படி ஔவை என்ற பெயராலே தமிழ் நிலத்தில் பல ஔவைகள் வாழ்ந்திருந்தார்களோ, அதைப் போல மனு என்ற பெயரிலே இந்த மண்ணிலே ஒரு ஒன்பது பேராவது இருந்திருக்கிறார்கள். கிட்டதட்ட கி.மு மூன்றாம் நூற்றாண்டிற்கு பின், கி.பி. மூன்றாம் நூற்றாண்டிற்கு முன்னால் எழுதப்பட்ட அவர்களுடைய கருத்துக்களை ஒன்று திரட்டி, 'மனுதர்மசாஸ்திரம்' என்ற பெயரில் அதர்மங்களை கூட்டி தந்திருக்கிறார்கள். இந்த மனுவை நாம் எதிர்க்கிறோம் சாஸ்திரங்களை எரிக்கிறோம் என்று சொன்னால், அந்த புத்தகத்தை எரிப்பது என்ற பொருள் அல்ல என்பது உங்களுக்கு நன்றாக தெரியும். அந்த மனுசாஸ்திரங்களும், புராணங்களும், இதிகாசங்களும் என்னென்ன நச்சு விதைகளை - நஞ்சை, இந்த சமுதாயத்தினுடைய நாடி நரம்புகளிலும், இரத்த ஓட்டங்களிலும் கலந்துவிட்டிருக்கின்றனவோ, அந்த நச்சு விதைகளை - நஞ்சை, இந்த சமுதாயத்திலிருந்து ஒட்டுமொத்தமாக விலக்கிவிட்டு, புது இரத்தம் பாய்ச்சவேண்டும், அந்த புது இரத்தத்தில் எந்த விதமான சமூக துவேசமும் இருக்காது; எந்த விதமான ஏற்றத்தாழ்வுகளும் இருக்காது; எந்த விதமான மூடநம்பிக்கைகளுக்கும் அதில் இடம் இருக்காது; அது மதக் கலாச்சாரத்தை பின்பற்றாது. அது மனித உரிமை கலாச்சாரத்தை பின்பற்ற வேண்டும் என்ற நோக்கத்தோடுதான் நாம் இந்த மாநாட்டை நடத்திகொண்டிருக்கிறோம்.

அருமை நண்பர்களே ! பகுத்தறிவாளர்கள் அன்று முதல் இன்று வரை முழுமையாக எதிர்த்துக் கொண்டிருக்கிற ஒரு சாஸ்திரம் இருக்கிறது என்றால் அது இந்த மனுதர்மசாஸ்திரம் தான். ஏனென்றால் இந்த மனுசாஸ்திரத்தால் யார் தொடர்ந்து பயன் பெற்றுக் கொண்டிருக்கிறார்களோ, அவர்கள் அவ்வளவு முக்கிய இடத்தை கொடுத்திருக்கிறார்கள். இந்து மதத்தை தாங்கிப் பிடிக்கிற தூண்களான வேதங்கள், உபநிசத்துக்கள், இராமாயணம் மகாபாரதம் போன்ற இதிகாசங்கள், இன்னும் பல புராணங்கள் என்று எதை எடுத்துக் கொண்டாலும் சொல்கின்றது, இருக்கின்ற பதினெட்டு ஸ்ருதிகளில், பதினேழு ஸ்ருதிகள் ஒன்றைச் சொன்னாலும், பதினெட்டாவதாக இருக்கின்ற மனுஸ்மிருதி என்ன சொல்கின்றதோ அதைத்தான் நாம் எடுத்துக்கொள்ளவேண்டும் என்று தெளிவாக அவர்கள் சொல்கின்றார்கள். ஏனென்றால் இந்த மனுஸ்மிருதி என்பது முழுக்க முழுக்க பார்ப்பனர்களுக்கு சாதகமான ஒரு ஸ்மிருதியாக இருக்கின்றது. மற்ற ஸ்மிருதிகள் வேறு வேறு கருத்துக்களை சில இடங்களில் சொன்னாலும் கூட, இது எந்த இடத்திலும் பார்ப்பன மேலாண்மையை ஜாதிய மேலாண்மையை - ஆணாதிக்க மேலாண்மையை நியாயப்படுத்துகின்ற ஒரு போக்கை மிகத் தெளிவாக மனுஸ்மிருதிதான் காட்டுகின்றது.

அருமைத் தோழர்களே! உலகம் கடவுளுக்கு கட்டுப்பட்டது; அந்த கடவுள் மந்திரங்களுக்கு கட்டுப்பட்டவர்; மந்திரங்கள் பிராமணர்களுக்கு கட்டுப்பட்டவை. எனவே பிராமணன் தான் கடவுள். ஆக பிராமணனை கடவுளுக்கு ஒரு படி மேலானவனாக கருதி அவனை வழிபடவேண்டும் என்று இந்த சாஸ்திரம் சொல்லுகின்றது. பார்ப்பனன் தான் உலகத்தை படைத்தான் என்பதை மனுஸ்மிருதி மட்டுமல்ல கீதையும் சொல்கிறது, நால்வகை வர்ணங்களையும் நானே படைத்தேன் என்று. இவனால் படைக்கப்பட்ட இந்த சமுதாய அமைப்பில், படைக்கும் போதே மனிதர்களை வர்ணரீதியாக ஜாதிரீதியாக கூறுபோட்டுவிட்டு, ஜாதிக்கொரு தொழில் என்று ஏற்படுத்திவிட்டு, பிறகு இன்னின்ன தொழில்களை செய்பவன் உயர்ந்தவன், இன்னின்ன தொழில்களை செய்பவன் தாழ்ந்தவன் என்று அடையாளப்படுத்திவிட்டு, அதனடிப்படையில் அவர்களை விலக்கிவைப்பது தீண்டக்கூடாத ஜாதியாக்குவது - ஊருக்கு வெளியே வைப்பது என்றெல்லாம் மனிதத் தன்மையற்ற செயல்பாடுகளை தொடர்ந்து செய்துகொண்டிருப்பதற்கு இந்த மனுசாஸ்திரம் உள்ளிட்ட சாஸ்திரங்கள்தான் இவர்களுக்கு ஆதரவாக இருக்கின்றன.



சிலர் சொல்வார்கள் மனுவின் காலம் தான் முடிந்து விட்டதே, இறையாண்மையுள்ள அரசியல் அமைப்புச் சட்டமல்லவா ஆண்டு கொண்டிருக்கிறது. சட்டத்தின் முன் நாம் அனைவரும் சமம் என்று தானே அந்த அரசியல் அமைப்புச் சட்டம் சொல்கிறது; ஏன் நீங்கள் மனுவையும், பார்ப்பனர்களையும் வம்படியாக இழுத்துக் கொண்டிருக்கிறீர்கள் என்று சிலர் கேட்கிறார்கள். அருமைத் தோழர்களே, நம்மையெல்லாம் வழிநடத்திச் செல்வதாக கூறப்படுகிற, அரசமைப்பு சட்டத்தை புரட்சியாளர் அம்பேட்கர் எழுதியிருந்தாலும் கூட, அந்த அரசமைப்புச் சட்டத்தில் "ஹிந்து பர்ஸனல் லா" என்று சொல்கிறார்களே, அது எதனடிப்படையில் அமைக்கப்பட்டிருக்கிறது என்றால், இந்த புராண, சாஸ்திர, இதிகாசங்களின் அடிப்படையில் தான் இந்த ஹிந்து பர்ஸனல் லா சட்டத்தில் ஏதேனும் சிக்கல்கள் வரும்போதெல்லாம் நீதியரசர்கள் புராண, சாஸ்திர, இதிகாசங்களைத் தான் மீண்டும் மீண்டும் மேற்கோள் காட்டுகிறார்கள். எனவே தான் தோழர்களே இந்து மதத்தின் பெருமகன்களாக பார்ப்பனர்களாலேயே தூக்கிப் பிடிக்கப்படும் விவேகானந்தர் போன்றவர்கள் சொன்னார்கள், பார்ப்பனர்களே, நீங்கள் இந்த சமுதாயத்தின் இரத்த ஓட்டத்தில் நஞ்சை கலந்து விட்டீர்கள்; அந்த நஞ்சை நீங்களே உறிஞ்சி எடுத்துவிடுங்கள் என்று - அவர்களை நோக்கி எச்சரிக்கை செய்திருக்கிறார்கள். அப்படி தொடர்ந்து தீங்கு விளைவித்துகொண்டிருப்பதற்கு ஆதாரமாக இருக்கின்ற, இவைகளை அழித் தொழிக்கும் வேலையே ஒரு ஆக்கப்பணி தான். எரிக்க வேண்டும். எரிக்கவேண்டுமென்றால் நம்முடைய மக்களின் மனதிலிருந்து - சமுதாயத்தின் பொதுபுத்தியிலிருந்து - நம்முடைய சிந்தனைகளிலிருந்து - பின்பற்றிக் கொண்டிருக்கிற பழக்க வழக்கங்களிலிருந்து அவைகளை முற்றிலுமாக துடைத்து எறியவேண்டும், அவைகள் மீண்டும் தோன்றாவண்ணம் நாம் செயல்பாடுகளை மேற்கொள்ள வேண்டும் என்பது தான் அதனுடைய கருத்தாக இருக்கின்றது. அதனால் தான் பார்ப்பன பாரதிகூட சொன்னான், ஜாதிக்கொரு நீதி பேசுகின்ற இந்த சாத்திரங்களை, சாத்திரம் என்று சொல்லாதீர் சதி என்றே சொல்லுங்கள் என்று. சமூகத்தின் சரி பாதியாக இருக்கின்ற பெண் மக்களை, இந்த மனுசாஸ்திரம் எத்தகைய கேவலமான பார்வையால் பார்த்திருக்கின்றது; பெண்களை அது விலங்கினும் கீழாய் மதித்திருக்கின்றது; பெண்களுக்கு எந்த விதமான உரிமையும் இல்லாத அற்ப ஜந்துக்களாய், ஒரு பெண் என்பவள் வாங்கவும், விற்கவும் அடமானம் வைக்கவும் தகுதியான ஒரு பொருள் என்றே காட்டியிருக்கிறது. அந்த அடிப்படையில்தான், இந்த ஜாதிய ஆணாதிக்க சமூகம் பெண்களை நடத்திக் கொண்டிருக்கிறது என்பதற்கு, அண்மையிலே நடந்த டெல்லி விவகாரத்திலிருந்து ஏராளமான உதாரணங்களை நாம் சொல்லமுடியும். அதேபோல தான் இந்த கெடுமதியாளர்கள் ஏற்படுத்திய ஜாதிய கட்டமைப்பை மிக மோசமாக பாதிக்கப்பட்டிருக்கின்ற நம்முடைய சூத்திரர்கள் நம்முடைய தலித் சகோதரர்கள் சமுதாயத்தில் இருபத்தி ஐந்து விழுக்காடு கொண்ட இவர்களை, எந்த விதமான உரிமையும் கிடையாது. எந்த விதமான சலுகையும் கிடையாது அவர்கள் மனிதர்களே அல்ல. மனித மேலாண்மை குணங்கள் அவர்களுக்குக் கிடையாது என்பதைப் போல மனிதர்களுக்குரிய அனைத்து உயர் நலன்களையும் மறுத்து அவர்களை மிகக் கேவலமாக நடத்தப்படுவதை ஜாதியின் பெயரால் நியாயப்படுத்திக் கொண்டிருக்கிற ஒரு போக்கு இது வரை தொடர்ந்து கொண்டிருக்கிறதே, அந்த போக்கு எங்கிருந்து வந்தது என்ற கேள்விக்கான பதிலை நீங்கள் தேடத் தொடங்கினால், நீங்கள் மனுவிடம் போய் நிற்பீர்கள். எனவே தான் இந்த மனுவை புதைப்பதன் மூலம் மனுஅநீதி சாஸ்திரம் சொல்லுகின்ற அந்த கருத்துக்களை வேரோடும் வேரடிமண்ணோடும் களைந்து எறிந்துவிட்டு அங்கே புதிய விதைகளைத் தூவவேண்டும். அந்த தூவப்படுகின்ற புதிய விதைகள் என்ன உள்ளடக்கத்தை கொண்டவைகளாக இருக்கவேண்டும் என்றால் அவைகள் மனித உரிமைகளை உள்ளடக்கமாக கொண்டிருக்கவேண்டும். சமத்துவத்தை உள்ளடக்கமாக கொண்டிருக்க வேண்டும். மனித நேயத்தை உள்ளடக்கமாக கொண்டிருக்க வேண்டும். மனிதத்தை உள்ளடக்கமாக கொண்டிருக்கவேண்டும். இப்படிப்பட்ட உள்ளடக்கங்களைக் கொண்ட ஒரு விதை எந்த தத்துவத்தில் இருக்கின்றது யார் மொழிந்திருக்கிறார்கள் என்று கேட்டால் நமக்கு தெரிந்த வரையில் தந்தை பெரியார் அவர்கள் தான் இத்தகைய உள்ளடக்கத்தை கொண்ட விதையினை இந்த மண்ணிலே தூவியிருக்கிறார்கள். எனவே தான் மனுவை புதைக்கிறோம், மனுவை ஒழிக்கிறோம், ஒழிக்கப்பட்ட அந்த இடத்தில் எந்த நல்லதை நாம் வைக்கிறோம் என்றால், மதம்சார்ந்த கலாச்சாரத்தை ஒழித்துவிட்டு, மனித உரிமை கலாச்சாரத்தை நாம் அந்த இடத்திலே வைக்கிறோம் என்றால், அந்த மனித உரிமை கலாச்சாரத்தை இந்த தமிழ் மண்ணிலே தூக்கிப் பிடித்தவர் யார் அதற்கு வலுவூட்டியவர் யார் அதற்கு தெம்பு கொடுத்தவர் யார் என்று பார்த்தால் நம் கண்ணுக்கு தெரிந்த வரையில் தமிழ் மண்ணிலே தந்தை பெரியாரும், வடக்கே அண்ணல் அம்பேட்கரும், அங்கே ஜோதிபா புலே வும்.

வேதங்களும் சாஸ்திரங்களும் மிகத் தெளிவாகவே சொல்லுகின்றது. ஒரு மனித வாழ்க்கையை நான்கு நிலைகளாக அவர்கள் பிரிக்கிறார்கள் பிரம்மச்சரிய கிரகஸ்த வானப்பிரஸ்த சன்னியாச என்று பிரிக்கிறது. மாணவ பருவம், குடும்பத்தை நடத்துகிற அந்த கிரகஸ்த பருவம், இந்த வாழ்க்கையின் நான்கு நிலைகளும், யாருக்கு மட்டும் என்பதை நீங்கள் யோசித்து பார்க்கவேண்டும். துவிஜாஸ் என்ற இரு பிறப்பாளர்கள் - இரு பிறப்பாளர்கள் என்றால், உபநயம் என்று கூறி ஒரு சடங்கை வைத்து பூணூலைப் போட்டுக் கொள்கிறார்கள் அல்லவா? அந்த உரிமை இரு பிறப்பாளர்களுக்கு மட்டுமே. வாழ்க்கையினுடைய இந்த நான்கு பருவங்களும் அவர்களுக்கு மட்டுமே பொருந்தும். துவிஜா என்ற நிலையே சூத்திரர்களுக்கு கிடையாது; அவர்கள் பூணூல் போட்டுக்கொள்ள முடியாது. எனவே அவர்களுக்கு மாணவப் பருவமோ, திருமண முறையோ, அல்லது வானப்பிரஸ்தமோ, சன்யாசமோ ஆக முடியாது. என்று எழுதி வைத்துக்கொண்டு அதனை நடைமுறை படுத்துகின்ற ஒரு தலைமையை உருவாக்கி, இந்த மண்ணில் பெரும்பான்மையாக இருக்கின்ற சூத்திரர்கள் எப்படியெல்லாம் துன்பப்பட்டிருப்பார்கள், எப்படியெல்லாம் உரிமை மறுக்கப்பட்டிருப்பார்கள் என்பதை, நீங்கள் யோசித்துப் பார்க்கவேண்டும். ஏன் சூத்திரர்களுக்கு கல்வியை மறுத்தாய் என்ற கேள்வியை கேட்கும் போது, அவர்கள் சொல்லுவார்கள் கல்வி என்பது

5ஆம் பக்கம்

# சாஸ்திரங்கள், ஸ்மிருதிகளை பாதுகாக்கிறது இந்து சட்டம்

4 ஆம் பக்கத் தொடர்ச்சி

அந்த காலத்தில் வேதம் உபநிசதம் போன்றவைகள் தான். அந்த வேதங்களும் உபநிசதங்களும், ஸ்ருதி, ஸ்மிருதி எல்லாமே சமஸ்கிருதங்கள். சமஸ்கிருதம் என்பது தேவபாசை, சமஸ்கிருதம் என்பது நீசர்கள் கேட்கக்கூடாது; அவர்கள் காதில் கேட்டால் அந்த மொழிக்கே தெய்வ குற்றமாகிவிடும். எனவே இந்த மொழியை அவர்கள் கற்கக்கூடாது, அவர்கள் காதிலே கேட்கக்கூடாது என்ற காரணத்தினாலேயேதான் சூத்திரர்களுக்கு கல்வியை முற்றிலுமாக அவர்கள் மறுத்தார்கள். சூத்திரர்களுக்கு மட்டுமல்ல இங்கே எடுத்துக் கூறியதைப் போல பெண்களுக்கும் கல்வி மறுக்கப்பட்டது என்றால் பெண்கள் பிறப்பாலேயே சூத்திரர்கள். அவர்கள் பாவயோனியில் பிறந்தவர்கள். ஆண்களெல்லாம் புன்னிய யோனியில் பிறக்கும் போது, பெண்கள் பாவ யோனியில் பிறந்தவர்கள். எனவே அவர்கள் சூத்திரர்களைவிட கேவலமானவர்கள் என்ற ஒரு நிலையை இந்த சாஸ்திரங்களும் புராணங்களும் எடுத்த காரணத்தினாலேயே இங்கு சூத்திரர்களின் நிலையும் பெண்களின் நிலையும் ஒன்றாகவே இருந்தது. ஆக கல்வி மறுக்கப்பட்ட மிகப்பெரும்பான்மையான ஒரு இனத்திற்கு அந்த கல்வியினால் வருகின்ற அனைத்து நன்மைகளுமே, அனைத்து உரிமைகளுமே மறுக்கப்பட்டன என்பது மிக எதார்த்தமானதாகும், படித்தால்தான் வேலைக்குப் போகலாம், வேலைக்குப் போனால் தான் அரசு பதவிகளை வகிக்கலாம், அரசுப் பதவிகளை வகித்தால் தான் அதிகாரம் கிடைக்கும். அதிகாரம் கிடைத்தால் தான் நம்பிக்கை வரும். நம்பிக்கை இருந்தால் தான் வாழ்க்கையை சரியான தடத்திலே நடத்திசெல்ல முடியும் என்று இவைகள் எல்லாம் மறுக்கப்பட்ட நிலையில் ஒரு எண்பது சதவீத மக்களை (பெண்களையும், சூத்திரர்களையும் இணைத்து) தங்களது அடிமைகளாக வைத்துக் கொண்டு, அதற்கொரு நியாயம் கற்பித்து ஒரு பெரும் குற்றத்தை இந்துமத புராணங்களும், இந்து மத இதிகாசங்களும் மற்றவைகளும் செய்திருக்கின்றன என்பதை நாம் உணர வேண்டும்.

இப்படிப்பட்ட ஒரு சூழ்நிலையில் தான், அது என்ன தேவ பாசை அது என்ன சாதாரண மக்களுக்கு தரக்கூடாது என்று இந்து மதத்தை எதிர்த்துத் தோன்றிய புத்தன், கேள்வி கேட்டான். நீ வேண்டுமானால் சமஸ்கிருதத்தை உன் தேவ பாசையாக வைத்துக்கொள், அதன் மூலம் நீ மக்களுக்கு கல்வியைக் கற்பிக்காவிட்டால் போ. ஆனால் நான் எனது மக்களுக்கு, எனது தாய் மொழியில், மக்கள் மொழியில் நான் கல்வியை கற்பிப்பேன் என்று புத்தன் கிளம்பிய காரணத்தினாலேயே தான், இந்த பார்ப்பனர்கள், புத்தனை தங்களுடைய எதிரியாக பாவித்து, புத்தமதத்தை இந்த மண்ணிலிருந்து அழித்துவிட, பெரும்முயற்சி மேற்கொண்டு, ஓரளவு அதில் வெற்றியும் பெற்றார்கள் ஆக அறிவு தங்களுக்கு மட்டுமே சொந்தமாக இருக்கவேண்டும் அறிவு ஒரு அடிமை ஜாதிக்கு சொந்தமாகிவிட்டால், அந்த அடிமை ஜாதி கேள்வி கேட்கத் தொடங்கும் - கேள்வி கேட்கத் தொடங்கினால் நாம் பதில் சொல்லுகின்ற நிலையில் இல்லை என்கின்ற ஏமாற்று புத்தியின் காரணமாக இப்படிப்பட்ட ஒரு பெரிய தீங்கை நம்முடைய சமுதாயத்தின்மீது அவர்கள் ஏவிவிட்டிருக்கிறார்கள். எனவே அடிப்படைக் கல்வியை மறுப்பதன் மூலம் எப்படிப்பட்ட தீங்கை அவர்கள் செய்திருக்கிறார்கள் என்பதை நாம் புரிந்து கொண்டால் அந்த கல்வியின் தேவையை பற்றி மேடைதோறும் முழங்கிய பெரியாரினுடைய அந்த பயன் நமக்கு மிகத் தெளிவாகவே விளங்கும்.

இங்கு சுக்கு என்றும் மிளகு என்றும் வியாபாரம் செய்ய வந்த வெள்ளையன் இதைத் தெரிந்து கொண்டதால்தான் இந்த மக்களோடு ஒரு நெருங்கிய உறவு வைத்துக்கொள்ள வேண்டும் என்பதற்காக ஒரு அரைகுறை ஆங்கிலத்தில் ஒரு கல்வியை கொடுத்தான். அவனுடைய நோக்கமெல்லாம் லண்டனிலிருந்து வெள்ளையர்களை வரவழைத்து தங்களுடைய பணிகளுக்கு வைத்துக் கொண்டால் அவர்களுக்கு கொடுக்கவேண்டிய சம்பளம் மிக அதிகமாக இருக்குமென்ற காரணத்தினால் இங்கு இருப்பவர்களுக்கு கொஞ்சம் கல்வி கொடுத்தால் நமக்கு இலாபகரமாக இருக்குமே என்று நினைத் தான். 1938 இல் மெட்ரிகுலேசன் படித்தவர்களுக்கு 4800 பணியிடங்கள் காலியாக வுள்ளது. மெட்ரிகுலேசன் படித்தவர்கள் விண்ணப்பிக்கலாம் என்று அன்று ஆண்டு கொண்டிருந்த கவர்னர் ஜெனரல் ஒரு உத்தரவு பிறப்பித்து சூத்திரர்களையும் சேர்த்து வேலைக்கு எடுத்துக்கொள்ள முயன்ற போது அக்கிரகாரத்துப் பார்ப்பனர்கள் அதை மிகக் கடுமையாக எதிர்த்தார்கள். சூத்திரர்கள் வேலைக்கு வந்துவிட்டால் தங்களுக்கு ஆள்வோரிடம் உள்ள செல்வாக்கு போய்விடும்; தங்களுக்கு இருக்கிற அதிகாரம் போய்விடும்; இந்த நாட்டில் உள்ள சமுதாய கட்டமைப்பே மாற்றம் பெற்றுவிடும் என்று இந்த பார்ப்பனர்கள் மிகக் கடுமையாக எதிர்த்த காரணத்தினாலேயே அன்று போட்ட அந்த உத்தரவு இரத்து செய்யப்பட்டது. இந்த வரலாறு இ.எம்.எஸ் நம்பூதிரிபாட் அவர்கள் எழுதிய நூலிலே பதிவாகியிருக்கிறது. ஆக படித்துவர்கள் சூத்திரர்கள் வேலைக்கு வரலாம் என்ற ஒரு நிலை ஏற்பட்ட அன்று அந்த 4800 பேரும் வேலைக்கு வந்திருந்தால் இந்தியாவினுடைய சரித்திரமே பெருமளவிற்கு மாறியிருக்கும் என்று நான் சொல்லுவேன். அப்படி நாடி நரம்புகளிலெல்லாம் இந்த பார்ப்பனியத் தீயைப் பாய்ச்சிக் கொண்டிருக்கின்ற இந்த ஜாதி அமைப்பு சட்டங்களும் நீதிகளும் மண்ணோடு மண்ணாக புதைய வேண்டுமென்றால் நாம் செய்ய வேண்டிய இரண்டு காரியங்கள் இருக்கின்றன.

பார்ப்பனர்களின் கருத்தாக்கங்களை தனதாக்கிக் கொண்ட சூத்திரர்கள் தாங்கள் உயர்ந்தவர்கள் என்றும் தலித் மக்கள் மிக தாழ்ந்தவர்கள் என்றும் சூத்திரர்களிலேயே தங்களுக்குள் ஒரு பிரிவினரை இழிவுபடுத்துகிற நிலையை ஏவிவிட்டிருக்கிறார்கள் . இவர்கள் தங்களுடைய நிலையை எண்ணிப் பார்க்கவேண்டும். தாங்கள் யார், இந்துமதக் கலாச்சாரத்தில் எத்தகைய பங்கு கொடுக்கப்பட்டிருக்கின்றது என்பதை அவர்கள் புரிந்துகொள்ள வேண்டும். அதனால்தான் தந்தை பெரியார் அவர்கள் மிகத் தெளிவாக சொன்னார் - அவர்களின் பஞ்சமர் பட்டம் போகாமல் உன்னுடைய சூத்திரன் பட்டம் போகாது; அவனுக்காவது ஐந்தாமிடம் என்ற ஒரு தெளிவான இடம் இருக்கிறது. ஆனால் நீ யார்? பார்ப்பனர்களின் வைப்பாட்டி மகன் என்று கூறுகிறான். அதில் மிகப் பெருமை அடைகிறாயா என்று நெற்றியில் அறைந்ததைப்போல் கேட்டார். தஞ்சை வெண்மணியிலே என்ன கொடுமை நடந்தது என்று உங்களுக்கு தெரியும். ஒரு அரைப் படி நெல் அதிகமாக கேட்ட காரணத்தினாலேயே துள்ள - துடிக்க பெண்களும் குழந்தைகளும் சேர்த்து எரிக்கப்பட்டார்களே -அந்த வழக்கு உச்சநீதி மன்றத்திற்குச் சென்றது; இவ்வளவு பேர் எரித்து கொள்ளப்பட்டதற்கு காரணமான கோபால கிருஷ்ண நாயுடு குற்றம் நிரூபிக்கப்படவில்லை என்ற காரணத்தால் விடுவிக்கப்பட்டார். அதற்கு அந்த நீதிபதி என்ன விளக்கம் கொடுத்தார் என்று உங்களுக்குத் தெரியுமா? கோபாலகிருஷ்ண நாயுடு பணக்காரர், அவருக்கு இரண்டு கார் இருக்கிறது, அவரே நடந்து போய் குடிசைக்கு தீ வைத்தார் என்பதை எங்களால் நம்பமுடியவில்லை, என்று சொல்லி விடுவித்தார்கள். ஆக நம்முடைய நீதிபதிகள் மனதில்கூட எப்படி இந்த மனுநீதி சொல்லுகின்ற நியதிகள் சென்றிருக்கின்றன என்பதைப் புரிந்துகொள்ள வேண்டும்.

அண்மையிலே ஒரு உச்சநீதிமன்ற நீதிபதி பேசியிருக்கிறார் பெண்கள் இருக்கவேண்டிய இடம் வீடு, அவர்கள் தங்களுடைய வீட்டு வேலைகளையெல்லாம் முடித்துகொண்டுதான் பிறகு வேலைகளுக்கு செல்லவேண்டுமே தவிர, வீட்டைப் புறக்கணித்துவிட்டு வெளி வேலைகளுக்கு செல்ல கூடாது என்று தன்னுடைய திருவாய் மலர்ந்திருக்கிறார் என்றால் பெண்கள் இருக்கவேண்டிய இடம் வீட்டிலே இருக்கவேண்டும், வெளியில் வரக்கூடாது என்று சாஸ்திரங்களும், ஸ்மிருதிகளும் சொல்லுகின்ற கருத்துக்களிலிருந்து இவர்களுடைய கருத்துக்கள் எந்த வகையிலே மாறுபட்டிருக்கின்றது என்று நான் கேட்கிறேன். எனவே தான் இந்த காலகட்டத்திலும் நாம் மனுவை பற்றி பேசவேண்டியிருக்கிறது சாஸ்திரங்களை பற்றி பேசவேண்டியிருக்கிறது புராண இதிகாச புளுகுமூட்டைகள் பற்றி பேச வேண்டியிருக்கிறது. ஏனென்றால் இவைகளெல்லாம் நம் சமுதாயத்தின் நாடி நரம்புகளில் நஞ்சைக் கலந்திருக்கின்றன. அந்த நஞ்சை எப்படி வெளியே எடுப்பது என்பதற்கான ஒரு தேவை தான் பெரியாரியம் என்று நாம் சொல்லுகிறோம். இந்த பெரியாரியம் என்ற மருந்து உள்ளே செல்ல செல்ல நஞ்சு வெளியேறிவிடும். நாடி நரம்புகளில் சுத்த இரத்தம் ஓடத் தொடங்கும். அந்த சுத்த இரத்தம் தான் மனிதனை மனிதனாக உணரச் செய்யும். மனிதனை ஜாதியாளனாகவோ, உத்தியோகஸ்தனாகவோ, பணக்காரனாகவோ, படித்தவனாகவோ உணர்வது என்பது இரண்டாவது இடம். மனிதனை மனிதனாக - ஆறறிவுக்கு சொந்தக்காரனாக - அனைத்து உரிமைக்கும் சொந்தக்காரனாக - சமத்துவ வாழ்க்கை நடத்துவதற்கு உரிமை உள்ளவனாக உணரச்செய்ய வேண்டும் சக மனிதனைப் பற்றி புரிந்துகொள்ளாத ஒரு மனிதன் வாழ்ந்தால் என்ன - வீழ்ந்தால் என்ன?. சக மனிதனை புரிந்துகொள்ளாததற்கு என்னென்ன செய்ய வேண்டுமோ அத்தனையையும் இந்த சாஸ்திரங்களும் மனுதர்மங்களும் செய்திருக்கின்றன. எனவே தான் மனிதனை மனிதனாக நடத்துவதற்கு என்னென்ன செய்ய வேண்டுமென்றால் முதலில் இவைகள் செலுத்தியிருக்கின்ற இந்த நஞ்சை விசத்தை, இந்த சமுதாயத்தின் பொது புத்தியில் இருந்து ஒரு தனி மனிதனுடைய பொது புத்தியில் இருந்து வெளியேற்றுங்கள். அப்படி வெளியேற்றுவதற்கு பெரியாரியல் என்ற விசமுறிவு பயன்படும். எனவே இந்த விசமுறிவை பயன்படுத்தி நஞ்சை நீக்குங்கள் என்று குரல் கொடுத்து பெரியாரியலாளர்கள் செயல்பட்டு கொண்டிருக்கிறார்கள். எனவே நம்முடைய அடிமை நிலைக்கும், நம்முடைய இழிந்த நிலைக்கும் காரணமாக அவன் மொழியைக் கையாண்டான், மூடநம்பிக்கையைக் கையாண்டான், பக்தியைக் கையாண்டான், கடவுள் என்ற ஒன்றை கற்பித்தான். மனித உரிமைகளை ஒரு சாராருக்கு அடியோடு மறுத்தான். இவைகளை கணக்கிலெடுத்துக் கொண்டு, அவன் எதையெதை மறுத்தானோ அதையெல்லாம் பெறுவோம்; அவன் எதையெதை கற்பித்தானோ அந்த கற்பிதத்தை மறப்போம் - மறக்க முயலுவோம். பெரியாரியத்தை முழுமையாக ஏற்றுக்கொள்வோம், அப்பொழுதான் உலகத்திலுள்ள மற்ற நாட்டிலுள்ள சுதந்திரமடைந்த மக்களைப் போல் நாமும் மானமும் அறிவும் உள்ள ஒரு சமுதாயமாக மலரமுடியும். அப்படி மலருவதற்கு நம்மால் முடிந்த அனைத்து வழிகளிலும் நம்மை ஈடுபடுத்திக் கொள்வோம் அதுதான் நம் ஒவ்வொருவருடைய கடமையாக இருக்க முடியும்.

## ‘புரட்சிப் பெரியார் முழக்க’த்துக்குப் பாராட்டு!

ஈரோடு மாநாட்டு மாட்சியை பறைசாற்றும் இந்த வார ‘புரட்சிப் பெரியார் முழக்கம்’ பொலிவுடன் திகழ்ந்தது கண்டு அளவு கடந்த மகிழ்ச்சிக் கொண்டேன். விடுதலை இராஜேந்திரன் தொகுப்பும், மன்னை காளிதாசின் கட்டுரையும் மாநாட்டில் கலந்து கொண்ட உணர்வினை எங்களுக்கு ஏற்படுத்தியது. அறிவார்ந்த தலைப்புக்கள் செறிவான கொள்கை விளக்க நிகழ்ச்சிகள், நேர்த்தியான வடிவமைப்பு என மாநாடு சொக்கத் தங்கத்தில் சுடர்விடும் மோகினூர் வைரமாக ஒளி வீசியதை எங்களால் உணர முடிந்தது. அனைத்து நிகழ்ச்சிகளையும் டி.வி.டி., சி.டி.யில் வெளியிடுமாறும் அன்புடன் வேண்டுகிறேன். வரலாற்றுப் பதிவாய் தமிழர்தம் இல்லந்தோறும் பாதுகாக்கப்படவும், பயன்படுத்தவும் அது துணை நிற்கும். மாநாடு சிறக்க துணை நின்றோர் அனைவருக்கும் எனது வணக்கம். நன்றி, பாராட்டு!

**ஆ. வந்தியத்தேவன், ம.தி.மு.க. வெளியீட்டுச் செயலாளர், கடலூர்.**

தொடர்ந்து ‘புரட்சிப் பெரியார் முழக்கம்’ வார ஏட்டைப் படிக்கிறேன். சில கருத்துகளை படியெடுத்து பலருக்கு கொடுத்து வருகிறேன் பெரியார் பிறந்த மண்ணில் நடந்த மாநாடு பிரமாதமான கருஞ்சட்டை படைஅணிவகுப்பு உள்பட அனைத்து நிகழ்வுகளையும் படத்துடன் பார்த்து உளம் மகிழ்ந்தேன். மாநாட்டுக்கு வரவில்லையே என்ற ஆதங்கம் அடிமனதில் எழுந்தது. உடல்நலமில்லையே! அறிவார்ந்த விவரங்கள் இளைய தலைமுறைக்கு அவசியமான அய்யாவின் கருத்துகளை ‘புரட்சிப் பெரியார் முழக்கம்’ கொண்டு செல்கிறது. தொடரட்டும், பணி தொய்வின்றி! தங்களது ஏட்டிற்கு என்றும் எனது ஆதரவுண்டு.

**என்.தமிழன்பன், நகர தி.மு.க. இலக்கிய அணித் தலைவர்,**
**பாரதிதாசன் பைந்தமிழ் மன்றத் தலைவர், பொள்ளாச்சி.**

DATE OF PUBLICATION 09.01.2013 TAMIL WEEKLY REG.NO.TN/CCN/488/12-14 LICENCED TO POST WPP NO.TN/CCN/9/12-14
PURATCHI PERIYAR MUZHAKKAM REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TN/TAM/2002/7776

# பார்வையாளர்களை ஈர்த்த அறிவியல் கண்காட்சி

திராவிடர் விடுதலைக் கழக மாநாட்டில் தமிழ்நாடு அறிவியல் மன்ற நிகழ்ச்சிகள், கண்காட்சியாக அமைக்கப்பட்டிருந்தது.

கண்காட்சிக்கு தமிழ்நாடு அறிவியல் மன்ற அமைப்பாளர் சிவகாமி மற்றும் தமிழ்நாடு மாணவ கழக அமைப்பாளர் சிலம்பரசன் ஆகியோர் பொறுப் பாளர்களாக நியமிக்கப்பட்டிருந்தனர். கண்காட்சி அறிவியல் கண்டுபிடிப்பு களை வெளியிட்டதற்காக மதவாதிகளால் கொடும் தண்டனைக்குள்ளான புரூனோ, கெப்ளர், கலிலியோ போன்ற அறிவியல் அறிஞர்களின் படங்களும், அவர்களின் கண்டுபிடிப்புப் பற்றியும் விளக்கப் படங்கள் வைக்கப்பட்டிருந்தன.

கோள்கள் பற்றிய அறிவியல் உண்மையும் கோள்களைப் பற்றி சோதிடம் சொல்லும் மூடத்தனமும் எளிதில் புரியுமாறு காட்சிப்படுத்தப்பட்டிருந்தது. பெண் குழந்தை பிறப்பதற்கு பெண்தான் காரணமா? சந்திரகிரகணம் என்பது ராகு, கேதுவால் நிகழ்கிறதா என்பன போன்ற கேள்விகளுக்கு விடை அளிக்கும் விதமாக கருத்துப்படங்கள் இடம் பெற்றிருந்தன.

மனிதனின் பரிணாம வளர்ச்சி, பூமி உருவான விதம் போன்றவற்றின் மாதிரிகள் சிறப்பாக அமைந்திருந்தன. அறிவியல் மனப்பான்மையை வளர்க்கும் நோக்கில் பல்வேறு செயல் விளக்கங்கள் அளிக்கப்பட்டன. வெறும் கையில் விபூதி வரவழைத்தல், நீரில் விளக்கு எரிதல், உள்ளங்கையில் ஓட்டை தெரிதல், ஒற்றை விரலால் மனிதனைத் தூக்குதல் போன்ற செயல்கள் அனைவரின் வரவேற்பையும் பெற்றன.

நிகழ்ச்சிகளைக் கண்ட பெண்களும் குழந்தைகளும் பல்வேறு கேள்விகளைக் கேட்டுத் தெளிவுப் பெற்றனர். ஆணிப் படுக்கையில் படுத்தல், ஆணிச் செருப் புடன் நடத்தல் போன்றவற்றின் அறிவியல் உண்மை விளக்கப்பட்டு செய்து காட்டப்பட்டது. அறிவியல் செயல்பாடுகளை ஆசிரியர் ரஞ்சிதா, வீரன், தன கோபால், மாணவர் கழகத் தோழர்கள் சிலம்பரசன், பிரதாப்குமார், சதீஷ்குமார், சுரேஷ்குமார், நந்தகுமார், செ. காளிமுத்து, ச. காளிமுத்து, தமிழ்ச்செல்வன், கதிர்முகிலன், பிரபு, தென்றல், பவித்ரா, அபிசேக் மற்றும் தோழர்கள் அன்பு



தனசேகர், மணிகண்டன் ஆகியோர் சிறப்புற செய்து காட்டினர். ஓவியங்கள் வரைந்தது, மாதிரிகள் செய்தது முதலியவற்றை ஆசிரியர் லோகநாதன் பவானி வினோத் ஆகியோர் முன்னின்று செய்தனர். கண் காட்சியைப் பார்வையிட் டோர் இதுபோன்ற கண்காட்சிகள் பள்ளிகளுக்கும், கிராமப்புறங்களுக்கும் கொண்டு செல்லப்பட வேண்டியது அவசியமென கருத்துக் கூறினர். கண் காட்சியில் நிகழ்ச்சிகளைப் பார்த்த சில குழந்தைகள் அவர்களே தொடர்ந்து செய்து காட்டியதும், விளக்கமளித்ததும் நிகழ்வின் வெற்றியாக அமைந்தது.

**– நமது செய்தியாளர்**

## மாநாட்டி பெரியார் வரலா றுப் புகைப்படக் கண்காட்ணு



பாட்டாளி படிப்பகத்தின் சார்பில் அமைக்கப்பட்டிருந்த பெரியார் வரலாற்றுப் புகைப்படக் கண்காட்சியை ஏராளமான இளைஞர்கள் பார்த்தனர்

## நானும் எழுந்தாக வேண்டும், தோழா!

### — சுபத்ரா —

மென்மை என கணக்கு பண்ணிய
பெண்மைக்குள் இத்தனை புயலா?
எனப் பதறி விடாதே!

இப்பவும்கூட
உந்தன்துணை இல்லாமல்
எமது விடுதலைப் புயலைக்
கடப்பதாய்
உத்தேசமில்லை!

பழைய அழுக்குகள் – அது
உன் மூளையிலும் என் மூளையிலும்
ஏராளம்!

துடைத்தெறிந்துவிட்டு
புறப்படுவோம் வா!
நாம் நமக்குள் சண்டையிட்டுக்
கொள்ள வேண்டியவர்கள் அல்ல –
நமது இணைந்த கரங்கள் கொண்டு
இவ்வுலகத்தின் போக்கை சரிபார்க்க
வேண்டியுள்ளது!

அதற்கு முன்
என் கரங்களின் மீது
உன் கால்கள் இருந்தால் – கொஞ்சம்
நகர்த்திக் கொள்ளேன்!

ஒரு கை கொடு!

அழும் குழந்தை என்னுடையது
மட்டுமல்ல
நம்முடையதும்தான்!
அடுப்புச்சோறு – அதுவும்கூட
நமக்காகத்தான்!

செய்தித்தாள் – அது சென்றடைய
வேண்டியது
என்னையும்தான்!
அலுவலக வேலை உனக்கு மட்டுமா?
எனக்கும்தான!
களைப்பும் சோர்வும்
கணவனுக்குத்தானா?
மனைவிக்கும்தான்!

ஒரு கை கொடு!

நான் எழுந்தாக வேண்டும்
உடலின் வலியை
உள்ளத்துச் சுமையை
வீட்டுப் பணியை மீறி
நானும் எழுந்தாக வேண்டும்!

ஒரு கை கொடு!

வாழ்க்கை என்னவோ
விடியலை – விடுதலையைப்
பிரசவிக்க முடியாமல் திணறுகிறது.
வசந்தப் பிறப்புகளை
நாம் உத்தரவாதம் செய்தாக
வேண்டும்!

வா! ஒரு கை கொடு!

**(‘எந்தன் தோழா’ கவிதைத் தொகுப்பிலிருந்து)**

“புரட்சிப் பெரியார் முழக்கம்”
**ஆண்டுக்கட்டணம் ரூ.150/-**
தொடர்புக்கு:
ஆசிரியர், 29, பத்திரிகையாளர் குடியிருப்பு, திருவள்ளுவர் நகர், திருவான்மியூர், சென்னை-41.
✆ 99416 13535


முதல் பக்கத் தொடர்ச்சி

தகப்பன் சொத்தில் ஆணுக்குப் போலவே பெண்ணுக்கும் சரி பங்கு உண்டு. அவர்கள் பதவியும் வகிக்கலாம். அவர்களின் பதவிக் குறைக்கக் காரணம் அவர்களைப் பக்குவப்படுத்தாததுதான். அவர் களுக்கு நல்ல அறிவை யும், நல்ல பழக்க வழக்கங்களையும் அளிக்க வேண்டும். அன்னாரிடமிருந்து மூட நம்பிக்கையை அகற்ற வேண்டும். உதாரணமாக, பகவான் குழந்தைகளைக் கொடுக்க முடியும்; நிறுத்த முடியும். பகவானுக்கும் - குழந்தைக்கும் சம்பந்தமே யில்லை. எனவே, திட்டப்படி பிள்ளைகளைப் பெற்று நல்வாழ்வு வாழ வேண்டும். அதிகப் பிள்ளைகளால் அதிகத் தொல்லைதான். இதைப் புரிந்து கொள்வது முக்கியமானது. (‘வாழ்க்கைத் துணை நலம் நூல்’ 1958)”

“அன்றியும் ஆண்கள், பெண்களின் விடுதலைக்குப் பாடுபடுவதால் பெண்களின் அடிமைத்தனம் வளருவதுடன், பெண்கள் என்றும் விடுதலை பெற முடியாத கட்டுப்பாடுகள் பலப்பட்டுக் கொண்டு வருகின்றன. பெண்களுக்கு மதிப்புக் கொடுப்பதாகவும், பெண்கள் விடுதலைக் காகப் பாடுபடுவதாகவும் ஆண்கள் காட்டிக் கொள்வதெல்லாம் பெண்களை ஏமாற்றுவதற்குச் செய்யும் சூழ்ச்சியே ஒழிய வேறல்ல. எங்காவது பூனைகளால் எலிக்கு விடுதலை உண் டாகுமா? எங்காவது நரிகளால் ஆடு கோழிகளுக்கு விடுதலை உண்டாகுமா? எங்காவது முதலாளிகளால் தொழிலாளிகளுக்கு விடுதலை உண்டாகுமா? எங்காவது வெள்ளைக்காரர்களால் இந்தியர்களுக்குச் செல்வம் பெருகுமா? எங்காவது பார்ப்பனர்களால் பார்ப்பனர் அல்லாதவர்களுக்குச் சமத்துவம் கிடைக்குமா? என்பதை யோசித்தால் இதன் உண்மை விளங்கும். அப்படி ஒருகால் ஏதாவது ஒரு சமயம் மேற்படி விஷயங்களில் விடுதலை உண்டாகி விட்டாலும்கூட, ஆண்களால் பெண்களுக்கு விடுதலை கிடைக்கவே கிடைக்காது என்பதை மாத்திரம் உறுதியாய் நம்பலாம்.” (‘குடிஅரசு’ 22.12.1929)

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted on: 10th January 2013

OWNER & PUBLISHER & EDITOR : K. RAJENDRAN, PUBLISHED AT 29, JOURNALISTS COLONY, THIRUVALLUVAR NAGAR, THIRUVANMIYUR, CHENNAI - 600 041.
PRINTED BY : S. THEESMAS, AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014.



புரட்சிப்
# பெரியார் முழக்கம்
திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு
www.dvkperiyar.com

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் திருவள்ளுவர் ஆண்டு 2044 சனவரி 17, 2013 புரட்சி 12 முழக்கம் 1 விலை: ரூ.3.00

## ஆர்.எஸ்.எஸ். பார்ப்பனர்களே, பதில் உண்டா?

# பாரத 'பகவான்கள்', 'ரிஷிகள்' நடத்திய பாலுறவு வன்முறைகள்!

புதுடெல்லியில் ஓடும் பேருந்தில் பெண் மீது நடத்தப்பட்ட கொடூர பாலுறவு வன்முறையைத் தொடர்ந்து நாடு முழுதும் பெண்கள் போர்க் கோலம் பூண்டுள்ளனர். ஆனால், ஆர்.எஸ்.எஸ். பார்ப்பன சக்திகள் பெண்கள் பற்றிய மனுதர்ம கருத்துகளையே எதிரொலித்துள்ளனர். இது பல்வேறு பெண்கள் அமைப்பைக் கொதிப்படையச் செய்துள்ளது.

ஆர்.எஸ்.எஸ். தலைவர் மோகன்பகவத் கிராமங்களை 'பாரதம்' என்றும், நகர்ப்புறங்களை 'இந்தியா' என்றும் பிரித்து, பாரதத்திலே 'பண்பாடு' காக்கப்படுவதால் பெண்கள் மீதான வன்முறைகள் நிலவுவதில்லை என்றும், 'இந்தியா' வில் (நகர்ப்புறங்களில்) மேற்கத்திய கலாச்சாரம் பரவியுள்ளதால் பெண்கள் மீதான பாலியல் வன்முறைகள் அதிகமாக நடக்கிறது என்றும் கூறினார்.

சாதி அமைப்பையும் பெண்ணடிமையையும் கட்டிக் காப்பாற்றி வரும் கிராமங்களை 'பாரதப் பண்பாட்டின்' சின்னமாக ஆர்.எஸ்.எஸ். தலைவர் கொண்டாடிக் கொண்டிருக்கும்போது "பாரதத்தின்" யோக்கியதை எப்படி இருக்கிறது என்பதற்கு ஆதாரபூர்வமான மறுப்புகள் உடன் வெளி வந்துள்ளன. டெல்லி தேசிய சட்டப் பல்கலைக் கழகத்தில் இணைப் பேராசிரியராக இருக்கும் மிர்னாள் சதீஷ் உடனடியாக களமிறங்கி செயல்பட்டார். கடந்த 25 ஆண்டுகளாக பாலியல் வன்முறை வழக்கில் உயர்நீதிமன்றங்கள், உச்சநீதி மன்றங்கள் வழங்கிய தீர்ப்புகளை "கிரிமினல் சட்ட தீர்ப்புகளின் இதழ்களிலிருந்து" தேடிப் பிடித்து நகரம், கிராமம் வாரியாக சம்பவம் நடந்த ஊர்களின் அடிப்படையில் பிரித்துப் பார்த்து தொகுத்தார்.

பகவத் கூற்று அப்பட்டமான பொய். உயர்நீதிமன்றத்தில் தண்டனை வழங்கப்பட்ட பாலியல் வன்முறை வழக்குகளில் 75 சதவீதமும் உச்சநீதிமன்றத்தில் தீர்ப்பு வழங்கப்பட்ட இதே வழக்குகளில் 80 சதவீதமும் கிராமங்களிலும் நடந்த பாலியல் வன்முறைகள்தான் என்பதை புள்ளி விவரங்களுடன் அம்பலப்படுத்தியுள்ளார்.

"கிராமங்களில் பெண்கள் மீதான பாலியல் வன்முறை - ஒடுக்கப்பட்ட சாதிப் பெண்கள் மீது - ஆதிக்கசாதி ஆண்களின் சாதிவெறியோடு நடத்தப்படுகிறது. பெண்கள் உடலை தங்கள் கட்டுப்பாட்டிற்குள் வைத்துக் கொள்ள வேண்டும் என்ற கொடூரம் சாதிப் பஞ்சாயத்துகள் வழியாக நிறைவேற்றப்பட்டு வருகின்றன" என்று பெண்கள் உரிமைக் குழுவைச் சார்ந்த கல்பனா விசுவநாத் கூறுகிறார். பெண்கள் நவீன உடை அணிவதே பாலுறவு வன்முறைக்குக் காரணம் என்றால் பழங்குடிப் பெண்களும், தலித் பெண்களும் காவல் நிலையத்துக்குள்ளே வன்முறைக்கு உள்ளாக்கப்படு வதற்கு நவீனத்துவ ஆடை அலங்காரம்தான் காரணமா என்றும் பெண்கள் அமைப்புகள் கேள்வி எழுப்புகின்றன.

ஆர்.எஸ்.எஸ். பார்ப்பனர்கள் புனிதமாகப் போற்றி பெருமைப்படும் "பாரதத்தின்" கடவுள்களும் ரிஷிகளும் பாலுறவு வன்முறையின் முன்னோடி களாகவே இருந்துள்ளனர் என்பதற்கு எத்தனையோ எடுத்துக்காட்டுகளை அடுக்க முடியும். ஒன்றிரண்டை மட்டும் எடுத்துக் காட்டுகிறோம்:

"பிரமன் திலோத்தமையைப் படைத்து, அவளழகைக் கண்டு மோகிக்க, அவள் பிரமன் செயல் கண்டு பயந்து பெண் மானுருக் கொண்டு ஓட, பிரமன் அவளைத் துரத்திக் கொண்டு போய்ப் புணர்ந்தான்."

"பாரிஷதன் என்பவனின் மனைவி வபுஷ்டமை என்பவள் மீது இந்திரன் காமங் கொள்ள, அவள் அவனுக்கு இணங்காமற் போக, இந்திரன் எப்படியாவது அவளைச் சேர்ந்தேயாகவேண்டும் என்று எண்ணிச் சமயம் பார்த்துக் கொண்டிருந்தான். அச் சமயம் பாரிஷதன் அஸ்வமேதம் நடத்தினான். யாக குதிரையுடன் யாக கர்த்தாவின் மனைவியைப் புணர வைப்பது அஸ்வ மேதத்தின் முக்கியச் சடங்கு. ஆகையால், தான் யாக குதிரையாக இருந்தால் பாரிஷதன் மனைவியாகிய வபுஷ்டமையிடத்து யாகப் புரோகிதர்களே சேர்த்து வைப்பார்கள். ஆகையால்தான் யாக குதிரையாக வேண்டுமென்று இந்திரன் உறுதி செய்து கொண்டான். அதன்படி அஸ்வமேதம் நடந்தபோது, இந்திரன் யாகக் குதிரையைக் கொன்று அதனுடலில் தான் புகுந்து கொண்டான். யாக முறைப்படி யாக கர்த்தாவாகிய பாரிஷதனின் மனைவியாகிய வபுஷ்டவையின் பெண் குறியில் யாக ஆண் குதிரையின் குறியை யாகப் புரோகிதர்கள் சேர்த்து வைத்த சமயத்தில் இந்திரன் தம் காம எண்ணத்தை நிறைவேற்றிக் கொண்டான்."

"பூமியைப் பாய் போலச் சுருட்டிக் கொண்டு கடலில் போய் ஒளித்த இரண்யாட்சனைப் பன்றி வேடத்தில் சென்று விஷ்ணு கொல்ல, இப்பன்றியைக் கண்டு பூதேவி மோகித்துக் கலவி செய்ய, இதன் பலனாக நரகாசுரன் பிறந்தான்."

"பிரமன் சரஸ்வதியைப் படைத்தான். அவளழகைக் கண்டு மோகித்து, அவள் பயந்தோடியும் விடாமல் அவளைப் புணர்ந்து தம் மனைவியாக்கிக் கொண்டான். தாம் படைத்த மகளையே இவ்வாறு மனைவி யாக்கிக் கொண்டதைப் பரிகசித்த முனிவர் களாகிய மரீச புத்திரர் 6 பேர்களையும் சினந்து அசுரர்கள் ஆகுமாறு சபித்தான். இதே போன்று இந்திரன் வேண்டுகோளின் மீது திலோத்தமையைப் படைத்து அவளையும் மோகித்துக் கூடினான்.

"பிரமன் இதே போன்று தாமரை மலரிலிருந்து பத்மை என்ற பெண்ணைப் படைத்து அவளைப் புணர முயல, அவள் எவ்வளவோ கெஞ்சியும் விடாமல் அவளைப் பலவந்தமாக கெடுக்க, அவள் அதனால் கருக்கொள்ள, தேவர்கள் இதையறிந்து நையாண்டி செய்ய, இதைச் சகிக்காத பிரமன் மீண்டும் அவளைப் புணர்ந்து அவள் கருவிலிருந்த தன் விந்துவைத் தன் ஆண் குறி மூலம் உறிஞ்சி இழுத்து விட்டான்."

"தாருகாவனத்து ரிஷி பத்தினிகள் அழகிகள் என்பதற்காகப் பரமசிவன் அவர்களை மயங்கிப் புணர்ந்தான்."

"துரோணரின் மனைவி கிருபியின் அழகினை அறிந்த பரமசிவன் அவள் மீது காமவெறி கொண்டு, அவளை நிர்வாண மாக்கி நிற்க வைத்துப் பார்த்து வீரியத்தை விட, அதன் பலனாக அஸ்வத்தாமன் பிறந்தான்."

"கவுதம முனிவர் மனைவி அகலிகை அழகி எனக் கேள்விப்பட்ட இந்திரன், இரவு நடுச் சாமத்தில் முனிவரை ஏய்த்து வெளியேறச் செய்து, அம் முனிவர்போல இந்திரன் வேடம் பூண்டு, அகலிகையைப் புணர்ந்தான். இதே போன்று அவரவரின் கணவர்களைப் போன்று நடித்து, இந்திரத் துய்மன் மனைவி யையும், தேவசன்மன் மனைவியையும், கவி முனிவர் மனைவியையும் பாரிஷதன் மனைவியையும் பாலுறவு வன்முறைக்கு உள்ளாக்கினான்."

"அக்னி பகவானின் மருமகளை எமதரும பகவான் கண்டு மோகித்து, அவள் கணவன் இல்லாத சமயத்தில் அவளைப் புணர்ந்தான்."

"அக்னி பகவான் சப்தரிஷிகளின் யாகத் திற்குச் சென்று அந்த ரிஷிகளின் மனைவிகள் மீது மையல் கொண்டான். சுதரிசனை என்பவளைப் பலாத்காரத்தினால் மணந் தான்."

"சலந்திரன் மனைவி விருந்தை மீது மகாவிஷ்ணு மோகங்கொண்டு, சலந்திரனைச் சூதால் கொன்று, அவனைப் போன்று வேடம் பூண்டு, விருந்தையை பாலுறவு வன்முறைக்கு உள்ளாக்கினான்."

"கவி முனிவர் மனைவி முகுந்தைக்கு ருக்மாங்கதன் மீது மோகம் வந்தது.அவனோ இவளைச் சேர மறுத்துவிட்டான். அவளுக்கு ருக்மாங்கதன் மீது மட்டற்ற மையல் ஏற்பட்டு அதே விகாரத்திலிருக்கையில், இதையறிந்த இந்திரன் ருக்மாங்கதன் போல வேடம் பூண்டு அவளைப் புணர்ந்து மகிழ்வித்தான்."

"காமவெறியால் விருந்தையின் கணவனை விஷ்ணு கொன்றான்."

"தக்க பருவடையாத - ருதுவாகாத - மச்சகந்தி என்னும் பெண்ணைப் பட்டப் பகலில் நடு ஆற்றில் படகில் பராசரமுனி காமமுற்றுக் கெடுத்து விட்டான்."

"இதே போன்று குந்தி பருவமடையாத சிறுமியாயிருக்கையில் சூரியன் காமுற்றுக் கெடுத்து விட்டான்."

இதுவே "பாரதக்" கடவுள்களின் யோக்கியதை!

## மருத்துவர் ராமதாசுக்கு தேசிய தாழ்த்தப்பட்டோர் ஆணையம் எச்சரிக்கை!

தலித் பிரிவினருக்கு எதிராக இடைநிலைச் சாதியினரையும் முன்னேறிய சாதியினரையும் பா.ம.க. நிறுவனர் ராமதாசு அணி திரட்டுவதை சகித்துக் கொள்ள முடியாது என்று ஷெட்யூல்டு சாதிகளுக்கான தேசிய ஆணையம் எச்சரித்துள்ளது.

21 ஆம் நூற்றாண்டில் இத்தகைய முயற்சிகள் நடப்பது அதிர்ச்சியைத் தருகிறது. இதை இனியும் சகிக்க முடியாது. இந்த சாதி அடிப்படையிலான அணி திரட்டலை தடைசெய்வதற்கான ஆதாரங்களை இதை எதிர்ப்போர் ஆணையத்தின் முன் சமர்ப்பித்தால் மத்திய, மாநில அரசுகளின் கவனத்துக்கு ஆணையம் கொண்டு செல்லும் என்று ஆணையத்தின் உறுப்பினர் லதா பிரிய குமார் தெரிவித்துள்ளார்.

# வழக்கறிஞர் பாண்டிமாதேவி உரை

## ஜாதியத்தையும் பெண்ணடிமையையும் உயர்த்திப் பிடிக்கும் ஊடகங்கள்

*ஊடகங்களில் ஊடுருவியுள்ள ஜாதியம் குறித்து வழக்கறிஞர் பாண்டிமாதேவி நிகழ்த்திய உரை.*

சமீபத்தில் வந்த திரைப்படங்களில் இருந்து சொல்லவேண்டுமானால் ‘காதல்’, ‘பருத்திவீரன்’ போன்ற படங்களைப் பார்க்கும் போது, ரொம்ப தாழ்ந்த ஒரு சமூகத்தில் இருந்து உயர்ந்த ஜாதிப் பெண்ணை திருமணம் செய்துகொள்ளக் கூடிய ‘காதல்’ போன்ற படங்களிலும் சரி, ‘பருத்திவீரன்’ போன்ற படங்களிலும் சரி, கண்டிப்பாக அவர்கள் சேர்ந்து வாழ மாட்டார்கள். பல துன்பத்துக்கு உள்ளாவார்கள். ‘முதல் மரியாதை’யில்கூட சிவாஜியின் மருமகன் ஒரு ‘ஒடுக்கப்பட்ட’ ஜாதிப் பெண்ணைத் திருமணம் செய்வதாக காண்பிப்பார்கள். அந்தப் பெண் கடைசியாக கொல்லப்படுவார், இப்படி கீழ் ஜாதியாக இருக்கக் கூடிய ஆண்கள், உயர் ஜாதிப் பெண்களை திருமணம் செய்துகொள்ளும்போதும், ஒரு ஜாதி மறுப்பு திருமணத்தை நடத்தும் போது, அவர்கள் மிக நன்றாக ஒரு வாழ்க்கையை வாழ்ந்தார்கள் என்ற சித்தரிப்பே நம்முடைய சினிமாவில் கண்டிப்பாக இருக்காது. அப்படியே அது சித்தரிக்கப்பட்டாலும் ‘பம்பாய்’, ‘அலைகள் ஓய்வதில்லை’ போன்ற படங்களில் அந்த ஆண் உயர்ந்த ஜாதியாக இருப்பான். ‘அலைகள் ஓய்வ தில்லை’ படத்தில் அந்த ஆண் ஒரு பார்ப்பன ராகவும், அந்த பெண் கிறித்துவ பெண்ணாகவும் இருக்கும். ‘பம்பாய்’ படத்தில் அந்த ஆண் ஹிந்து சமூகத்தை சார்ந்தவன், அந்தப் பெண் முஸ்லீம் சமூகத்தைச் சார்ந்த பெண். இப்படி பெண்களை கீழ்நிலையில் வைத்து சித்தரிப்பதுதான் தொடர்ந்து நடைபெற்று வருகிறது. இந்த காட்சி ஊடகங்கள் என்ன பெரிய தாக்கத்தை தமிழகத்தில் கொண்டு வந்திருக்கிறது. எப்படி மனுசாஸ்திரம் நாடி நரம்புகளில் சென்றுள்ளதோ அதைப் போல, இந்த ஊடகம் அனைவர் மீதும் ஒரு தாக்கத்தை ஏற் படுத்தி வந்திருக்கிறது. பெண்களைப் பொறுத்த வரை ஏழு மணி முதல் பத்து மணி வரை, தொலைக்காட்சியை விட்டு நகரவே மாட்டார்கள். அப்படி பெண்கள் மீதும் இந்த குடும்பங்களிலும் இது ஒரு ஆளுமையை செலுத்திக் கொண்டிருக் கிறது. ஆக இவ்வளவு பெரிய வலிமையான ஊடகத்தில் இந்த மனுதர்மத்தினுடைய விதிகள் தக்கவைக்கப்படுகிறது இதை நாம் தடுக்கா விட்டால், காலப்போக்கில் இது கண்டிப்பாக ஜாதிய கட்டுமானத்தை நிறுவக்கூடிய சமூக துரோகத்தில் நமக்கு தெரியாமலேயே நாமும் அதை செய்யக்கூடிய ஒரு ஆளாக இருப்போம். சினிமாவை பார்த்து தான் பல கலாச்சார சூழலே தமிழகத்தில் உருவாகிக் கொண்டிருக்கிறதோ என்ற அளவுக்கு, இணைய தளத்தில் பல கட்டுரைகள் வெளியிடப்பட்டிருக் கிறது. கதாநாயகிகள் எல்லாம் எப்படி காண்பிக்கப்படுகிறார்கள், ஒரு அரை கிறுக்கு போல அவர்களுக்கு அறிவே இல்லாததைப் போல - ஒரு கரப்பான் பூச்சிக்குக் கூட பயப்படுகிற வர்களாக அதுக்கு கூட ஒரு கதாநாயகன் தான் வந்து விரட்டணும் என்பதுபோல, பெண்கள் மனிதர்களே இல்லை என்ற ஒரு சித்தரிப்பைத் தான் தொடர்ந்து இங்கு செய்து வருகிறார்கள். அது மட்டுமல்ல பெண்களை ஒரு காட்சி பொருளாகக் காட்டும் விதத்தைப் பார்க்கிறோம். அரைகுறை உடைகளில் தான் அவர்கள் காட்டப்ப டுகிறார்கள். தையல்காரன் தைத்துகொண்டிருக்கும் போது பாதியில் ஓடிவந்த மாதிரி உடைகளே இல்லாமல் காட்டப்படுவார்கள். இந்த பக்கம் கதாநாயகனை பார்த்தால் வெயிலில் நடனமாடும் போது கூட, மூன்று கோட் - சூட் போட்டிருப்பார். பக்கத்தில் இருக்கும் கதாநாயகியை பார்த்தால் உடம்பில் இருக்கும் மொத்த சதையும் தெரியும்படி எங்கோ ஒரு இடத்தில் மட்டும் உடைகள் ஒட்டிக் கொண்டிருக்கும். விளம்பரத்தை எடுத்துக் கொண் டால்கூட, ஆண்களின் உள்ளாடைகளுக்கான விளம்பரத்தில் யார் இருப்பார்கள் என்றால், ஒரு பெண் அரைகுறை உடையில் வந்து போவார்.

அதேபோல் பெற்றோர்களால் திருமணம் நடத்துப்படுவதை போல ஒரு காட்சி இருந்தால் கண்டிப்பாக அங்கு ஒரு புரோகிதர் உட்கார்ந்து மந்திரம் ஓதிக் கொண்டிருப்பார்; இதை தொடர்ந்து நாம் பார்க்கிறோம். சினிமா வரலாறை எடுத்துப் பார்த்தால் பெரியார் இயக்கம் தோன்றியதற்கு பிறகு -1925 க்கு பிறகு பத்து ஆண்டுகளில் வந்த படங்களை பார்த்தால் நந்தன், சேவாசதுனம் போன்ற படங்களை எடுத்துக் கொண்டால், இந்த நந்தன் படத்தில் ஒரு பார்ப்பனர் நந்தன் என்ற ஒடுக்கப்பட்ட சமூகத்தைச் சார்ந்தவரின் காலில் விழுவதை போன்ற ஒரு காட்சி அமைக்கப்பட் டுள்ளது. அதனுடைய இயக்குநர் சுப்ரமணிய அய்யர் ஒரு பார்ப்பனர்தான். அதன்பிறகு 1938 இல் வெளிவந்த சேவாசதுனம் என்ற படத்தில் நடித்த எம்.எஸ் சுப்புலட்சுமி கணவர் ஒரு பார்ப்பனக் குடும்பத்தைச் சார்ந்தவர். அதில் எம்.எஸ்.சுப்பு லட்சுமியை பாலியல் தொழிலில் ஈடுபடுமாறு வற்புறுத்தும் பொழுது, அந்த படத்தில் நடேச அய்யர் என்ற ஒரு பார்ப்பன கதாபாத்திரம் இந்த மாதிரியான ஒரு சமூகத்தில் இருப்பது எனக்கு கேவலமாக இருக்கிறது என்று சொல்லி பூணூலை அறுத்தெறிவார். அப்பொழுது அந்த பூணூலை அறுக்கும் காட்சியில் அன்றைக்கு பார்ப்பனர்களும் மற்றவர்களும் இது பெரிய அவமானம் அப்படிச் செய்யக்கூடாது என்று எதிர்த்தார்களே தவிர, சுப்புலட்சுமியின் கதாபாத்திரம் இவ்வளவு கேவலமாக இருப்பது பற்றி யாருமே பேசவில்லை. ‘பராசக்தி’ படத்தில் ஒரு காட்சியில் ஒரு கோவிலுக்கு உள்ளேயே ஒரு பார்ப்பனர் ஒரு பெண்ணைப் பாலியல் வன்கொடுமை செய்யக் கூடிய காட்சிகள் எல்லாம் அன்று காட்டப்பட்டது.



சென்சாரில் விடவேமாட்டோம் என்று ஒரு பிரச்சனை ஆனது. இன்றைக்கு நமக்கு தெரியும் காஞ்சிபுரத்திலும் மற்ற இடங்களிலும் தேவநாதன் போன்றவர்கள் அன்றைக்கு பராசக்தியில் சொன்ன செய்தியை இன்றுவரை செயல்படுத்திக் கொண் டிருக்கிறார்கள். அன்றைக்கு பெரியாரிய தாக்கத்தால் பார்ப்பனிய எதிர்ப்பு என்பது அனேகமாக எல்லா படங்களிலும் இருந்திருக்கிறது. என்.எஸ். கிருஷ்ணன் ஒரு பார்ப்பன பபூன் மாதிரி வரு வாராம். பார்ப்பனர்கள் எவ்வளவு கேவலமாக இருக்கிறார்கள் என்பதை அவரே நடித்து காண்பிப்பாராம். பார்ப்பனர்கள் மேலானாவர்கள் - உயர்ந்தவர்கள் என்று இருந்த ஒரு காலகட்டத்தில் பெரியார் இயக்கத்தின் தாக்கத்தால் பின்னால் வந்த தி.மு.க போன்ற கட்சிகள் ஊடகங்களில் அதை சரியாக பயன்படுத்தியதால், பார்ப்பனர்கள் உயர்ந்தவர்கள் என்ற கருத்து கொஞ்சம் குறைந்தது. இப்பொழுது நாம் பார்க்கக் கூடிய படங்களை எடுத்துக் கொண்டால் . பாரதிராஜாவின் ‘வேதம் புதிது’ என்ற திரைப்படத்தை எல்லோரும் பெருமையாக பேசுவார்கள். அந்த படத்தில் பாலுத் தேவர் என்ற பாத்திரத்தில் சத்தியராஜ் நடித்திருப் பார். ஒரு சின்ன பார்ப்பனப் பையன் வருவான் பார்ப்பனர்கள் அறிவில் சிறந்தவர்கள் என்பதை உணர்த்தும்படியாக, அந்த குட்டிப் பையன் கேட்பான், பாலு என்பது உங்க பேரு தேவர் என்பது நீங்கள் வாங்கிய பட்டமா என்று கேட்ட வுடன் பளார், பளார் என்று கன்னத்தில் மூன்று அறை விழும். உடனே சத்தியராஜ் திருந்திக் கொள்வார். எல்லாவற்றிலும் நேர்மையாக இருக்கக் கூடிய ஒரு மனிதரின் அறிவுக் கண்ணை, ஒரு சின்ன பார்ப்பனப் பையன் திறந்து விடுவது போன்ற ஒரு காட்சியை யார் வைப்பது, பாரதிராஜா என்று சொல்லக்கூடிய ஒரு பிற்படுத்துப்பட்ட வகுப்பைச் சார்ந்தவர். அதற்கடுத்து கமலஹாசனை பற்றி சொல்லவேண்டும். பெரியாரை நான் ஏற்றுக் கொண்டவன் என்று துணிச்சலாக சொல்லக் கூடிய ஒரு பார்ப்பனர். எங்களது பிள்ளைகளுக்கு ஜாதி யின் பெயரை எழுதவில்லை என்று சொல்லுகின்ற கமலஹாசன் படத்தை தொடர்ந்து பார்த்தால், சொந்தப் படமான பஞ்சதந்திரமாகட்டும், மைக்கேல் மதன காமராஜன், உன்னால் முடியும் தம்பியில் ஆரம்பித்து எல்லா படங்களிலுமே சிறப்பு படம் - நூறாவது படம் எல்லாவற்றிலுமே, அதில் ஒரு பார்ப்பன கதாபாத்திரம் கண்டிப்பாக இருக்கும். அவரின் சொந்த படமான நள தமயந்தியிலும் ஒரு பார்ப்பன கதாபாத்திரம் தான். கடைசியாக தசாவதாரம் என்ற ஒரு படத்தைப் பார்த்தால் அதை பல கோடி செலவு செய்து அறிவியல் பூர்வமாக எடுக்கப்பட்டதாக எல்லோராலும் பெருமையாக பேசப்பட்டது. படம் முழுக்க அந்த படத்தின் நாயகி பெருமாளே, பெருமாளே, பெருமாளே என்பார். தசாவதாரம் என்பதற்கு பதிலாக பெருமாளே பெருமாளே என்றுகூட பெயர் வைத்திருக்கலாம்.

இப்படி ஒரு பிற்போக்கான மூடநம்பிக்கைகளை யும் மதம் சார்ந்த விசயங்களையும் தொடர்ந்து கமல ஹாசன் தன்னுடைய படங்களிலே தூக்கிபிடித்துக் கொண்டிருக்கிறார். தன்னைப் பெரியாரின் சீடன் என்று சொல்லிக்கொண்டு லாப நோக்கம் வரும் போது மட்டும் தன்னுடைய ஜாதியைப் பற்றியும் மற்றதைப் பற்றியும் பேசிக் கொண்டிருக்கிறார்கள். பார்ப்பனர்கள் தனக்குக் கீழான ஜாதியை ஒடுக்க நினைப்பதை போல், இடைநிலை ஜாதியை சார்ந்த வர்கள் தனக்கு கீழ் உள்ளவர்களை கட்டுக்குள் வைத்துக்கொள்ளவேண்டும் என்று விரும்புவதை போல, ஊடகங்களில் தூக்கிப் பிடிக்கப்படுகிறது. கவுண்டர் என்ற பெயரில் பல படங்கள் சின்னக் கவுண்டர், கவுண்டர் வீட்டுப்பொண்ணு என்று வந்தது. நாடார் சமூகங்களிலும் அதேபோன்ற பெயர்களோடு பல படங்கள் வந்தன, அதன்பிறகு தங்கர்பச்சான் வந்த பிறகு வன்னியர் சமூகத்தைச் சார்ந்த படங்கள். கமலஹாசன் தேவர்மகன் என்ற ஒரு படத்தை எடுத்தார். அதில் ஒரு பாடல் வரும் ‘போற்றிப் பாடடி பெண்ணே, தேவர் காலடி மண்ணே’, இப்படி ஒரு பாடல் அந்தப் படத்தில். மதுரையை சுற்றிய தென் மாவட்டங்களில் இந்த பாடலை பாடியே, தேவேந்திரகுல வேளாளருக்கும், தேவர்களுக்கும் நிறைய இடங்களில் சண்டைகள் வந்திருக்கிறது. கல்லூரியில் கூட தங்களோடு படிக்கிற மாணவர் களைக் கூட தேவர் பாடலை பாடச் சொல்லி வெறுப்பேற்றி, மாணவர்களுக்குள் அடித்துக் கொண்டார்கள். அதையே தான் இன்றைக்கு ‘காதல்’ படத்தில் ஒருவர் சொல்லி யிருப்பார். அந்த படத்தின் இயக்குநர் சக்திவேல் பாலாஜி கூட தேவர் தான். அதனால்தான் அந்த பெண்ணோட கதாபாத்திரத்தில் உயர் ஜாதியாக வும், படத்தின் நாயகன் பரத் தலித்தாகவும் காண்பிக்கப்படுவார். அவரை அடித்து மூளை பாதிக்கப்பட்டுவிடும். அப்பொழுது தியேட்டரில் இருந்தவர்களெல்லாம் கத்தினார்களாம். எங்க ஜாதி பொண்ணு மேல கைய வச்சா இது தாண்டா உனக்கு நடக்கும் என்று. நகரத்தில் இருப்பவர்கள் இது நல்ல படம் என்று சொன்னாலும் கூட, தலித் சமூகத்தைச் சார்ந்த ஆண்கள், தேவர் சமூகத்தைச் சார்ந்த பெண்ணைக் காதலித்தால் இப்படிதான் நடக்கும் என்ற ஒரு பார்வையும் இருக்கிறது. இப்படி ஜாதிய பின்னணி யில் படங்கள் எடுக்கும்போது சமூகநீதியைப்பற்றி ஒரு கவலையும் இல்லாமல், இந்த மக்களைப் பற்றி ஒரு புரிதலும் இல்லாமல் தங்களுடைய ஜாதிவெறியை தீர்ப்பதற்காக நம்மிடமே பணத்தை பெற்று படத்தை எடுத்துக் கொண்டிருக்கிறார்கள்.

சன் டி.வி ஒரு பெரிய ஊடகம்; அதற்கு எப்படி அவ்வளவு பணம் வந்தது என்றால் திராவிட இயக்கத்தில் சேர்ந்து உழைத்த ஒவ்வொரு தொண்டனின் இரத்தம்தான் அந்த பணம். அந்த பணத்தை வைத்துக்கொண்டு இன்று வரை அவர்கள் எத்தகைய படங்களை எடுக்கிறார்கள்? அதில் வரும் நெடுந்தொடர்களில் எல்லாம் பெண்ணே பெண்ணுக்கு எதிரியை போலவும் தொடர்ந்து சித்தரித்து வருகிறார்கள். ‘பூலான் தேவி’ என்ற படத்தில் ஒரு காட்சியில் அந்த அம்மா

4 ஆம் பக்கம்

### ஈரோடு மாநாட்டில் டார்வின்தாசன் பேச்சு

# பெண்ணுரிமை பேணிய பெரியார் இயக்கம்

*ஈரோடு மாநாட்டில் டிசம்பர் 23 ஆம் தேதி பெரியாரியம் எதிர்கொள்ளும் சவால்கள் என்ற தலைப்பில் நடந்த கருத்தரங்கில் பெண் விடுதலை குறித்து கருத்தரங்கில் டார்வின்தாசன் பெண்ணுரிமை குறித்து நிகழ்த்திய உரை.*

இப்போது மனுசாஸ்திர எரிப்புப் போராட்ட விளக்க மாநாடு நடத்துகிறோம்; மனு சாஸ்திர எரிப்பு என்று வருகிற போது மற்ற விசயங்களுக்காக நாம் எரிக்காவிட்டாலும் கூட, பெண்களை அது கொச்சைப்படுத்தியிருக்கிற காரணத்திற்காக கட்டாயமாக கொளுத்தியே ஆக வேண்டும். பெண்கள் பற்றி மனுசாஸ்திரம் சொல்லும் சில சுலோகங்களை இங்கே சொல்ல விரும்புகிறேன், படுக்கை, ஆசனம், அலங்காரம், காமம், பொய், துரோக சிந்தை, இவற்றினை மாதர் பொருட்டே, மனுவானவர் கற்பித்தார். அத்தியாயம் 9 சுலோகம் 17 இல் - கணவன் துர்ஆச்சாரனாக இருந்தாலும், அன்னிய ஸ்த்ரீ லோலனாய் இருந்தா லும், நற்குணம் இல்லாதவனாய் இருந்தாலும், பதி விரதையான ஸ்த்ரீ ஆனவள் அவனை தெய்வத்தைப் போல பூசிக்க வேண்டியது; அத்தியாயம் 9 ஸ்லோகம் 154. பெண்களையும் பிராமணாள் அல்லாதாரையும் கொல்லுதல் பாவமாகாது என்கிறது மனுசாஸ்திரம்.

பெண்ணடிமைத்தனத்தை இதைவிட கூடுதலாக சொல்ல என்ன இருக்கிறது? மனு சாஸ்திரம் என்பது தொடர்ச்சியாகவே, எல்லோருடைய கருத்துகளிலும் ஊடுறுவி, தொடர்ந்து வந்து கொண்டிருக்கிறது.. இந்திய வரலாற்றில் இரண்டே இரண்டு பேர் மட்டும் தான் பெண்களைப் பற்றி சிந்தித்திருக்கிறார்கள் என்று கருதுகிறேன்; முக்கியமாக ஜோதிராவ் புலே, அடுத்தவர் தந்தை பெரியார். ஜோதிராவ் புலேவை பற்றி நாம் சொல்லும் போது, முன்னர் பேசிய தலித் சுப்பையா அவர்கள் சொன்னதை போல, முதன் முதலில் பெண்கள் படிக்கவேண்டும் என்பதற்காக கல்வி கூடத்தை அமைத்தவர் ஜோதிராவ் புலே. தந்தை பெரியார் அவர்கள் பெண் படும் துயரங்களுக்குக் காரணமான - ஆணாதிக்க சமூகம் அடித்திருந்த ஒவ்வொரு ஆணியையும் பிடுங்கவேண்டும் என்பதில் உறுதியாக இருந்திருக்கிறார். அதில் குடும்பம், சொத்து, கல்வி உரிமை, சடங்கு, திருமணம் என எல்லா மட்டத்திலும் நடக்கிற கொடுமைகளுக்கு எதிராக தொடர்ந்து கலகம் செய்தார். மற்ற யாரும் இதைச் செய்யவில்லை.

பொதுவாக பெரியாருக்கு நிகராக இந்த பெண்ணுரிமை பிரச்சனைகளில், சிலர் பாரதியை முன்னிறுத்துகிறார்கள். பாரதி ஒரு இரண்டு மூன்று பாடல்களில் பெண்ணுரிமை கருத்துக்களை சொன்னாலும் கூட, பெண்ணடிமைத்தனத்துக்கு முக்கிய கூறாக இருக்கக்கூடிய மதத்தின் பக்கம் அவரது கண்டனம் போகவே இல்லை. மாதர் தம்மை இழிவு செய்யும் மடமையைக் கொளுத்து வோம் என்று பொத்தாம்பொதுவாக சொல்லி யிருக்கிறாரே தவிர, பெண்களை இழிவு செய்யும் மனுசாஸ்திரம் பற்றி ஒன்றுமே சொல்லவில்லை. ஆனால் பார்ப்பன ஊடகங்களும், பொதுவுடமை வாதிகளும்தான் பெரியாருக்கு இணையாக பாரதியை சிறந்த பெண்ணியவாதி என்பதைப் போல கொண்டுவந்துவிட்டார்கள். ஜீவா அவர்கள் இந்த தமிழ் சமூகத்தில் பாரதிக்கு அதிகபட்ச பெருமையை உருவாக்கியிருக்கிறார். பெண் ணடிமை ஒழிய வேண்டுமானால், பெண்கள் கருத்தடை செய்து கொள்ளவேண்டும் என்றார் பெரியார். இன்று அதே கருத்தை பரப்பும் பணியை அரசு செய்கிறது; ஆனால் அன்று அதை சொன்ன பெரியாரை சிறையில் அடைத்திருக்கிறார்கள். பெண்களே வெளிவராத பேசாத காலமாகிய 1930 களில் பலரை பெண்ணியவாதிகளாக உருவாக்கி யுள்ளார் பெரியார்.

இந்த இருபத்தியோராம் நூற்றாண்டைக் கடந்த பின்னரும் கூட, இன்றைக்கு பெண்ணியவாதிகள் என்பவர்கள் விரல்விட்டு எண்ணக் கூடிய அளவில்தான் உள்ளனர். ஆனால் அந்த காலத்தில் (1930 களில்) பலர் பெண்ணிய பேச்சாளர்களாகவும் செயல்பாட்டாளர்களாகவும் இருந்திருக்கிறார்கள். அன்னபூரனியம்மாள், ஆண்டாளம்மாள், கனகம்மை இராமசாமி, தோழர் ஞானவதி,



குஞ்சிதம் குருசாமி, கே.எ.ஜானகி, சிவகாமி சிதம்பரனார் இப்படி அந்த பட்டியல் நீண்டு கொண்டே போகிறது. பல பெண்ணுரிமை மாநாடுகளை நடத்தியுள்ளார்கள்; பெரியாருக்கு “பெரியார்” என்ற பட்டத்தை கொடுத்ததே பெண்கள் மாநாட்டில் தான். இன்று பெண்கள் அரசியலுக்கு வருவதற்கு பயப்படுகிறார்கள்; ஆனால் அந்த காலத்தில் சாமி சிதம்பரனாரின் மனைவி சிவகாமி அவர்களுக்கு பதினொரு வயதிலேயே திருமணம் நடந்திருக்கிறது; (எட்டு வயதிலேயே திருமணம் செய்யவேண்டும் என்று மனுசாஸ்திரம் சொல்கிறது) திருமணமாகிய மூன்று மாதத்தில் கணவர் இறந்துவிடுகிறார்; பின்னர் பதினெட்டு வயதில் மூவாலூர் இராமாமிர்தம் அம்மையார் தலைமையில் மறுமணம் செய்து வைக்கிறார்கள்; சுயமரியாதைத் திருமணம், கலப்பு மணம், விதவை மறுமணம் மூன்றும் இந்த திருமணத்தில் நடந்திருக்கிறது. இது போன்ற புரட்சிகரமான செயல்பாடுகளை சுயமரியாதை இயக்கம் தான் செய்திருக்கிறது. 1934 இல் பெரியாரின் தங்கை ‘ஏன் இந்த ஆட்சி ஒழிய வேண்டும்’ என்ற கட்டுரையை வெளியிட்டதற்காக சிறை சென்றிருக்கிறார்கள். சிறை சென்ற முதல் பெண் பத்திரிக்கையாளர் அவர் தான். ஈரோடு முனிசிபல் கவுன்சிலராகவும் 1932 இல் அவர் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்கள். ஈரோடு அர்பன் வங்கியின் முதல் பெண் இயக்குநராகவும் அவர் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார். இப்படி பெண்கள் வழியாகவே பெரியார் இயக்கம் பலவற்றை சாதித்திருக்கிறது. பெண்ணடிமை என்பதை உலக அளவில் பார்க்கும் போது, அது பைபிளிலும் சொல்லப்பட்டிருக்கிறது. ஒரு ஆணை படைத்து அவனின் விலா எலும்பிலிருந்து பெண்ணைப் படைத்ததாக பைபிள் சொல்கிறது; ஆணை படைக்கும் போதே பெண்ணையும் படைத்திருக்க லாமே. ஆக விலா எலும்பிலிருந்து உருவாக்கியதாக சொல்வதும் பெண்ணடிமைத்தனத்தை தான் உணர்த்துகிறது. முதல் பாவத்தை செய்தவள் பெண் தான் என்றும் பைபிள் குறிப்பிடுகிறது; இது மனுசாஸ்திரத்திற்கு ஒப்பானது. அங்கு அதிகமாக பேசிய பெண்களையும், அறிவுப்பூர்வமாக பேசிய பெண்களையும் சூனியக்காரி என்று சொல்லி எரித்து கொலை செய்திருக்கிறார்கள். முதல் பெண் கணித மேதை அய்போசியா என்ற கிரேக்க நாட்டை சார்ந்தவரை கண்டம் துண்டமாக வெட்டி கொலை செய்திருக்கிறார்கள். ஆக அனைத்து மதங்களுமே பெண்ணியத்திற்கு எதிராகத்தான் இருக்கின்றன. இப்போது சமீபத்தில் தஸ்லிமா நஸ்ரின் அவர்களைத் தொடர்ந்து மதவாதம் துரத்திக் கொண்டே இருக்கிறது. அதேபோல பாகிஸ்தானில் மலாலா என்ற சிறுமி, பெண் கல்வியை பரப்பியதற்காக தலிபான்கள் தலையில் சுட்டுள்ளனர். தலிபான்களால் சுடப்பட்ட மலாலா இப்போது லண்டனில் சிகிச்சை பெற்று வருகிறார். “இத்தனை இறை தூதர்கள் வந்திருக்கிறார்கள், ஒரு பெண் இறை தூதர் கூட வரவில்லையே ஏன்” என்று எஸ்.டி ரசூல் ஒரு கவிதையில் குறிப்பிட்டிருப்பார். ஆக இஸ்லாமிய, கிறித்துவ, இந்து என்று அனைத்து மதங்களுமே பெண்ணடிமைத்தனத்தில் முன்னிலை வகிக்கிறது. ஆரம்பகாலத்தில் தாய்வழிச் சமூகமாகத் தான் இருந்திருக்கிறது. பெண்களை நம்பித்தான் ஆண்கள் இருந்திருக்கிறார்கள். காலப்போக்கில் தான் பெண்ணடிமைத்தனம் உருவாகியிருக்கிறது. சமையல்செய்து, துணி துவைத்து, குழந்தைகளை பாதுகாத்து, வீட்டை பராமரித்து குடும்பத்தை வழி நடத்துவது என்பது தான் உலகிலேயே கடினமான வேலை (பதினொரு டிரில்லியன் டாலர் மதிப்பு); ஆனால் இப்படிபட்ட வேலைகளை செய்யும் பெண்களை வீட்டில் சும்மா இருக்கிறார்கள் என்று சொல்கிறார்கள். உண்மையான சுதந்திரம் பெண்களுக்கு ஏற்பட வேண்டுமானால், திருமண முறையில் இருவருக்கும் ஒரே மாதிரியான ஒழுக்கமும், கட்டுபாடும் விதிக்கப்பட வேண்டும்; இது சம்பந்தமாக அரசியல் சட்டத்தைத் திருத்த வேண்டும்; அடிமை உணர்வையும் பயத்தையும் பெண்கள் அறவே போக்கவேண்டும் என்று பெரியார் சொல்கிறார். கல்வி உரிமை, மண உரிமை, விவாகரத்து உரிமை, மாங்கல்ய உரிமை, கற்பு, பாலுறவு இது போன்ற அனைத்து விசயங்களிலும் சம உரிமைகளைப் பெண்களுக்குப் பெற்றுத் தருவது தான் வருங்காலத்தில் பெரியாரியம் எதிகொள்ளும் சவாலாக இருக்கும். ✦

## 90 வயதை நெருங்கும் விசாலாட்சி – தேசிய மகளிர் ஆணையத் தலைவராம்!

தமிழ்நாட்டில் தேசிய பெண்கள் ஆணையத்தின் தலைவராக 90 வயதை நெருங்கிக் கொண்டிருக்கும் விசாலாட்சி நெடுஞ்செழியன் நியமிக்கப்பட்டிருக்கிறார். பெண்கள் மீதான வன்முறைகள் தடுக்கப்படவேண்டும் என்ற குரல், நாடு முழுதும் வலிமையடைந்து வரும் சூழலில் தமிழ்நாட்டில் தேசிய பெண்கள் ஆணையம் செயல்படாத ஆணையமாக முடக்கப்படுகிறது.

கடந்த தி.மு.க. ஆட்சி, தேசிய மகளிர் ஆணையத்துக்கு கட்சிப் பிரமுகரான சற்குண பாண்டியனை நியமித்து தவறான முன்னுதாரணத்தை உருவாக்கியது. அதே வழியை ஜெயலலிதா ஆட்சியும் பின்பற்றி, கட்சிக்குள் ஆட்களைத் தேடியது. அவர்களுக்குக் கிடைத்தது - 90 வயது மூதாட்டிதான்!

## பெண்ணடிமை ஆண்களையும் பாதிக்கிறது!

*பெண்களின் அடிமைத்தன்மை பெண்களை மாத்திரம் பாதிப்பதில்லை. அது, மற்றொரு வகையில் ஆண்களையும் பெரிதும் பாதிக்கின்றது. இதைச் சாதாரண ஆண்கள் உணருவதில்லை. ஆனால், நாம் இந்த இடத்தில் அதைப் பற்றிச் சிறிதும் கவலை கொள்ளவில்லை. பெண்களைப் பற்றியே கவலை கொண்டு சொல்லுகின்றோம். தற்கால நிலைமையில் பெண்கள் விடுதலைக்குப் பெண்கள் வேறுவிதமான முயற்சி செய்தாலும், அது சிறிதாவது ஆண்களுக்குக் கஷ்டத்தைக் கொடுக்கக்கூடியதாக இருக்கலாம். ஆனால், இந்தக் காரியத்தில் – அதாவது பெண்கள் பிள்ளை பெறுவதில்லை என்கின்ற காரியத்தில் ஆண்களுக்கு எவ்விதக் கஷ்டமும் கிடையாது என்பதோடு ஆண்களுக்கு இலாபமும் உண்டு என்பதையும் தெரிவித்துக் கொள்கிறோம். பெண்மக்களை இன்று ஆண்கள் நடத்தும் மாதிரியானது, மேல்சாதிக்காரன் கீழ்சாதிக்காரனை நடத்துவதைவிட, பணக்காரன் ஏழையை நடத்துவதைவிட எசமான் அடிமையை நடத்துவதைவிட மோசமானதாகும்.*

DATE OF PUBLICATION 12.01.2013 TAMIL WEEKLY REG.NO.TN/CCN/488/12-14 LICENCED TO POST WPP NO.TN/CCN/9/12-14
PURATCHI PERIYAR MUZHAKKAM REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TN/TAM/2002/7776

# பெரியாரியம் எதிர்கொள்ளும் சவால்கள்: விஜி ஆற்றிய உரை

*ஈரோடு மாநாட்டில் டிசம்பர் 23 அன்று பெரியாரியம் எதிர்கொள்ளும் சவால்கள் கருத்தரங்கில் பங்கேற்றுப் பகுத்தறிவு எனும் தலைப்பில் தோழர் விஜி ஆற்றிய உரை:*



பகுத்தறிவு என்றாலே பெரியார் - பெரியார் இயக்கங்கள் தான். பகுத்தறிவு என்பதை மக்களிடம் எடுத்துசொல்வது - பெரியார் இயக்கங்களைத் தவிர, மற்ற அமைப்புகள் யாரும் பகுத்தறிவுக் கருத்துகளை கொண்டு செல்வதில்லை, ஓட்டுக்காக மட்டும் தான் செல்வார்கள். தமிழ் மக்கள் பகுத்தறிவோடு வாழ்வதற்கு, தடைக்கல்லாய் இருப்பது ஜாதிய அமைப்புகளும், மூடநம்பிக்கைகளும் தான். இதற்கு காரணம் மனு. மனுசாஸ்திர விதிகளின்படி நம் மக்களுக்கு கல்வி மறுக்கப் பட்டது. கல்வி மறுக்கப்பட்டதால் தான் நாம் மூடப் பழக்கங்களோடு வாழும்படியாகி விட்டது. வேதங்களைப் படித்தாலே நாக்கை வெட்டுவேன் என்றும், வேதங்கள் ஓதுவதை கேட்டாலே காதில் ஈயத்தை காய்ச்சி ஊற்றுவேன் என்றும், மனுசாஸ்திரத்திலே எழுதப்பட்டுள்ளது. இதன் மூலமாகத் தான் நமக்கு கல்வி மறுக்கப்பட்டு வந்தது. கல்வி மறுக்கப்பட்டதால் பார்ப்பனர்கள் அதிகாரத்தை கைப்பற்றி நம்மை அடிமைப்படுத்திவிட்டார்கள். இங்குள்ள மூட நம்பிக்கைகள் அனைத்துமே பெண்களை வைத்தே பரப்பப்படுகிறது, குழந்தை பிறந்ததிலிருந்து, அதை வளர்க்கும் பொறுப்பு பெண்களுடையதாக இருக்கின்றது; குழந்தைகள் பேசத் தொடங்கியவுடன் மதம், கடவுள் பற்றி அந்த தாய் தான் கற்றுக்கொடுக்கிறார். மூடபழக்கவழக்கங்களையும் சேர்த்து கற்றுக் கொடுத்து விடுவதால், அது அழிக்க முடியாமல் இன்றும் வேரூன்றிக்கிடக்கிறது. நமது சமூகத்தில் இந்த மூடபழக்கவழக்கங்கள் இருப்பதால், நம்முடைய வளர்சிக்குத் தடைக் கல்லாகவே நமக்கு எல்லா விசயங்களும் அமைந்து விடுகின்றது. மூடப்பழக்கங்களை எடுத்துக்கொண்டால் ஜாதகம் பார்த்து திருமணம் செய்துகொள்வது அட்சயதிருதை அன்று நகைக் கடைகளில் மக்கள் திரள்வதை நாம் பார்க்கிறோம். அது போல குடும்பத்தில் பெண்களுக்கு சிகப்பு சேலை, பச்சை சேலை, மஞ்சள் புடவை என்று எடுத்துக்கொடுத்தால் குடும்பம் செழிக்கும் என்று ஜவுளிக்கடைகாரர்களின் தந்திரத்தாலும் மக்கள் அந்த நாட்களில் குவிவதையும் நாம் பார்க்கிறோம். ஜோசியர்களை எடுத்துக் கொண்டால், உங்கள் குடும்பத்தில் நல்லது நடக்கவேண்டுமென்றால் அதைக் கொடு,இ தைக் கொடு என்று பொருளை பறித்துக்கொண்டு மறு நாள் ஜோசியர் ஓடிவிடுவார்.

திருவிழாக்களில் தீ மிதிப்பது, வாஸ்து பார்த்து வீடு கட்டுவது; வாஸ்து சரியில்லை என்று கட்டிய வீட்டை இடிப்பது, இது போன்ற அறியாமையில் மக்கள் சிக்குண்டு இருக்கிறார்கள். மனுசாஸ்திரம் கல்வி கற்கவிடாமல் தடுத்து தான் இது போன்ற அறியாமைகளுக்கு காரணம். இன்றைய சினிமாக்களும், விளம்பரங்களும், தொலைக்காட்சி தொடர்களுமே வீடு தேடி வந்து மூடபழக்கவழக்கங்களை பரப்புவதாக அமைந்துள்ளன. பெரியாரியலை ஏற்றுகொண்ட நமது தோழர்களாவது இந்த ஊடகங்கள் மூலமாக பகுத்தறிவை பரப்பும் பணியை மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். ஜெயேந்திரர் முதல் நித்யானந்தா வரை உள்ள சாமியார்களிடம் சென்றால் நிம்மதி கிடைக்கும் என்று கருதிப் போகிற பெண்கள் பாலியல் வன்கொடுமைக்கு ஆளாக்கப்படுகிறார்கள்.

அரசாங்கத்திடம் இல்லாத பணம் கூட இன்று சாமியார்களிடம் உள்ளது. இப்படிப்பட்ட சாமியார்களை நம்பி ஏமாற வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன். அரசியல் அதிகாரங்களை எடுத்துக்கொண்டால் ஒரு அரசியல்வாதி பதவி ஏற்றவுடன் செல்வது ஏதாவது ஒரு சாமியாரின் காலில் விழுவதற்காகத் தான் இருக்கும். இது அடிமட்ட தொண்டன் முதல் ஜனாதிபதிவரை இந்த செயல் தொடர்ந்துகொண்டுதான் இருக்கிறது. படித்தவர்களிடமும் இந்த மூடபழக்கங்கள் இருக்கின்றது. மதம், கடவுள் போன்ற விசயங்களில் மூடபழக்கங்கள் என்று இந்த நிலை மாறவேண்டுமானால் நாம் மூடப்பழக்கத்திலுள்ள கருதுக்களை ஒழிக்க வேண்டுமானால் பகுத்தறிவு கருத்துக்களை நாம் எடுத்துக்கொண்டு, மக்களிடம் சென்று இந்த நிலையை மாற்ற வேண்டும்.

---

*2 ஆம் பக்கத் தொடர்ச்சி*

ஒரு ஐந்து பேரால் பாலியல் வன்முறைக்கு உள்ளாக்கப்பட்டு நிர்வாணமாக நடந்து போவார்கள் அப்படியே அந்த காட்சியில் வரும். இதை பார்த்து புரட்சி பேசுகிற அருந்ததிராய் போன்றவர்களெல்லாம்கூட அந்த காட்சியை வைத்திருக்கக் கூடாது என்று அந்த கதை ஆசிரியரிடம் சொன்னார்களாம். அதற்கு அவர் சொன்னாராம் ஜாதியம் என்பதை நீங்கள் பெண்ணடிமை தனத்திலிருந்து பிரித்து பார்க்கவே முடியாது. ஒவ்வொரு ஜாதியில் இருப்பவனும் தனக்கு கீழான ஜாதியை சார்ந்தவனை கேவலப்படுத்தினால் - அந்த கீழான ஜாதிக்குள் இருக்கும் ஆண் - அவன் மனைவியை, தங்கையை கேவலப்படுத்திக்கொண்டுதான் இருக்கிறான். எனவே எப்பொழுது நான் ஜாதியைப்பற்றி படம் எடுத்தாலும் அதில் பெண்ணடிமைத்தனம் பற்றியும் எடுப்பேன். அடுத்து மாயாவதி பற்றியும் படம் எடுக்கபோகிறேன் என்று சொன்னாராம். ஆக ஜாதிய கேவலத்தை- மனுதர்மத்தை தூக்கிப்பிடிக்கிற இந்த சூழலில் நமக்கு நம்பிக்கை தரக்கூடிய இரண்டு விசயம் என்னவென்று சொன்னால் ஒன்று இந்த ஒடுக்கப்பட்ட சமூகம் என்றைக்கு ஒன்றிணைகிறதோ - ஒன்று திரள்கிறதோ , ஒரு அரசியல் சக்தியாக சமூக சக்தியாக உருவெடுக்கிறதோ, அப்போது அவர்கள் திருப்பிக் கேட்பார்கள். கண்டிப்பாக திருப்பி அடிப்பார்கள். அது சமூக நீதிக்கான ஒரு போராக இருக்கும், என்றார் பாண்டிமாதேவி.

# முதுகில் தட்டிய அந்த கைத்தடி!

## மக்கள் கவிஞர் இன்குலாப்

வேதம் படித்தாலும்
மறுக்கப்பட்டாலும்
பூணூல் போட்டாலும்
போடாவிட்டாலும்

ஆதிக்கக்காரன்
ஒவ்வொருவனுக்குள்ளும்
ஆணவம் பிடித்த
பார்ப்பான் இருக்கிறான்.

அடங்கிக் கிடக்கும்
ஒவ்வொரு அடிமைக்கும்
அந்தப் பார்ப்பானே
குறிக்கோள் ஆகிறான்.

நந்தனின் குறிக்கோள் பார்ப்பனியம்
நமக்கும் குறிக்கோள் பார்ப்பனியம்.
இந்தச் சூழலில்
தந்தை பெரியார்....

மானுடம் சுமந்த துயரம்
அனைத்தையும்
வரித்துக் கொண்டதுபோல்
கறுத்த சட்டையுடன்;
தள்ளாடும் உடம்பைத் தாங்கும்
கைத்தடியால்
தள்ளாடும் மானுடத்தைத்
தாங்க வந்ததுபோல்.

நிமிரவே மறந்து
நெடுநாள் கிடந்தேன்...
முதுகில் அந்தக் கைத்தடிதட்டத்
திரும்பினேன்... அந்த
ஞாயிறு சுட்டது.

“நிமிர்
நிமிரத் தெரியாதது விலங்கு.
மனித அடையாளம் நிமிர்வது”

தோளில் போட்ட துண்டை எடுத்துக்
கக்கத்திதல் வைத்துக்
கைகட்டி நின்றேன்....
“துண்டை எடுத்துத் தோளில் போடு
வீசு கைகளை....
தேவைப்பட்டால்
கட்டச் சொன்னவன் முகத்தில் வீசு.”

பேசாது கிடந்தேன்
பெண் என்பதனால்...
எனது சொல் எனக்கு மறந்து
போனது

எனது குரலில்
பேச முயன்றேன்...
மனு வந்து நின்றான்.

அடங்கு என்றான்
சிறுமியே! தந்தைக்கு
கன்னியே! கணவனுக்கு
கிழவியே! மகனுக்கு

அடங்கு!
அடங்கு எப்போதும் ஆணுக்கு
ஒருபோதும் விடுதலை இல்லை
உனக்கு

எனது முகத்தை
எனது உடம்பை
அனைத்துக்கும் மேலாய்
என்
மனசை
உணர்வை
எனது சந்தையில்
ஆடவன் செதுக்கினான்.

அணையவந்த ஆடவர்க் கெல்லாம்
யுகம் யுகமாய்
உறுப்பாய்க் கிடந்தேன்.

கவிழ்ந்த எனது நெற்றிக்குக் கீழே
மூடிய எனது இமைகளுக்கு
வெளியிலும்
என்னைக் கடந்து
காலம் நடந்தது.

தாலிக் கயிற்றின்
கற்புச் சுமையுடன்
கழுத்தைச் சுற்றிய
காய்ப்பு

திரும்பும் திசையெல்லாம்
இரும்புச் சுவர்கள்

ஆடவர் நெய்த அவநம்பிக்கையின்
கருந்திரை
உச்சியிலிருந்து
உள்ளங்கால்வரை நீண்டது.
புழுங்கிக் கிடந்த
என்
முகத்தில்
புதுத் தென்றல் வீச
அந்தக் கருந்திரையை
அந்தத் தடிதான் விலக்கியது.

நீ மனுசி... நாம் மனிதர்... நமது
மானுடம்
நட.
ஆடவர் சொன்ன அசைவில்
அல்லாது
உனது கால்களின் இயல்பில் நீ
நட.
மனசிலும் உடம்பிலும் ஆடவர்
பூட்டிய
தளைகள் அனைத்தையும்
தகர்த்தெறி
ஆடவர் சொன்ன தருமங்களைத்
துப்பு
உனது சொல்லை நீ உச்சரி.

எங்கே செல்கின்றன
ஈரோட்டுச் சுவடுகள்
ஒடுக்கப்பட்ட மானுடம் அனைத்தும்
உயர்த்திய கையுடன் நீளும் வழியில்
இம்முறை எழுவோம்.
இம்முறை எழுவோம்.


இது
சுற்றிச் சுற்றிவரும்
செக்குப் பாதையல்ல
அனைத்துலகம் காட்டும் செம்பாதை

நோக்குவதற்கு நமக்குத் துணிவிருந்தால்
வெண்தாடி
ஜெர்மானிய வெண்தாடியைக் காட்டும்.
ஏற்கும் துணிவிருந்தால்
ஈரோடு உன்னை
லெனினிடம் சேர்க்கும்.
நம்பிக்கைத் தெளிவிருந்தால்
நடுவில் நிற்காதே
நட
இப்போதே.

(பெரியார் குறித்த கவிதையிலிருந்து ஒரு பகுதி;
‘ஒவ்வொரு புல்லையும்’ தொகுப்பிலிருந்து

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted on: 17th January 2013

OWNER & PUBLISHER & EDITOR : K. RAJENDRAN, PUBLISHED AT 29, JOURNALISTS COLONY, THIRUVALLUVAR NAGAR, THIRUVANMIYUR, CHENNAI - 600 041.
PRINTED BY : S. THEESMAS, AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014.



புரட்சிப்
# பெரியார் முழக்கம்
திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு
www.dvkperiyar.com

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2044 | சனவரி 24, 2013 | புரட்சி 12 | முழக்கம் 2 | விலை: ரூ.3.00


## அடுக்கடுக்கான கேள்விகளுக்கு கொளத்தூர் மணி பதில்

# ஜாதி ஒழிப்புக்கு முன்னுரிமை தருவதே 'திராவிடர் விடுதலைக் கழகம்!'

*"புதிய தலைமுறை" தொலைக்காட்சியில் டிசம்பர் 22 அன்று 'அக்னி பிரவேசம்' நிகழ்ச்சியில் பேட்டியாளர் ஜென். ராம் எழுப்பிய பல்வேறு வினாக்களுக்கு விடையளித்து கழகத் தலைவர் கொளத்தூர் மணி வழங்கிய பேட்டியின் முழு வடிவம்.*

**ஜென்ராம் -** திராவிடர் கழகம், பெரியார் திராவிடர் கழகம், திராவிடர் விடுதலைக் கழகம் என்ற பெயர்களில் இருந்தாலும் - கொள்கை ஒன்றுதான். ஆனால், மூன்று அமைப்புகளில் நீங்க செயல்பட வேண்டிய நிலை வந்திருக்கிறது. என்ன காரணம்?

**கொளத்தூர் மணி -** மூன்று அமைப்புகளுக்கும் கொள்கை ஒன்றுதான். ஆனால் அணுகுமுறைகளிலும், எதற்கு முன்னுரிமைக் கொடுப்பது என்பதிலும் எங்களுக்குள் எழுந்த கருத்து வேறுபாடுகள்தான் புதிய புதிய அமைப்புகளை காண்பதற்கும் தோன்றுவதற்கும் காரணமாக இருக்கிறது.

**ஜென்ராம் -** அணுகுமுறைதான் என்று நீங்க ஒரே சொல்லில் சொல்லி முடிச்சுடறீங்க. ஆனால் அதற்கு பின்னால் தலைமைகள் குறித்து நீங்க வைத்திருக்கக் கூடிய விமர்சனம், கடுமையாக இருக்கு. கொள்கைகளை விட இயக்கமும் கட்டுப்பாடும் முக்கியம் என்ற நிலை தோழர் வீரமணி காலத்தில் உருவானது என்று நீங்க அங்கிருந்து வெளியே வரும்போது கூறியிருக்கிறீர்கள். அது இயல்பானதுதானே? கொள்கையை விட கட்டுப்பாடு முக்கியம் என்று சொல்ல முடியா விட்டாலும் இயக்கத்தின் கட்டுப்பாடு என்பது முக்கியமானதுதானே?

**கொளத்தூர் மணி -** நிச்சயமாக! கட்டுப்பாடு அவசிய மானதுதான். ஆனால் எங்களை நீக்குவதற்கெல்லாம் கொள்கை சார்ந்த கட்டுப்பாடுகள் காரணமாக இருக்கவில்லை. அரசியல் சார்ந்த காரணங்களுக்காக நாங்கள் விலக்கப்பட்டோம்.

**ஜென்ராம் -** கட்சி அதிகாரம் தந்த மாயைதான் கொள்கை வழியில் செயல்பட்டத் தோழர்களை நீக்குவதற்கான தைரியத்தை வீரமணிக்குக் கொடுத்தது என்று சொல்றீங்க. இதுபோன்ற அமைப்பில் இருக்கக் கூடிய கட்சி அதிகாரம் என்பது எத்தகைய அதிகாரம்?

**கொளத்தூர் மணி -** பெரியார் இயக்கத்தைப் பொருத்த வரை தலைவருக்குதான் முழு அதிகாரம் என்று ஏற்றுக் கொண்டிருக்கிறோம். இருக்கிற பதவிகள் எதுவும் தேர்ந்தெடுக்கப்படும் பதவிகள் அல்ல. தேர்தலில் நின்று நாங்கள் வெற்றி பெற்று பதவிகளுக்கு வருவதில்லை. இயக்கத்தின் தலைமை ஆலோசித்து நியமிப்பதுதான் எல்லா பதவிகளும். எனவே அவர்களுக்கு கூடுதல் அதிகாரம் உண்டு என்பதை நாம் புரிந்து கொள்ளலாம். ஆனால் நான் விலக்கப்பட்டதற்கு காரணம் கொள்கை சார்ந்தது அல்ல. அந்த நேரத்தில் நடிகர் ராஜ்குமார் வீரப்பனால் கடத்தப்பட்ட போது ராஜ்குமாரை மீட்பதற்கு நான் போயிருந்தேன். திரு. வீரமணியோ போகக் கூடாது என்று கருதினார். அப்போது அவர் எடுத்த அரசியல் நிலையின் காரணமாக, இந்த முடிவை எடுத்தார். அப்போது ஆட்சியிலிருந்த தி.மு.க. சிக்கலில் இருந்து தப்பித்துக் கொள்ள கூடாது என்று அவர் கருதினார். அப்போது அவர் தி.மு.க.வை கடுமையாக எதிர்த்து வந்தார். என்னைப் பொருத்த வரை, கர்நாடக தமிழர்களுக்கு எந்தவித பாதிப்பும் நேர்ந்துவிடக் கூடாது என்ற கருத்து என்னிடம் மேலோங்கி இருந்தது. இன்னும் சொல்லப் போனால் அதில் என்னுடைய பார்வைதான் கொள்கைப் பார்வையாகவும் அவருடைய பார்வை வெறும் கட்டுப்பாடு அரசியல் பார்வையாகவும் இருந்தது. நான் விலகுவதற்கான காரணம் அதுதான்.

**ஜென்ராம் -** அதற்கு பிறகு, இன்று பெ.தி.க.விலும் கிட்டத்தட்ட அன்று வீரமணி இருந்த நிலையில் நீங்க இருந்தீங்க என்று சொல்லலாமா?

**கொளத்தூர் மணி -** ஆமாம். நான் தலைவராகத்தான் இருந்தேன்.



**ஜென்ராம் -** நீங்க தலைவராக இருந்தீங்க. பெரியார் கொள்கைகளை முன்னெடுப்பதில் கழகத்தில் கோவை இராமகிருஷ்ணன் அணியினர் முட்டுக்கட்டை, எதிர்ப்புகள் காட்டியதாக சொல்றீங்க.

**கொளத்தூர் மணி -** ஆமாம்!

**ஜென்ராம் -** அவர்கள் கட்டுப்பாட்டை மீறினார்கள். அதனால் நீங்கள் நடவடிக்கை எடுக்கறீங்க அல்லது நீங்கள் நடவடிக்கை எடுக்காம ஒரு உடன்பாட்டின் அடிப்படையில் இன்னொரு அமைப்புக்கு வர்றீங்க... ஏதோ ஒன்று... ஆனா கட்சியினுடைய முக்கியத்துவத்தை நீங்க தலைவராக இருக்கும் போது வலியுறுத்துறீங்க இல்லையா?

**கொளத்தூர் மணி -** கட்சியின் முக்கியத்துவம் என்றல்ல. கொள்கையை முன்னெடுத்துச் செல்வதில் உள்ள கட்டுப்பாடுகளைதான் நான் சொல்கிறேன். அதிகாரம் என்பதெல்லாம் இதில் இல்லை. கொள்கையை முன்னெடுத்துச் செல்வதில் சில தடங்கல்கள் இருந்தன. அவர்கள் புரிதல் வேறாகவும் எங்கள் புரிதல் வேறாகவும் இருந்தது. அதுதான் பிரச்னை.

**ஜென்ராம் -** ஒரு அமைப்பில் அல்லது ஒரு நிறுவனத்தில் ஒரு புள்ளியில சேர்ந்து வேலை செய்வதற்கான சாத்தியப் புள்ளிகளை பார்த்துட்டு கூடிய வரை இணைந்து செயல்படுவதற்கான முயற்சிகளை எடுக்கணும் அதுதானே சரியான நிலைப்பாடாக இருக்க முடியும்?

**கொளத்தூர் மணி -** ஆம். உண்மைதான். நாங்கள் எல்லோரும் இணைந்தபோதுகூட எங்களின் சில கருத்து வேறுபாடுகளை நாங்கள் பேசி தீர்த்துக் கொண்டோம். பொதுவாக மேடைகளில் மற்ற பெரியார் அமைப்புகளை பற்றி விமர்சனம் செய்வது கூடாது என்பது போன்ற குறைந்த பட்ச முடிவுகளை எடுத்துக் கொண்டுதான் நாங்கள் இணைந்து செயல்பட்டோம். இப்போது நாங்கள் உடனடியாக திடீரென்று விலகிவிடவில்லை. இப்போது பிரிந்த இந்த இரண்டு அமைப்புகளும் ஏறத்தாழ 2005-ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்திலேயே இருவரும் இணைந்து வேலை செய்வது சிக்கலாக இருக்கும் என்று கருதி அப்போதே நான் முன் வைத்ததுதான் இரண்டு இயக்கங்களாக இயங்கலாம். தேவைப்பட்ட போது கூட்டு நடவடிக்கையில் ஈடுபடலாம் என்பது 2005 டிசம்பரிலேயே முன் மொழிந்தேன். ஆனாலும் எங்களுக்குள்ள, இயக்கத் திற்குள்ள தேவையை, அதன் வேலையை கருதிதான் 7 ஆண்டுகள் மெல்ல மெல்ல நாங்கள் பிரிந்து போய் விடாமல் அப்படியே அதை நீட்டித்துக் கொண்டு வந்தோம். நீங்கள் சுட்டிக்காட்டிய கருத்துதான் அதற்குக் காரணம்.

**ஜென்ராம் -** உங்களுடைய கொள்கையின்படி ஆரியர்களுக்கும் திராவிடர்களுக்கும் உள்ள முரண்பாட்டை பகை முரண்பாடாக பார்க்கலாம். திராவிடர்களுக்கு இடையில் உள்ள முரண்பாடு நட்பு முரண்பாடாகத்தான் இருக்க முடியும். நட்பு முரண்பாடு இருக்கும் போது ஒரு கையால் அணைத்துக் கொண்டே ஒரு கையால் திருத்துவதற்கான முயற்சி தான் சரிங்கிறது சிலருடைய நம்பிக்கை. அந்த அணுகுமுறை தோற்று போச்சுன்னு நீங்க நினைக்கிறீங்களா?

**கொளத்தூர் மணி -** இல்லை. அப்படி இல்லை. முன்னுரிமை என்று இன்னொரு சொல்லை ஏற்கெனவே சொன்னேன். எதற்கு முன்னுரிமை தருவது? பெரியார் இயக்கம் என்பது பகுத்தறிவு இயக்கமா ஜாதி ஒழிப்பு இயக்கமா? இதில் இரண்டு கருத்துக்களையும் பெரியார் பேசினார். பகுத்தறிவும் பேசினார். ஜாதி ஒழிப்பும் பேசினார். நாங்கள் ஜாதி எதிர்ப்புக்கும் ஜாதி ஒழிப்புக்கும் முன்னுரிமை கொடுக்கிறோம். அதில் கொஞ்சம் தயக்கம் இருக்கிறபோது, அதில் அவர்கள் பின் தங்கி நிற்கிற போது எங்கள் வேகம் குறைகிறது என்று நினைக்கிறோம் எனவே, வேகமாக முன்னெடுத்துச் செல்வதற்கு தனி அமைப்பு கண்டிருக்கிறோம்.

**ஜென்ராம் -** பார்வை இல்லாத 5 பேர் யானையை தடவிப்பார்த்து ஆளுக்கொன்றை சொல்வதுபோல பெரியாரை எங்களைப் போன்ற சாதாரண நிலையி லிருப்பவர்கள் புரிந்து கொள்வதிலேயே அந்த சிக்கல் இருக்கிறது. ஆனால் பெரியாருடைய தொண்டர்களாக அவருடைய இயக்கத்தின் வழி வந்தவர்களாக இருப்பவர் களிடையேகூட முன்னுரிமையில் பெரியாருடைய பார்வையில முன்னுரிமையில் சிக்கல் வருது என்றால் அதை எப்படி புரிஞ்சுக்கிறது

**கொளத்தூர் மணி -** இருக்கத்தான் செய்யும். இந்தி எதிர்ப்புப் போராட்டம் 1938-இல் வந்தது. அப்போது பெரியாரோடு சேர்ந்து தமிழறிஞர்கள் எல்லாம் போராடினார்கள். அப்போது பெரியாரோடு இணைந்தவர் களுக்கு பெரியாருடைய மற்ற கொள்கைகளை விடவும் கூட தமிழ்ப் பாதுகாப்பு, தமிழ் ஆதரவு என்ற சிந்தனை அதிகமாக இருந்தது. அடுத்து 57-இல் ஜாதியை காக்கிற சட்ட எரிப்புப் போராட்டம்.. அந்த நேரத்தில் பெரியார் இயக்கத்திற்கு வந்தவர்களுக்கு ஜாதி எதிர்ப்புக் கொள்கை கூடுதலாக இருக்கும். 80-களுக்கு பின்னால் வந்தவர்களுக்கு ஈழ ஆதரவு கொள்கை கூடுதலாக இருக்கும். கூடுதலாக இருக்கும் என்பதுதானே தவிர எல்லோருக்கும் அந்த கொள்கை உண்டு. எது கூடுதல், குறைதல் என்பதில்தான் சிக்கல்.

**ஜென்ராம் -** நீங்க இருந்த அமைப்புகள் எல்லாம், அதாவது பெரியாருடைய வழி வந்த அமைப்புகள் எல்லாமே திராவிடர் கழகம் என்ற அந்த சொற்களையே பயன்படுத்தறீங்க. தி.மு.க, அ.தி.மு.க, மறுமலர்ச்சி தி.மு.க எல்லாமே திராவிட முன்னேற்றக் கழகம் அப்படின்னுதான் சொல்றாங்க. திராவிடர் என்ற சொல்லை பயன்படுத்தறது இல்லை. இந்த இரண்டுக்கும் உண்டான அடிப்படை வேறுபாடு என்ன?

**கொளத்தூர் மணி -** தி.மு.க பிரிந்தபோது, முதல் கூட்டம் ராபின்சன் பூங்காவில் நடந்தது. அந்த கூட்டத்தில்தான் அண்ணா அப்போதே பேசினார். 'எங்கள் கட்சியின் பெயரில் 'ர்' இல்லை என்பதை கவனியுங்கள்' என்பதை குறிப்பிட்டே பேசினார். திராவிடர் என்பது மக்களை குறிக்கும் சொல். திராவிடம் என்பது மண்ணை குறிக்கும் சொல் என்று பேசினார். ஆரியர், திராவிடர் என்று மக்களை பிரித்து அந்த பண்பாட்டுப் புரட்சிக்கு அடிகோலியவர் பெரியார். அண்ணாவைப் பொருத்தவரை திராவிடத்தை தெற்கு, வடக்கு என்பதாக பிரித்துதான் வடக்கு வாழ்கிறது, தெற்கு தேய்கிறது என்ற முழக்கத்தை வைத்தார். அவர்கள் வடவர் ஆதிக்கத்தில் இருந்து திராவிடத்தை, தமிழகத்தை முன்னேற்று வதற்கான செயல் திட்டங்கள் தங்களிடம் இருப்பதாக தான் வெளிப்படுத்திக் கொண்டார்கள். பெரியார் கூறிய 'திராவிடர்' மக்களுடைய பண்பாட்டுப் புரட்சியைப் பொருத்தது. அண்ணா கூறிய 'திராவிட' அரசியல் வழிகளை பொருத்தது.

**ஜென்ராம் -** மக்களை பிரித்துப் பார்ப்பது என்று சொல்றீங்களே... எந்த அடிப்படையில் பிரித்துப் பார்ப்பது? பிறப்பின் அடிப்படையிலா?

**கொளத்தூர் மணி -** பிறப்பின் அடிப்படையில் என்பதை பெரியார் எப்போதும் ஏற்றுக் கொண்டதில்லை. ஆரியர் திராவிடர் என்பது குறித்து பெரியார் சொல்வார், ரத்த

*2 ஆம் பக்கம்*

# ‘கீழ்வெண்மணி’ படுகொலையில் பதிவாகாத உண்மைகள்

*கொளத்தூர் மணி உரை – முதல் பக்கத் தொடர்ச்சி*

பரிசோதனை செய்து நாங்கள் மக்களை பிரிக்கவில்லை. எனக்கு தெரியும். மத்திய ஆசியாவிலிருந்து வந்தவர்களுடைய நேரடி வாரிசுகள் இல்லை இப்போது இங்கு இருக்கிற ஆரியர்கள் என்பது நன்றாக தெரியும். ஆனால் அவர்கள் பண்பாட்டு தளத்தில், ஆச்சார அனுஷ்டானங்களில் பிரிந்து இருக்கிறார்கள் என்றுதான் பெரியார் சொல்வார்.. ஆச்சார அனுஷ்டானங்களில் உள்ள பிரிவினைதான் என்னை பிரித்துப் பேசச் சொல்கிறதே தவிர, ரத்தத்தைப் பார்த்து ரத்த சுத்தத்தைப் பார்த்தெல்லாம் நான் இனத்தைப் பிரிக்கவில்லை. அது கூடாது என்று சொல்பவன் நான் என்றுதான் பெரியார் சொல்லியிருக்கிறார். ஆரியர்களுடைய பண்பாடு என்பது மக்களை பிரிப்பதும், படிவாரியாக வைப்பதும், இழிவுப்படுத்துவதுமாக இருக்கிறது. அந்த பண்பாட்டுக்கு எதிரானதே பெரியார் போராட்டம்.

**ஜென்ராம்**-திராவிடர்களை இனம் என்று சொல்வதற்கு இல்லை. இனம் என்று சொன்னாலே, உலகத்தில் மூன்றே மூன்று இனங்கள்தான். வெள்ளை இனம், கறுப்பர் இனம், மங்கோலிய மஞ்சள் இனம் அப்படின்னு மூன்றுதான் இருக்கு. அதனால் அதை தாண்டிய எல்லா இனங்களும் கலப்பினங்களே அப்படிங்கிற வாதம் இப்ப தமிழ்நாட்டில்... அதிகமாக ஒலிக்க ஆரம்பித்திருக்கிறது. அதை நீங்கள் எப்படி எதிர்கொள்றீங்க அரசியல் தளத்தில?

**கொளத்துர் மணி** - திராவிடர் என்பதை இதற்கான அடையாளச் சொல்லாக, குறிச் சொல்லாக பெரியார் குறிப்பிட்டார். பார்ப்பனர் அல்லாதார் இயக்கம் என்று அவர்கள் சொல்லிக் கொண்டிருந்த போது, அதில் வெறும் பார்ப்பன எதிர்ப்பு என்பது பதவிகளில், கல்வி நிலையங்களில், அரசியலில், பார்ப்பனர்கள் இருப்பதை பிடிக்காதவர்கள் மட்டும் செய்ததாகத்தான் அந்த பார்ப்பனர் அல்லாதார் என்ற குறிச்சொல் சொன்னது. பெரியார் சொன்ன திராவிடர் என்ற குறிச் சொல்லில் பண்பாட்டுத் தளங்களிலும் திருமணங்களில், புதிய முறைகளை கொண்டு வர வேண்டும் வாழ்வியலின் எல்லா நிலைகளிலும் நாம் புதிய பண்பாட்டை முன்னெடுத்துச் செல்ல வேண்டும் என்ற நோக்கத்தோடு பெண்ணடிமை ஒழிப்பு ஜாதி ஒழிப்பு எல்லாவற்றையும் உள்ளடக்கிய சொல்லாக திராவிடர் என்பதை வைத்தார். பார்ப்பனர் அல்லாதார் என்பது வெறும் ஒரு பிரிவை ஒதுக்கிவிட்டு மற்றவர்கள் ஆட்சியில் உட்கார வேண்டும், பதவியில் உட்கார வேண்டும் என்பது போல தொனித்ததால் அதற்கு பதிலாக திராவிடர் என்ற இந்த குறிச்சொல்லை பெரியார் வைத்தார்.

**ஜென்ராம்** - பிற மொழி பேசறவங்களையும் நீங்க திராவிடர் என்ற பட்டியலுக்குள்ள சேர்த்துட்டு வந்துட்டீங்க.. அவர்கள் தமிழர்கள் என்று அறியப் படுபவர்களை அடிமைப் படுத்துவதற்காக அல்லது அவர்களையும் மீறி எல்லாப் பதவிகளையும் பிடிப்பதற்கான முயற்சியில் அவங்க இருக்கிறாங்க.. எனவே இப்ப திராவிடம் என்ற சொல்லையே பயன்படுத்தக் கூடாது என்ற முழக்கத்தை முன் வைத்து அரசியல் இயக்கங்கள் இங்க வந்துட்டு இருக்கிறாங்களே...

**கொளத்தூர் மணி** - அப்படி பேசுவோரில் இரண்டு தரப்பினரைச் சொல்லலாம். ஒரு தரப்பு, நேரடியாக தி.மு.க. அண்ணா தி.மு.க என்று விமர்சிக்க தயங்குபவர்கள் அல்லது அஞ்சுபவர்கள் திராவிட எதிர்ப்பு என்று பேசுகிறார்கள். குறைந்த அளவு திராவிட அரசியல் கட்சிகள், தேர்தல் கட்சிகள் என்றாவது சொல்ல வேண்டும். அதையும் சொல்வதில்லை. பெரியாரை பொருத்த வரை அரசியல் விடுதலை என்று வந்தபோது தமிழ்நாடு தமிழருக்கே என்றுதான் பேசினார். சமூக விடுதலை என்று வருகிற போதுதான், ஆரியப் பண்பாடு திராவிடப் பண்பாடு என்று பிரித்துப் பேசினார். இன்னும் சொல்லப் போனால், ஆரிய புராணங்கள் சாஸ்திரங்கள் சொல்வதைப் போல சூத்திரர்களுக்கான மறு பெயராக திராவிடரை எடுத்துக் கொள்ளலாம். அவர்கள் எல்லா இனங்களிலும் இருக்கிறார்கள். கன்னடத்திலும் சூத்திரர்கள் உண்டு. இன்னும் சொல்லப் போனால், ஜெகஜீவன்ராம் ஒரு முறை அமைச்சராக இருந்த போது இங்கு வந்த போது சொன்னார், “I am a Dravidian from Bihar” என்றுச் சொன்னார். பார்ப்பனப் பண்பாட்டால் அடிமைப்படுத்தப்பட்ட இழிவுபடுத்தப்பட்ட சமுதாயங்களை எல்லாம் குறிக்கிற சொல்லாக திராவிடர் என்ற சொல்லை பயன்படுத்தி பெரியார் ஒரு புதிய உள்ளடக்கத்தைக் கொடுத்தார் என்று சொல்ல வேண்டும்.

**ஜென்ராம்** - தலித் விடுதலையை தனித்த இயக்கமாக வளராமல் செய்தது திராவிடர் இயக்கம். தலித் விடுதலை இயக்கத்தில் இருக்கக் கூடிய போர்க் குணத்தை நீர்த்துப் போகச் செய்தது திராவிடர் இயக்கம் என்கின்ற விமர்சனத்தை நீங்க எப்படி பார்க்கறீங்க?

**கொளத்தூர் மணி** - எப்படி என்று அவர்கள் தான் விளக்க வேண்டும். குறிப்பாக சொல்ல வேண்டுமென்றால் பெரியாருடைய இயக்கம் 27-இல் தொடங்கியது என்றாலும் கூட... 1950-களில் ஆதிதிராவிடர்கள் என்று சொல்லப்பட்ட தாழ்த்தப்பட்ட மக்களுடைய இழி தொழில்களை கைவிட்டு விட வேண்டும் பறையடிக்கச் செல்லக் கூடாது, சாவுச் செய்தி சொல்லக் கூடாது என்று திராவிடர் கழகம்தான் அந்தப் பகுதிகளில் எல்லாம் பரப்புரை செய்தது. இன்னும் சொல்லப் போனால் அப்படி ஒரு பரப்புரையின் காரணமாக மாதிரிமங்கலம் என்றப் பகுதியில் திராவிடர் கழகத் தோழர் .. அவர் தாழ்த்தப் பட்டவர் அல்ல.. அந்த போராட்டத்தை முன்னெடுத்ததால் ஆதிக்க சாதியினரால் கொல்லப்பட்டார். அப்படி இழிவான செயல்களை எல்லாம் செய்யக் கூடாது என்று பேசி வந்த இயக்கம். போராடி வந்த இயக்கம். அதை ஒழித்த இயக்கம்... பெரியார் இயக்கம். இன்னும் சொல்லப் போனால். தலித் இயக்கங்கள்கூட அப்படிப்பட்ட முயற்சிகளில் எதுவும் ஈடுபடுவதாக நான் அறியவில்லை.

**ஜென்ராம்** - 1920-இல் ஜஸ்டிஸ் கட்சி ஆட்சிக்கு வந்த போதிலிருந்துதான் தலித் உரிமைகளுக்கானப் போராட்டமும் தொடங்கியது என்று சொல்வதே அதற்கு முன்னர் தலித் விடுதலைக்காகப் போராடிய தலைவர்களை அவமதிப்பதாகும் என்று சொல்லப்படுகிறதே.

**கொளத்தூர் மணி** - அப்படி இல்லை. இந்தப் போராட்டம் தொடர்ச்சியாக.. நீண்ட காலமாக இருக்கிறது. அதை யாரும் மறுக்க முடியாது. போராட்டம் என்பது திடீரென்று ஒரு புள்ளியில் தொடங்க முடியாது. முன்னோர்கள் எடுத்துச் சென்றதின் தொடர்ச்சியாகத்தான் பார்க்க வேண்டும். வீச்சாக எடுத்துச் சென்ற காலம் என்று சொல்லலாமே தவிர அப்போதுதான் தொடங்கியது என்று சொல்வது சரியான செய்தி அல்ல.

**ஜென்ராம்** - அயோத்திதாசப் பண்டிதர், .இரட்டைமலை சீனிவாசன், எம்.சி. ராஜா ஆகிய தலித் தலைவர் களுடைய அயராத உழைப்பை திராவிடர் இயக்கத் தவர்கள் மறைக்க முயற்சிக்கிறார்கள் அப்படின்னு அவங்க எழுதறாங்க.

**கொளத்தூர் மணி** - அதை நான் தவறு என்று சொல் வேன். இன்னும் சொல்லப் போனால் அயோத்திதாசரைப் பற்றி, இரட்டை மலை சீனிவாசனே, இத்தனைக்கும் இவர் அயோத்திதாசரின் மைத்துனர்தான். அவர் வாழ்க்கைக் குறிப்பில் எங்கும் அயோத்திதாசரைப் பற்றிக் குறிப்பிடவே யில்லை. திரு.வி.க. எழுதியிருக்கிறார் அயோத்திதாசரைப் பற்றி.. பலக் கட்டுரைகளை எழுதியிருக்கிறார். அவரை ஒரு மருத்துவர் என்பதாகத்தான் எழுதியிருக்கிறாரே தவிர அவருடைய இயக்க செய்திகளை அவர் பதிவு செய்யவில்லை. திட்டமிட்டு மறைத்ததாக அல்ல. அவர்கள் எந்த பார்வையில் பார்த்தார்களோ அதை மட்டும் பதிவு செய்திருக்கிறார்கள். பெரியார், அதற்கு பின்னால் அயோத்திதாசருடைய தமிழன் பத்திரிகை மீண்டும் வந்த போது ‘அயோத்திதாசர் எழுதி வந்த தமிழன் பத்திரிகை மீண்டும் வருகிறது’ என்று விளம்பரப்படுத்தியிருக்கிறார். இன்னும் சொல்லப் போனால் அயோத்திதாசரின் மாணாக்கராக இருந்த அப்பாதுரையார், பெரியாருடன் நெருக்கமான நட்பு வைத்திருந்து, அவர்கள் இருவரும் இணைந்து பல வேலைகள் செய்திருக்கிறார்கள. அப்படிப்பட்டப் பார்வையோ மறைக்க வேண்டுமென்றோ இல்லை. இன்னும் சொல்லப் போனால் அண்மைக் காலங்களில்தான் அயோத்திதாசரைப் பற்றி தாழ்த்தப்பட்டோர் இயக்கங்களே கூட பேசத் தொடங்கியிருக்கின்றன. அதற்கு முன்பு அவர்கள் கூட பேசவில்லை. காரணம் அயோத்திதாசர் நடத்திய ஏடுகள் வெளியே வரவில்லை. அவருடைய எழுத்துக்கள் மக்களுக்குத் தெரியவில்லை. பெயர் தெரிந்தது. அவருடைய சிந்தனையும் எழுத்தும் மக்களுக்குத் தெரியாமல் இருந்தது. தெரிந்த பின்னால் எல்லோரும் பேசுகிறார்கள், அவ்வளவுதான்.

**ஜென்ராம்** - கீழ்வெண்மணியில் 42 பேர் உயிரோடு எரிக்கப்பட்ட காலத்திலும் கூட திராவிடர் கழகம் தலித் மக்களுடைய பக்கம் நிற்கவில்லை. ‘கம்யூனிஸ்டுகள் அங்கு கலகம் செய்ய முயற்சிக்கிறார்கள். அவர்கள் தூண்டிய கலகத்தில் தலித் மக்கள் கொல்லப்பட்டார்கள்’ அப்படின்னு திராவிடர் கழகம் சொன்னதாக ஒரு பதிவு இருக்கிறது

**கொளத்தூர் மணி** - ஆனால் உண்மை நிலை என்னவென்றால், அதற்கு பின்னால் அந்த கொடுமைக்குக் காரணமாக இருந்த கோபால கிருஷ்ணன்... கோபால கிருஷ்ண நாயுடு வெட்டிக் கொல்லப்பட்டார். அதில் 13 தோழர்கள் கைது செய்யப்பட்டார்கள். ஆறு மாதத்தில் கைது செய்யப் பட்டார்கள். அதில் 12 பேர் திராவிடர் கழகத்துக்காரர்கள். ஒருவர் மட்டும்தான் கம்யூனிஸ்ட். 12 பேருக்கும் ஆயுள் தண்டனை கொடுக்கப்பட்டது. உயர்நீதிமன்றத்தில் போய் தண்டனை தள்ளுபடியாகி, வழக்கே தள்ளுபடியாகி விடுதலை ஆனார்கள். அந்த இயக்கத்திற்கு, அந்த கொலைக்கு முன்னின்று செய்தவர் என்பதற்காக கைது செய்யப்பட்ட காலாக்குடி மதி என்கிற திராவிடர் கழக இளைஞர் அணித் தலைவர், அவர் தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சார்ந்தவர் அல்ல. கைது செய்யப் பட்டவர்களில் பாதிக்கும் மேற்பட்டவர்கள் தலித் சமுதாயத்தைச் சேராதவர்களாக இருந்தார்கள். திராவிடர் கழகம் வேலை செய்தது. ஆனால் வரலாற்றில் பதிவு செய்யத் தவறிவிட்டது. இப்போது நாங்கள் அந்த வேலையை களப்பணி செய்து செய்திகள் சேகரித்து விரைவில் அந்த வரலாறுகளை நூலாக வெளிக் கொண்டுவர இருக்கிறோம். கைது செய்யப்பட்டவர்கள் பற்றிய விவரங்கள், அவர்களுக்கு என்னவெல்லாம் நடந்தது என்பதை பற்றிய முழு விவரங்களோடு நூலைக் கொண்டு வர இருக்கிறோம்.

**ஜென்ராம்** - கூலியை உயர்த்துறோம் வாழ்வை வளமாக்குறோம் என்று சொல்லி உங்க உயிரை பலி வாங்கிக்கிட்டு இருக்காங்க. கலகம் செய்ய தூண்டுது கம்யூனிஸ்டுக் கட்சி. அது போக.. இரண்டணா கூலி அதிகமா கொடுத்துட்டா நாலணா பொருளில் விலையை கூட்டிருவான் முதலாளி. அதனால் கூலி உயர்வுப் போராட்டங்கள் ஏற்க கூடியதல்ல. அதை நீங்க புரிஞ்சு நடந்துக்கணும் அப்படின்னு பெரியார் பேசியதாகவும் அவர்கள் பதிவு செய்யறாங்க.

**கொளத்தூர் மணி** - அப்போது அல்ல. அதற்குப் பின்னால்தான் பெரியார் பேசியிருக்கிறார். அந்த நேரத்தில் சொல்ல வில்லை. கலகத்தை உண்டாக்குவதற்காக சில பேர் செய்கிறார்கள் என்று எழுதுகிறார். கடைசி வரைக்கும் பெரியார் அதைத்தான் சொன்னார். கூலி உயர்வு என்பது எந்த விதத்திலும் தொழிலாளர்களுக்கு பயன்படாது என்ற கருத்து பெரியாருக்கு இறுதி வரை இருந்தது. காரணம்.. அந்த கூலி உயர்வின் போது முதலாளிகள் விலையை உயர்த்தி விடுகிறார்கள். அந்த கூலி உயர்வே பயனற்றுப் போகிறது. நீங்கள் பங்காளிகளாக முயற்சி செய்யுங்கள் என்று பெரியார் வலியுறுத்தினார். தி.மு.க. ஆட்சியில் போக்குவரத்துக் கழகங்கள் தொடங்கிய போதுகூட கலைஞரிடம் வேண்டுகோள் வைத்தார். நீங்கள் தொழிலாளர்களையும் பங்குதாரர்களாக மாற்றுங்கள். அவர்களுக்கு பொறுப்பும் இருக்கும். அவர்களுக்கு உரிமையும் இருக்கும் என்று பேசியவர் பெரியார். கலைஞர், சேரன் போக்குவரத்துக் கழகத்தில் அப்படி செய்தார். அப்படிப்பட்ட பார்வையே பெரியாருக்கு இருந ் தது. அதையேதான் அப்போதும் சொல்லியிருக்கிறார்.

**ஜென்ராம்** - உழைப்பின் உபரி மதிப்புதான் இலாபம் அப்படிங்கிற கோட்பாட்டை முன் வைத்தவர்களை நீங்க ஏற்கலை?

**கொளத்தூர் மணி** - நிச்சயமாக ஏற்றுக் கொள்கிறோம். அதில் கருத்து மாற்றமில்லை. ஆனால், அப்படிப்பட்டப் பொருளாதாரச் சட்டங்களில் கட்டுப்பட்டு இருக்கவில்லை. நம்ம இந்திய பொருளாதாரம் இந்திய சமூகம் என்பது அந்த தத்துவத்துக்குள் கட்டுப்பட்ட சமூகமாக இருக்க வில்லை. மற்ற நாடுகளில் தொழிலாளி முதலாளி மட்டும் இருந்தார்கள். பெரியார் கூட மார்க்சினுடைய கம்யூனிஸ்டுக் கட்சி அறிக்கையை மொழிப் பெயர்த்து வெளியிட்டார்... தனது ‘குடிஅரசில்’. இந்திய மொழிகளில் தமிழில்தான் முதலில் அது மொழிப் பெயர்க்கப்பட்டது. மொழிப் பெயர்த்தவர் பெரியார். வெளியிட்ட ஏடு குடிஅரசு. அதில் ஒன்றை எழுதுகிறார். கூடுதலாக இங்கு ஜாதி என்ற ஒன்றும் இருக்கிறது.. என்ற முன்னுரையை எழுதிவிட்டுதான் அதை வெளியிட்டார். எனவே அந்த கூடுதலாக இருக்கிற ஜாதியத்தை அவர்கள் கருத்தில் எடுத்துக் கொள்ளவில்லை என்ற குறை உண்டே தவிர.. நாங்கள் பொதுவுடைமை கருத்துக்களை முழுமையாக ஏற்றுக் கொண்டவர்கள்தான்.

**ஜென்ராம்** - பொதுவுடைமை கருத்தை முழுமையாக ஏற்றுக் கொள்கிறீர்கள். பெரியார் முன் வைத்த மாதிரி சாதி இருக்கு என்பதையும் சாதிய முரண்களை தீர்ப்பதற்கான கருத்துக்களை கம்யூனிஸ்டுகள் முன் வைக்கவில்லை. இணைத்து செயல்படவில்லை என்பது ஒரு புறம் இருப்பது மாதிரி, சமூக சீர்திருத்த இயக்கங்கள் பொருளாதார பார்வையை தங்களுடன் இணைத்துக் கொள்ளவில்லை என்ற பார்வை சரியானதா?

**கொளத்தூர் மணி** - உண்மைதான். அந்த குற்றச்சாட்டு உண்மைதான். இடைக்காலத்தில் அது இல்லாமல் போய் விட்டது. ஆனால் எங்கள் காலத்தில் நாங்கள் பார்ப்பனிய இந்திய தேசிய பன்னாட்டுச் சுரண்டலுக்கு எதிரான அமைப்பாக எங்கள் திராவிடர் விடுதலைக் கழகத்தைக் கொண்டுச் செல்கிறோம்

*3 ஆம் பக்கம்*

# தமிழருக்கு அடையாளம் 'பிறப்பு' மட்டுமல்ல

*கொளத்தூர் மணி உரை - 2ஆம் பக்கத் தொடர்ச்சி*

**ஜென்ராம்** - திராவிடர் விடுதலைக் கழகம் அந்த பார்வையில் இருக்கிறது. சரி. ஆனால் பிற பெரியார் இயக்கங்கள் பழைய பார்வையிலேயே...

**கொளத்தூர் மணி** - இல்லாமல்தான் இருந்தது. பெரியார் காலத்தின் இறுதி காலத்தில் கூட இதுபற்றி கூடுதலாக பேசப்படவில்லை என்பது உண்மைதான்.

**ஜென்ராம்** - மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகம், திராவிட முன்னேற்றக் கழகம், அண்ணா தி.மு.க. தற்போது விஜயகாந்த் தொடங்கிய கட்சி என எல்லாக் கட்சிகளிலும் திராவிட என்னும் சொல் இருக்கிறது. இந்த கட்சிகளைதான் தமிழ்நாட்டில் உள்ள பாதிக்கும் மேற்பட்ட மக்கள் ஆதரிக்கிறார்கள். இந்த தலைவர்களை தான் நம்பறாங்க. இந்த கட்சிகளுக்குதான் வாக்களிக் கிறாங்க. இவர்கள் எல்லோரும் திராவிட என்ற கோட் பாட்டைப் புரிந்து கொண்டு ஆதரிக்கிறார்கள் என்று சொல்ல முடியுமா?

**கொளத்தூர் மணி** - இல்லை என்பதுதான் உண்மை. பொதுவாக திராவிடர் கழகமே கூட ஒரு தனி அமைப்பாகத் தொடங்கி விடவில்லை. ஏற்கெனவே அதை சுயமரியாதை இயக்கமாக பெரியார் நடத்தினார். காலப்போக்கில் பெரியார் நீதிக்கட்சிக்கும் தலைவராக வேண்டிய தேவை ஏற்பட்டது. ஏற்கெனவே தேர்தலில் ஈடுபட்டு அமைச்சர் பதவிகளில் எல்லாம் இருந்த கட்சிக்கு தலைமை ஏற்க வேண்டினார்கள். தலைமையை கொடுத்தார்கள் பெரியாரிடம். அதுவும் நீதிக்கட்சி தோல்வியடைந்த பின்னால் இவரிடம் கொடுத்தார்கள். நீதிக்கட்சி என்கிற அரசியல் கட்சியையும்.. சுயமரியாதை இயக்கம் என்கிற பண்பாட்டுப் புரட்சி இயக்கத்தையும் ஒன்றாக இணைத்துதான் அவர் திராவிடர் கழகம் என்று பெயர் சூட்டினார். 49-இல் தி.மு.க பிரிந்த போது, பழைய நீதிக்கட்சி பாரம்பரியம்.. தேர்தல் அரசியலில் அக்கறை உள்ளவர்கள், ஈடுபாடு உள்ளவர்கள்... அவர்கள் அந்த அமைப்பாக போய்விட்டார்கள். சுயமரியாதை இயக்கக் கருத்துக்களை ஏற்றுக் கொண்டவர்கள் தொடர்ச்சியாக திராவிடர் கழகமாக இருக்கிறார்கள். அப்ப முற்று முழுதாக அவர்கள் தேர்தல் அரசியல் மீது அக்கறை கொண்டவர்களாகவும் இவர்கள் பண்பாட்டுப் புரட்சியில் அக்கறை கொண்டவர்களாகவும் இரண்டு இயக்கங்களும் தனித்தனியாகதான் இயங்குகின்றன. பெயரில் திராவிட என்று இருக்கிறதே தவிர அவர்களுக்கு பெரியாருடைய தத்துவங்களை பண்பாட்டுப் புரட்சி செயல்பாடுகளை எதையும் அவர்கள் ஏற்றுக் கொண்டவர்களாக இல்லை. அண்ணா காலத்தில் தேர்தலில் ஈடுபடுகிற வரைக்கும் பேசினார்கள். அதற்கு அப்புறம் பேசவில்லை. அவர்களுக்கு தேர்தல் வெற்றி முக்கியமாக இருந்தது. கொள்கை முக்கியமாக இருக்கவில்லை. பெரியாருடைய பண்பாட்டுப் புரட்சிக் கொள்கை முக்கியமாக இருக்கவில்லை.

**ஜென்ராம்** - பெரியாருடைய பிற கொள்கைகளை ஏற்றுக் கொள்கிறார்களா?

**கொளத்தூர் மணி** - அதாவது... இவர்கள் தமிழர் முன்னேற்றம் என்பது, பார்ப்பனர் அல்லாத மக்களின் முன்னேற்றம் என்பதில், இட ஒதுக்கீட்டில் அக்கறை கொண்டு செயல்பட்டார்கள். அடித்தட்டு மக்களுக்கான நல உதவித் திட்டங்களை கொண்டு வந்தார்கள். அதெல்லாம் செய்தார்கள் என்பதை ஏற்றுக் கொள்ள வேண்டும். ஆனால் பண்பாட்டுப் புரட்சியில் அவர்கள் ஈடுபடவில்லை.

**ஜென்ராம்** - 1967-இல் இருந்து இன்று வரை கிட்டத்தட்ட திராவிட இயக்க வழி வந்தவர்களின் ஆட்சியில் 11 சட்டமன்றங்கள் இருந்திருக்கிறது. அந்த 11 சட்டமன்றங்களும் நினைத்தால் பண்பாட்டுத் துறையிலும் பல மாற்றங்களை கொண்டு வந்திருக்க முடியும். ஆனால் அவர்கள் செய்யவில்லை அப்படின்னு நீங்க சொல்வீங்களா?

**கொளத்தூர் மணி** - சொல்லலாம். அதில் போதிய அக்கறை செலுத்தவில்லை என்பது உண்மைதான். அண்ணா காலத்தில் சில சட்டங்களை.. சுயமரியாதை திருமணம் என்பது செல்லாமல் இருந்த திருமணத்தை சட்டப்பூர்வ திருமணமாக்கினார். பெரியார் சொன்னார், தமிழர்கள் மட்டும் தனியாக வசிக்கிற பகுதியை பிரித்த பின்னாலும் சென்னை ராஜ்ஜியம் என்று ஏன் பெயர் இருக்க வேண்டும்? அதை தமிழ்நாடு என்று ஏன் ஆக்கக் கூடாது என்று பெரியார் குரலெழுப்பி வந்தார். அதை ஏற்றுக் கொண்டு அண்ணா தமிழ்நாடு என்று மாற்றினார். இப்படிப்பட்ட மாற்றங்கள் அண்ணா காலத்தில் செய்யப் பட்டது. அதற்கு பின்னால் வந்தவர்கள் எல்லாம் இந்த ஒடுக்கப்பட்ட மக்களின் நலத்திட்டங்களில் அக்கறை கொண்டார்களே தவிர பண்பாட்டுப் புரட்சியில் ஈடுபட வில்லை. கலைஞருடைய வாரிசுரிமை சட்டத்தில் பெண்களுக்கு சொத்துரிமை வழங்கும் சட்டத்தைத் தவிர வேறு ஏதும் குறிப்பிடத்தக்கதாய் இல்லை என்பதுதான் என்னுடைய கருத்து.

**ஜென்ராம்** - தமிழ்நாட்டு மக்கள் இந்த அரசியல் கட்சிகளை ஆதரிக்கிறாங்க. வாக்களிக்கிறாங்க. அந்த கட்சிகளுடைய தலைமைகள் கூட பெரியார் கொள்கையை பெரிதாக பண்பாட்டுத் தளத்தில் பின்பற்றுவதாகத் தெரியவில்லை. இன்றைய சமூகச் சூழலில் பெரியாருடைய தேவை, பெரியாருடைய கொள்கைகளுடைய தேவை இன்னும் தீவிரமாக தேவை அப்படின்னு நீங்க நினைக்கிறீங்க?

**கொளத்தூர் மணி** - நிச்சயமா அதிகமாக உழைக்க வேண்டும். வேலை செய்தாக வேண்டும். அண்மைக் கால நிகழ்வுகள் இன்னும் அதை உறுதிப்பட செய்கிறது.

**ஜென்ராம்**-அந்த அண்மைக்கால நிகழ்வுகளுக்குதான் போகத் தூண்டுது. தமிழ்நாட்டில் இப்படி ஒரு நிலைமை வரும்னு நீங்க ஒரு பத்தாண்டுகளுக்கு முன்னால் நினைச்சுப் பார்த்திருப்பீங்களா?

**கொளத்தூர் மணி** - நினைத்துப்பார்க்கவில்லை யாரும். இவ்வளவு மோசமான ஒரு சூழல் ஏற்படும். இப்படிப்பட்ட தாக்குதல் நடைபெறும் என்று நாங்கள் கருதி பார்க்கவில்லை. வழக்கமாக ஒரு சமுதாயம், எந்த இயக்கமும் இல்லை என்றாலும் அது முன்னேற்றப் பாதையில்தான் முன்னோக்கிதான் சென்று கொண் டிருக்கும். எங்களைப் போன்ற சமுதாய இயக்கங்கள் அந்த வேகத்தை விரைவு படுத்துவதற்குதான் ஆகுமே தவிர இயல்பாக எல்லா சமுதாயத்திலும் முற்போக்கு திசையில் மாற்றங்கள் நடக்க வேண்டியதுதான். ஆனால் இந்த கட்சிகள், சில ஜாதிக் கட்சிகள், சில அமைப்புகள் இப்போது சமுதாயத்தின் காலை பிடித்து பின்னோக்கி இழுக்கிற முயற்சியில் ஈடுபட்டிருக்கிறார்கள். இன்னும் நாம் வேகமாக அழுத்தமாக பணியாற்ற வேண்டும் என்பதைதான் அது நமக்குச் சொல்கிறது.

**ஜென்ராம்** - அவர்கள் தமிழ்த் தேசியம் பேசறாங்க. திராவிடத்திற்கு எதிரான பிரச்சாரத்தை மேற்கொள்றாங்க. அவங்க பேசற தமிழ்த் தேசியத்திற்கும் நீங்க பேசற தமிழ்த் தேசியத்திற்கும் இடையில என்ன வேறுபாடு?

**கொளத்தூர் மணி** - பெரியாரை பொருத்த வரை தேசியம் என்ற சொல்லை தேசிய இனங்களுக்கு சுயநிர்ணய உரிமை என்ற அர்த்தத்தில் சில இடங்களில் பயன்படுத்தி யிருந்தாலும் கூட அவரைப் பொருத்தவரை அவர் பேசியது தனித்தமிழ்நாடுதான். ஜாதி ஒழிந்த சமுதாயம் அமைவதற்கு ஒட்டுமொத்த இந்தியம் என்பது தடையாக இருக்கும் என்று அவர் கருதினார். இந்தியா என்ற துணை கண்டத்தில் இருந்து தமிழ்நாடு பிரிந்து வந்துவிட வேண்டும். அதுதான் ஒரு சமத்துவ சமுதாயத்தை படைப்பதற்கு வழி வகுக்கும் என்று கருதினார். அதற்காக அவர் பேசினார். எழுதி வைக்கப்பட்டத் தத்துவங்கள் சிலவற்றைக் கொண்டு தேசிய இனங்களைப் பற்றி தத்துவம் இருக்கிறது. அதன்படி நமக்கு சுயநிர்ணய உரிமை வேண்டும். என்று பேசுபவர்கள் இப்போது அதையே பேசுகிறார்கள். அவர்களிடம் எங்களுக்கும் கேள்வி இருக்கிறது. நாங்கள் கூட பேசுவது உண்டு. இந்தியா விடுதலை பெற்றால் எல்லாம் தீர்ந்து விடும் என்று ஒரு காலத்தில் சொன்னார்கள். அன்னியனை விரட்டிவிட்டால் போதும் என்று சொன்னார்கள். இப்போதும் சொல்கிறார்கள். இந்தியனை விரட்டிவிட்டால் போதும். தமிழனாகிவிட்டால் வந்துவிடும் என்று. சமுதாயத்தில் மாற்றத்தைப் பற்றிய அக்கறை இல்லாத விடுதலை என்பதே தேவையற்றது என்றே நாங்கள் கருதுகிறோம். சமூக விடுதலையோடு கூடிய தேசிய இன விடுதலைதான் சரியானதே தவிர வெறும் தேசிய இனம் மட்டும் விடுதலைப் பெற்றால் அடிமைகள் தொடர்ந்து அடிமை களாகத்தான் இருப்பார்கள். நாங்கள் கூட அண்மையில் ஒரு கூட்டத்தில் பேசுகிற போது ஒரு ஜாதியவாதி கேட்டார்.... தேனீர்க் கடைகளில் இரட்டைக் குவளை பற்றி பரப்புரை செய்கிற போது நீங்கள் அனைத்து சாதியினரும் அர்ச்சகர் ஆவதை பற்றிப் பேசுங்கள், கடவுள் இல்லை என்று பேசுங்கள், இட ஒதுக்கீடை பற்றி பேசுங்கள்.. எப்போது பெரியார் இரட்டைக் குவளைக்கு எதிராக பேசினார் என்று கேட்டார். காவிரி நீர் உரிமைக்கு பேசுங்கள் என்றார். அப்போது நாங்கள் சொன்னோம். காவிரி நீர் உரிமைக்கு போராடத் தயார். கர்நாடகக்காரன் காவிரி நீர் தரவில்லை என்பதற்குப் போராடுகிறோம். நீங்கள் உங்கள் கிராமத்தில் உள்ள தாழ்த்தப்பட்டவனுக்கு தண்ணீர் தர மறுக்கிறீர்கள். நான் பேசிய அந்த கிராமத்தில் அந்த பஞ்சாயத் தினுடைய தலைவராக இருந்தவர் ஒரு தாழ்த்தப்பட்டவர். அவர் தன்னுடைய பகுதிக்கு அரசு செலவில் அமைத்திருந்த குடிநீர் குழாயை உடைத்துவிட்டனர் ஆதிக்க சாதியினர். உள்ளூரில் இருக்கிற தண்ணீரை உள்ளூரில் உள்ள இன்னொரு தமிழனுக்கு கொடுக்க மறுக்கிற உங்களுக்கு கர்நாடகத்துக்காரன் தண்ணீர் தரவில்லை என்பதற்காக எதிர்த்துப் போராடுவதற்கு என்ன யோக்கியதை இருக்கிறது என்றுதான் பேசினோம். நாங்கள் பேசுவது... மற்றவர்களிடமிருந்து வெறும் விடுதலை பெறுவது அல்ல. ஒட்டுமொத்த மக்களும் விடுதலை பெற்ற விடுதலையை தான் பெரியார் தனித்தமிழ்நாடு என்று குறிப்பிட்டார். எங்களுக்கும் தமிழ்த் தேசியவாதிகள் பேசும் தமிழ்த் தேசியத்துக்கும் வேறுபாடு இருக்கிறது.

**ஜென்ராம்** - கடவுள் நம்பிக்கை தொடர்பாக இருக்கக் கூடிய தமிழ்ச் சூழலை இன்று எப்படி நீங்க பார்க்கறீங்க.

**கொளத்தூர் மணி** - கடவுள் நம்பிக்கை என்பது இருக்கிறது. ஆனால் அதனுடைய தன்மை குறைந்து விட்டது. Quality குறைந்துவிட்டது என்பதுதான். Qualitative change இருக்கிறது. அந்த காலத்தில் கடவுளை நம்பியதைப் போல இப்போது நம்பத்தயாராக இல்லை. அய்யப்பன் கோயிலுக்கு போகிறார்கள். 48 நாள் விரதத்தை, முப்பதாக குறைத்து பதினைந்தாக குறைத்து இரண்டு நாள் விரதம் என்று போகத் தொடங்கி யிருக்கிறார்கள். ஆக அந்த அளவில் குறைந்திருக்கிறது என்பதை நாங்கள் பார்க்கிறோம். நம்பிக்கை இருக்கலாம். தன்மை குறைந்திருக்கிறது.

**ஜென்ராம்**- தமிழ்த் தேசியம், தமிழ், தமிழர் விடுதலை இதைப் பற்றி பேசக்கூடியவர்கள் மத்தியிலே கூட கடவுள் நம்பிக்கை இருக்கிறதையும் பார்க்க முடிகிறது.

**கொளத்தூர் மணி** - இருக்கலாம். இருக்கும். இருக்கிறது.

**ஜென்ராம்** - நீங்கள் ஒத்த கருத்துள்ளோரோடு ஒரே அணியாக செயல்படும் போது அந்த தளத்தில் செயல்படுவதற்கான சாத்தியம் எவ்வளவு தூரம்? இல்லை வேறுபடும் புள்ளிகளை பற்றி பேசுவதில்லையா?

**கொளத்தூர் மணி** - ஒன்றுபடும் புள்ளிகளை இணைத்துதான் ஒரு பொது செயல்திட்டத்தில் செயல்பட முடியும். இப்போது முல்லைப் பெரியாறுக்காக போராடிய போது அதை மட்டும் முன்னிறுத்திதான், அந்த கருத்துள்ளவர்கள் எல்லாம் இணைந்துக் கொண்டோம். காவிரி உரிமைன்னா அந்த கருத்து உள்ளவர்கள்.. ஈழப் பிரச்னைனா அந்த கருத்தில் ஒற்றுமை உள்ளவர்கள் எல்லாம் கலந்து பேசுகிறோம். அப்போது நாங்கள் கடவுள் நம்பிக்கையை ஒரு தடையாக வைப்பதில்லை. அப்ப எல்லோரும்.. இந்த கருத்தில் ஒற்றுமை உள்ளவர்கள் வாருங்கள் போராடலாம். அடுத்தடுத்து செயல்படும்போது ஒற்றுமை இல்லை யென்றால்.. அவர்களை தவிர்த்துவிட்டு நாங்கள் வேறணி அமைத்துக் கொள்கிறோம்.

**ஜென்ராம்**- பெண்ணடிமைத்தனத்தை போக்கு வதற்கா பெண் விடுதலை அல்லது பெண்ணை சமமாக சமூகத்தில் நடத்துவது போன்ற விஷயங்களில் இன்றைய தமிழ்ச் சூழல் எவ்வளவு தூரம் முன்னேறி இருக்குன்னு நீங்க நினைக்கிறீங்க?

**கொளத்தூர் மணி** - படித்த பெண்கள் மத்தியில் அந்த கருத்து வளர்ந்திருக்கிறது என்பது உண்மைதான். இப்போது சமூக இடைவெளி இருக்கிறது. முதல் தலைமுறைக்கும் இந்த தலைமுறைக்கும் இடையில் சில உரசல்களும் நடந்து கொண்டிருக்கிறது என்பதே கூட இவர்கள் உரிமையின் பால் சென்று கொண்டிருக் கிறார்கள். உரிமையை அவர்கள் கைப்பற்றுவதை விடாமல் தடுக்க பெற்றோர்கள் மூத்தவர்கள் எல்லாம் தடுத்துக் கொண்டிருக்கிறார்கள் என்பது புரிகிறது. இப்போதைய பெண்களுக்கு சுதந்திர உணர்வு வளர்ந்து கொண்டிருக்கிறது. அதைப் பெற்றுக் கொண்டிருக் கிறார்கள் என்பது என்னுடைய கருத்து.

**ஜென்ராம்** - தமிழ்த் தேசியம் திராவிடர் வேறுபாடு பற்றி பேசிக் கொண்டிருந்த இயக்கங்கள் நேரடியாகவே பெரியார் என்ற மனிதன், பெரியாரியல் என்ற கருத்தியல் தமிழர்களிடம் ஏற்படுத்திய சிந்தனை தாக்கம்தான் தமிழர்களின் வீழ்ச்சிக்கே காரணம் அப்படின்னும் பேசத் தொடங்கறாங்க

**கொளத்தூர் மணி** - பேசலாம். அதை விளக்க வேண்டும். எது எது தமிழர் வீழ்ச்சிக்குக் காரணமாக இருந்தது என்று விளக்க வேண்டும். நேரடியாக பெரியாரை பிடிக்காதவர்கள், பெரியாரை திட்ட விரும்புபவர்கள்தான் திராவிடம் என்று ஒட்டுமொத்தமாக பேசிக் கொண்டிருக்கிறார்கள். பெரும்பாலோர் அப்படிதான். ஒரு சிலரை தவிர. பெரியாரை நேரடியாக திட்ட முடியாது திராவிடர் இயக்கம் என்று சொல்லிவிட்டுப் போகலாம் என்று பேசுபவர்கள் இருக்கிறார்கள். சில பேர் கடவுள் நம்பிக்கையாளர்கள் இருக்கிறார்கள். அவர்கள் கூட

*4 ஆம் பக்கம்*

# முற்போக்குப் பேசும் பார்ப்பனர்கள் தனி இயக்கம் நடத்தாதது ஏன்?

*கொளத்தூர் மணி உரை - 3ஆம் பக்கத் தொடர்ச்சி*

பேசுவதில்லை. வேறு சிலர் அதை பேசத் தொடங்கியிருக்கிறார்கள். அவர்கள் ஒரு வேளை எல்லோரும் பேசுவதை விட நாம் மாற்றி பேசினால் பிரபலமாவோம் என்று கருதுகிறார்களோ என்னவோ தெரியாது. சில பேர் தமிழன்தான் இந்த நாட்டை ஆள வேண்டும் என்று பேசுகிறார்கள். நான் கூட கேட்க விரும்புவது உண்டு. சிதம்பரம் நல்ல தமிழர்தான். நாராயணசாமி நல்ல தமிழர் தான். அவர்கள் தலைமையை ஏற்றுக் கொள்வார்களா என்று எனக்குத் தெரியாது. தமிழர்களாக இருந்தால் மட்டும் போதும் என்று பேசுபவர்களுக்கு நான் வைக்கிற கேள்வி. கொள்கை அளவில் தமிழர்களுக்கு எதிரான, தமிழர் வளர்ச்சிக்கு எதிரான தமிழர்களுடைய தன்மானத்துக்கு எதிரான எந்த செயல்பாட்டை செய்தாலும் அவனை எதிரி என்று சொல்ல வேண்டும். அவன் தமிழனாகக்கூட இருக்கலாம். எங்களைப் பொருத்தவரை நாங்கள் வீட்டு மொழியை கணக்கில் எடுத்துக் கொள்வதில்லை. சமுதாயத்தில் எப்படி இருக்கிறான். அவன் கல்விக்கோ பிறரோடு தொடர்பு கொள்வதற்கோ என்ன மொழியை பயன்படுத்துகிறானோ அவனாகத்தான் நாங்கள் பார்க்கிறோம். நாங்கள் வேறுபடுத்திப் பார்ப்பதில்லை. ஆனால் இவர்கள் அதை கூட வீட்டுக்குள் நுழைந்து அங்கு பேசுவதை பார்த்து முடிவெடுக்க வேண்டும் என்று கருதுகிறார்கள். தமிழர் என்று பிறப்பை மட்டும் வைத்து பேசுவதை எப்போதும் திராவிடர் இயக்கம், பெரியார் இயக்கம் ஏற்றுக் கொள்வதில்லை. அவர்கள் எடுத்துச் செல்கிற சிந்தனைதான் முக்கியம் என்று நாங்கள் பார்க்கிறோம்.

**ஜென்ராம்** - 400-500 வருடங்களாச்சு. இந்த பூமியில் இருக்கீங்க. இந்த காற்றை சுவாசிக்கிறீங்க. இன்னும் உங்களுடைய வீட்டில பேசக் கூடிய தாய்மொழியை மாற்றாமல் இருக்கிறீங்க. தமிழர்களுடன் நீங்க கரையாமல் இருக்கிறீங்க. அப்பறம் உங்களுக்கு எப்படி ஆளும் உரிமை அப்படிங்கிற வாதத்தை அவங்க முன் வைக்கிறாங்க

**கொளத்தூர் மணி** - எல்லோரும் தமிழ் பேசினால்கூட சென்னைத் தமிழ் பேசுபவர்களை ஒத்துக்கொள்ள மாட்டோம் என்று கூட அவர்கள் சொல்லத் தொடங்குவர்கள். இவர்களே கர்நாடகத்தில் வாழ்கிற தமிழர்களுக்கு உரிமை இல்லை என்று பேசுகிறார்கள். இதே குற்றச்சாட்டை தமிழர்கள் மீது கன்னடர்களும் வைக்கிறார்கள். கர்நாடகத்தில் வாழ்ந்தால் கூட எங்கள் நாட்டில் வாழ்ந்து கொண்டு இன்னும் நீங்கள் வீட்டில் தமிழ்தான் பேசுகிறீர்கள். தமிழ்ப் பள்ளி வேண்டும் என்று கேட்கிறீர்கள். தமிழ் வழியில் பயில வேண்டும் என்று கேட்கிறீர்கள். நீங்கள் எல்லாம் இந்த நாட்டுக்கு துரோகி என்பதாக அந்த நாட்டுக்காரர்கள் பேசுகிறார்கள். அதை எப்படி பார்ப்பது என்பதைதான் என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை. ஒற்றை அளவுகோல் வேண்டும். எதை சொன்னாலும் சரி. ஒற்றை அளவு கோலை வையுங்கள். எல்லோரும் மாநில மொழியில் கல்வி கற்க வேண்டும் என்று வையுங்கள். எல்லோரும் தாய் மொழியில் கல்வி கற்க வேண்டும் என்று வையுங்கள். நாங்கள் தாய்மொழிக் கல்வியை வலியுறுத்துபவர்கள். மாநில மொழி என்பதை விட தாய்மொழிக் கல்வியை வலியுறுத்துகிறோம். அரசு பதவிகளுக்குப் போவதற்கு மாநில மொழியில் தேர்ச்சி இருக்க வேண்டும் என்பதை ஏற்றுக் கொள்கிறோம்.. தொடக்கக் கல்வியை தாய்மொழியில்தான் கொடுக்க வேண்டும் என்பது எங்களுடைய கருத்து. அது கர்நாடகத்தில் இருக்கிற தமிழனுக்கும் பொருந்தும். தமிழ்நாட்டில் இருக்கிற தெலுங்கனுக்கும் பொருந்தும்.

**ஜென்ராம்** - வேற்று மொழி பேசுபவர்கள் ஆட்சி அதிகாரத்துக்கான போட்டியிலிருந்து விலகிக்குங்க. எங்களுக்குள்ள நல்ல தமிழனை தேர்ந்தெடுக்கிறது. மோசமான தமிழனை ஒதுக்கிறது அப்படிங்கிறதை நாங்க பார்த்துக்கிறோம், என்று....

**கொளத்தூர் மணி** - அப்படி சொல்பவர்களிடம் நான் வைக்கிற கேள்வி ஒன்று இருக்கிறது. அவர்கள் தமிழர்களாக பிரிந்த பின்னால் அவர்களில் நல்லவர்கள் கெட்டவர்களை பார்த்து நாங்கள் வெற்றி பெறச் செய்ய முடியும் என்று சொல்பவர்கள் ஏன் பிறமொழியாளர்களை ஒதுக்கி விடுங்கள்.. அவர்களுக்கு வாக்களிக்காதீர்கள் என்று பேசி மக்களை இணங்கச் செய்யலாமே. பிரித்த பின்னால் பேசுபவர்கள் இப்போதே பேசத் தொடங்கலாம். எங்களுக்கும் உங்கள் வாக்கு வேண்டியதில்லை. தெலுங்கன் வாக்கு எனக்கு வேண்டாம். கன்னடன் வாக்கு எனக்கு வேண்டாம். எனக்கு தமிழன் வாக்கு மட்டும் போதும். எனக்கு தமிழர்கள் வாக்களித்தால் போதும். என்று சொல்லட்டுமே! ஒன்று அப்படிச் சொல்ல வேண்டும். அல்லது இதில் இருக்கிற தமிழ்மொழி பேசாதவனை தேர்ந்தெடுக்காதீர்கள் என்று மக்களிடம் போய் அவர்களிடம் பரப்புரை செய்து மக்களையே அப்படி தேர்ந்தெடுக்க செய்து விடலாம். ஜனநாயக நாட்டில் அவர்களுக்கு உரிமை இருக்கிறது. தமிழர்களாக பிரிந்த பின்னால் பேசி அவர்களை வெற்றி பெறச் செய்யக் கூடியவர்கள் ஏன் இப்போதே பேசி செய்யலாமே

**ஜென்ராம்** - 2016 சட்டமன்றத் தேர்தல் கிட்டத்தட்ட அந்த நிலையை நோக்கி போகிற மாதிரிதான் இப்ப இருக்கிற சில அரசியல் கட்சிகள் பேசிட்டு இருக்கிறத பார்க்கும்போது ஒரு தோற்றம் வருது. அவங்க இப்பவே அதேபோல்தான் பேசறாங்க. உதாரணமா நாம் தமிழர் கட்சி 2016-ல தேர்தலை சந்திக்கிறதுன்னு முடிவெடுத்திருக்காங்க. பாட்டாளி மக்கள் கட்சி திராவிடக் கட்சிகளோடும் தேசியக் கட்சிகளோடும் கூட்டணி இல்லை அப்படின்னு சொல்லியிருக்காங்க. அவங்க இரண்டு பேருடைய நிலைப்பாடும் கிட்டத்தட்ட ஒரே நிலைப்பாடாக இருக்கிறது.

**கொளத்தூர் மணி** - ஒரே நிலைப்பாடாக இருக்கிறது. ஆனால் ஒருவர் இது திரிந்த பால் என்கிறார். மற்றொருவர், நான் கறந்த பால் அவர் திரிந்த பால் என்கிறார். எனவே அவரோடும் அவர் சேரப் போவதில்லை. தனித்தனியாக இரண்டு பேரும் போட்டியிடலாம்.

**ஜென்ராம்** - தனித்தனியாக போட்டியிடலாம். ஆனால் இந்த கருத்தை வந்து இரண்டு பேரும்..

**கொளத்தூர் மணி** - முற்று முழுதாக தமிழர்களாக மட்டுமே இருக்கிற தாழ்த்தப்பட்ட மக்களை பாட்டாளி மக்கள் கட்சி என்னவென்று சொல்கிறது என்பதை இப்போது நாம் தெரிந்து கொண்டால் நன்றாக இருக்கும். ஏன்னா அவர்கள் தமிழர்கள்தான். அவர்கள் வேற்றுமொழி பேசு பவர்கள் அல்ல. ஏன்னா அருந்ததியர்களை கூட விலக்கி விடலாம். மற்ற இரண்டு தாழ்த்தப்பட்ட பெருங் குழுக்களும் தமிழ் மொழி பேசுபவர்கள். தாய் மொழியாக தமிழைக் கொண்டவர்கள் தான். அவர்களோடு இணங்கிப் போவார்களா, அவர்களோடு இணைந்து கொள்வார்களா என்பதை அந்தத் தலைவர்கள்தான் வெளிப்படுத்த வேண்டும்.

**ஜென்ராம்** - தமிழர்கள் ஆள வேண்டும் என்கிறார்கள் அவர்கள். திராவிடர் என்று நீங்கள் பேசுகிறீர்கள். அது என்ன ஒரு அடையாளம். மனிதனுக்கு இருக்கக் கூடிய ஒரு அடையாளம்தானா! ஒற்றை அடையாளத்தோட ஒருவனுடைய வாழ்க்கை முடிந்து போகுதா என்ன?

**கொளத்தூர் மணி** - முடியவில்லை. நான் வழக்கமாக சொல்வது உண்டு. ஒவ்வொரு மனிதனுக்கும் பல அடையாளங்கள் உண்டு. எனக்கு வீட்டில் என் மகளிடம் அப்பா என்ற அடையாளம் உண்டு. என் அம்மாவிடம் மகன் என்ற அடையாளம் உண்டு. என் மனைவிக்கு நான் கணவன் என்ற அடையாளம் உண்டு. வெளியே நான் வருகிறபோது என்னுடைய தொழிலுக்கு அடையாளம் உண்டு. அப்படிதான் சமூக விடுதலைப் போராட்டத்தில் திராவிடர் என்ற அடையாளத்தோடு ஆரிய பண்பாட்டுக்கு எதிராகப் போராடுவோம். அரசியல் விடுதலைக்கு தமிழன் என்ற அடையாளத்தோடு தமிழ்நாட்டு விடுதலைக்குப் போராடுவோம். ஏன் ஒற்றை அடையாளத்துக்குள் சுருக்கிக் கொள்ள வேண்டும் என்பதுதான் எங்களுடைய கேள்வி. அப்படி பெரியார் இதையெல்லாம் இணைத்தச் சொல்லாகப் பார்த்திருந்தால்.. ஆந்திரா விலகிய போது மகிழ்ச்சியை வெளியிட்டார். ஆந்திரா விலகியது மகிழ்ச்சி என்று சொன்னார். கன்னடமும் கேரளாவும் பிரிந்த போது இவர்களுக்கு ஆரிய எதிர்ப்புணர்வும் இல்லை. இந்திய எதிர்ப்புணர்வும் இல்லை, இவர்கள் போய் தொலைந்தால் நல்லது என்று கருதினேன். நல்ல வாய்ப்பாகப் போய் விட்டார்கள் என்று மகிழ்ச்சிதான் தெரிவித்தார். உண்மையிலேயே இவர்களை எல்லாம் இணைத்தச் சொல்லாக திராவிடரை வைத்திருந்தால் அவர்கள் எல்லாம் பிரிந்த போது அவர்கள் போகக் கூடாது இணைந்திருக்க வேண்டும் என்றல்லவா பெரியார் சொல்லியிருப்பார். அதை கூட புரிந்து கொள்ள முடியாதவர்களாகத்தான் இதைச் சொல்லுகிற தலைவர்கள் இருக்கிறார்கள்.

**ஜென்ராம்** - பிறப்பின் அடிப்படையில் ஒருவரை அடையாளப்படுத்திச் செய்யக் கூடிய அரசியல் எவ்வளவு தூரம் சரியானது என்பதுதான் கேள்வி. ஏன்னா ஒரு மனிதனுக்கு பிறப்பு தற்செயலானது. நாம் விரும்பி ஏற்றுக் கொள்வது அல்ல. அப்படி இருக்கும் போது அரசியல் தளத்தில் அவர்களை ஒதுக்கி வைத்து விட்டு அரசியல் செய்வது என்பது எவ்வளவு தூரம் சரியானது.

**கொளத்தூர் மணி** - சரியானது அல்ல என்றுதான் நான் சொல்கிறேன். யாரையும் பிறப்பின் அடிப்படையில் ஒதுக்க வேண்டியதில்லை என்பதுதான் எங்களுடைய கருத்து.

**ஜென்ராம்** - பிறப்பின் அடிப்படையில் பார்ப்பனர்களை திராவிடர் கழகத்திற்குள் சேர்க்கிறது இல்லை?

**கொளத்தூர் மணி** - உறுப்பினர்களாக சேர்ப்பதில்லை. அவர்கள் இணைந்து போராடுவதில் தடையில்லை.

**ஜென்ராம்** - இணைந்து போராடுவதில் தடையில்லை. ஆனால் உறுப்பினர்களாக சேர்ப்பதில்லை?

**கொளத்தூர் மணி** - ஆம். பெரியாரோடு சேர்ந்து தி.ராஜ கோபாலாச்சாரியார் என்பவர் போராடி இருக்கிறார். அவரோடு சேர்ந்து இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் இணைந்து போராடி இருக்கிறார். உறுப்பினராக சேர்ப்ப தில்லை என்று சொல்வதற்கு காரணம் ஏற்கெனவே புத்த மதத்தில் நேர்ந்தது எல்லாம் எச்சரிக்கைக் கொடுக்கிறது. புத்த மதத்தில் புத்தருடைய தத்துவங்கள் தாழ்ந்த வழியாக சொல்லப்பட்டது. ஹீனயானமாக சொல்லப்பட்டது. பார்ப்பனர்கள் சேர்ந்த பின்னால் அவர்கள் கொண்டு வந்த புத்தரை கடவுளாக்கிய வழிதான் மஹாயானமாக குறிப்பிடப்பட்டது. புத்தருடைய நேரடி கொள்கைகள் ஹீனயானமாக - அதாவது சின்ன வழியாகவும் புத்தருக்கு மாறான கொள்கைகள் பெரிய வழியாகவும் மஹாயானமாகவும் மாற்றிவிட்டார்கள். ஒரு இயக்கத்தில் நுழைந்து செய்கிற சிதைவுகளை பார்த்த எச்சரிக்கை உணர்வு, அவர்களை இணைக்க வேண்டாம். அமைப்புக்குள் உறுப்பினராக கொண்டு வர வேண்டாம். போராடுவதில் நமக்கு ஒன்றும்... தடையில்லை. தாராளமாகப் போராடட்டும். இன்னும் சொல்லப் போனால் நான் அடிக்கடி சொல்வதுண்டு. ஏன் நாங்கள் கட்டி வளர்த்த இயக்கத்தில் உறுப்பினராக வேண்டும் என்று துடிக்கிறீர்கள். பார்ப்பனியம் தவறானது பார்ப்பனர்கள் தவறானவர்கள் என்று கருதினால் அந்த இளைஞர்களே ஒன்றாக சேர்ந்து அவர்கள் இனத்திடம் கேள்வி கேட்கட்டும். ஏன் சமுதாயத்தை பிளவுபடுத்துகிறீர்கள்? ஏன் அடிமைப்படுத்துகிறீர்கள் என்று கேளுங்கள். கைவிடச் சொல்லிப் போராடுங்கள் என்று நாங்கள் கேட்பதுண்டு.

**ஜென்ராம்** - தனியாக அங்க ஒரு அமைப்பைக் கட்டி அவங்க ஏன் போராடணும்? நீங்க ஒரு அமைப்புக் குள்ள சேர்த்துட்டு, அல்லது உங்களுடைய வழி காட்டுதல்ல அந்த அமைப்புக்குள்ள அவர்கள் செய்ய வேண்டிய வேலைகளுக்கு அவர்களை Operate பண்ணலாம்ல. அவர்களை அமைப்புக்குள்ளேயே அரசியல் தளத்திலிருந்தே நீங்கள் விலக்கி வைக்க வேண்டிய அவசியம் என்ன?

**கொளத்தூர் மணி** - அரசியல் தளத்திலிருந்து விலக்க வில்லை. உறுப்பினராக சேர்த்துக்கொள்வதில்லை. படையில் சேர்த்துக் கொள்வதில்லை. எதிரியோடு போராடினால் மகிழ்ச்சி. வரட்டும் என்று சொல்கிறோம்.

**ஜென்ராம்** - நீங்கள் இப்ப உதாரணத்துக்கு சொன்னீர்கள் எடுத்துக்காட்டாகச் சொன்னீர்கள் புத்த மதத்திற்கு போய் அவர்கள் செய்த வேலைன்னு... அப்ப அவர்களுடைய பிறப்புதான் அந்த குண நலன்களை தீர்மானிக்குதுன்னு நீங்க சொல்றீங்களா?

**கொளத்தூர் மணி** - இல்லை. தனக்கு.. இந்த சமுதாய அமைப்பைக் கட்டிக்காப்பதால் மேலாண்மை கிடைக்கிறது... பல அனுகூலங்கள் கிடைக்கிறது என்று கருதுகிற போது அதை கைவிடுவதற்கு எளிதில் யாருக்கும் மனம் வராது என்ற சிந்தனைதான் இதற்கு காரணம்.

**ஜென்ராம்** - அதிகாரத்தை சுவைத்துக் கொண் டிருப்பவர்கள்..

**கொளத்தூர் மணி** - அதை விடுவதற்கு எளிதில் மனம் வராது என்பதுதான் அதற்கு பின்னால் இருக்கிற கருத்து.

**ஜென்ராம்** - ஆனால் சரியான காரணத்திற்காக சரியான நோக்கத்திற்காக சமூக முன்னேற்றத்திற்காக தங்களுடைய வர்க்க நலனை அல்லது தங்களுடைய சாதி நலனை புறந்தள்ளிட்டு போராட்டக் களத்தில் இணைந்தவர்களும் இருக்கிறார்கள் அப்படிங்கிறத நீங்க ஏத்துக்கிறீங்களா?

**கொளத்தூர் மணி** - இருக்கிறாங்க.. இருக்கிறார்கள்.

**ஜென்ராம்**- அவர்களை நீங்கள் இணைத்துக் கொள்ள லாமே. அந்த புத்த மத எடுத்துக்காட்டுதான் நீங்க.

**கொளத்தூர் மணி** - அதைத்தான் நான் சொல்கிறேன். ஏன் தன்னுடைய இனத்தை எதிர்த்து அவர்களே போராடக் கூடாது? அவர்களுக்கு இப்படி போராட எங்களைவிட அதிக உரிமை உண்டு. எங்களைக்கூட எதிரியாக பார்க்கக் கூடும். ஆனால் தங்கள் சமுதாயத்தில் பிறந்த இளைஞர்களே தங்களுக்கு எதிராகப் போராடுகிறார்கள் என்றால் மாறக் கூட வாய்ப்பு இருக்கிறது. ஏன் அப்படி ஒரு பார்ப்பன அமைப்பு காலம் பூராவும் தோன்றவில்லை. இது வரை தோன்றவேயில்லை. தமிழர்கள் கட்டி வைத்த அமைப்பில் போய் அவர்கள்

*8ஆம் பக்கம்*

## ஈரோடு மாநாட்டில் பேராசிரியர் அருணன் எழுச்சி உரை

# குப்பையை எரிப்பது தனி மனித சுகாதாரத்துக்கு அவசியம்; மனு சாஸ்திரத்தை எரிப்பது சமூக சுகாதாரத்திற்கு அவசியம்

*மனு சாஸ்திரம் எரிக்கப்பட வேண்டியது அவசியம். இன்னும் சமுதாயத்தில் பார்ப்பனியம் தனது ஆதிக்கத்தை செலுத்திக் கொண்டிருக்கிறது என்று டிசம்பர் 24 ஆம் தேதி ஈரோட்டில் நடந்த கழக மாநாட்டில் "வரலாற்றில் மனுசாஸ்திரம்" என்ற தலைப்பில் பேசுகையில் பேராசிரியர் அருணன் வலியுறுத்தினார். அவரது உரை :*

மனுசாஸ்திரம் என்பது பற்றி பொதுவாக கேள்விபட்டிருப்பீர்கள், ஆனால் மனுசாஸ்திரம் போல, இந்த நாட்டிலே, ஒரு குறைந்த இடைவெளியிலே, கிட்டதட்ட ஒரு இருபது சாஸ்திரங்கள் உருவாயின. அதிலே மிகப் பழமையானது - இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முந்தையது - இருப்பதிலே மிகப் புனிதமானது என்று சொல்லப்படுவது மனுசாஸ்திரம். அந்த மனுசாஸ்திரத்தை ஏன் எரிக்கவேண்டும்? என்று விளக்குவதற்கான அருமையான விளக்க மாநாடு. அதிலே பேசுவதற்கான வாய்ப்பினை வழங்கிய கொளத்தூர் மணி அவர்களுக்கும், விடுதலை இராசேந்திரன் அவர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நண்பர்களே! குரங்கிலிருந்து முழுமையான மனித குலம் பரிணமித்தபொழுது, அது ஒரு ஆதி மனித சமூகமாக இருந்தது; வேட்டை சமுதாயமாக இருந்தது; அதிலேயிருந்து அடிமை சமுதாயம் வந்தது. ஆண்டான்களும், அடிமைகளும் நிறைந்த சமுதாயம் கிரேக்கத்திலே வந்தது; ரோமாபுரியிலே அப்படி நடந்தது; இந்தியாவிலே அடிமைச் சமுதாயம் இருந்ததா என்பதைப் பற்றியெல்லாம் ஆய்வாளர்கள் ஆய்வு செய்து கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு நாம் சொல்வோம் 'உங்களுக்கு சந்தேகமே வேண்டாம், இந்தியாவிலும் அடிமை சமுதாயம் நிலவியது' ஆனால் அது இந்திய பாணி அடிமைச் சமுதாயமாக இருந்தது; அது வேறு ஒன்றும் இல்லை, அது தான் வர்ணாசிரமம், வர்ணாசிரம முறைமை என்பது அடிப்படையில் இந்தியாபாணி அடிமைச் சமுதாயம். இங்கே எடுத்துச் சொன்னாரே, அந்த ஜாதிய படிநிலை அமைப்பு பற்றி. தந்தை பெரியார் அவர்கள் அதை ஒரு ஏணிப்படிபோல என்று சொன்னார் - ஏற்றமும் இறக்கமும் உள்ள ஒரு கட்டமைப்பு என்று சொன்னார் என்பதையெல்லாம் எஸ்.வி.ஆர் எடுத்துச் சொன்னாரே. அந்த பாணியிலே - அந்த முறையிலே - அனேகமாக உலகத்தில் வேறு எங்கும் இல்லாத ஒரு பாணியிலே, இந்த துணைக்கண்டத்திலே அடிமை முறை உருவானது. அந்த அடிமை முறைக்கான ஆதாரம் - அச்சாரம் - ரிக்வேதத்திலேயே உண்டு. ரிக் வேதத்திலே புருஷ சூக்தம் என்ற ஒரு பகுதி இருக்கின்றது. அது தான் அந்த பிரபலமான பகுதி. புருஷன் என்கிற அந்த கடவுளின் வாய் பிராமணன்; தோள் சத்ரியன்; தொடை வைசியன்; பாதங்கள் மட்டுமே சூத்திரன். இந்த அமைப்பு முறையை, தந்தை பெரியார் தான் மிக அற்புதமாக கேலி செய்தார். கடவுளின் இத்தனை அங்கங்களிலிருந்து நான்கு வர்ணங்கள் வந்ததாக சொல்கிறீர்கள், அப்படீன்னா இவங்க யாரும் ஒழுங்கா பிறக்கவில்லை என்றார் பெரியார்; பிறக்கவேண்டிய இடத்துல ஒழுங்கா பிறந்தவன் இந்தியாவிலேயே பஞ்சமன்தான் என்று தந்தை பெரியார் இந்த மண்ணிலே முழங்கினார். அந்த மண்ணிலே இருந்து, அவருடைய நினைவு நாளிலே இந்த மாநாடு என்பது மிக்க மகிழ்ச்சி. ஆகவே இந்த ஜாதி படிநிலை கட்டமைப்பு என்பது, ரிக் வேத காலத்தின் கடைசி கட்டத்திலே கிட்டதட்ட மூவாயிரத்து அய்நூறு ஆண்டுகளுக்கு முன்பே வந்துவிட்டது. ஆனால் மனுதர்மம் என்பது எப்போது வந்தது என்றால் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்புதான். நடுவில் இந்த ஆயிரத்தி அய்நூறு ஆண்டுகளிலே இந்த வர்ணாசிரமம் மெல்ல மெல்ல ஒரு வளர்நிலையை எட்டிக்கொண்டு வந்தது. அந்த காட்சியை நாம் இராமாயணத்தில் பார்த்தோம்.

சம்பூகன் வதம் பற்றி உத்தரகாண்டத்திலே மிக அற்புதமாக வர்ணிக்கிறார் வால்மீகி. இராமராஜ்யம் நடந்துகொண்டிருக்கிறது. ஒரு பிராமணன் அழுது கொண்டு வருகிறான்; இராமா என்னுடைய பிள்ளை இறந்துபோனான், தந்தை இருக்க தமயன் இறப்பது என்பது மகா அதர்மம் - மகா கொடுமை. அது உன்னுடைய ஆட்சியிலே நடந்திருக்கிறது என்றால் என்ன பொருள்? உன்னுடைய ஆட்சியிலும் அதர்மம் நடக்கிறது என்று பொருள். எங்கே அந்த அதர்மம் நடக்கிறது என்பதை கண்டுபிடித்து அதை களை என்று அந்த "பிராமணர்" புலம்பி அழுகிறார். உடனே இராமன் புறப்பட்டு சென்றான் எங்கே அதர்மம் நடக்கிறது என்று. அவன் கண்ணோட்டத்திலே வடக்கே போனான் காண முடியவில்லை; கிழக்கே போனான் காணமுடியவில்லை; மேற்கே போனான் காணமுடியவில்லை; தெற்கேதான் ஒரு அதர்மத்தை கண்டான். என்ன அதர்மம் என்றால் சம்பூகன் என்பவன் தவம் செய்துகொண்டிருக்கிறான். தவம் என்றால் ஏதோ ஒரு நோக்கத்திற்கான ஒரு தீவிர பயிற்சி. அப்படிப்பட்ட பயிற்சியில் ஈடுபட்டிருக்கும் சம்பூகனைப் பார்த்து இராமபிரான் கேட்கிறான், 'நீ எந்த வர்ணத்தவன்' அவன் ஏதாவது பொய் சொல்லி தப்பித்திருக்கலாம், ஆனால் பளிச்சென்று சொல்கிறான், நான் தவம் செய்பவன் பொய் சொல்ல மாட்டேன், நான் நான்காம் வர்ணத்தவன் என்றான். சொன்ன உடனே மின்னல் போல (இது நான் சொல்லும் வாக்கியமல்ல, வால்மீகி சொல்கிறான்) மின்னல் போன்று தன்னுடைய வாளை




எடுத்து அவனுடைய தலையை வெட்டினான் சிறீ இராமன். அடுத்து வால்மீகி சொல்கிறார், சம்பூகன் என்ற சூத்திரனின் தலையை வெட்டியவுடன் தேவாதி தேவர்கள் எல்லாம் மகிழ்ந்தனர்; இராமன் மீது பூமாரி பொழிந்தார்கள். மேலிருந்து கீழே வந்து, இராமா அற்புதமான காரியம் செய்து விட்டாய்; அதர்மத்தை ஒழித்துவிட்டாய்; உனக்கு என்ன வரம் வேண்டுமென்று கேட்டார்கள். இராமன் மிகப் பவ்யமாக ஒரே ஒரு வரம் தான் கேட்டான். அந்த "பிராமணன்" அழுதானே அவன் பிள்ளை மீண்டும் பிறந்து வரவேண்டும் என்றான். அதற்கு தேவாதி தேவர்கள் என்ன தெரியுமா பதில் சொன்னார்கள், 'கவலைப்படாதே, எப்போது நீ சம்பூகனைக் கொன்றாயோ அந்த கணத்திலேயே, அந்த பிராமணப் பிள்ளைக்கு உயிர் வந்துவிட்டது. சூத்திரர்களுடைய வாழ்வு செத்தால்தான் பிராமணர்கள் வாழமுடியும் என்பது தான் இராமாயணக் கால நீதியாக இருந்தது. இந்த இராமராஜ்யம் மீண்டும் வரவேண்டுமென்று சிலர் பேசுவது எவ்வளவு கொடுமை என்று நீங்கள் யோசிக்கவேண்டும். ஆனால் நான் இங்கு சொல்ல வருகிற செய்தி, இதுவும் கூட ஒரு அசாதாரணமான தனி நிகழ்சியாகத்தான் இராமாயணத்திலே காட்டப்பட்டதே தவிர, சூத்திரன் தவம் செய்தால் - சூத்திரன் கல்வி கேள்வியிலே இறங்கினால், இந்த குறிப்பிட்ட நியதியின்படி ராஜாவானவன் அவன் தலையை வெட்டவேண்டும் என்று ஒரு நீதி சாஸ்திரம் அன்றைக்கு இல்லை. முடிவெடுக்கிறான் இராஜா அந்த கணத்திலேயே வெட்டுகிறான் தலையை. அதனால்தான் தேவர்களெல்லாம் அசந்து போய் ஆச்சரியப்பட்டுப் போய், சூத்திரன் தவம் இருந்தால் வெட்டக்கூடிய ஒரு இராஜா கிளம்பி விட்டானே எனச் சொல்லி பூமாரி பொழிந்தார்கள்.

இதே போல மகாபாரதத்திலே ஏகலைவனின் கட்டை விரலை வாங்கினார் துரோணர் என்று கேள்விபட்டிருப்பீர்கள். நான் என்ன பார்க்கிறேன் என்றால், வியாசரின் மகாபாரதத்தை முழுமையாக படித்ததால் சொல்கிறேன், வில்வித்தை கற்றுக் கொள்ள வருகிறான் ஒரு வேடவன் - நம்ம மொழியில் அவன் ஒரு பழங்குடி. உனக்கு நான் கற்று தரமுடியாது என்கிறான் துரோணர். பிறகு அவனாக தன்னுடைய சொந்த முயற்சியிலே அந்த வில்வித்தையை கற்றுக்கொள்கிறான்; அதைப் பார்த்த அர்ச்சுணன் என்னைவிட இன்னொருவனுக்கு அதுவும் ஒரு "எஸ்.டி"க்கு (பழங்குடி) கற்று கொடுத்து விட்டாயே, நீ என்ன குரு என்று கேலி செய்கிறான். உடனே அந்த கணத்திலே யாரப்பா உனக்கு குரு என்று கேட்டவுடன், 'நீதான்' என்று அப்பாவித்தனமாக புரியாமல், ஏகலைவன் சொன்ன அந்த ஒரு வாக்கியத்தை வைத்து, நான் தான் உனக்கு குரு என்றால் எங்கே தட்சணை? அப்பவும் காசு புடுங்கற புத்தி போகல. தட்சணை என்றால் ஏதோ நல்ல சொல் அல்ல காசு புடுங்கறது தான் - அதன் அர்த்தம். எங்கே குரு தட்சணை எடு என்றால் அந்த மலைவேடன் என்ன செய்வான் எங்கே போவான் தட்சணைக்கு; என்ன தட்சணை வேண்டும்; என்னால் எதை கொடுக்க முடியும் என்கிறான் ஏகலைவன். உன் கட்டை விரலைக் கொடு, அதுதான் குருதட்சணை என்கிறார் துரோணர். என்ன கொடூரம்? மகாபாரத காலத்திலே ஒரு மலைவேடன் வில்வித்தை கற்றால் அவனுடைய கட்டை விரலை வெட்டவேண்டும் என்று ஒரு சூத்திரம் இருந்ததாக எனக்குத் தெரியவில்லை. அப்படியொரு சூத்திரம் இருந்து அதனடிப்படையில் துரோணாச்சாரியார் கட்டை விரலை வெட்டினார் என்றும் வியாசர் சொல்லவில்லை. எப்படி சாஸ்திரம் என்கின்ற அடிப்படையிலே சட்டம் என்கின்ற அடிப்படையில், இராமாயண மகாபாரத காலத்தில் கூட இன்னும் கறார்படுத்தப்படவில்லை. ஆனால், அதுவே சமுதாய சட்டமாக திணிக்கப்பட்டிருக்கிறது. இதுவே இந்திய பாணி - அடிமைமுறையாகிய வர்ணாசிரமம். இதை சட்டமாக்கிய கொடூரமான வேலையை செய்தவன் மனு. ஏன் அதை எரிக்க வேண்டும்?

இந்திய வரலாற்றிலேயே மனுசாஸ்திரத்தின் ஒரு முக்கியமான பங்கு என்னவென்று பார்த்தால், அதற்கு முன்பே பிறப்பின் அடிப்படையில் ஏற்றத் தாழ்வுகளைக் காட்டுகின்ற வர்ணாசிரமம் வந்துவிட்டது; அதற்கு முன்பே ஜாதியத்தின் அஸ்திவாரம் போடப்பட்டுவிட்டது. ஆனால் மனு சாஸ்திரம் தான் அதைக் உறுதிப்படுத்தியது - சாஸ்திரமாக உருவாக்கியது. இன்றைய மொழியிலே சொன்னால், "லா" வாக உருவாக்கியது; சட்டமாக உருவாக்கியது; இந்த காலத்து சட்டங்களை விட அந்த காலத்து சாஸ்திரங்கள் மிகவும் கறாரானவை - கெடுபிடியானவை - மிகுந்த செல்வாக்கு மிக்கவை. இப்போது நீங்கள் ஒரு குற்றம் செய்து விட்டால் எப்போது தண்டனை கிடைக்கும்? உங்கள் மீது ஒருவர் புகார் கொடுத்து, அந்த புகாரின் மீது காவல் நிலையத்தில் எஃப்.ஐ.ஆர் போட்டு (அதுவும் அந்த போலீஸ்காரருக்கு மனசு வந்தால்தான்), அதன்பிறகு ஜெயில், பெயில் இவ்வளவும் செய்யவேண்டும். ஆனால் அந்த காலத்தில் இதெல்லாம் ஒன்றும் தேவையில்லை. மனுசாஸ்திர விதிப்படி - விஷ்ணுசாஸ்திர விதிப்படி - யாக்ஞவல்கியரின் விதிப்படி - வசிஷ்டர் சாஸ்திர விதிப்படி இப்படி இருபது சாஸ்திர விதிகளில் ஏதேனும் ஒன்றின் அடிப்படையிலே, அது மீறப்பட்டிருக்கிறது என்று அந்த ஊரில் பக்கத்து வீட்டுக்காரருக்கு தெரிந்தால் கூட, அந்த கணமே அந்த கிராம பஞ்சாயத்து கூடி உங்களுக்கு தண்டனையை கொடுத்துவிடும். சட்டம் பெரிதா? சாஸ்திரம் பெரிதா? அந்த காலத்து சாஸ்திரம், இந்த காலத்து சட்டத்தை விட வலிமையானது - கொடூரமானது - மிகுந்த செல்வாக்கு மிக்கது - பயன்பாடு அதாவது கொடூரப் பயன்பாடு மிக்கது என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும் ஏதோ அந்த காலத்தில் எழுதி வைத்துவிட்டு போனதை

6 ஆம் பக்கம்

# பார்ப்பனியம் வெற்றிச் சிரிப்பு சிரிக்கிறது

*அருணன் உரை - 5 ஆம் பக்கத் தொடர்ச்சி*

இப்பொழுது ஏன் எரிக்கவேண்டும் என்றால், அது வெறும் எழுத்து அல்ல நண்பர்களே, தோழர்களே; அன்றைய கொடூரமான வாழ்க்கைமுறையின் சட்ட விதிமுறைகள்.

ஏற்கனவே இருந்த வர்ணாசிரமத்தை எப்படி கறார்படுத்தினான்? இங்கே எஸ்.வி.ஆர் கூட மிக அழகாக சுட்டிக்காட்டினார்கள். அம்பேத்கர் மிக விரிவாக எடுத்துச்சொன்னார். எப்படி இந்த மனுசாஸ்திரத்தின் மூலம் கறார்படுத்தினார்கள் என்றால் நான்கு வழிகள் மூலமாக. முதல் வழி வர்ண அடிப்படையிலான திருமண முறை - அகமண முறை; இரண்டாவது அந்த கட்டுப்பாட்டை மீறுகிறவர்களுக்கு கடும் தண்டனை; மூன்றாவது உத்தி இதையும் மீறி இயற்கை உணர்வு பீறிட்டு வர்ணம் விட்டு வர்ணம் மாறி குழந்தை பிறந்தால், அந்த குழந்தையை எந்த வர்ணத்தில் சேர்ப்பது? அதை மிகவும் தாழ்ந்த ஜாதியிலே சேர்; அதன் பெயர் என்ன என்ற பட்டியல் மனு சாஸ்திரத்தில் வருகிறது; நான்காவது முறை சொத்துரிமை பற்றியது. இந்த நான்கை வைத்துதான், இந்த ஜாதியத்தை கறார்படுத்தினான். நான் கூட யோசித்துப் பார்க்கின்றேன், தருமபுரி பிரச்சனைக்கு பிறகு, இந்த மாதிரி ஒரு கறார்தன்மை வரவேண்டாமா என்று இன்றைக்கு சில பேருக்கு மிக வருத்தமாக இருக்கின்றது. ஜாதி விட்டு ஜாதி திருமணமே செய்யக்கூடாது, மீறினால் மனு சாஸ்திரப்படி தண்டனை கொடுக்க வேண்டும்; அதையும் மீறி குழந்தை பிறந்தால் அந்த குழந்தையை கீழ் ஜாதியில் கொண்டு போய் சேர்க்கவேண்டும்; சொத்தே கொடுக்கக் கூடாது இந்த பிள்ளைக்கு என்று இன்றைக்கு கூட சிலர் ஆசைப்படுகிறார்கள். இதற்கெல்லாம் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே, அஸ்திவாரம் போட்டவன் இந்த கேடு கெட்ட மனு என்பதை நீங்கள் மனதிலே வைத்துக்கொள்ளுங்கள்.

இப்போதும் ஆய்வாளர்களுக்குள் நடந்து கொண்டேயிருக்கும் ஒரு விவாதம் என்னவென்றால், ரிக் வேதத்தில் புருஷ சூக்தம் என்பதை இறுதியாக இணைத்ததைப் போல தெரிகிறது; அது ஒரு இடை செருகல்  கடை செருகல் மாதிரி தெரிகிறது என்றெல்லாம் சில பேர் சப்பைக் கட்டு கட்டுகிறார்கள். மனுசாஸ்திரத்தை படித்தால் தெரியும், இதை ஒரு இடை செருகல் என்றோ, வேதத்திற்கு புறம்பானது என்றோ மனு நினைக்கவில்லை, மாறாக புருஷ சூக்தத்தில் உள்ள அந்த உருவகம்  புருஷன் என்ற கடவுள் - வாய், தோள், தொடை, கால் என்ற அந்த உருவகம் இருக்கிறதே, அதை அப்படியே மனு தனது சாஸ்திரத்தில் பயன்படுத்தியிருக்கிறார் என்பதுதான் உண்மை. என்னுடைய நூலிலே இதையெல்லாம் நான் ஆதார பூர்வமாக சொல்லியிருகின்றேன். நேரம் கருதி எந்த சுலோகம், எந்த பகுதி என்பதையெல்லாம் இங்கு சொல்ல முடியவில்லை. ஒரு சுலோகத்தில் மனு சொல்கிறார், பிராமணர்கள் புருஷ கடவுளின் வாயில் இருந்து பிறந்ததனால், பிராமணர்களே கடவுளின் மூத்த பிள்ளைகள். கடவுளைப் படுத்துகிற பாடு இருக்கிறதே! அடடா! அவருக்கு பிள்ளை குட்டியெல்லாம் கொடுத்தது இவர்கள் தான். மூத்த பிள்ளை என்கிற காரணத்தினால் பிற பிள்ளைகளுக்கு, பிறவர்ணத்தவருக்கு, கடமைகளை நிர்ணயிக்கிற உரிமை பிராமணர்களுக்கு மட்டுமே உண்டு என்று சுலோகம் சொல்கிறது. என்ன ஒரு கொடுமை.

அந்த காலத்தில் பெரியாரிடம் ஒரு கேள்வி கேட்கப்பட்டது; என்னங்க அய்யா எப்போதும் பிராமணர்களையே விமர்சனம் செய்து பேசுகிறீர்களே? இது என்ன நியாயம்? நிதானமாக பெரியார் சிரித்துக்கொண்டே பதில் சொன்னார் ‘வேறு ஒன்றுமில்லை, யார் முடிச்சு போட்டார்களோ, அவர்களே அதை அவிழ்த்தால் சுலபமாக அவிழ்த்து விடலாம் அதற்காகத்தான்’ என்று. ஆக இந்த சாஸ்திரங்கள் எல்லாம் “பிராமணர்களால்” எழுதப்பட்டவை என்பது மட்டுமல்ல, “பிராமணர்களுக்காக” என்றே எழுதப்பட்டவை. ஜாதிய கட்டமைப்பை காப் பதற்காகவே எழுதப்பட்டவை; பெண்ணடிமைத்தனத்தை கட்டமைப்பதற்காகவே எழுதப் பட்டவை.

மற்றொரு இடத்தில் கூட பிராமணர்களைப் பற்றி சொல்லும் போது, அந்த புருஷன் என்ற கடவுள் வாயில் இருந்து பிராமணர்கள் பிறந்ததற்காக பிராமணர்களின் வாய் மூலமாகவே வானவர்கள் தங்களுடைய அவிர் பாகத்தை பெறுகிறார்கள். பிராமணர்களின் வாய் மூலமாகவே பிதுர்க்கள் தங்கள் பிண்டங்களை பெறுகிறார்கள் என்றார்கள். இந்த வார்த்தைகளையெல்லாம் பார்த்து ஒன்றும் மிரளவேண்டாம்; யாகம் செய்யும் போது அந்த தீயில், புடவை மற்றும் பட்டு உள்ளிட்ட பொருட்களை போட்டு எரிக்கும் போது கிடைக்கும் பலன்களெல்லாம் வானவர்களுக்கு - தேவர்களுக்கு - பிராமணர்கள் மூலமாகத்தான் கிடைக்கிறதாம். பிராமணர்கள் வாய் மூலமாக கிடைக்கிறது என்று சொன்னால், பிராமணர்கள் நன்கு சாப்பிட்டால் கடவுளே நன்றாக சாப்பிட்டதாக அர்த்தம். அதனால் தான் ‘பிராமணா போஜனப் பிரியா’ என்ற வாக்கியத்தை அவர்களே சொன்னார்கள். அதேபோல திதி கொடுக்கும் போது, பிண்டங்களெல்லாம் வைப்பார்கள். அந்த காலத்தில் பிண்டங்களையே சாப்பிட்டிருக்கிறார்கள். ஆனால் அதிலும் மனுசாஸ்திரம் கறார்படுத்தியது. நமது அப்பாவுக்கு திதிகொடுக்க வரும் போது கூர்ந்து கவனியுங்கள். எங்கள் அப்பாவுக்கு சிக்கன் பிரியாணின்னா மிகவும் பிடிக்கும், நான் அதைத்தான் படைப்பேன், நீ அதை சாப்பிடவேண்டும், நீ சாப்பிட்டால்தான் உன் மூலமாக என் அப்பாவுக்கு கிடைக்கும் என்று சொல்லிப் பாருங்கள்; சாப்பிட மாட்டார், தெளிவாக மறுப்பார். அரிசி, காய்கறி, பருப்பு, என்று அவருக்கு எது தேவையோ அதைத்தான் திதி கொடுக்கச் சொல்வார். திதி அப்பாவுக்கு கொடுக்கிறோமா, இந்த புரோகிதருக்கு கொடுக்கிறோமா என்ற சந்தேகம் எனக்கு வரும். இந்த முறைகளெல்லாம் இன்றைக்கு வந்ததல்ல. இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே இதற்கெல்லாம் சட்ட வடிவம் கொடுத்தவன் மனு என்கின்ற காரணத்தினால் தான் நமக்கு இவ்வளவு ஆவேசமும், ஆத்திரமும் வருகிறது.

இந்த பிராமணியக் கட்டமைப்பை இப்படி கறார்படுத்தியே வந்து, திருமணம் என்று வரும் பொழுது, அவர் ஒரு வாக்கியத்தை சொல்கிறார். இரு பிறப்பாளர்களின் ஜாதி பெண்களோடு உடலுறவு கொண்ட சூத்திரனின் ஆண் குறியை சிதைக்கவேண்டும். நீங்கள் எரிக்கப் போகிறீர்களே! அந்த மனுசாஸ்திரத்தில் உள்ள ஒரு சுலோகம். இரு பிறப்பாளன் என்றால் யார்? பிராமண, சத்ரிய, வைசிய மூன்று பேரும் தான். அவர்களுக்கு இரண்டு பிறப்பு உண்டு இந்த பூமியிலே; ஒன்று தாயின் வயிற்றிலிருந்து பிறப்பது; மற்றொன்று உபநயனம் என்கின்ற அந்த வேதக் கல்வி சடங்கு நடக்கும் போது, அவனுக்கு இன்னொரு பிறப்பு. இந்த கல்வியினுடைய முக்கியத்துவத்தை மனு போன்றவர்கள் மிகத் தெளிவாக உணர்ந்திருந்தார்கள். நாம் இப்பொழுதான் கல்வியை உணர்ந்து கொண்டு வருகிறோம். ஆக அத்தகைய இரு பிறப்பாளர்களான பிராமண, வைசிய, சத்ரியர்களின் பெண்களோடு உடலுறவு கொண்ட சூத்திரனின் ஆண் குறியை சிதைக்க வேண்டும். எவ்வளவு கொடூரமான, கறாரான அகமண முறை. அதிலும் பெண் என்று வரும் போது ரொம்ப கண்டிப்பு. இதே மனு சொல்கிறார், இந்த உயர் ஜாதிக்காரர்கள் அடுத்தடுத்த தாழ்ந்த ஜாதிப் பெண்ணை திருமணம் செய்துகொள்ளலாம்; ஆனாலும் அந்தந்த ஜாதிக்குள் திருமணம் செய்த பெண்கள் தான் தர்மபத்தினி; மற்றவர்களெல்லாம் அதர்மபத்தினி என்று அர்த்தம். அதனால் தான் தந்தை பெரியார் சொன்னார், ‘நம்மையெல்லாம் வைப்பாட்டி மக்கள் என்று சொல்கிறார்கள்’ என்று. ஆமாம் மிகத்தெளிவாக எழுதி வைத்திருக்கிறார், ஒரு பிராமணர், பிராமணப் பெண்ணை மணக்கலாம், சத்ரியப் பெண்ணை மணக்கலாம், வைசியப் பெண்ணை மணக்கலாம், சூத்திரப் பெண்ணைக் கூட மணக்கலாம். ஆனால் அந்த பெண்கள் மூவரும் தர்மபத்தினி ஆகமாட்டார்கள். பிராமணருக்கு பிராமணப் பெண்ணே தர்மபத்தினி; அதேபோல சத்ரியனுக்கு சத்ரியப் பெண்ணே தர்மபத்தினி; வைசியனுக்கு வைசியப் பெண்ணே தர்மபத்தினி; சூத்திரனுக்கு பத்தினி என்றுதான் சொல்வான் தர்மபத்தினி என்றெல்லாம் சொல்லவே மாட்டான், அந்த தகுதியெல்லாம் கிடையாது. இந்த மூன்று பேரினுடைய நிலைமை என்ன? இன்னும் கூட கறார்படுத்துகிறான். நீ திருமணமும் செய்து கொள்ளலாம், திருமணம் செய்யாமலும் வைத்துக் கொள்ளலாம், அவர்களுக்கு குழந்தைகளும் பிறக்கலாம் ஆனால் அந்த குழந்தைகளுக்கு சொத்துரிமை கிடையாது. தந்தையாக பார்த்து ஏதேனும் கொடுத்தால் தான் உண்டு என்ற வாக்கியம் அப்படியே மனுசாஸ்திரத்தில் இருக்கின்றது. கீழ்ஜாதிப் பெண்ணை உயர் ஜாதி ஆண் மணக்கலாம், ஆனால் உயர் ஜாதிப் பெண்ணை கீழ் ஜாதி ஆண் மணக்கக் கூடாது. அதற்கு கடும் தண்டனை. காரணம், விஞ்ஞானம் தெரியாத அந்த காலத்தில் குழந்தை பிறப்பிற்கு ஆண் தான் காரணம் என்று நம்பினான். பெண் வெறும் நிலம்; விதை ஒன்று போட்டால் சுரை ஒன்றா முளைக்கும் என்ற அந்த சொலவடைகளையெல்லாம் நீங்கள் சாதாரணமானதாகக் கருதாதீர்கள், பெண்ணை இழிவுபடுத்துகிற சொலவடை. கஷ்டபட்டு பிள்ளைத் தருவது பெண்; அந்த பெண்ணின் வேதனையை நம்மை போன்ற ஆண்களெல்லாம் தங்களின் மனைவி பிள்ளை பெறும்போது உணர்வதில்லை, ஆனால் தன் மகள் பிள்ளை பெறும்போது படுகிற கஷ்டத்தை, தந்தையாகிய ஆண் மகன் உணர்கின்றான். இந்த வேதனையோடு பிள்ளை பெறுகிறவள் பெண். ஆனால் அவளுக்கு முக்கியத்துவமே இல்லை; சகலத்துக்கும் காரணம் ஆண் தான் எனச் சொல்லி, அந்த கோணத்திலிருந்து உயர் ஜாதிப் பெண்ணை கீழ் ஜாதி ஆண் திருமணம் செய்யக்கூடாது என்ற கொடூரமான மனுதர்ம சிந்தனை  மனு அதர்ம சிந்தனை, இன்றைக்கு வரைக்கும் இருக்கிறதே என்பது தான் வேதனை.

மருத்துவர் ராமதாசு மீது எனக்கு மிகுந்த மரியாதை உண்டு; வன்னிய இன மக்கள் உண்மையிலேயே மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்கள். ஆகவே அவர்களுக்கு தனி ஒதுக்கீடு வேண்டும் என்று போராடினார். கலைஞர் அவர்களின் ஆட்சியிலே அவர் அந்த ஜாதியைச் சார்ந்தவரல்ல என்றபோதிலும் மிகவும் பிற்படுத்தப்பட்டவர் என்ற ஒரு தனிப் பிரிவை உருவாக்கி, பிற்படுத்தப்பட்டவர்களின் ஐம்பது சதவீதத்திலிருந்து பிரித்து இருபது சதவீதத்தை பெற்றுத் தந்தார். இதற்காக மிகப் பெரிய போராட்டம்; தமிழகமே ஸ்தம்பித்தது. ஏனென்று கேட்டபோது அவர் என்ன சொன்னார், நாங்களெல்லாம் மிகவும் பிற்படுத்தப்பட்டவர்கள் - பிராமணியத்தால் ஒடுக்கப்பட்டவர்கள் - வர்ணாசிரமத்தால் நசுக்கப்பட்ட

7 ஆம் பக்கம்

## ‘நாயிலும் கீழானவன் சூத்திரன்’

**‘தீட்டு’ என்ற அந்த கருத்தியல் இருக்கிறதே, ஏதோ இன்றைக்கு நேற்று வந்ததல்ல. இதை உருவாக்கியது ஶி தொடக்கி வைத்தது மனு. நான் ஏற்கனவே சொன்ன அந்த இருபது சாஸ்திரங்கள் மனுவை விட கொடூரமானது. நமக்கு சமஸ்கிருத அறிவு இல்லை, தத் என்பவர் இருபது சாஸ்திரங்களையும் அப்படியே வார்த்தைக்கு வார்த்தை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்து பத்து பாகங்களாக வெளிவந்துள்ளது. அந்த நூல்களையெல்லாம் படித்தவன் என்ற உரிமையோடு பேசுகிறேன். அதில் ஒரு இடத்தில் வருகிறது, இறந்தவர் தந்தையே என்றாலும் இருபிறப்பாளரின் சவத்தை சூத்திரர்கள் சுமக்கக் கூடாது, இது விஷ்ணு சாஸ்திரம்; உயர் ஜாதியை சார்ந்தவர் கீழ் ஜாதிப் பெண்ணை திருமணம் செய்து அவர்களுக்கு பிறக்கும் குழந்தை சூத்திரர் ஆகிவிடுகிறார். அந்த தந்தை இறந்தால், உயர் ஜாதி என்பதால் அந்த பிணத்தைக் கூட தூக்கக்கூடாது என்று எழுதி வைத்திருக்கிறான் இந்த விஷ்ணு சாஸ்திரத்தில். செத்தாலும் ஜாதி தொடரும்; இது தான் இந்த சாஸ்திரங்களினுடைய அடிப்படைத் தன்மை. மற்றொன்று ஒரு நாய், காகம், சூத்திரன், மதுக்கிண்ணம், புனிதமற்ற பறவை உட்கார்ந்த வஸ்து ஆகியவற்றை ஒரு பிராமணன் தொட்டால், ஒருநாள் உண்ணாவிரதம் இருக்கவேண்டும், பஞ்சகவ்யத்தை சாப்பிடவேண்டும். பசுவிட மிருந்து கிடைக்கக் கூடிய பால், நெய் மட்டுமல்ல, சிறுநீர் உட்பட அந்த ஐந்தும் கலந்த திரவத்தை சாப்பிடவேண்டும்; இப்படி சொல்வது ஆபஸ்வதம்ப சாஸ்திரம். நீங்க அந்த வரிசையைக் கவனியுங்கள், ஒரு நாய், காகம், சூத்திரன் என்று சொல்லிவிட்டான். சூத்திரனுக்கே இந்த நிலை என்றால் பஞ்சமனுக்கு எந்த நிலை என்று உங்கள் கற்பனைகளுக்கே விட்டுவிடுகிறேன்.**

***(அருணன் உரையிலிருந்து)***

# புதிய வடிவமெடுக்கும் பார்ப்பனியம்

*அருணன் உரை - 6 ஆம் பக்கத் தொடர்ச்சி*

வர்கள் - மனுசாஸ்திரத்தால் மிதிக்கப்பட்டவர்கள் என்று அன்று சொன்னார். இப்படி சொல்லி போராடினீர்களே அந்த போராட்டத்தின் தளபதி என்ற முறையில் நான் அவரை மதித்தேன். நமக்கு ஒரு கோளாறான குணம் இருக்கிறது, இந்த இடை நிலை ஜாதிக்கு. நமக்கு மேல் இருப்பவன் மிதித்தால் நமக்கு கோபம் வரும்; நமக்கு கீழ் இருப்பவனை நமது ஒரு கால் மிதித்துகொண்டே இருக்கிறதே அதுமட்டும் சுகமாக தெரியும். அதுதானே நடக்கிறது இப்பொழுது. நான் அந்த பேச்சை மகாபலிபுரத்திலே, சித்ரா பவுர்ணமி அன்று வன்னியர் சங்கத்தில் பேசப்பட்ட பேச்சை முழுமையாக தொலைக்காட்சியில் கேட்டேன். காடுவெட்டு குரு பேசிய பேச்சு இன்னும் என் காதுகளில் ஒலித்துக்கொண்டிருக்கிறது. என்ன பேசினார் - 'நமது ஜாதிப் பெண்ணை வேறு எந்த ஜாதிக்காரனுக்கும் திருமணம் செய்யக் கூடாது; செய்துகொண்டால் அவனை வெட்டினாலும் தப்பில்லை' இது அவர் சொன்ன அதே வாக்கியம், நானாக இட்டுக்கட்டி எதுவும் சொல்லவில்லை. மனுசாஸ்திர வெறி இன்றுவரை பிற்படுத்தப்பட்ட ஜாதி - இடைநிலை ஜாதி மக்களிடையே கூட ஊட்டப்பட்டிருக்கிறது. இதை மருத்துவர் ராமதாசு மறுத்து பேசுவார் என்று ஆர்வமுடன் தொலைக் காட்சி முன்பு இறுதி வரை அமர்ந்திருந்தேன். வந்தார் பேசினார் - அய்யா; என்ன பேசினார் தெரியுமா? காடுவெட்டி குருவைப் புகழ்ந்து பேசினார், இன்றைக்கு பார்க்கும்போது அதெல் லாம் எதேச்சையாக நடந்ததைப்போல தெரிய வில்லை. நாடகக் காதல் பற்றி பேசுகிறார் அவர். கபட காதல் பற்றி பேசுகிற அவர், தான் காதலின் எதிரியல்ல நாடகக் காதலின் எதிரி என்று இரண்டு தினங்களுக்கு முன்பு கூட தொலைக்காட்சியிலே பேசியிருக்கிறார். காதல்களில் சில காதல்கள் நாடகக் காதல்களாக இருக்கக் கூடும். அதற்காக எல்லா காதலையும் மோசமான காதல் என்று எப்படி சொல்கிறீர்கள் அய்யா? இன்னும் கூட நான் யோசித்துப் பார்க்கின்றேன், இது உண்மை காதலா, கபட காதலா என்று யார் தீர்மானிப்பது? ஜாதி சங்கமா? ஜாதி சங்க தலைவரா? உண்மை காதலா, கபட காதலா என்று தீர்மானிக்கின்ற ஆற்றல் ஒவ்வொரு தமிழன் வீட்டு பெண் பிள்ளைகளுக்கும், ஆண் பிள்ளைகளுக்கும் நிச்சயம் உண்டு. அதை நீங்களோ, நானோ தீர்மானிக்கக் கூடாது. அவர்களை தீர்மானிக்க விடுங்கள். இல்லையென் றால் இந்த இரண்டாயிரத்து பன்னிரண்டாம் ஆண்டிலும், தமிழகத்தில் மனு நடமாடிக்கொண்டு இருக்கிறான் என்று தான் நாங்கள் புரிந்துகொள்ள முடியும். ஆக எந்த அளவுக்கு அன்று கொடூரமான சிந்தனைகளை உருவாக்கியிருக்கின்றான் என்பதை நீங்கள் உணருங்கள். அவ்வளவு கண்டிப்பான - கொடூரமான சிந்தனைகள் உருவாக்கப்பட்ட காரணத்தினால் தான், மனுவின் வலு - செல்வாக்கு இந்த இருபத்தியோராம் நூற்றாண்டிலும், பெரியார் பிறந்த மண்ணிலே கூட நீடித்திருக்கிறது.

அண்மையில் இரண்டு நாட்களுக்கு முன்பு ஒரு தொலைக்காட்சி விவாதத்தில், கொங்கு மண்டலத்தைச் சார்ந்த ஒரு ஜாதி சங்கத்தின் தலைவர் பேசுகிறார். அவரின் முக்கியமான கோரிக்கை என்னவென்றால் இந்த வன்கொடுமை தடுப்புச் சட்டம் சரியில்லை; வன்கொடுமையெல் லாம் முடிந்துவிட்டது என்று முதலில் சொன்னார்; ஆகவே இந்த சட்டத்தை ஒழித்துவிடவேண்டும் என்று ஆரம்பித்தார். மேலும் விளக்கம் சொன்னார் கோயம்புத்தூரில் எங்க ஆள் ஒருவர் பஸ்ஸில் ஏறினார், புதுசா ஒருத்தர் வந்தார், அவர் யாரோ என்னவோ என்று தெரியாததால் தொடாமல் உட்கார் என்று இவர் சொன்னார். உடனே இது தீண்டாமை என்று சொல்லி, அந்த வன்கொடுமை சட்டத்தின் கீழ் வழக்கு பதிவு செய்துவிட்டார்கள்; ரொம்ப வேதனையாம், ரொம்ப வருத்தமாம். இது தீண்டாமை இல்லாமல் வேறு என்னவென்று கேட் கிறேன். நண்பர்களே யாரோ சிலர் வன்கொடுமை தடுப்புச் சட்டத்தை தவறாக பயன்படுத்துகிறார்கள் என்பதற்காக, ஒட்டுமொத்த தமிழ் சமுதாயத்தில் இத்தகைய பார்வை இருக்கிறது என்று சொன்னால், கிராமங்களிலே கொடூரமான தீண்டாமை இன்றைக்கும் நிலவுகிறது என்றால், அந்த வன்கொடுமை சட்டம் இன்றைக்கும் அவசியம், அவசியம். சொல்லப் போனால் இன்னும் நன்றாக அந்த சட்டத்தைப் பயன்படுத்தவேண்டும் என்பதுதான் நம்முடைய நிலைப்பாடாக இருக்க முடியும். ஆக இந்த மனு உள்வாங்கிய தீட்டு கருத்து என்பது, எந்த அளவிற்கு இன்று வரை வந்திருக்கிறது என்பதை நீங்கள் தயவுசெய்து உணரவேண்டும் என்பதை நான் அருள்கூர்ந்து கேட்டுக்கொள்கிறேன்.

நான் யோசித்து பார்க்கின்றேன், வரலாற்றில் மனுசாஸ்திரத்திற்கு இப்படியொரு முக்கியமான பங்களிப்பு இருந்திருக்கிறது; ஆனால் இரண்டா யிரம் ஆண்டுகளாக அது எப்படி நீடிக்கிறது? கிரேக்கத்திலே அடிமை சமுதாயம் இருந்தது என்று சொன்னேன், அது ஒழிந்தது; ரோமாபுரியில் இருந்தது என்று சொன்னேன், அதுவும் ஒழிந்தது; ஒவ்வொரு ஊரிலும் அடிமை மனித சந்தை இருந்தது அதெல்லாம் ஒழிந்து விட்டது. இங்கு வர்ணாசிரமம் என்பது இந்திய பாணி அடிமை முறை என்கிறீர்களே, அப்படிப்பட்ட அடிமை முறை சூத்திரர்களை அடிமை போல பாவித்த நிலை - பஞ்சமர்களை அடிமைகளாகவே ஆக்கி வைத்த நிலை அப்படியே ஏன் இரண்டாயிரம் ஆண்டுகளாக நீடிக்கின்றது? அதனுடைய மிச்ச சொச்சங்கள், கொடூர வடிவங்கள் இரண்டாயிரத்து பன்னிரண்டாம் ஆண்டிலும் எப்படி நிலவுகிறது? என்று யோசித்துப்பார்த்தால், இந்த படிநிலை அமைப்பிலே என்ன ஆகிவிட்டது என்றால், பிராமணர்கள் என்பவர்கள் எண்ணிக்கையில் குறைவுதானே, அதிகமான பேர் பிற்படுத்தப் பட்டவர்கள் மிகவும் பிற்படுத்தப்பட்டவர்கள். அல்லது அன்றைய மொழியில் சொன்னால் எண்ணிக்கையில் அதிகமானவர்கள் சத்திரிய, வைசிய, சூத்திரர்கள். இந்த மூன்று பேரில் ஒருவருக்கு கீழ் ஒருவராக வைக்கும் போது - சூத்திரர்களுக்கு கீழேயும் பஞ்சமர்களை வைத்ததால் ஒவ்வொரு வருக்கும் ஒரு சுகம்; நம்மை ஒருவன் ஒடுக்குகிறான் என்றாலும் நமக்கு கீழேயும் ஆள் இருப்பதே போதும் என்ற குணப்போக்கும் இந்த நடைமுறை யும் தான் இவ்வளவு காலம் வர்ணாசிரமம் நீடிப் பதற்கு காரணம்; இந்த நடைமுறையை உருவாக்கி கியது மனுதர்மம். அதனால் தான் நீங்கள் அதை எரிக்கப் போகிறீர்கள். ஜாதி எல்லாம் முடிந்துவிட்டது, சும்மா பிராமிணியம் என்று பேசுகிறீர்களே என்று சிலர் கேட்கிறார்கள்.

நண்பர்களே ஒரு சொந்த அனுபவத்தை சொல்கிறேன், சென்னையிலே திருவான்மியூர் என்ற பகுதியிலே என்னுடைய மகன் வசிக்கிறார்; அந்த பகுதியில் காலை எழுந்தவுடன் நடைபயிற்சி செய்வேன்; இரண்டு வீட்டில் ஒரு விளம்பர பலகை; அது ஆங்கிலத்தில் இருந்ததால் அப்படியே சொல்கிறேன் ToLet But Only For Vegitarions என்று இருந்தது; மகா நகரம். இது ஏதோ குக்கிராமத்தில் அல்ல தமிழகத்தின் தலைநகரமான சென்னையில் "ஒன்லி பார் வெஜிட்டேரியன்" மரக்கறி உண்பவர் களுக்கே என்றால் என்ன அர்த்தம்? பிராமணர் களுக்கே என்று சொல்லாமல் கவனமாக சொல் கிறார்கள், இது இரண்டு மாதங்களுக்கு முன்பு. இப்பொழுது கடந்த வாரம் பிள்ளை வீட்டிற்குச் சென்றேன்; உண்மையிலேயே ஒரு வீடு தேவைப் பட்டது; அங்கும் இங்கும் சுற்றி வந்த போது அதே வீட்டில் இப்போது புதிதாக ஒரு போர்டு, 'வீடு வாடகைக்கு' என்று மட்டும் இருந்தது; ஒன்லி வெஜிடேரியன் என்பது இல்லை; திருந்தி விட்டார்கள் என்று எனக்கு ஏக மகிழ்ச்சி; உடனே அந்த எண்ணுக்கு தொலைபேசி செய்து, நான் ஒரு ஓய்வு பெற்ற பேராசிரியர் எனது பிள்ளைக்கு வீடு வேண்டும் என்று கேட்டேன்; எதிர் முனையில் பேசிய ஒரு அம்மா சொன்னது 'நாங்க வெஜிடேரியன்ஸ்க்கு மட்டும் தான் வீடு தருவோம்' என்று. எனக்கு என்ன ஆச்சரியம் என்றால், அவர்கள் மாறவில்லை என்பது மட்டுமல்ல, நான் பிராமணர் அல்ல என்பதை நான் பேசிய மொழியிலேயே தெரிந்துகொண்டுவிட்டார் அந்த அம்மா. ஜாதிப் பெயரைக் கூட கேட்க வேண்டிய தில்லை; நீங்கள் வெஜிடேரியனா என்றாவது கேட்டிருக்கலாம் ஆனால் எதுவுமே கேட்கவே இல்லை. அப்படியென்றால் இன்றைக்கும் அந்த பிராமிணியம் என்கின்ற ஜாதிய-ஆணாதிக்க கட்டமைப்பு, எத்தனை புதுப் புது வடிவங்கள் எடுத்து நிற்கிறது என்பதை உணருங்கள்.

இவ்வளவுக்கும் யார் காரணம்? மனு ஒரு முக்கியமான பங்களிப்பை செய்திருக்கின்றான். இன்றைக்கு பல பேர் சொல்லுகிறார்கள் எல்லாம் முடிந்துவிட்டது என்று; ஆனால் தருமபுரி நமது கண்களைத் திறந்து விட்டிருக்கிறது. நான் வேதனை யோடு பார்க்கின்றேன்; பிராமணியம் என்கின்ற கட்டமைப்பு பிராமண, சத்ரிய, வைசிய, சூத்திர, பஞ்சம. என்ற கட்டமைப்பு காலபோக்கில் என்ன வானது என்றால் உயர் ஜாதி, பிற்படுத்தப்பட்ட மக்கள், தாழ்த்தப்பட்ட மக்கள், பழங்குடி மக்கள். இப்படி உருவானதற்கு பெரியாரின் பங்களிப்பு; கம்யூனிசத்தின் பங்களிப்பு; சில காங்கிரஸ் காரர்களின் பங்களிப்பு; எல்லாம் உண்டு. அவரவர்களுக்கு உரியதை அவரவர்களுக்கு கொடுப்போம்; இவ்வளவும் சேர்ந்து உருவானது. ஆனால் இது உருவாவதற்கு அடிப்படை கருத்தியல் காரணம் என்னவென்றால் பிராமணியம் என்ற அந்த உயர்ஜாதியினரால் பாதிக்கப்பட்ட பிற்படுத்தப்பட்டோரும், தாழ்த்தப்பட்டோரும் இணைந்து நின்று போராடியதால் கிடைத்த வெற்றி என்பதை மறந்து விடாதீர்கள். இன்று பிராமணீயம் கெக்கொலி கொட்டி சிரிக்கிறது தமிழ்நாட்டிலே; ஏன் சிரிக்கிறது? பிற்படுத்தப்பட்ட மக்களும், தாழ்த்தப்பட்ட மக்களும் அடித்துக் கொள்கிறார்களே, ஆஹா, அடித்துக் கொள்ளட் டும் என்று அவர்கள் சிரிக்கிறார்கள். அப்படி சிரிக்க விடலாமா என்றுதான் நான் பிற்படுத்தப்பட்ட மக்களின் தலைவர்களையும், தாழ்த்தப்பட்ட மக்களின் தலைவர்களையும் பார்த்து கேட் கின்றேன். எங்களுக்கு பெரிய சக்தி இல்லை; ஆய்வாளர் என்ற முறையிலே பணிவோடு அவர்களைப் பார்த்துக்கேட்கின்றேன். நீங்கள் பிராமணீயத்தின் எதிரி என்றால் தயவுசெய்து பிராமணீயம் சிரிக்க இடம் கொடுத்துவிடாதீர்கள். சகலரும் சேர்ந்து பிராமணீயத்தை ஒழித்துக் கட்டுகின்ற வேலையிலே இறங்கவேண்டும். இன்றைக்கு பிராமணீயம் என்பது பல அவதாரங்களை எடுக்கின்றது; இதில் எந்த ஆட்சேபணையும் இல்லை.

**இந்தியாவில் தான் இந்த வினோதம். அடிமை சமுதாயம் ஒழிந்து, நிலபிரபுத்துவ சமுதாயம் ஒழிந்து, முதலாளித்துவ சமுதாயம் வந்தது என்றால் என்ன பொருள்? இந்தியாவிலே என்ன பொருளாக இருந்திருக்க வேண்டும் தெரியுமா? இங்கு ஜாதியும், வர்ணாசிரமும் ஒழிந்திருக்க வேண்டும் அப்போது தான் முதலாளித்துவ சமுதாயம் வந்ததாகப் பொருள். ஆனால் இந்த நாட்டு முதலாளித்துவம் நிலபிரபுத்துவத்துடன் அதனுடைய சமூக கருத்தியல் மற்றும் நடை முறையாகிய ஜாதியோடு கைகோர்த்துக் கொண் டிருக்கிறது. அது தான் தொடர்ந்து நீடிப்பதற்கு காரணம்.** புள்ளி விபரத்தோடு சொன்னார் நம்முடைய ஆய்வாளர் எஸ்.வி.ஆர். ஆக ஒரு மிகப் பெரிய போராட்டம் தேவைப்படு கிறது; ஆனால், அதை நடக்கவிடாமல் செய்வதற்கு மக்களை கூறுபோடுகிறார்கள். அரசியல் ரீதியாக பாரதிய ஜனதா கட்சி என்கின்ற ஒரு கட்சி; இந்த மக்கள் ஒன்று பட்டுவிடக் கூடாது என்பதற்காக செயற்கையாக இந்து முஸ்லீம் என்று பிரித்து மோதவிடப் பார்க் கிறார்கள். அந்த கொடூரன் குஜராத்திலே நரேந்திர மோடி; தேர்தலில் வெற்றிப் பெற்றவர்களெல்லாம் நல்லவர்களல்ல; நரேந்திர மோடி தான் அடுத்த பிரதமர் என்று சொல்ல ஆரம்பித்துவிட்டார்கள். இன்னும் வேதனையான செய்தி, நாமெல்லாம் வாக்களித்து முதலமைச்சராக அமர்த்தியிருக்கின்ற ஜெயலலிதா, முஸ்லீம்களை நரவேட்டை ஆடிய நரேந்திரமோடியின் பட்டாபிசேக விழாவிற்கு செல்லவிருக்கிறார். ஒரு கட்சியினுடைய தலைவர் என்ற முறையிலே போனால் நான் இங்கு பேச மாட்டேன்; அவர் அ.தி.மு.க.விற்கு மட்டும் முதலமைச்சர் அல்ல; உங்களுக்கும் எனக்கும் முதலமைச்சர்; ஆகவே உரிமையோடு பேசுகிறேன். ஒரு முதல்வர் என்ற முறையிலே மாண்புமிகு ஜெயலலிதா அவர்களே நீங்கள் செல்லலாமா? இது தான் அண்ணா வகுத்த வழியா? எம்.ஜி.ஆர் கூட அப்படி போனதில்லையே! எவ்வளவு பெரிய ஆபத்து இன்றைக்கு வந்திருக் கிறது என்பதை தயவுசெய்து புரிந்துகொள்ள வேண்டும். நான் சொல்ல வருவதெல்லாம் இது தான், இந்த இருபது சாஸ்திரங்களும் எரிக்கப்படவேண்டியவை; ஆனால் அந்த சாஸ்திரங்களின் முதன்மையான பிரதிநிதி என்கிற முறையிலே மனுசாஸ்திரத்தை நீங்கள் எரிக்கப்போகிறீர்களே, அது மிக நல்ல காரியம். குப்பையை எரிப்பது தனிமனித சுகாதாரத் திற்கு அவசியம்; மனுசாஸ்திரத்தை எரிப்பது சமூக சுகாதாரத்திற்கு அவசியம், அவசியம். எரியுங்கள் அது பெரும் நெருப்பாக மூண்டு எழட்டும்; அந்த அற்புதமான தீ பரவட்டும்; அந்த நெருப்பிலே விழுந்து, விழுந்து இந்த ஜாதி ஒழியட்டும்.

*(குறிப்பு: பேராசிரியர் அருணன் தனது உரையில் பயன்படுத்திய "பிராமணன்" என்ற சொல்லாட்சியில் நமக்கு உடன்பாடு இல்லை என்றாலும் அவரது உரையை அப்படியே வெளியிட்டுள்ளோம் - ஆர்.)*

**தொகுப்பு: கோகுல கண்ணன்**

DATE OF PUBLICATION 23.01.2013 TAMIL WEEKLY REG.NO.TN/CCN/488/12-14 LICENCED TO POST WPP NO.TN/CCN/9/12-14
PURATCHI PERIYAR MUZHAKKAM REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TN/TAM/2002/7776

# பெரியார் பண்பாட்டுப் புரட்சியை திராவிட கட்சிகள் கைவிட்டன

*கொளத்தூர் மணி உரை – 4 ஆம் பக்கத் தொடர்ச்சி*

இணைவார்கள். அதிலும் உறுப்பினராக சேர மாட்டார்கள். சுவரொட்டி ஒட்டப் போக மாட்டார்கள். மேடை போட போகமாட்டார்கள். கட்சியினுடைய பெரிய பொறுப்பில் வேண்டுமானால் போய் சேர்ந்து கொள்வார்கள். குறைந்தது ஒரு மாவட்டத் தலைவர், துணைப் பொதுச் செயலாளர் என்று போய் சேர்ந்து கொள்வார்கள். அப்படி இணைந்த பார்ப்பனர்கள் யாரையும் இயக்கத்தில் அடிமட்டத் தொண்டனாய் நான் பார்த்ததே இல்லை. குறைந்தது ஒரு மாவட்டச் செயலாளராக இருக்க வேண்டும் என்ற கருத்தோடுதான் இணைகிறார்கள். ஏன் அப்படி தொண்டராக இணையவில்லை என்பதுதான் எங்களுக்கு இன்னும் அய்யத்தை உண்டாக்குகிறது.

**ஜென்ராம் -** ஈழம் தொடர்பான விசயத்தில ஒரே ஒரு விளக்கம் மட்டும் நான் உங்ககிட்ட இருந்து தெரிஞ்சுக்க ஆர்வமாக இருக்கிறேன். பிரபாகரன் உயிரோடு இருக்க வேண்டும் என்று விரும்புகிறோம். ஆனால் உயிரோடு இருக்கிறாரா இல்லையா என்பது தெரியாது என்று நீங்க சொல்றீங்க.

**கொளத்தூர் மணி** - ஆமாம்!

**ஜென்ராம் -** உயிரோட இருக்கிறாரா இல்லையா என்று தெரியாது என்று சொல்வதற்கு என்ன காரணம். அப்ப உயிரோட இருக்கிறார் என்பதற்கான ஒரு வாய்ப்பையும் நீங்க மறுக்கலை?

**கொளத்தூர் மணி -** ஆமா.. எனக்கு சில யூகச் செய்திகளும் சில உண்மைச் செய்திகளும் வந்த வண்ணம் இருக்கின்றன. அதனால்தான் அறுதியிட்டு சொல்ல முடியவில்லை. இல்லை என்று சொல்ல முடியவில்லை. ஆனால் இருக்கிறார் என்பதற்கு எனக்கு ஆதாரம் இல்லாத காரணத்தால் ஒரு பகுத்தறிவுவாதி சரியான ஆதாரம் இல்லாமல் ஒன்றை சொல்லக் கூடாது. எனவே அவர் உயிருடன் இருப்பதைப் பற்றிக் கேட்டால் என்னுடைய பதில் தெரியாது என்றுதான் சொல்கிறேன். இருக்கிறார் இல்லை என்று என்னால் சொல்ல முடியாததற்கு அதுதான் காரணம்.

**ஜென்ராம் -** அதாவது இந்திய ஊடகங்களும் இலங்கை ஊடகங்களும் அவர் இறந்து போயிட்டார் அவர் கொல்லப்பட்டார் என்று பிரச்சாரம் செய்யும் போது அல்லது அதை நிறுவிக் கொண்டிருக்கும் போது அவர் உயிரோடு இருக்கிறார் என்று சில தமிழ்த் தேசியவாதிகள் சொல்வதே இன்னும் தமிழர்களுக்கு எதிராக ஒரு போர் தொடுப்பதற்கு தயாராக இராணுவ இயந்திரத்தை பலப்படுத்திக் கொண்டே போவதற்கான வாய்ப்பை இலங்கை அரசுக்கு சிங்கள பேரினவாதத்திற்கு கொடுப்பதாக ஒரு பார்வை இருக்கு

**கொளத்தூர் மணி -** அது தவறானது. ஏன்னா 89-ஆம் ஆண்டு அப்படிதான் அவர் சுட்டுக் கொல்லப்பட்டார் என்ற செய்தி வந்தது. எல்லா ஊடகங்களும் அதை போட்டன. எல்லா ஊடகங்களும். இன்னும் சொல்லப் போனால்.. உடல் வைத்திருக்கிறார்கள். சந்தனம் வைத்திருக்கிறார்கள். மக்கள் அஞ்சலி செலுத்துகிறார்கள் என்றெல்லாம் கூட செய்தி வந்தது. ஆனால் அது பொய்யென்று பின்னால் உறுதி ஆனது. இரண்டாவது சுனாமியின் போது பிரபாகரன் உடல் அடித்துச் செல்லப் பட்டது. உடல் ஒதுங்கியிருந்தது. கரை ஒதுங்கியிருந்தது. பிரபாகரனுக்கு பெட்டி செய்துவிட்டார்கள் என்றெல்லாம் செய்தி வந்தது. ஆனால் அதற்கு பின்னால் பார்க்கிறோம். எல்லா ஊடகங்களும் இலங்கை அரசும் அந்தச் செய்தியைச் சொன்னார்கள். பொய்யாக போய்விட்டது. அப்ப அவர்கள் இவரை ஒரு முறை கொல்லவில்லை. பலமுறை கொன்றிருப்பதால் அய்யம் வருகிறது. அதனால் உறுதியாக நம்பமுடியவில்லை என்றுதான் சொல்கிறோம்.

**ஜென்ராம் -** உங்க மேல குண்டர் சட்டம் தேசிய பாதுகாப்புச் சட்டம் எல்லாமே போட்டாங்க. அவ்வளவு ஆபத்தான நபரா நீங்க. அப்படி என்ன குற்றத்திற்காக அந்த சட்டம் எல்லாம் போட்டாங்க?

**கொளத்தூர் மணி -** குண்டர் சட்டம் என் மீது போட வில்லை. தேசிய பாதுகாப்புச் சட்டம் இரண்டு முறை போட்டார்கள். பயங்கரவாதத் தடைச் சட்டத்தில் ஒரு முறை கைது செய்திருக்கிறார்கள். அப்புறம் வேறு வழக்குகளை போட்டு ஓராண்டிற்கு மேலாக இரண்டு முறை சிறையில் வைத்திருக்கிறார்கள். அதற்கு என்ன பயம் என்றால் அவர்கள் கருத்துக்கு எதிராக இருக்கிறோம். பிரபாகரன் உலக ஊடகங்களுக்கு அவர் அளித்த நேர்காணலை பற்றி ஒரு விமர்சனக் கூட்டம் போட்டதற்கே ஒன்றரை ஆண்டு நெடுமாறன், சுப. வீர பாண்டியன் உள்ளிட்டோரை சிறையில் வைத் திருந்தார்கள். என்ன பயங்கரவாதம் செய்தார்கள்? அரசின் பார்வைக்கு பயமாக இருப்பவர்கள் எல்லாம் பயங்கர வாதிகளாக அவர்கள் கருதுகிறார்கள். நாங்கள் பயங்கரவாதிகள் அல்ல.

**ஜென்ராம்** - சேது சமுத்திரத் திட்டத்துக்கு நீங்கள் ஆதரவாளரா?

**கொளத்தூர் மணி -** சேது சமுத்திரத் திட்டம் என்பதை இரண்டு வகையாக நாங்கள் பார்க்கிறோம். அதை மதத்தின் காரணத்தால் நிறுத்தக் கூடாது என்று நாங்கள் சொல்கிறோம். சுற்றுச் சூழல் காரணமாக மறுக்கிறார்கள் என்றால் அது ஆய்வுக்குரியது. ஆய்வு செய்து பார்க்கட்டும். சுற்றுச் சூழல் காரணமாக இருந்தால் விட்டு விடலாம். ஆனால் மத காரணங்களை சொல்லித்தான் இதை நிறுத்துகிறார்கள். அதை நாங்கள் எதிர்க்கிறோம்.

**ஜென்ராம் -** இந்த நிகழ்ச்சியில் பங்கேற்று உங்கள் கருத்துக்களை பகிர்ந்து கொண்டதற்காக புதிய தலைமுறை தொலைக்காட்சி உங்களுக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறது.

**கொளத்தூர் மணி-** இந்த தொலைக்காட்சியின் வழியாக பல்வேறு செய்திகளை விளக்கங்களை சொல்வதற்கு வாய்ப்பளித்ததற்கு புதிய தலைமுறை தொலைக்காட்சிக்கு நானும் நன்றி சொல்கிறேன்.

**தொகுப்பு : 'பூங்குழலி'**

### *ஈரோட்டில் உதயமானது ஆதிக்க சாதிவெறி எதிர்ப்புக் கூட்டியக்கம்*

# மருத்துவர் ராமதாசு சாதி வெறி எதிர்ப்புக் கூட்டம் முற்றுகை: தோழர்கள் கைது

## துப்புறவு – சலவைத் தொழிலாளர்கள் வேலை செய்ய மறுப்பு

*மருத்துவர் ராமதாசு தலைமையிலான 20.01.2013 அன்று பெரியார் பிறந்த ஈரோட்டு மண்ணிற்குள் நுழையும் சாதி வெறி சக்திகளின் கூட்டியக்கத்தை முற்றுகையிடும் இக்கூட்டியக்கத்தைச் சார்ந்த இயக்கங்களின் தோழர்கள் கலந்து கொண்ட ஆலோசனைக் கூட்டம் 19.01.2013 அன்று விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் ஈரோடு மாநகர மாவட்டச் செயலாளர் நா.விநாயகமூர்த்தி அலுவலகத்தில், திராவிடர் விடுதலைக் கழக மாநிலப் பொருளாளர் ப,இரத்தினசாமி தலைமையில் நடைபெற்றது. கூட்டத்தில் கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.*

- *கூட்டத்தில் மருத்துவர் ராமதாசு நடத்தும் கூட்டத்தை முற்றுகையிடுவது என்றும்*
- *இச்சாதி ஆலோசனைக் கூட்டத்தை நடத்த இடம் கொடுத்த, ஓயாசிஸ் விடுதி நிர்வாகத்தினருக்கு எதிராக, அங்கு பணிபுரியும் ஒடுக்கப்பட்ட, தாழ்த்தப்பட்ட தொழிலாளர்களை வேலை நிறுத்தத்தில் தொடர்ந்து ஈடுபடுத்துவது என்று முடிவெடுக்கப்பட்டது.*
- *ஓயாசிஸ் விடுதியில் துப்புறவுப் பணி, துணி துவைக்கும் பணிகளில் ஈடுபட்டு வரும் தொழிலாளர்கள், சாதி வெறிக் கூட்டமைப்புக்கு விடுதியில் கூட்டம் நடத்த இடம் வழங்கியதை எதிர்த்து இந்த வேலைகளை இனி செய்ய மாட்டோம் என்று ஓட்டல் நிர்வாகத்திடம் அறிவித்து விட்டனர்.*

*திட்டமிட்டபடி ஆதிக்க சாதிவெறி எதிர்ப்புக் கூட்டியக்கம் சார்பாக, முற்றுகையிடும் போராட்டம் 20.1.2013 காலை 10 மணிக்கு நடைபெற்றது. திராவிடர் விடுதலைக் கழகம் ஒருங்கிணைத்து நடத்திய இந்த முற்றுகைப் போராட்டத்தில், விடுதலைச் சிறுத்தைகள் கட்சி, ஆதித் தமிழர் பேரவை, தந்தை பெரியார் திராவிடர் கழகம், ஆதித் தமிழர் விடுதலை முன்னி போன்ற இயக்கங்களைச் சார்ந்த ஏராளமான தோழர்கள் கலந்து கொண்டனர்.*

*ஈரோடு பேருந்து நிலையத்தில் இருந்து திராவிடர் விடுதலைக் கழகக் மாநிலப் பொருளாளர் ப. இரத்தினசாமி, மண்டலச் செயலாளர் இராம. இளங்கோவன் தலைமையில் திரண்ட முற்றுகைக் குழுவினர் இராமதாசைக் கண்டித்து முழக்கங்களை எழுப்பியபடி, அவர் கூட்டம் நடத்திக் கொண்டிருந்த விடுதியை நோக்கிச் செல்ல முயன்றனர். அவர்களைத் தடுத்து நிறுத்திய காவல் துறையினர், 117 தோழர்களைக் கைது செய்தனர்.*

**செய்தி: ப. சிவக்குமார், ஈரோடு**

### 'புரட்சிப் பெரியார் முழக்கம்' ஒரு முக்கிய அறிவிப்பும் வேண்டுகோளும்

'புரட்சிப் பெரியார் முழக்கம்' நன்கொடைக்கான ஆண்டுக் கட்டணம் ரூ.200/- ஆக - தயாரிப்பு செலவு அதிகரிப்பினால் உயர்த்தப்பட வேண்டியிருக்கிறது. வாசகர்கள் தொடர்ந்து ஆதரவு தர வேண்டுகிறோம். கழகத் தோழர்கள் வாய்ப்புள்ள தோழர்களிடம் 5 ஆண்டுகளுக்கு ரூ.1000/- நன்கொடையாக வசூலிக்குமாறு கேட்டுக் கொள்கிறோம்.

**– நிர்வாகி, 'புரட்சிப் பெரியார் முழக்கம்'**

### கழக ஏட்டுக்கு கோபி. இளங்கோவன் ரூ.10,000 நன்கொடை

*ஈரோடு மண்டல கழக அமைப்புச் செயலாளர் இராம. இளங்கோவன் 'புரட்சிப் பெரியார் முழக்கம்' இதழுக்கு நன்கொடையாக ரூ.10,000 வழங்கியுள்ளார்.*

*ஜலகண்டாபுரம் சவுரியூர் பன்னீர்செல்வம்-ஜெயலட்சுமி ஆகியோரது மகள் ப. தேன்மொழி-மா.முத்துவேல் ஆகியோரின் வாழ்க்கைத் துணை ஏற்பு ஒப்பந்த விழா மகிழ்வாக கழக வளர்ச்சி நிதியாக ரூ.500 நன்கொடையாக அளித்துள்ளார்.*

*(நன்றியுடன் பெற்றுக் கொண்டோம் - ஆர்)*

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted on: 24th January 2013

OWNER & PUBLISHER & EDITOR : K. RAJENDRAN, PUBLISHED AT 29, JOURNALISTS COLONY, THIRUVALLUVAR NAGAR, THIRUVANMIYUR, CHENNAI - 600 041.
PRINTED BY : S. THEESMAS, AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014.

புரட்சிப் பெரியார் முழக்கம்
திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு
www.dvkperiyar.com
ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2044 | சனவரி 31, 2013 | புரட்சி 12 | முழக்கம் 3 | விலை: ரூ.3.00

# மருத்துவர் ராமதாசின் ‘மனு சாஸ்திர’ கூட்டமைப்புக்கு எதிராக நேரடியாக களமிறங்கியது கழகம்





*ஜாதி தீண்டாமைக்கு ஆதரவாக பார்ப்பன சங்கம் மற்றும் ஜாதி அமைப்புகளுடன் இணைந்து மருத்துவர் ராமதாசு சென்னையில் நடத்திய ஆலோசனைக் கூட்டத்தை எதிர்த்துப் போர்க்குரல் எழுப்பிய திராவிடர் விடுதலைக் கழகத் தோழர்கள் கைது செய்யப்பட்டனர்.*

தலித் மக்களை தனிமைப்படுத்திடவும், ஜாதி மறுப்புத் திருமணங்கள் மற்றும் பெண்கள் சுயமரியாதைக்கு எதிராகவும் மருத்துவர் ராமதாஸ், ஜாதியத் தலைவர்களை ஒருங்கிணைத்து வரும் ‘மனுசாஸ்திர’ நடவடிக்கைகளுக்கு தமிழகம் முழுதும் கடும் எதிர்ப்பு உருவாகி வருகிறது. ஏற்கனவே கோவை, கரூர், ஈரோடு, நாமக்கல் உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் இந்த மனுவாதக் குழுவினர் கூட்டம் நடக்கும் இடங்களில் திராவிடர் விடுதலைக் கழகம் உள்ளிட்ட ஜாதி எதிர்ப்பு இயக்கங்கள் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களை நடத்தி வருகின்றன.

இந்த நிலையில், சென்னையில் இந்த ‘மனுவாத’ அணி கூட்டம் நடத்தும் செய்தி 25 ஆம் தேதி காலை ஏடுகளில் வந்தவுடன், திராவிடர் விடுதலைக் கழகம் உடனடியாக களம் இறங்கியது. அன்று பகல் 12 மணியளவில் பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன், வழக்கறிஞர் ரஜினிகாந்த், ஏராளமான கழகத் தோழர்களுடன் மாவட்ட ஆட்சித் தலைவரைச் சந்தித்து இந்த ஜாதிச் சங்கங்களின் கூட்டம் சமூகத்தில் பதட்டத்தை உருவாக்கும் நோக்கம் கொண்டது. தலித் மக்களை தனிமைப்படுத்துவது. எனவே, அரசியல் சட்டத் துக்கும் வன்கொடுமை தடுப்புச் சட்டத்துக்கும் எதிரானது. எனவே இதை அனுமதிக்கக் கூடாது என்று மனு வழங்கப்பட்டது. அதைத் தொடர்ந்து மாநகர காவல்துறை ஆணையருக்கு இந்தக் கூட்டம் நடத்த அனுமதிக்கப்பட்டால், கூட்டம் நிகழும் இடத்துக்கு எதிரே திராவிடர் விடுதலைக் கழகம் எதிர்ப்புப் போராட்டம் நடத்தும் என்று எழுத்து மூலம் தெரிவிக்கப்பட்டது.

சட்டத்துக்கு எதிரான இந்த கூட்டத்துக்கு அனுமதி வழங்கியதால் கழகத் தோழர்கள் திட்ட மிட்டபடி காலை 10.30 மணியளவில் கூட்டம் நடை பெறும் தியாகராயர் நகரிலுள்ள முருகன் திருமண மண்டபம் அருகேயுள்ள ம.பொ.சி. சிலை அருகே திரண்டனர். கழகப் பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் தலைமையில் கழகத் தோழர்கள் ஏராளமாகத் திரண்டு தமிழகத் தில் ஜாதி தீண்டாமை வெறியைத் தூண்டிவிடும் சக்திகளுக்கு எதிராக முழக்க மிட்டனர்.

“மருத்துவர் ராமதாசின் மனுசாஸ்திரக் கும்பலே வெளியேறு; ஜாதி வெறியைத் தூண்டாதே - திராவிடர் விடுதலைக் கழகம்” என்ற பதாகையுடன் கழகக் கொடிகளோடு தோழர்கள் திரண்டு முழக்க மிட்டனர்.

*“அனுமதியோம்; அனுமதியோம்;*
*தலித் மக்களை தனிமைப்படுத்த அனுமதியோம்!”*

*“அனுமதியோம்; அனுமதியோம்;*
*பெண்களை இழிவுபடுத்த அனுமதியோம்!”*

*“ஜாதியற்ற நாங்கள் கேட்கிறோம்;*
*ஜாதி வெறியைத் தூண்டாதே!”*

*“பெரியார் பிறந்த மண்ணில்*
*ஜாதி வெறிக்கு இடமில்லை!”*

*“மருத்துவரே, ராமதாசே;-*
*நீங்கள் மருத்துவத்தில் டாக்டரா?*
*மனுசாஸ்திரத்தில் டாக்டரா?”*

என்ற முழக்கங்கள் விண்ணைப் பிளந்தன. விடுதலை சிறுத்தைகள் கட்சியைச் சேர்ந்த பாலாஜி, சாரநாத் உள்ளிட்ட தோழர்கள் ஆர்ப்பாட்டத்தில் பங் கேற்று, வாழ்த்து தெரிவித்தனர். சுமார் 15 நிமிடம் எதிர்ப்பு முழக்கமிட்ட தோழர்களை காவல்துறை யினர் கைது செய்து வேனில் ஏற்ற முயன்றபோது, திடீரென்று வன்னியர் சங்கத்தைச் சார்ந்த சிலர், ஜாதி ஆதரவு முழக்கங்களை எழுப்பிக் கொண்டு, கழகத் தோழர்களை நெருங்கினர். சற்றும் எதிர்பாராத காவல்துறை அதிர்ச்சியடைந்த நிலையில் பதட்ட நிலை உருவானது. ஜாதி ஆதரவாளர்கள் கழகத் தோழர்கள் மீது கல்வீசியதைத் தொடர்ந்து கழகத் தோழர்கள் திருப்பித் தாக்கத் தொடங்கினர்.

பெரியாரியத் தோழர்களுக்கு எதிராக ஜாதி வெறியர்கள் நேரடி மோதலுக்கு வந்த நிலையில், களத்தில் அவர்களை சந்திக்க கருஞ்சட்டைத் தோழர்கள் துணிவுடன் எதிர்கொண்டனர். கழகத்தினரை நோக்கி வந்த ஜாதிய வாதிகளை நோக்கி, கழகத் தோழர்கள் காவல்துறை தடைகளைத் தகர்த்து முன்னேறிய நிலையில் காவல் துறையினர் தடுத்து நிறுத்த முயன்றனர். ஜாதிய வாதிகளை காவல் துறையினர் விரட்டியடிக்கவே அவர்கள் பின்வாங்கினர். ஜாதியவாதிகளின் தரப்பி லிருந்து வீசப்பட்ட கல், காவல்துறையைச் சார்ந்த ஒருவர் தலை மீது விழுந்து ரத்தம் கொட்டியது. பரபரப்பும் பதட்டமும் தொற்றிய சூழலில் பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் தோழர்களை அமைதிப்படுத்தினார். இச் சம்பவம் குறித்து விடுதலை இராசேந்திரனிடம் செய்தியாளர்கள் கேட்டபோது-

“இந்த ஜாதி அமைப்புகளின் கூட்டம் சட்டத்துக்கு எதிரானது. குடிமக்களின் ஒரு பிரிவினரை, ஜாதி அடையாள அடிப்படையில் ஒதுக்கி வைக்கவும், சட்டம் வழங்கியுள்ள வயது வந்தோருக்கான திருமண உரிமைகளில் குறுக்கிட்டு சட்டத்தை ஜாதியமைப்பின் கைகளில் எடுத்துக் கொள்ளவும் வெளிப்படையாக இந்தக் கூட்டம் நடைபெறுகிறது. இந்த சட்ட விரோத கூட்டத் துக்கு ஜாதி எதிர்ப்பாளர்களாகிய நாங்கள் காவல்துறையிடம் முன்னறிவிப்பு செய்து விட்டு, இந்த எதிர்ப்பைப் பதிவு செய்ய திரண்டுள் ளோம். சட்டத்தை தங்கள் கைகளில் எடுத்துள்ள ஜாதிய வாதிகள், இங்கும் சட்டத்தை தங்கள் கைகளில் எடுத்துக் கொண்டு கலவரத்துக்கு திரண்டிருப்பதை நீங்களே பார்த்தீர்கள். எனவே இனியும் வெளிப் படையான பதட்டத்தை உருவாக்கும் இந்த ஜாதி கூட்டத்தை ஏனைய மாவட்டங்களில் அனுமதிப் பது குறித்து தமிழக அரசு பரிசீலிக்க வேண்டும்” என்று குறிப்பிட்டார்.

“இங்கே கூட்டம் போடும் ஜாதி கட்சித் தலைவர்கள் அந்த ஜாதியினர் அனைவருமே ஏற்றுக் கொண்டவர்கள் அல்ல. அவர்கள் அனைவருக்குமான பிரதிநிதிகளும் அல்ல. அதே ஜாதி அடையாளம் கொண்ட ஏராளமான தோழர்கள், இதோ இந்த பெரியார் அணியில் ஜாதி எதிர்ப்புக் கொள்கையோடு திரண்டிருக்கிறார்கள். இது ஜாதியவாதிகளுக்கும் ஜாதிய எதிர்ப்பாளர் களுக்கும் நடக்கும் போராட்டம். ஜாதிகளுக்குள் நடக்கும் மோதல்கள் அல்ல” என்றும் விளக்கினார்.

தொடர்ந்து, தோழர்கள் ஜாதி எதிர்ப்பு முழக்கங்களை எழுப்பி, காவல்துறை வாகனங்களில் ஏறினர். தியாகராயர் நகரிலுள்ள திருமணம் ஒன்றில் வைக்கப்பட்டு, மாலை விடுதலை செய்யப்பட்டனர். கைதான தோழர்களை வழக்கறிஞர் ரஜினிகாந்த், சேத்துப்பட்டு மக்கள் கலை இலக்கியக் கழகத் தோழர்கள், தமிழக மக்கள் முன்னணியைச் சார்ந்த அருண்சோரி, செல்வி, புதுவை மாநில கழகத் தலைவர் லோகு அய்யப்பன், சென்னை மண்டல அமைப்புச் செயலாளர் அன்பு தனசேகர், தலைமைக் கழகச் செயலாளர் தபசி குமரன், குகா உள்ளிட்ட தோழர்கள் சந்தித்தனர். பொதுச் செய லாளர் விடுதலை இராசேந்திரன், மாவட்ட செய லாளர் இரா.உமாபதி, பொருளாளர் வேழவேந்தன், திருவல்லிக்கேணி பகுதி கழகப் பொறுப்பாளர்கள் முருகன், தமிழ்ச் செல்வன், செல்வகுமார், எழும்பூர் பகுதி பொறுப்பாளர் அ.வேலு, காஞ்சிபுரம் மாவட்ட தலைவர் டேவிட் பெரியார், செயலாளர் தினேஷ் குமார், பாடி அமைப்பாளர் கனகராஜ், மயிலை பொறுப்பாளர்கள் ஜான், இராவணன், வடசென்னை மாவட்ட பொறுப்பாளர் தெட்சிணாமூர்த்தி, ஏசு, அருள்தாசு , விழுப்புரம் அய்யனார், சூலூர் வீரமணி மற்றும் தமிழ்ச் செல்வி, ஜெயந்தி ஆகிய தோழியர்கள் உள்பட 87 பேர் கைது செய்யப்பட்டனர்.

**– நமது செய்தியாளர்**

# இராயப்பேட்டையில் தமிழர் குடும்பங்கள் கூடி மகிழ்ந்த பொங்கல் விழா









சென்னை இராயப்பேட்டையில் பொங்கல் விழாக் குழு சார்பில் கழகத் தோழர்கள் முன்னின்று நடத்திய தமிழர் திருநாள் விழா ஜனவரி 12 ஆம் தேதி மாலை எழுச்சியுடன் நடைபெற்றது. அதற்கு முன் 6.1.2013 அன்று விளையாட்டுப் போட்டிகள் நடைபெற்றன. விழாவுக்கு சி. முருகன் தலைமை வகித்தார். செ.செந்தில் வரவேற்புரை யாற்ற, கி. முருகன் முன்னிலையில் மாலை 5 மணிக்கு ஆதித் தமிழர் கலைக்குழு பறை இசை மற்றும் கிராமிய கலை இசை நடைபெற்றது. தொடர்ந்து குழந்தைகளின் மாறுவேடப் போட்டி மாணவ மாணவிகளின் நடனம் மற்றும் சுயமரியாதைக் கலைப் பண்பாட்டுக் கழகத்தின் வீதி நாடகம் நடை பெற்றது. கழகப் பொதுச்செயலாளர் விடுதலை இராசேந்திரன், விடுதலை சிறுத்தைகள் கட்சித் தலைவர் தொல். திருமாவளவன், ம.தி.மு.க. துணைப் பொதுச் செயலாளர் மல்லை சத்தியா 'சாட்டை' திரைப்பட இயக்குனர் அன்பழகன் ஆகியோர் உரையாற்றினர். விளையாட்டுப் போட்டிகளில் வெற்றிப் பெற்ற மாணவர்களுக்கு சிறப்பு விருந்தினர்கள் பரிசுகளை வழங்கினர்.

இரவு 9 மணிக்கு விஜய் டிவி. புகழ், 'அது இது எது' அமுதவாணன் குழுவினரின் பலகுரல் பல்சுவை நிகழ்ச்சிகளும் இரவு 10 மணிக்கு கலைமாமணி சித்தன் செயமூர்த்தியின் இசை நிகழ்ச்சியும் நடந்தன. நள்ளிரவு 12.30 மணியளவில் நிகழ்ச்சிகள் நிறைவடைந்தது. இராயப்பேட்டை பகுதி கழகச் செயல் வீரர்கள் ஒரு மாதம் கடுமையாக உழைத்து விழாவை சிறப்புடன் நடத்தினர். இறுதியாக தமிழ்ச் செல்வி நன்றியுரை கூறினார்.

## பிப். 16 சேலம் மாநாடு: கழகம் தயாராகிறது!

19-01-2013 சனிக்கிழமை அன்று காலை 11-00 மணிக்கு சேலம் மாவட்டம் கருப்பூரில், மாவட்டத் தலைவர் சக்திவேல் அவர்கள் இல்லத்தில், சேலம் மண்டல திராவிடர் விடுதலைக் கழக கலந்துரையாடல் கூட்டம் நடைபெற்றது. வழக்கம் போல் கடவுள் மறுப்பு மற்றும் ஆத்மா மறுப்பு தோழர்களால் சொல்லப்பட்டு கூட்டம் துவங்கியது.

பிப்ரவரி 16 அன்று நடைபெறவிருக்கும் சேலம் மண்டல மாநாட்டை சிறப்பாக நடத்துவது பற்றி விவாதிப்பதற்காக ஏற்பாடு செய்யப்பட்ட இந்த கலந்துரையாடல் கூட்டத்திற்கு கழகத் தலைவர் கொளத்தூர் மணி தலைமை ஏற்க, மாநில அமைப்புச்செயலாளர் தி.தாமரைக்கண்ணன் முன்னிலை வகித்தார். சேலம் மண்டல அமைப்புச் செயலாளர் அ.சக்திவேல் மற்றும் தருமபுரி, கிருஷ்ணகிரி, சேலம் மேற்கு- கிழக்கு மாவட்ட பொருப்பாளர்கள் கலந்துகொண்டனர். மாநாட்டு பணிக்கான குழுக்கள் அமைக்கப்பட்டு கீழ்கண்டவர்கள் நியமிக்கப்பட்டனர்:

வரவேற்பு குழு: தலைவர் அ.சக்திவேல், செயலாளர் டேவிட், உறுப்பினர்கள் க.சக்திவேல், வே.வேணுகோபால், சூரியகுமார், பி.குமார். அலுவலக பொருப்பாளர்: அ.கோகுலகண்ணன்; நிதிக்குழு: க.சக்திவேல், இரா.முத்துக்குமார், ஜஸ்டின்ராஜ், இரா.ராஜா; கடை வசூல் குழு: சேலம் பாலு, அ.முத்துமாணிக்கம், கபிலன் விஜி, சேலம் பரமேசு; சுவரெழுத்துக்குழு: அ.அண்ணாதுரை, குமரப்பா, நங்கவள்ளி கிருஷ்ணன், சேலம் விசு, ஆத்தூர் மகேந்திரன் ; பரப்புரைக் குழு: கோகுலகண்ணன், காவை இளவரசன், நங்கவள்ளி அன்பு, வீதி நாடக தோழர்கள் குமரேசன், பிரபாகரன், கண்ணன்.

### நன்கொடை

14-01-2013 அன்று காலை 10-00 மணிக்கு, சேலம் மாவட்டம் கொளத்தூரில் கழகத் தோழர் பா.ஜோதிமணி அவர்களின் மெட்டல் சீட் விற்பனை கிடங்கை, கொளத்தூர் தா.செ.பழனிச்சாமி திறந்துவைத்தார். திறப்புவிழா மகிழ்வாக கழக ஏட்டிற்கு ஆயிரம் ரூபாய் (ரூ1000) நன்கொடை வழங்கினர்.

## ஈரோட்டில் கழகத்தில் இணைந்த தோழர்கள்

ஈரோடு மாவட்டத்தில் புதிய கிளைகள் உருவாக்க வேண்டும் என்ற முனைப்புடன் தோழர்கள் பணியாற்றி வருகின்றனர். மாநில மாநாட்டின் எழுச்சி தற்போது மாவட்டம் முழுவதும் புதிய தோழர்களின் வரவு அதிகமாகி வருகின்றது. ஜாதி ஒழிப்பை 'அய்யா' வழியில் நமது கழகம் முன் வைத்து களப்பணியாற்றுவதன் போக்கும், தனிமனித வழிபாட்டை பின்னிறுத்தி (களைந்து) கொள்கைகயை முன்னிறுத்தி இயக்கம் நடைபோடுவது ஏராளமான இளைஞர்களை கழகத்தின் பக்கம் திரும்பிப் பார்க்க வைத்துள்ளது.

அதன் அடிப்படையில் ஈரோடு மரவபாளையம் குமார் சீரிய முயற்சியால் 10 புதிய தோழர்கள் இயக்கத்தில் இணைந்துள்ளனர். அத்துடன் ஈரோட்டில் ஜாதிவெறிற அணி திரண்டும் ராமதாசைக் கண்டித்து நடைபெற்ற முற்றுகைப் போராட்டத்திலும் இந்த 10 தோழர்களும் கலந்து கொண்டனர். அவர்களின் பெயர்கள் வருமாறு:

ரா. வடிவேல், செ. சரவணன், வீ. நல்லமுத்து, ஞ. மாணிக்கம், ல. இராஜகோபால், கு. தேவேந்திரன், தேவராஜ் சோபா, ராசுக்குட்டி, பெ.கிருஷ்ணமூர்த்தி, மணிகண்டன் ஆகியோர்.

**செய்தி: இராம. இளங்கோவன்**

## திருப்பூரில் போராட்ட விளக்கக் கூட்டம்

திராவிடர் விடுதலைக் கழகத்தின் சார்பில் திருப்பூர் ஆர்.வி.ஈ. லேஅவுட் காட்டுவளவு பகுதியில் மாவட்ட தலைவர் சு.துரைசாமி தலைமையில் தன கோபால் முன்னிலையில் கழகக் கூட்டம் நடைபெற்றது. கோபி வேலுசாமி சிறப்புரை யாற்றினார். 'மந்திரமா தந்திரமா' நிகழ்ச்சியை காவை இளவரசன் நிகழ்த்தினார். மாவட்ட செயலாளர் அகிலன், மண்டல அமைப்புச் செயலாளர் விஜயன், மாநகரத் தலைவர் சண்முகம், மாநகர செயலாளர் ஜீவா நகர் குமார், முகில் ராசு, மாநகர அமைப்பாளர் நீதிராசன், வாட்சுக் கடை செல்வம், பெரியார் முத்து, மூர்த்தி, மாதவன், மணிகண்டன், நகுலன், பிரசாத், கார்த்தி மற்றும் பல்லடம் தோழர்கள் வடிவேல், செல்வம், மணிகண்டன் ஆகியோர் பங்கேற்றனர். பாரதிவாசன் நன்றி கூறினார்.

# ஈரோடு மாநாட்டில் எஸ்.வி.ஆர். ஆதாரங்களுடன் தெளிவுரை

# 'மனு சாஸ்திர' பார்ப்பனியத்தால் கட்டமைக்கப்பட்டுள்ள கார்ப்பரேட் நிறுவனங்கள்

*ஈரோட்டில் திராவிடர் விடுதலைக் கழக மாநாட்டில் டிச.24 அன்று "பெரியாரும் மனு சாஸ்திரமும்" என்ற தலைப்பில் தோழர் எஸ்.வி.ஆர். ஆற்றிய உரை:*

பெரியார் பற்றிய பல நூல்களை எழுதியிருக்கின்ற நான் மீண்டும் அவற்றிலுள்ள செய்திகளையே திரும்பவும் கூறுவதற்கு எனக்கு கொஞ்சம் தயக்கமாக இருந்தது. இருந்தாலும் கூட இந்த கருத்தரங்கத்தில் நான் சொல்லக்கூடிய சில கருத்துக்கள் தொடக்க உரை என்பதால் உங்கள் எல்லோருக்கும் தெரிந்த செய்திகளோடு என்னுடைய உரையை தொடங்க விரும்புகிறேன். தமிழ்நாட்டைப் பொருத்தவரையிலே இந்த மனுசாஸ்திரம் என்பது மக்களுக்கு விரோதமானது - ஜாதியை நியாயப்படுத்தக்கூடிய ஒரு கொடூரமான நூல் என்பதை துணிச்சலாக கூறியதோடு நிற்காமல், அதை எரித்து கொழுத்தி சாம்பலாக்க வேண்டும் என்று முதன்முதலிலே, 1922-லேயே தமிழ்நாட்டில் கூறியவர் தந்தை பெரியார் அவர்கள் தான். அப்போது அவர் காங்கிரஸ்காரராக இருந்தார் என்பதும் உங்களுக்கு தெரியும். திருப்பூரில் நடைபெற்ற காங்கிரஸ் மாநாட்டிலே இந்த ஜாதியை காப்பதற்கான தத்துவத்தை கூறக்கூடிய இரண்டு முக்கிய நூல்கள் எரிக்கப்படவேண்டும் என்ற தீர்மானத்தை கொண்டுவருகிறார்; ஒன்று மனுசாஸ்திரம் மற்றொன்று இராமாயணம். அதன் பிறகு அவரது 'குடிஅரசு' ஏட்டில் 1927 வரை, வர்ண ஜாதி முறையை காந்தி நியாயப்படுத்திக் கொண்டிருக்கும்போதே, காந்தியிடமே நேரில் சென்று அது தவறு என்று வாதிட்ட பிறகும், தமிழ்நாட்டில் இருக்கின்ற காங்கிரஸ்காரர்கள் 1925 இல் காஞ்சிபுரத்தில் நடைபெற்ற காங்கிரஸ் மாநாட்டிலே வகுப்புவாரி உரிமை தீர்மானத்தை ஏற்றுக்கொள்ள மறுத்த பிறகும், நீதிக்கட்சியைக் கொள்கை அடிப்படையில் பெரியார் ஆதரிக்க தொடங்கிய பிறகும், ஏறத்தாழ 1927 வரை அதிகாரபூர்வமாக காங்கிரஸில் இருந்து விலகாதவராகவே தந்தை பெரியார் இருந்தார்கள். அந்த காலக் கட்டத்தில்தான், அப்போது ஆதி திராவிட மாணவர் என்றால் அதில் சுய மரியாதைக்காரர்கள் இருப்பார்கள். சுயமரியாதை இயக்க மாநாடு என்று சொன்னால் அதிலே தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சார்ந்த தலைவர்கள் இருப்பார்கள். பல்லாயிரக் கணக்கான தாழ்த்தப் பட்டவர்களுக்கு நிழல்தரும் மரமாக சுயமரியாதை இயக்கம் இருக்கின்றது என்று 1928 இல் சிந்தனை சிற்பி சிங்காரவேலர் கூறுகின்ற அளவிற்கு தந்தை பெரியாரினுடைய சுயமரியாதை இயக்கம் என்பது மிகப்பெரும் பாலும் தலித் மக்களை - தாழ்த்தப் பட்ட மக்களை சமூக அடித்தளமாக கொண்டிருந்தது.

அந்த மனுநீதியை ஏன் எரிக்கவேண்டும் என்று நான் உங்களுக்கு தனியாக விளக்கம் சொல்ல வேண்டிய தேவை இல்லை. கடந்த சில வாரங்களாகவே புரட்சிப் பெரியார் முழக்கத்திலே என்னென்ன காரணத்திற்காக நாம் மனுநீதியை எரிக்கவேண்டும் கொளுத்தவேண்டும்; ஜாதி ஏற்றத்தாழ்வுகளை நியாயப்படுத்தக்கூடிய - பார்ப்பனிய கருத்தியல், பொருளாதார சுரண்டலை நியாயப்படுத்தக்கூடிய தாழ்த்தப்பட்ட மக்களை அந்த நிலையிலேயே வைத்திருக்கக்கூடிய, பெண்களைப் பெண்ணடிமைத்தனத்திலேயே வைத்திருக்கக் கூடிய பல்வேறு அடிப்படையிலே மனு சாஸ்திரம் ஏன் எரிக்கப்படவேண்டும் என்பதற்கான விளக்கங்கள் மிகச்சிறப்பாக 'புரட்சிப் பெரியார் முழக்க'த்திலே வந்து கொண்டிருக்கின்றது. இங்கே இந்த மாநாட்டையொட்டி வெளியிடப்பட்ட துண்டறிக்கையிலே கூட மனு சாஸ்திரம் ஏன் எரிக்கப்படவேண்டும் என்பதற்கான விளக்கங்கள் இருக்கின்றன. இவையெல்லாம் ஒரு கருத்தியல் அடிப்படையிலான விளக்கங்களாக அமைந்திருக்கின்றன. இது வெறும் கருத்தியல் அளவில் மட்டுமே இந்த மனுசாஸ்திரம் செயல்பட்டு கொண்டிருக்கின்றதா என்பதை நாம் பார்க்கவேண்டும். இதற்கான ஒரு பொருளாதார அடித்தளம் என்ன? எந்த ஒரு பொருளாதார நிலையை பாதுகாப்பதற்காக மனுசாஸ்திரம் இருக்கின்றது? என்பது பற்றியான சில கருத்துக்களை உங்களோடு பகிர்ந்துகொள்ள விரும்புகிறேன்.

இந்த நாட்டினுடைய ஜாதி அமைப்பு மற்ற நாடுகளில் இருக்கும் வர்க்க வேறுபாடுகளை போன்றது அல்ல. பணக்காரன் மேலே, ஏழை கீழே என்பது போன்ற ஒரு பாகுபாடு, அதனைக் கடந்து இந்த நாட்டில் இருக்கக்கூடிய ஜாதி அமைப்பு என்பது அம்பேத்கர் கூறியது போல, ஒரு மேல் கீழ் வரிசையிலான படிநிலை அமைப்பைக் கொண்டுள்ளதாக இருக்கின்றது. தந்தை பெரியார் அதை ஏணி மரப்படி போல என்று கூறுகின்றார். மேலேயும் கீழேயும் இருப்பவர்களுக்கு இடையில் இருக்கும் ஏற்றத்தாழ்வு என்பது கிரேடட் இனுகுவாலிட்டி (Graded Inequality) என்கிறார்; ஒரே மாதிரியான ஏற்றத்தாழ்வு அல்ல. அந்த ஏற்றத்தாழ்வுகள் ஒவ்வொரு படியிலும் மேலிருந்து கீழாக ஏணிப்படிகளைப் போல வைத்திருந்ததால், ஒவ்வொரு படியிலும் மேலிருப்பவர்களின் சுரண்டல் ஒடுக்குமுறைகளை, கீழிருந்து அனுபவிக்கக் கூடியவர்களுக்கு சற்று கூடுதலாகவோ, குறைவாகவோ இருக்கின்றது. ஆனால் இது வெறும் சாஸ்திர சம்பிரதாய விசயம் மாத்திரமல்ல. யார் கோவிலுக்குள் போகலாம் யார் போகக்கூடாது என்கின்ற விசயம் மாத்திரமல்ல. இது பொருளாதார ரீதியான சுரண்டலை அடிப்படையாக கொண்டது. சாதாரணமாக எந்த ஒரு சமுதாயத்திலுமே, பொருள் உற்பத்தி என்பது மனித வாழ்க்கைக்குத் தேவையானது. உணவு, உடை, கருவிகள் போன்ற



பல்வேறு பொருட்கள் மனிதனுடைய வாழ்க்கைக்கு இன்றியமையாதவை. எனவே ஒருவர் வேளாண்மையில் ஈடுபட்டால் ஒருவர் கைவினையிலே ஈடுபடுவார்; ஒருவர் நெசவுத் தொழிலில் ஈடுபடுவார், ஒருவர் மண்வெட்டியை செய்வார். இப்படி வேலைப் பிரிவினை என்பது எல்லா சமுதாயத்திலுமே உண்டு. இங்கே தமிழ்ச் சமுதாயம் உட்பட இந்திய சமுதாயத்தை எடுத்துக்கொண்டால் இன்னும் சொல்லப்போனால் தென் ஆசியா முழுவதும் எடுத்துக்கொண்டால், இதில் மேலிருந்து பார்ப்போமேயானால் கீழ்வரைக்கும் - கீழே ஜாதி படிநிலையில் - ஜாதி ஏணியில், ஏணியின் கடைசி படியிலே இருக்கக்கூடியவர்கள் மிகப் பெரிய அளவிற்கு உடல் உழைப்பைச் செய்யக் கூடிய - அதிலே தீட்டு, அழுக்கு, அசுத்தம் என்று சொல்லப்படக்கூடிய வேலையினை செய்யக்கூடிய, பஞ்சமர் என்றும், தீண்டத்தகாதவர் என்றும் சொல்லப்படக்கூடிய மக்கள்தான் அந்த தொழிலை செய்து வருகிறார்கள். அதற்கு ஒரு படி மேலே இருக்கக் கூடியவர்கள் வேளாண்மையில் ஈடுபடக் கூடியவர்களாக இருப்பார்கள், கைவினைஞர்களாக இருப்பார்கள், அவர்களும் இந்த பொருள் உற்பத்தியிலே ஈடுபடுகிறார்கள் - உடல் உழைப்பிலே ஈடுபடுகிறார்கள். அதற்கு மேலே போக போக, உடல் உழைப்பில் இருந்து முற்றிலும் விலகிய - உடலுழைப்பு செய்பவர்கள் மீது ஆதிக்கம் செலுத்தக்கூடிய, அப்படி ஆதிக்கம் செலுத்துவதற்காக தங்கள் அறிவைப் பயன்படுத்தக்கூடிய, அந்த அறிவை பயன்படுத்தி கருத்தியல் ரீதியாகவும், ஆயுதங்கள் மூலமாகவும், ஒடுக்குமுறை மூலமாகவும், இந்த பொருள் உற்பத்தியை செய்யக்கூடிய ஜாதியினரை ஒடுக்கி வைக்கக் கூடிய பார்ப்பனர்கள், சத்ரியர்கள் - இருபிறப்பாளர் என்பவர்கள் இருக்கிறார்கள்.

பெரியார் அவர்கள் மிகச் சிறந்த சமூக ஆய்வாளர் என்கின்ற முறையிலே, 1940 களிலே தெய்வசிகாமணி ஆச்சாரியார் என்பவருக்கு எழுதிய கடிதங்களிலே, பெரியார் அவர்கள் பயன்படுத்தக்கூடிய மொழி நடை வேறு விதமாக இருந்தாலும் கூட, ஏறக்குறைய நூற்றுக்கு நூறு அம்பேத்கர் அவர்களின் புரிதலின் அடிப்படையிலேயே சில கருத்துகளை கூறுகின்றார். இவர்களெல்லாம் உற்பத்தி செய்யக்கூடிய ஜாதிகள் என்று கூறுகின்றார்; அம்பேத்கர் கூட இவர்களையெல்லாம் டாய்லிங் மாசஸ் ( Toiling Masses ) – உழைக்கும் மக்கள் என்று கூறுகின்றார். அதாவது சூத்திரர்கள் ஆதி சூத்திரர்கள்; சூத்திரர்கள் என்றால் இடைநிலை ஜாதியைச் சார்ந்தவர்கள் - இந்த நவீன கால சொல்லின்படி பிற்படுத்தப்பட்டவர்கள் - மிகவும் பிற்படுத்தப்பட்டவர்கள்; ஆதி சூத்திரர்கள் என்பவர்கள் தாழ்த்தப்பட்டவர்கள் - பஞ்சமர்கள் - தீண்டத்தகாதவர்கள் என்பவர்கள். இதிலே வேடிக்கை என்னவென்று சொன்னால் எந்த ஒரு சமுதாயத்திலும் உழைக்காத பிரிவினர் சிலர் இருக்கவேண்டும் என்று சொன்னால், பொருள் உற்பத்தி - உணவு உற்பத்தி செய்யக்கூடியவர்கள் தங்களுக்கு உயிர்வாழ்வதற்கு தேவையானதைத் தவிர, இன்னும் கூடுதலான பொருட்களை உற்பத்தி செய்யவேண்டும். அப்படி உற்பத்தி செய்யப்படக்கூடிய மிகையான பொருளை உபரி உற்பத்தி என்று கூறுகிறோம். அந்த உபரி உற்பத்தி தான் உழைக்காதவர்களுக்கு போய் சேர்கின்றது. இந்த ஜாதி படிநிலையிலே அடிமட்டத்திலே இருக்கக் கூடியவர்கள், பெரும்பாலும் விவசாயக் கூலிகளாக கிராமப்புற உழைக்கும் மக்களாக இருக்கக் கூடியவர்கள் அல்லது இறந்து போன விலங்குகளை அகற்றுதல், குப்பைகளை வாரி அகற்றுதல், மலத்தை அகற்றுதல் என்கின்ற மிகக் கடுமையான உடலுழைப்பு தேவைப்படுகின்ற தீட்டு - அழுக்கு - அசுத்தம் என்று சொல்லக்கூடிய பணிகளை செய்யக்கூடியவர்கள்; அவர்களுக்கும் ஒருபடி மேலே இருக்கும் இடைநிலை ஜாதியினரான சூத்திரர்களுக்கும், அவர்கள் உற்பத்தி செய்யக்கூடிய பொருட்கள் - உபரி உற்பத்திகள் அப்படியே மேலே அனுப்பப்படுகின்றன. கீழே அடிநிலையில் இருப்பவர்கள் மேலே இருப்பவர்களுக்கு கொஞ்சம் உபரியை கொடுக்கிறார்கள்; அதற்கு மேல் இருப்பவர்கள் இன்னும் மேல் இருப்பவர்களுக்கு கொஞ்சம் உபரியை கொடுக்கிறார்கள். ஆனால் மிக அதிகமாக யாருக்கு போய் சேர்கின்றது என்று சொன்னால், எந்த விதமான உடல் உழைப்பிலும் ஈடுபடாத, அறிவை மட்டுமே பயன்படுத்தக்கூடிய ஜாதியினருக்குத் தான் - எந்த விதமான வலியும் இல்லாமல், விரல் நகத்தில் அழுக்குபடாமல், இந்த நாட்டினுடைய செல்வங்கள் மிகுதியாக போய் சேர்கின்றன. ஆனால் இந்த உழைக்கும் மக்கள் - பொருள் உற்பத்தி செய்யக்கூடிய மக்கள் ஒன்றுபட முடியவில்லை. மற்ற நாடுகளிளெல்லாம் உழைக்கும் மக்களின் வேலைப் பிரிவுகள் இருக்கின்றது என்று சொன்னால், இந்தியாவைப் பொருத்தவரை ஜாதி அமைப்பிலே தொழிலாளர்களின் பிரிவினை இருக்கின்றது. இடைநிலை சமுதாயத்தை சார்ந்தவர்களிடத்திலே விவசாயக் கூலிகள் இருக்கலாம்; தலித்துகளிடத்திலும் விவசாயக் கூலிகள் இருக்கலாம்; ஆனாலும் கூட இவர்கள் விவசாயக் கூலிகளாக ஒன்றுபடுவதே இல்லை; ஜாதிகளாக பிரிந்திருக்கின்றார்கள். இந்த ஜாதி ஏற்றத்தாழ்வை நியாயப்படுத்துவதற்கும், அதேபோல மேலே இருக்கக் கூடிய பார்ப்பனர்கள் போன்ற உயர் ஜாதியினர், உழைக்காமலேயே, உற்பத்தி செய்யும் ஜாதிகளின் உபரி உற்பத்தியை நுகர்வதற்கும், பயன்படுத்திக் கொள்வதற்கும், மனுசாஸ்திரம் நியாயம் வழங்குகிறது. பிறப்பின் அடிப்படையிலேயே யார் என்ன வேலை செய்யவேண்டும், ஒவ்வொரு ஜாதியை சார்ந்தவர்களுக்கும் ஜாதி ஏணிப்படியிலே என்ன சமூகத் தகுதி இருக்கின்றது என்பதை பல நூற்றுகணக்கான ஆண்டுகளாக நியாயப்படுத்தி வருவதற்கு மனுசாஸ்திரம் முக்கியமான ஒரு கருத்தியல் கருவியாக பார்ப்பனர்கள் கையில் மட்டுமல்லாமல் பார்ப்பனர்களோடு கூட்டாளிகளாக இருந்த அரசர்கள், நிலப்பிரபுக்கள் ஆகியோருக்கும் பயன்பட்டது.

4 ஆம் பக்கம்

# ஜாதிய சுரண்டலும் வர்க்க சுரண்டலும் ஒன்றையொன்று வலுப்படுத்திக் கொண்டிருக்கின்றன

*எஸ்.வி.ஆர். உரை – 3ஆம் பக்கத் தொடர்ச்சி*

பிரிட்டிஷாரின் வருகைக்குப் பிறகு ஜாதி கட்டமைப்பிலே மிக முக்கியமான மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன என்றாலும் கூட, இன்னமுமே பார்த்தோமேயானால் இந்த ஜாதிய அடிப்படையிலான பொருளாதார சுரண்டல் என்பது, அதன் கூடவே சேர்ந்தது தான் பெண்ணடிமைத் தனம் என்பது. ஒவ்வொருவருக்கும் பிறப்பால் நிர்ணயிக்கப்பட்ட தொழில்தான் என்று மனுசாஸ்திரம் தீர்மானிக்கப்பட்டபோது அந்த ஜாதியின் தூய்மையைக் காப்பாற்றவேண்டிய கடமையையும் மனுசாஸ்திரம் மேற்கொள்கிறது. ஜாதியின் தூய்மையைக் காப்பாற்றுவது என்பது என்ன? ஒரு ஜாதிக்காரன் இன்னொரு ஜாதிப் பெண்ணை திருமணம் செய்து கொள்ளக்கூடாது; ஜாதிக்குள்ளேயேதான் திருமணம் செய்ய வேண்டும். அதை நாம் அகமண முறை என்று கூறுகிறோம்; அம்பேத்கரும் அவ்வாறே கூறுகிறார். அகமண முறை எதற்காக ஏற்படுத்தப்பட்டது என்று சொன்னால் ஜாதியின் தூய்மையைக் காப்பாற்றுவதற்காக. ஒரு ஜாதியினுடைய கௌரவம் - ஜாதியினுடைய மானம் என்று சொல்லப்படுவது, அதைக் காப்பாற்றக்கூடிய பொறுப்பு என்பது அந்த ஜாதியை சார்ந்த பெண்கள் மீது திணிக்கப்படுகிறது. எனவேதான் மற்ற எல்லாவிதமான அக்கிரமங்களை விட - வன்கொடுமைகளை விட, ஒரு ஜாதியைச் சார்ந்த பெண்ணை இன்னொரு ஜாதியை சார்ந்தவன் வன்முறைக்கு உட்படுத்தப்படுவது என்பது மிகப்பெரிய குற்றமாகக் கருதப்படுகிறது. அது ஒரு ஆணாதிக்கமாக அல்ல; ஜாதிக்கு ஏற்பட்ட ஒரு மாசுவாக களங்கமாகத் தான் ஜாதிய சமுதாயம் கருதுகின்றதேயொழிய, ஒரு பெண்ணின் உடல், பெண்ணினுடைய ஆளுமை தனக்கான மாண்பை கொண்டுள்ளது எனவே அதைத் தொடுவதற்கு - மீறுவதற்கு - களங்கப் படுத்துவதற்கு யாருக்கும் உரிமை கிடையாது என்ற அடிப்படையில் அல்ல. பல நூற்றுக்கணக்கான ஆண்டுகளாக நிலவி வந்த, மனுசாஸ்திரத்தால் நியாயப்படுத்தப்பட்டு வந்த சுரண்டல் ஒடுக்குமுறை என்பது பிரிட்டிஷார் வந்த பின்னாலும் மாறவில்லை; அதற்குப் பதிலாக பிரிட்டிஷார் இங்கு கொண்டு வந்த ஏகாதிபத்திய முதலாளித்துவ சுரண்டல் முறையோடு, இந்த ஜாதிய ரீதியான பொருளாதார சுரண்டல் முறை ஒன்றோடொன்று பிரிக்கமுடியாதபடி கலந்துவிட்டது. அதில் குறிப்பாக தாழ்த்தப்பட்டவர்கள் தீண்டாதவர்கள் விசயத்தில் இன்னும் வலிமையாக இருக்கின்றது.

பல இடங்களில் நாம் இட ஒதுக்கீட்டிற்காக போராடும் போது தெரிகிறது, இன்னும் பல இடங்களிலே சமூகரீதியிலே அல்லது பொருளாதார ரீதியிலே வசதிபடைத்து முன்னுக்கு வந்திருக்கின்ற பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்குக் கூட சில இடங்களிலே கல்விக்கான இட ஒதுக்கீடு என்பது இருப்பதில்லை. மத்திய அரசு பணிகளிலே இடம் இருப்பதில்லை. இருந்தாலும் கூட இன்றைக்கும் தொடர்ந்து நீடிக்கக் கூடிய மனுசாஸ்திரத்தின் பொருளாதார சுரண்டல் அமைப்பின் காரணமாக அதோடு இரண்டற கலந்துவிட்ட ஏகாதிபத்திய முதலாளிய சுரண்டல் அமைப்பின் காரணமாக இரட்டைச் சுரண்டலுக்கு உட்படக்கூடியவர்கள் பெரும்பாலும் இன்றைக்கும் நம் நாட்டில் தாழ்த்தப்பட்ட மக்கள் ஆதி வாசிகள். நம்முடைய திராவிடர் விடுதலைக் கழகம், பல பெரியாரிய இயக்கங்கள் தொடர்ந்து போராடிக் கொண்டிருக்கின்ற ஒரு விசயம் துப்புரவுத் தொழிலாளர்கள் தொடர்பான ஒரு பிரச்சனை. இன்றைக்கும் கூட ஏறத்தாழ ஒரு ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னாலே, ஐநூறு ஆண்டுகளுக்கு முன்னாலே, முன்னூறு ஆண்டுகளுக்கு முன்னாலே எந்த ஜாதியினர் அந்த துப்புரவுப் பணிகளை செய்து கொண்டிருந்தார்களோ, எந்த ஜாதியினர் மலம் அள்ளும் தொழிலை செய்து கொண்டிருந்தார்களோ அதே ஜாதியினர்தான் இந்த நவீன காலத்திலும் பேரூராட்சிகளிலும், நகராட்சிகளிலும், மாநகராட்சிகளிலும் அதே தொழிலை செய்வதற்கு ஈடுபடுத்தப்படுகிறார்கள். இன்றைக்கு ஒரு முதலாளிய சுரண்டல் அமைப்பு என்பது இந்தியாவிலே ஏற்பட்டுவிட்டது என்றாலும் கூட, ஜாதிரீதியான பொருளாதார ஒடுக்குமுறை அவர்களை பொருத்தவரை இன்னும் உண்மையாக இருக்கின்றது. முதலாளி ரீதியான வர்க்க சுரண்டல் என்பதும் அவர்களைப் பொருத்தவரையில் இன்றைக்கும் பொருத்தமாக இருக்கின்றது. பிறகு ஒழுங்கு அமைக்கப்படாத தொழிலாளர்கள் என்று பார்ப்போமேயானால், சுமை தூக்கக்கூடிய தொழிலாளர்கள், கல் உடைக்கும் தொழிலாளர்கள், லாரிகளில் சுமைகளை ஏற்றும் தொழிலாளர்கள் இப்படி பல தொழிலாளிகளை நாம் பார்ப்போமேயானால் இந்தியாவில் இந்த தொழிற்சங்கங்களுக்கு உட்படுத்தப்படாத தொழிலாளர்கள் தான் அதிகம். அதில் கொஞ்சம் பேர் தலித்துகள் இருப்பார்கள் பெரும்பாலும் கிராமப்புறங்களிலே விவசாயத்திலோ அல்லது கைவினையிலோ ஈடுபட்டிருக்கக் கூடிய இடைநிலை ஜாதியை சார்ந்தவர்களாகத் தான் இருப்பார்கள். அவர்களுக்கென்று எந்தவிதமான பாதுகாப்பும் கிடையாது. அவர்கள் ஒரு குறிப்பிட்ட ஜாதியில் பிறந்ததின் காரணமாகத் தான் அவர்கள் மீண்டும் இதே மாதிரியான வேலைகளுக்கு ஆட்படுத்தப்படுகின்றார்கள். இங்கும் மனு சொல்லக்கூடிய ஜாதிரீதியான ஒடுக்கலும் சுரண்டலும், அதே நேரத்திலே முதலாளிகளின் வர்க்கரீதியான சுரண்டலும் ஒடுக்குமுறையும் இந்த ஜாதியைச் சார்ந்தவர்களுக்கும் இருக்கின்றது. இப்போது பெரிய மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன,

இந்தியாவில் இந்த அறுபத்து ஐந்து ஆண்டுகளில் தலித்துகளுக்கு கல்வி வாய்ப்பு ஏற்பட்டிருக்கின்றது; அதிலிருந்து ஒரு சிறு பகுதியினர் அரசாங்க பதவிகளுக்கு வந்திருக்கின்றார்கள்; கல்வித் துறையில் வந்திருக்கின்றார்கள்; தொழில்நுட்பவாதிகளாக வந்திருக்கின்றார்கள்; இடைநிலை ஜாதியை சார்ந்தவர்கள் அதேபோல பலர் முன்னேறியிருக்கின்றார்கள். ஆனால் அந்த இடைநிலை ஜாதியை சார்ந்த பலரிடம் இருந்து ஏராளமான முதலாளிகள் உருவாகியிருக்கின்றார்கள்; தலித்துகள் இடையே யிருந்தும் கூட, ஒரு சிறு அளவிலான முதலாளிகள் உருவாகியிருக்கின்றார்கள். ஆனால் மூலதனம் என்று மார்க்சியவாதிகள் பேசும்போது மூலதனம் என்பது ஏதோ இந்தியாவின் மூலதனம் என்று நாம் பேசும்போது, டி.வி.எஸ்-ன் மூலதனம் என்றோ, குமாரபாளையத்தில் உள்ள விசைத்தறி ஆலை முதலாளியின் மூலதனம் என்றோ அல்லது மகாலிங்கத்தின் மூலதனம் என்றோ நாம் பேசுவதில்லை. பல்வேறு மூலதனங்கள் ஒன்று குவிந்த ஒரு நிலையைதான் நாம் இந்தியாவின் மூலதனம் என்று கூறுகின்றோம். இந்த மூலதனத்தை யார் வைத்திருக்கின்றார்கள் என்று பார்ப்போமேயானால் இந்தியாவில் இருக்கக் கூடிய மிகப்பெரிய முதலாளிகள், கார்ப்ரேட் நிறுவனங்கள், மிகப்பெரிய கார்ப்பரேட் நிறுவனங்கள் நூறு என்று எடுத்துக்கொண்டால் இன்றைக்கும் அங்கே மனுசாஸ்திர அடிப்படையில் தான் நிலைமை இருக்கின்றது. அதற்கு சில புள்ளி விபரங்களை நான் கொடுக்க விரும்புகின்றேன்; லக்ஷ்மி மிட்டல் என்பவரைப் பற்றி நாம் கேள்விபட்டிருக்கின்றோம். அவர் இந்தியாவில் பிறந்த மிகப்பெரிய ஒரு முதலாளி; பன்னாட்டு மூலதன கார்ப்ரேட் ஏகபோக முதலாளிகளில் ஒருவர். பிறகு அதானி,எஸ்.ஆர் குரூப்பை சார்ந்த ரூயாட் சகோதரரை பார்க்கின்றோம்; அம்பானி குரூப்பை சார்ந்த அனில் அம்பானி, முகேஸ் அம்பானியை பார்க்கின்றோம்; பிறகு வேதாந்தா குரூப்பை சார்ந்த அகர்வாலை நாம் பார்க்கின்றோம்; இவர்கள் எல்லோருமே மிகப்பெரிய ஜாதியை - வைசிய ஜாதியைச் சார்ந்தவர்களாக - பார்ப்பனர்களுக்கு அடுத்த நிலையில் இருக்கக் கூடிய ஜாதியைச் சார்ந்தவர்களாகத் தான் இருப்பார்கள். இந்தியாவினுடைய ஆயிரம் பெரிய நிறுவனங்கள், ஒவ்வொரு நிறுவனங்களுக்கும் போர்டு ஆஃப் டைரக்டர்ஸ் என்பவர்கள் இருப்பார்கள் என்பது உங்களுக்கு தெரியும். சராசரியாக இந்தியாவில் இருக்கக் கூடிய ஒரு ஆராய்ச்சி நிறுவனம் அந்த ஒவ்வொரு நிறுவனத்தையும் நிர்வகிக்கக் கூடிய அந்த போர்டு ஆஃப் டைரக்டர்ஸ் என்று இருக்கக் கூடிய இயக்குநர்கள் எவ்வளவு பேர் என்று பார்க்கும் போது சராசரியாக ஒவ்வொரு நிறுவனத்திலும் ஒன்பது இயக்குநர்கள் இருக்கின்றார்கள். அந்த ஒன்பது இயக்குநர்களிலே ஒவ்வொரு நிறுவனத்தையும் எடுத்துக்கொண்டால் 88 சதவீதத்தினர், அந்த கார்ப்ரேட் நிறுவனம் எந்த குடும்பத்தைச் சார்ந்ததோ - எந்த மேல் ஜாதி குடும்பத்தைச் சார்ந்தோ அந்த குடும்பத்தைச் சார்ந்தவர்களாக இருக்கின்றார்கள். மீதி பன்னிரண்டு விழுக்காட்டினர் வெளியில் இருந்து வந்தவர்களாக இருந்தாலும் கூட, அவர்கள் எல்லோருமே மேல் ஜாதிக்காரர்களாகவே இருக்கின்றார்கள். இந்த ஆயிரம் மிகப்பெரிய நிறுவனங்களிலே இருக்கக் கூடிய இந்த இயக்குநர்களிலே 44 சதவீதத்தினர் 'பனியா' என்ற வைசிய ஜாதியைச் சார்ந்த சட்ரியர் என்று சொல்லக்கூடிய ஜாதி ஆட்களாக இருக்கின்றபோது, 45 சதவீதத்தினர் பார்ப்பனர்களாக இருக்கின்றனர். ஒட்டுமொத்தமாக ஒரு ஆயிரம் நிறுவனங்களிலே இருக்கக் கூடிய இயக்குநர்களின் எண்ணிக்கையிலே சூத்திரர்கள் அல்லது ஆதி சூத்திரர்கள் (இடைநிலை ஜாதி மற்றும் தாழ்த்தப்பட்டவர்கள்) என்பவர்களின் விழுக்காடு ஒன்றரை சதவீதம் தான்; அதுதான் இன்றைக்கும் இருக்கின்ற நிலைமை. எனவே இதை எவ்வாறு எதிர்ப்பது. இந்த கார்ப்பரேட் சர்க்காரிலே, இந்திய பொருளாதர முதலாளித்துவத்திலே இன்றைக்கு எல்லோருக்குமே வாய்ப்பு அளிக்கப்பட்டுவிட்டது. எவ்வளவோ சிறு குறு முதலாளிகள் தோன்றிவிட்டார்கள். ஏற்றுமதி செய்வதற்கான வாய்ப்பை எவ்வளவோ சிறு குறு தொழிலதிபர்களுக்கு ஏற்படுத்திக்கொடுக்கப்பட்டது என்று பார்த்தால், இந்தியாவிலே - தமிழ்நாட்டிலே இருக்கக்கூடிய சிறு குறு முதலாளிகள் அனைவரும் இந்தியாவில் இருக்கக்கூடிய ஒரு நூறு பெரிய முதலாளிகளுக்கு அதிலும் குறிப்பாக சொல்லப்போனால் ஒன்பது பெரிய கார்ப்பரேட் முதலாளிகளுக்கு கட்டுப்பட்டவர்களாக இருக்கின்றார்கள். இந்த ஒன்பது மிகப்பெரிய கார்ப்பரேட் முதலாளிகளை நாம் ஆலிகார்க்கி (Oligarchy) என்று சொல்கின்றோம். ஒரு சிலர் ஆட்சி என்பது அதன் தமிழ் பொருள். எட்டு அல்லது ஒன்பது கார்ப்பரேட் நிறுவனங்கள்தான் இந்திய அரசியலை இந்திய பொருளாதாரத்தை நடத்திவருகின்றது என்று சொன்னால் அதனுடைய இயக்குநர்களாக இருப்பவர்களிலே மிகக் கணிசமானவர்கள் பார்ப்பனர்களாகவும்,

5ஆம் பக்கம்

## பெரியாரும் அம்பேத்கரும் ஒரே காலத்தில் எரித்த மனுசாஸ்திரம்

ஏறத்தாழ அதே 1927 ஆம் ஆண்டு காலக்கட்டத்தில்தான் மகாராஷ்டிராவிலே, இந்திய வரலாற்றிலே பார்ப்போமேயானால் நவீன காலத்தில் பார்ப்பனரல்லாதார் இயக்கம் என்றும், பார்ப்பனர் எதிர்ப்பு இயக்கம் என்றும், ஜாதி ஒழிப்பு இயக்கம் என்றும், ஒரு திட்டவட்டமான குறிக்கோளோடு இயக்கங்கள் இருந்ததே இந்தியாவில் இரண்டு மாநிலங்களில்தான். கேரளாவில் அய்யங்காளி அவர்கள் தாழ்த்தப்பட்டோர் மி புலையரின் இயக்கம் இருந்தது என்றாலும் கூட, பார்ப்பன எதிர்ப்புத் தத்துவங்களை சார்ந்த - அறிவு சார்ந்த இயக்கமாக இரண்டு மாநிலங்களில் மட்டும்தான் இருந்தன. ஒரு உடன் நிகழ்வு போல அதற்கு முன்பு அண்ணல் அம்பேட்கர் இயக்கம் அல்லது அவர், மனுநீதி பற்றியான விமர்சனங்களை செய்துகொண்டு வந்திருந்தாலும் கூட ஏறத்தாழ சொல்லி வைத்தாற்போல மனுநீதியை எரிப்பது என்கின்ற நிகழ்வு ஏறத்தாழ ஒரே காலத்தில்தான் நடந்தது. 1927 ஆம் ஆண்டிலே அக்டோபர் மாதம் அன்றைய தாழ்த்தப்பட்ட மக்களின் தலைவர்களில் மிகச்சிறந்தவர்களில் ஒருவராக இருந்த மரியாதைக்குரிய எம்.சி.இராஜா அவர்கள் வட ஆற்காடு ஆதிதிராவிடர் மாநாட்டிலே பேசும்போது, மனுநீதி கொளுத்தப்பட வேண்டும் என்று பேசியிருக்கிறார். பிறகு ஒரு வாரம் கழித்து சுயமரியாதை இயக்கத்தின் முன்னோடியாக இருந்தவரும், நீதிகட்சியின் முக்கியமான தோழருமான ஜே.எஸ்.கண்ணப்பர் அவர்களின் தலைமையில் மனுசாஸ்திரம் எரிக்கப்பட்டது. அதன் பிறகு தமிழ்நாட்டின் பல்வேறு இடங்களிலே மனுசாஸ்திரம் எரிக்கப்பட்டது. இன்றைக்கு இருப்பதை விட மிகக் கடுமையான ஒரு சமூக சூழல் இருந்த காலத்திலே, பார்ப்பனர்களின் ஆதிக்கம் கொடிகட்டி பறந்துகொண்டிருந்த காலத்திலே, மனுசாஸ்திரம் எரிக்கப்பட்டது. தமிழ்நாட்டில் மனுசாஸ்திரம் எரிக்கப்பட்ட ஓரிரு வாரங்களுக்கு பின்புதான் மகாராஷ்டிராவில் அண்ணல் அம்பேட்கர் தலைமையில் மனுசாஸ்திரம் எரிக்கப்பட்டது என்பது ஒரு வரலாற்று உண்மை. ஒருவரோடு ஒருவர் கலந்து பேசாமலேயே ஆனால் சொல்லி வைத்தாற்போலவே ஜாதி ஒழிப்புக்காக, நமக்கு பார்வையை கொடுக்கும் இரண்டு கண்களாக இருக்கக் கூடிய தந்தை பெரியாரின் இயக்கமும், அண்ணல் அம்பேட்கரின் இயக்கமும் ஒரே நேரத்தில் மனுநீதியை எரித்து சாம்பலாக்கியது.

– எஸ்.வி.ஆர். உரையிலிருந்து

# தனியார் துறையில் உரிமைகளை மறுக்கும் மனுவாதிகள்

*எஸ்.வி.ஆர். உரை – 4ஆம் பக்கத் தொடர்ச்சி*

அதற்கடுத்த மேல் ஜாதியான பனியாக்களாகவும் இருக்கின்றார்கள். எனவே மனு கூறிய அதே நீதி இந்தியாவினுடைய முதலாளித்துவ பொருளாதாரத்திலும் முழுமையாக அய்க்கியமாகியிருக்கின்றது.

இது மக்களை ஏமாற்றுவதற்காக அதிலும் குறிப்பாக இடைநிலை ஜாதியையும், தலித்துகளையும் ஏமாற்றுவதற்காக காங்கிரஸ் பல்வேறு உத்திகளை கையாண்டுவருகிறது. அதில் ஒன்றுதான் 2002 லே காங்கிரஸினுடைய மதசார்பற்ற முகமாக இந்துத்துவத்தின் எதிர்ப்பு முகமாக, மத்திய பிரதேசத்தைச் சார்ந்த திக்விசய் சிங் எப்போதுமே காங்கிரஸ் கட்சியால் ஊடகங்கள் முன் நிறுத்தப்படுகிறார். அவர் ஒரு தாராளவாதி போலவும், இந்துத்துவத்தை எதிர்ப்பவர்போலவும், இடைநிலை மற்றும் தாழ்த்தப்பட்ட ஜாதியினரை அடித்தட்டு மக்களை மேலே கொண்டுவர கருதுபவர் போலவும், ஒரு தோற்றத்தை காங்கிரஸ் கட்சி தொடர்ந்து உருவாக்கிக் கொண்டே வருகின்றது. அவருடைய தலைமையின் கீழே 2002 ஆம் ஆண்டு போபாலிலே ஒரு மாநாடு கூட்டப்பட்டது. அதாவது என்னவென்று சொன்னால் தலித்துகள், இந்தியாவிலே இருக்கக்கூடிய உலகமயமாக்கல் என்று சொல்லக்கூடிய தாராளமயக் கொள்கை ஏற்பட்டு, அரசு நிறுவனங்களில் இருந்த பொது நிறுவனங்களெல்லாம் தனியார் மயமாக்கப்பட்டு, கல்வி கூடங்கள் தனியார்மயமாக்கப்பட்டு, மருத்துவமனைகள் தனியார்மயமாக்கப்பட்டு, போக்குவரத்து தனியார்மயமாக்கப்பட்டு, இப்படி எல்லாமே தனியார்மயமாக்கப்பட்டு அரசாங்கத் துறையின் மூலமாக வேலைவாய்ப்புகள் பெருகுவதற்கு மாத்திரமல்ல இருக்கின்ற வேலை வாய்ப்புகளை தக்க வைத்துக்கொள்ளுகின்ற வாய்ப்புகள் முற்றிலுமாக மறுக்கப்பட்ட பிறகு, அவர் ஒரு யோசனையை சொல்கின்றார். அந்த யோசனையை ஏற்று, நாங்கள் அம்பேட்கரின் தத்துவங்களுக்கு புதிய வளர்ச்சியை - பாய்ச்சலைக் கண்டுவிட்டோம் என்று சொல்லக்கூடிய அறிவுஜீவிகளும் அதிலே கலந்துகொண்டார்கள். அந்த திட்டத்தினுடைய நோக்கம் தலித் முதலாளித்துவத்தை வளர்ப்பது என்பதாகும்; தொடர்ந்து நடைபெற்ற பல்வேறு விவாதங்களுக்கு பிறகு, கணிசமான அளவிற்கு ஏற்கனவே இந்திய அரசியல் சட்டத்தின் மூலம் வழங்கப்பட்டுள்ள இட ஒதுக்கீட்டால் பயனடைந்தவர்கள் அதன், மூலமாக வெளிநாடுகளில் வேலைவாய்ப்பைப் பெற்றவர்கள் இவர்களெல்லாம் சேர்ந்து, அதிலே தொழில் வாய்ப்பு பெற்றவர்கள், முதலாளிகளாக வளர்ச்சியடைவதற்கான வாய்ப்பைப் பெற்றவர்கள், அதிலே ஒரு தலித் முதலாளி துபாயில்கூட கம்பெனி நடத்துகின்றார்; அவருடைய வருடத்தின் டர்னோவர் என்று பார்த்தால் மூன்று கோடி முதல் முன்னூற்று எண்பது கோடி வரை இருக்கின்றது.

ஆனால் இந்தியாவின் மிகப்பெரிய கார்ப்பரேட் நிறுவனங்களினுடைய டர்னோவர் என்பது வர்த்தக மதிப்பு என்பது - தொழில்நுட்பத்தின் மதிப்பு என்பது பல லட்சம் கோடி ரூபாய்கள். அவற்றோடு ஒப்பிடும்போது இந்த தலித் முதலாளிகளுடைய வர்த்தகத்தினுடைய தொழில் நுட்பத்தினுடைய மதிப்பு என்பது ஒரு கடுகை போன்றது. அவர்களுக்கு ஒரு யோசனை செய்யப்பட்டது; அவர்கள் “தலித் இண்டியன் சேம்பர் ஆஃப் காமர்ஸ் அண்டு இண்டஸ்ட்ரீஸ்” என்று உருவாக்கினார்கள். எந்தெந்த தலித்துகளெல்லாம் தொழில் நடத்த முன்வருகிறார்களோ அவர்களின் தொழில் நிறுவனங்களுக்கு ‘தலித் வென்சர் கேபிடல்’ (Venture Capital) (இது கடன் அல்ல; வட்டியோடு திருப்பித் தரவேண்டிய அவசியமில்லை; ஓராண்டு இரண்டாண்டிற்கு பிறகு லாபம் சம்பாதித்த பின்னால் திருப்பி கொடுத்தால் போதும்) உருவாக்கப்பட்டுள்ளது. இந்த திட்டத்தில் தலித்துகள் ஒரு ரூபாய் போட்டால் நாங்கள் மூன்று ரூபாய் போடுகிறோம் என்று இந்தியாவின் மத்திய அரசின் திட்டக்குழுத் துணைத் தலைவர் மாண்டேக் சிங் அலுவாலியா, ஏதோ தலித்துகளுக்கு மிகப்பெரிய சலுகைகள் வழங்குவது போல, திட்டம் தீட்டி அதன் பிறகு மத்திய அரசின் நிறுவனங்கள் தங்களுக்கு தேவையான பொருள்களை வாங்குவதாக இருந்தால், தலித்துகள் நடத்தும் நிறுவனங்களிலிருந்தே நான்கு விழுக்காடு வாங்க வேண்டும் என்ற ஆணையும் பிறபிக்கப்பட்டுள்ளது. இந்த ஏற்பாட்டை மிக உற்சாகமாக வரவேற்றவர்கள் யார் என்று பார்த்தால், டாடா, அம்பானி, இந்திய வர்த்தகர்களின் கூட்டமைப்பு, அதாவது இந்திய கார்ப்ரேட் நிறுவனங்களின் அமைப்பு இந்த திட்டத்தை வரவேற்றது; ஆக அங்கேதான் மனுநீதியின் சூழ்ச்சி இருக்கின்றது. ஏனென்று சொன்னால் உண்மையிலேயே, தலித்துகள் குலத்தொழிலை வலியுறுத்தும் மனுநீதியை உடைத்தெறிந்துவிட்டு நாங்களும் முதலாளிகள் ஆகிவிடுவோம் என்று நிரூபித்தால் நமக்கு மகிழ்ச்சி தான்; ஆனால் இவர்கள் செய்யக்கூடிய ஏற்பாடு என்பது மனுசாஸ்திர நியதியை உடைக்கக்கூடியதாக இல்லை. இது ஏதோ ஒரு சிலருக்கு பயன்படலாம்; பரந்த அளவில் தலித் மக்களுக்கு பயன் தரக்கூடியது என்பது இட ஒதுக்கீடு. இடது சாரிகள் கட்சியானாலும் சரி, திராவிடர் விடுதலைக் கழகம் போன்ற பெரியார் இயக்கங்களானாலும் சரி, தனியார் துறையில் இட ஒதுக்கீடு வேண்டும் என்ற முழக்கத்தை தொடர்ந்து முன்வைத்து வருகிறார்கள். 2004 முதல் 2009 வரை ஆட்சி செய்த ஐக்கிய முற்போக்கு கூட்டணியின் அரசாங்கத்திலே கருத்துரீதியாக தனியார் துறையில் இட ஒதுக்கீடு என்பது ஏற்றுக் கொள்ளப்பட்டது. பிறகு வந்த மன்மோகன் சிங் அரசாங்கம் அதை கைவிட்டு விட்டது. இந்த தனியார் துறையில் இட ஒதுக்கீடு - பொதுத்துறை நிறுவனங்களை தனியார்மயமாக்காமல் அரசாங்கமே வைத்துக்கொண்டு அதிலே இட ஒதுக்கீடு என்று சொன்னால், பல ஆயிரக்கணக்கான தலித்துகள் பயனடைந்திருப்பார்கள். அதை செய்யத் தவறியது மாத்திரமல்லாமல், தலித்துகள் தனியாக தொழில் தொடங்குவது மிக நல்லது உற்சாகமானது என்று ஆதரித்த பிக்சி, டாடா போன்றவர்களெல்லாம் தனியார் துறையில் இட ஒதுக்கீடு என்பதை, கொஞ்சமும் வெட்கமில்லாமல் மனுசாஸ்திரப்படி எதிர்த்துப் பேச ஆரம்பித்துவிட்டார்கள். சஞ்சீவ் பயங்கா என்பவர் தலித்துகளுக்கு தனியார் துறையில் இடம் கொடுக்கவேண்டுமென்றால் அரசாங்கம் எங்களுக்கு மூன்று மடங்கு மானியம் கொடுக்க வேண்டும் என்கிறார். இந்திய முதலாளிகள் சங்கத்தின் தலைவரான போட்டார் என்பவர் அவர்களுக்கு சம்பளம் கொடுத்து தண்டத்துக்கு வைத்துக்கொள்கிறோம் என்று சொல்கிறார். அதாவது தலித்துகளுக்கு திறமை இல்லை, அவர்களுக்கு வேலை செய்யக்கூடிய ஆற்றல் இல்லை, தொழிலில் முனைப்பு கிடையாது என்பதை பட்டவர்த்தனமாகவே கூறுகிறார். முதலாளிகளுக்கு எங்கெல்லாம் ஆபத்துகள் இருக்கின்றதோ அங்கு அவர்களை காப்பதற்கு மனுதர்மம் வந்து நிற்கின்றது. எனவே இந்த ஜாதி அமைப்பை ஒழிப்பது என்பது தவிர்க்கமுடியாதபடி முதலாளி அமைப்பை சேர்த்து ஒழிப்பதே என்கின்ற முடிவுக்கு தான் நம்மை இழுத்துச் செல்லும். அப்படியில்லாமல் ஏதோ மனு சாஸ்திரத்தை மட்டும் எரிப்பது என்ற அளவிற்கு நின்றால் அது குறியீட்டுத் தளத்தில் நடத்தும் போராட்டமாக மட்டுமே நின்றுவிடும்; அது வரவேற்கதக்கது தான். எப்போதும் எல்லா போராட்டமுமே ஒரு குறியீட்டுப் போராட்டத்தின் மூலமாகத் தான் தொடங்கும். ஆனால் அதோடு நின்று கொள்ளாமல், இந்த ஜாதியும், வர்க்கமும் ஒன்றொடொன்று துணை நிற்கின்ற ஒன்றையொன்று வலுப்படுத்திக்கொள்ளுகின்ற ஜாதிய சுரண்டல் அமைப்பு முதலாளிய வர்க்க சுரண்டல் அமைப்பு இரண்டையும் ஒழித்துக்கட்டுவதற்கு, நாம் முன்வரவேண்டும் என்று கேட்டு என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

**தொகுப்பு: கோகுல கண்ணன்**


**இதுவே மனுசாஸ்திரத்தின் இயங்கியல்**

- ***உபரி உற்பத்தியை பார்ப்பன உயர்ஜாதி அபகரிக்கச் செய்தது;***
- ***ஜாதி அடிப்படையிலேயே தொழிலாளர்களை கூறு போட்டது;***
- ***ஜாதிய அடிப்படையில் பொருளாதாரத்தை சுரண்டியது;***
- ***ஜாதி தூய்மையைக் காப்பாற்ற பெண்களை அடிமையாக்கியது;***
- ***முதலாளித்துவ சுரண்டலோடு ஜாதிய சுரண்டல் பிரிக்க முடியாமல் இணைத்துக் கொண்டது.***

**– தோழர் எஸ்.வி.ஆர். ஈரோடு மாநாட்டில் முன் வைத்த கருத்துகள்**

## ஈரோடு கழக மாநாட்டின் சிறப்பு: ஆங்கில ஆய்வு இதழ் படப்பிடிப்பு

*இந்தியாவின் தலைசிறந்த பொருளாதார சமூக அரசியல் ஆய்விதழான ‘எக்னாமிக் அண்ட் பொலிட்டிக்கல் வீக்லி’ ஆங்கில வார இதழ் தமிழ்நாட்டில் தலித் எதிர்ப்புக்கு இடைநிலை ஜாதிகளை அணி திரட்டும் ராமதாசை விமர்சித்து கட்டுரை வெளியிட்டுள்ளது. புதுடில்லி ஜவகர்லால் நேரு பல்கலைக்கழகத்தின் வரலாற்று ஆய்வு மய்யத்தின் தலைவர் முனைவர் எம்.எஸ்.எஸ்.பாண்டியன் எழுதியுள்ள கட்டுரையில் ஈரோட்டில் திராவிடர் விடுதலைக் கழகம் நடத்திய மாநாட்டைக் குறிப்பிட்டு கீழ்க்கண்டவாறு பதிவு செய்துள்ளார்.*



**Anti-Caste Conferences**

Periyarist organisations such as the Dravidar Viduthalai Kazhagam (DVK) and the Dravidar Kazhagam (DK), which have been consistently campaigning against caste, have joined hands with dalit organisations and intensified their anti-caste propaganda. For instance, the two-day conference organised by the DVK in Erode on 23-24 December 2012, to address the Ramadoss syndrome, was inaugurated by R Adiyamaan, the leader of one of the most oppressed dalit castes, the Arundathiyars. The concluding session was presided over by Thol Thirumavalavan of the VCK. Thousands of young men and women marched in blue jeans in a procession which took 55 minutes to cross one point in the route. In keeping with the tradition of "self-respect marriages" promoted by Periyar E V Ramasamy, three cross-caste ritual-free marriages were conducted in the conference venue. The conference has resolved to conduct eight district-level anti-caste conferences in the coming three months and to burn copies of the *Manusmriti* on 14 April, Ambedkar's birth anniversary. On its part, the DK has resolved to reinvent and localise the Valentine's Day as a day to foreground and celebrate cross-caste love.

*“ஜாதிக்கு எதிராக தொடர்ந்து குரல் கொடுக்கும் திராவிடர் விடுதலைக் கழகம், திராவிடர் கழகம் போன்ற பெரியாரிய அமைப்புகள், தலித் அமைப்புகளோடு இணைந்து ஜாதி எதிர்ப்பு பரப்புரையை தீவிரப்படுத்தியுள்ளன. குறிப்பாக , திராவிடர் விடுதலைக் கழகம் ஈரோட்டில் டிசம்பர் 23, 24 தேதிகளில் ராமதாசின் ஜாதிய பரப்பலுக்கு எதிரான மாநாட்டை நடத்தியது. அந்த மாநாட்டைத் தொடங்கி வைத்து, மிகவும் ஒடுக்கப்பட்ட சமூகமான அருந்ததியர் சமூகத்தின் தலைவர் அதியமான், மாநாட்டில் நிறைவுரையாற்றியவர் விடுதலை சிறுத்தைகள் கட்சித் தலைவர் தொல். திருமாவளவன். ஆயிரக்கணக்கான ஆண்களும் பெண்களும் நீலநிற ஜீன்ஸ் பேண்ட் அணிந்து பேரணியாக அணி வகுத்து வந்தனர். பேரணி ஒரு இடத்தைக் கடப்பதற்கு 55 நிமிடங்களாயின.*

*பெரியார் ஈ.வெ.ரா. அவர்களால் அறிமுகப்படுத்தப்பட்டு ஏராளமாக அவரால் நடத்தப்பட்டு வந்தவை சுயமரியாதை திருமணங்கள். அத்தகைய மூன்று திருமணங்கள் ஜாதி மறுப்புடன் சடங்குகள் இன்றி மாநாட்டு மேடையிலேயே நடந்தன. இதைத் தொடர்ந்து அடுத்த மூன்று மாதங்களில் எட்டு மாவட்டங்களில் ஜாதி தீண்டாமை எதிர்ப்பு மாநாடுகளை நடத்தவும், அம்பேத்கர் பிறந்த நாளான ஏப்.14 இல் ‘மனுஸ்மிருதி’யை எரிக்கவும் மாநாட்டில் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன” – என்று அக்கட்டுரையில் பதிவு செய்யப்பட்டுள்ளது.*

**(எக்னாமிக் அண்ட் பொலிட்டிக்கல் வீக்லி, 26.1.2013)**

## சேலத்தில் தமிழ்ப் புத்தாண்டு மற்றும் பொங்கல் விழா

சேலம் மாவட்டம் குமரன் நகர் கிளைக்கழகம் சார்பாக, தமிழ்ப் புத்தாண்டு மற்றும் பொங்கல் விழா 14-01-2013 அன்று, வழக்கம் போல் இந்த ஆண்டும் ஊர் பொதுமக்களுடன் இணைந்து கொண்டாடப்பட்டது. மேட்டூர் டி.கே.ஆர் இசைக்குழுவினரின் பறை முழக்கத்தோடு ஊர்வலமாக வந்து, பொது மக்கள் அனைவருக்கும் பொங்கல் மற்றும் கரும்பு வழங்கப்பட்டது. திராவிடர் விடுதலைக் கழக மாவட்டச் செயலாளர் சூரியகுமார், தொழிலாளர் விடுதலை முன்னணி (விடுதலைச் சிறுத்தைகள் கட்சி) மேட்டூர் நகர ஒருங்கிணைப்பாளர் மு.அழகிரிசாமி உட்பட தோழர்கள் திரளாக கலந்துகொண்டனர்.

DATE OF PUBLICATION 30.01.2013 TAMIL WEEKLY REG.NO.TN/CCN/488/12-14 LICENCED TO POST WPP NO.TN/CCN/9/12-14
PURATCHI PERIYAR MUZHAKKAM REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TN/TAM/2002/7776

# மருத்துவர் ராமதாசுக்கு ஒரு விளக்கம்

திராவிடர் விடுதலைக் கழகம் மருத்துவர் ராமதாசின் ஜாதிய அணி திரட்டலுக்கு எதிராக நடத்திய போராட்டம் பற்றி மருத்துவர் ராமதாசு 'லெட்டர் பேட்' அமைப்புகளின் எதிர்ப்புகள் பற்றி நாங்கள் கவலைப்பட வில்லை என்று கூறியதை ஒரு தனியார் தொலைக்காட்சி ஒளிபரப்பியது.

மருத்துவர் ராமதாசுக்கும் நமக்கும் தனிப்பட்ட பகை என்று ஏதுமில்லை. பல களங்களில் அவரோடு இணைந்து நின்றுள்ளோம். அவர் இப்போது 'பிராமண' சங்கம், ஜாதி சங்கங்களுடன் இணைந்து கையில் எடுத்துள்ள 'மனு சாஸ்திர' செயல்பாடுகளையே நாம் உறுதியோடு எதிர்த்து நிற்கிறோம் ஆனாலும் சில கேள்விகள் நமக்கு இருக்கிறது.

எளிதில் தூண்டப்படக்கூடிய ஜாதி வெறியை முன் வைத்து ஜாதிக்காரர்களை ஆயிரக்கணக்கில் அணி திரட்டுவதற்கு பிறந்த ஜாதி ஒன்றே போதும். தலைவர்களின் 'பேராற்றலோ', 'கொள்கையோ', 'தத்துவமோ', 'தியாகமோ' தேவையில்லை. ஆனால், சமூகச் சூழலுக்கு எதிராக பிறந்த ஜாதி உள்பட ஒட்டு மொத்த ஜாதியமைப்பை எதிர்ப்பதற்கு கொள்கையும் நெஞ்சுரமும் வேண்டும். இவர்கள் எண்ணிக்கையில் வெகுசிலராகவே இந்த ஜாதிய சமூக அமைப்பில் இருக்க முடியும்.

கடவுளையும் மதத்தையும் ஜாதியையும் பெண்ணடிமையையும் எதிர்த்து சமூகக் களத்தில் நிற்கும் மருத்துவர் கூறும் 'லெட்டர்பேட்' அமைப்புகள், ஜாதிக்காக திரட்டப்படுகிற கூட்டத்தைவிட வலிமை மிக்கவர்கள். இவர்கள்தான் சமூகப் போக்கை மாற்றியமைத்திருக்கிறார்கள் என்பது வரலாறு.

மருத்துவர் ராமதாஸ், அவர் சாதி வெறியைக் கையில் எடுத்தவுடன் அவரது தலைமையை ஏற்றுவந்த பல தலித் பொறுப்பாளர்கள்; இளம் வயதிலிருந்து உற்ற தோழனாகவும் நம்பிக்கைக்குரியவராகவும் இருந்த முன்னாள் அமைச்சர் பேராசிரியர் பொன்னுசாமி போன்றவர்கள்கூட ராமதாஸ், அளித்த தன்னிலை விளக்கங்களை ஏற்க மறுத்து பாட்டாளி மக்கள் கட்சிக்கு முழுக்கு போட்டு விட்டார்கள். பாட்டாளி மக்கள் கட்சி இப்போது முழுமையான வன்னியர் சங்கமாகவே உருமாறி நிற்கிறது.

அதிலும்கூட, வன்னியர்கள் எல்லோருக்குமே மருத்துவர் ராமதாசு தலைவர் அல்ல. மருத்துவர் ராமதாசை எதிர்க்கக்கூடிய வன்னியர்கள், தோழர் வேல்முருகன் தலைமையில் தோழர் இராமமூர்த்தி தலைமையிலும் உள்ளார்கள். தி.மு.க.விலும், அ.தி.மு.க.விலும், ம.தி.மு.க.விலும், தே.மு.தி.க.விலும் இன்னும் எத்தனையோ அரசியல் கட்சிகளிலும் மருத்துவர் ராமதாசின் தலைமையை ஏற்காதவர்கள் பல்லாயிரக்கணக்கில் உள்ளனர்.

வன்னியர் என்ற ஜாதி அடையாளத் திணிப்பை ஏற்க மறுத்து, ஜாதி மறுப்பாளர்களாக பெரியார் இயக்கங்களிலும் பொதுவுடைமை இயக்கங்களிலும் புரட்சிகர அமைப்புகளிலும் ஏராளமானவர்கள் உண்டு.

சரி; ஏதோ, தன்னுடன் கூட்டணி சேரும் கட்சிகள்தான் வெற்றிப் பெற முடியும் என்று நீட்டி முழங்கி வந்த மருத்துவர் ராமதாசின் கடந்தகால கதை என்ன? 2009 நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிட்ட எல்லா தொகுதிகளிலும் பெரும் வித்தியாசத்தில் படுதோல்வி. 2011 கூட்டணி தேர்தலில் 30 இடங்களில் போட்டியிட்டு, தப்பிப் பிழைத்தது 3 தொகுதி மட்டுமே! இதுதான் அந்த கட்சியின் நிலை!

இன்னும் சொல்லப்போனால், தமிழ்நாட்டின் ஆட்சி அதிகாரக் கட்சிகளோடு ஒப்பிடும்போது மருத்துவர் ராமதாசின் கட்சியும் குறுகிய கட்சி தான். 'பெரிய லேட்டர் பேட் கட்சி' என்று வேண்டுமானால் பெருமைப்பட்டுக் கொள்ளலாம்.

கூட்டணி சீட்டுகளுக்கு பேரம் பேச 'லெட்டர் பேட்' பயன்படுத்த அவசியமில்லாத பெரியார் தொண்டர்கள் நாங்கள்! ஜாதிப் பெயர் அடையாளங்களுக்காக 'லெட்டர் பேட்' மட்டுமே வைத்துள்ள பல அமைப்புகளை தனக்கு அருகே வரிசை வரிசையாக உட்கார வைத்துக் கொண்டு மருத்துவர் இராமதாஸ் அவர்களையும் இப்படி அவமதித்திருக்க வேண்டாம்.

ஏற்கனவே கொங்கு வேளாளர் சங்க மணிகண்டனும், ஈசுவரனும் மருத்துவரை கைகழுவி விட்டதைப்போல, இவர்களும் இத்தகைய பேச்சுகளால் உங்களை கைகழுவி விடலாம், "மருத்துவர் அய்யா"!

## ஜாதி எதிர்ப்பு ஆர்ப்பாட்டம்: ஓர் அறிவிப்பு

வன்கொடுமை தடுப்புச் சட்டத்துக்கும், காதல் திருமணங்களுக்கும் எதிராக மருத்துவர் ராமதாசு பிப்.26 இல் அறிவித்த ஆர்ப்பாட்டத்தை தேதி குறிப்பிடாது தள்ளி வைத்துள்ளார். எனவே அதே தேதியில் திராவிடர் விடுதலைக் கழகம் அறிவித்திருந்த ஜாதி வெறி எதிர்ப்பு - பெண்ணுரிமை ஆதரவு ஆர்ப்பாட்டமும் தள்ளி வைக்கப்படுகிறது. மருத்துவர் ராமதாசு அறிவிக்கும் நாளில் நடத்தப்படும்.

– தலைமைக் கழகம்




## கழகத் தலைவர் பங்கேற்ற நிகழ்ச்சி

20-01-2013 ஞாயிற்றுக்கிழமை அன்று காலை 9-00 மணியளவில், புதுச்சேரி தமிழ் திருமண நிலையத்தில் கழகத் தோழர் கா.தாவதாசு வி.சரண்யா ஆகியோரது வாழ்க்கை இணை ஏற்பு நிகழ்ச்சியினை கழகத் தலைவர் கொளத்தூர் மணி நடத்திவைத்தார். தமிழக வாழ்வுரிமைக் கட்சி தி.வேல்முருகன், புதுவை மாநில கழகத் தலைவர் லோகு.அய்யப்பன் முதலானோர் வாழ்த்துரை வழங்கினர்.

20-01-2013 ஞாயிற்றுக்கிழமை அன்று மாலை 6-00 மணியளவில், மயிலாடுதுறை கோவிந்தம்மாள் திருமண கூடத்தில் முனைவர் விடுதலை - முனைவர் உமாதேவி ஆகியோரது திருமண வரவேற்பு நிகழ்ச்சி நடைபெற்றது. கழகத் தலைவர் கொளத்தூர் மணி, பொதுச் செயலாளர் விடுதலை க.இராசேந்திரன், ஓவியா முதலானோர் வாழ்த்து தெரிவித்து உரை ஆற்றினர்.

"புரட்சிப் பெரியார் முழக்கம்"
ஆண்டுக்கட்டணம் ரூ.200/-
தொடர்புக்கு:
ஆசிரியர், 29, பத்திரிகையாளர் குடியிருப்பு, திருவள்ளுவர் நகர், திருவான்மியூர், சென்னை-41.
✆ 99416 13535

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted on: 31st January 2013

OWNER & PUBLISHER & EDITOR : K. RAJENDRAN, PUBLISHED AT 29, JOURNALISTS COLONY, THIRUVALLUVAR NAGAR, THIRUVANMIYUR, CHENNAI - 600 041.
PRINTED BY : S. THEESMAS, AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014.